இயேசுவின் வாழ்வும் ஊழியமும்

shepherds
GLOBAL CLASSROOM

உலகெங்கிலும் வளர்ந்து வரும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு பாடத்திட்டத்தை வழங்குவதன் மூலம் கிறிஸ்துவின் உடலை சித்தப்படுத்த Shepherds Global Classroom உள்ளது. உலகின் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஆன்மீகப் பயிற்சியாளர்களின் கைகளில் 20-பாடப் பாடத்திட்டக் கருவியை வைப்பதன் மூலம் உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்களைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்தப் பாடத்திட்டங்களை நீங்கள இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ள இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்: https://www.shepherdsglobal.org/courses

முதன்மை எழுத்தாளர்: டாக்டர் ராண்டல் மெக்கெல்வெய்ன் (Dr. Randall McElwain)

காப்புரிமை © 2023 Shepherds Global Classroom

ஆங்கிலத்தின் மூன்றாம் பதிப்பிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டது. (3rd edition)

எல்லா உரிமைகளும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதில் மூன்றாம் நபரிடத்திலிருந்து பெறப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கும் எல்லாப் பகுதிகளும் அதன் பகுதியின் உரிமையாளர்களிடமே உரிமை பெற்றிருக்கிறது. பல ஒப்பந்தங்களின்படியே இங்கு பகிர்ந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

பரிசுத்த வேத வசனங்கள் பைபிள் சங்கம் ஆஃப் இந்தியா வெளியிட்ட பரிசுத்த வேதாகமம், BSI - தமிழ் - பழைய மொழியாக்கம் (புதிய ஒழுங்கு) மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டவை. அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

அனுமதிகள் அறிவிப்பு:

பின்வரும் வழிகாட்டுதலின் பெயரில் இந்தப் பாடத்திட்டமானது இலவசமாக அச்சிடப்படவோ அல்லது டிஜிட்டல் வடிவிலோ பகிரப்படலாம்: (1) பாடத்திட்டத்தை எந்த வகையிலும் மாற்றக்கூடாது; (2) விலை நிர்ணயம் செய்து விற்கப்படக்கூடாது; (3) கல்வி பயிற்றுவிக்கு நிறுவனங்கள் கல்விக்கட்டணம் வாங்கினாலும் இந்தப் படத்திட்டத்தை இலவசமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்; (4) Shepherds Global Classroomஇன் அனுமதி மற்றும் மேற்பார்வையில்லாமல் இந்தப்பாடத்திட்டமானது மொழிபெயர்ப்பு செய்யப்படக்கூடாது.

பொருளடக்கம்

பாடச்சுருக்கம் 5
இஸ்ரவேல் தேசத்தின் நிலப்படம் 7
(1) ஊழியத்திற்கான ஆயத்தம் 9
(2) இயேசுவைப் போல ஜெபம் செய்தல் 31
(3) இயேசுவைப் போல வழி நடத்துதல் 53
(4) இயேசுவைப் போல போதித்தல் 77
(5) இயேசுவைப் போல பிரசங்கித்தல் 101
(6) இயேசுவும் தேவனுடைய ராஜ்யமும் 121
(7) இயேசுவைப்போல அன்பு கூறுதல் 149
(8) சிலுவையும் உயிர்த்தெழுதலும் 175
(9) ஒரு ஆவிக்குரிய மரபை விட்டுச் செல்லுதல் 207
ராஜ்யத்தின் சுவிசேஷம் (ஒரு பிரசங்கம்) 229
பரிந்துரைக்கப்பட்ட ஆதார நூல்கள் 243
வீட்டுப்பாடங்களின் பதிவு 245

பாடச்சுருக்கம்

இந்தப் பாடத்திட்டம் இன்றைய வாழ்வுக்கும் ஊழியத்திற்கும் ஒரு முன்மாதிரியாக இயேசுவின் வாழ்வையும் ஊழியத்தையும் ஆராய்கிறது. இது சுவிசேஷ புத்தகங்களின் விரிவான ஆய்வு அல்ல. மாறாக, இன்றைய ஊழியத்திற்கான பாடங்களைக் கற்றுக்கொள்வதற்காக, இயேசுவின் ஊழியத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களை இந்தப் பாடத்திட்டம் ஆராய்கிறது. கிறிஸ்துவின் முழு வாழ்க்கையையும் நீங்கள் படிக்க விரும்பினால், புத்தகத்தின் பின்பகுதியில் உள்ள 'பரிந்துரைக்கப்பட்ட ஆதார நூல்கள்' பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ள புத்தகங்களைப் பாருங்கள்.

நீங்கள் ஒரு குழுவாகப் படிப்பதானால், பாடப்பகுதியை ஒருவர் மாறி ஒருவர் வாசிக்கலாம். வகுப்பு விவாதத்திற்காக நீங்கள் அவ்வப்போது இடைநிறுத்தம் செய்யவேண்டும். வகுப்புத் தலைவராக, விவாதமானது படிக்கப்படும் பாடப்பொருளிலிருந்து விலகிச் செல்லாமல் பார்த்துக்கொள்வது உங்கள் பொறுப்பாகும். ஒவ்வொரு விவாத நேரத்திற்கும் ஒரு கால வரம்பை நிர்ணயிப்பது பயனுள்ளதாக இருக்கும்.

கலந்துரையாடல் கேள்விகள் மற்றும் **வகுப்பறைச் செயல்பாடுகள்** ► என்ற குறியீட்டின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றை நீங்கள் காணும் போதெல்லாம், அதைத் தொடர்ந்து வரும் கேள்வியை (கேள்விகளை) கேட்டு, மாணவர்கள் அதற்கான பதிலை விவாதிக்க அனுமதியுங்கள். அர்த்தமுள்ள விவாதத்திற்குத் தயவுசெய்து நேரம் ஒதுக்குங்கள். ஏனெனில் இவையில்லாமல், மாணவர்கள் இயேசுவின் ஊழியத்தைப் பற்றிய தங்கள் படிப்பினை இன்றைய ஊழியத்துடன் தொடர்புபடுத்திக் காணத் தவறிவிடலாம்.

பாடத்திட்டம் முழுவதும், முக்கிய பாடப்பகுதியிலும் அடிக்குறிப்புகளிலும் பல **வேதப் பகுதிகள்** பட்டியலிடப்பட்டுள்ளன. வகுப்பில் சத்தமாக வாசிக்கப்பட வேண்டிய பகுதிகளும் அம்புக்குறிகளால் ► சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மாணவர்கள் நீண்ட பகுதிகளை வகுப்புக்கு வரும் முன்னரே வாசித்துவிட்டு வரவேண்டும். சிறிய பகுதிகள் வகுப்பில் வாசிக்கப்பட வேண்டும்.

"**ஒரு நெருக்கமான பார்வை**" என்ற தலைப்பிலான பிரிவுகள், பாடத்தின் விவாதத்துடன் தொடர்புடைய சிறப்புக் கருப்பொருள்களில் கவனம் செலுத்துகின்றன.

ஒவ்வொரு பாடமும் ஒன்று அல்லது இரண்டு **வீட்டுப்பாடங்களை** உள்ளடக்கியிருக்கும். மாணவர்கள் Shepherds Global Classroom சான்றிதழ் பெற விரும்பினால், அவர்கள் வகுப்பு அமர்வுகளில் கலந்துகொண்டு வீட்டுப்பாடங்களை முடிக்க வேண்டும். முடிக்கப்பட்ட வீட்டுப்பாடங்களைப் பதிவு செய்வதற்குப் பாடத்திட்டத்தின் இறுதியில் ஒரு படிவம் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களை ஆசிரியர்களாகத் தயார்படுத்துவதே இந்தப் பாடத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். வகுப்புத் தலைவர் மாணவர்கள் தங்கள் கற்பித்தல் திறனை வளர்த்துக்கொள்ள வாய்ப்புகளை வழங்க வேண்டும். உதாரணமாக, வகுப்புத் தலைவர் அவ்வப்போது ஒரு மாணவரைப் பாடத்தின் ஒரு சிறிய பகுதியை வகுப்பில் கற்பிக்க அனுமதிக்க வேண்டும்.

இஸ்ரவேல் தேசத்தின் நிலப்படம்

(1) தீரு[1]

(2) பிலிப்புச் செசரியா

(3) கலிலேயா (பிரதேசம்)

(4) கானா

(5) கப்பர்நகூம்

(6) நாசரேத்

(7) தெக்கப்போலி (பிரதேசம்)

(8) சமாரியா (பிரதேசம்)

(9) யோர்தான் நதி

(10) எம்மாவு

(11) எருசலேம்

(12) பெத்லகேம்

(13) கடற்கரைச் சமவெளி

(14) மத்திய மலைப்பிரதேசங்கள்

(15) யூதேயா வனாந்தரம்

(16) சவக்கடல்

(17) கலிலேயாக் கடல்

(18) மத்தியதரைக் கடல்



[1] “Map of Israel” (“இஸ்ரவேலின் நிலப்படம்”) was created by SGC with open data from NED, SRTM, NASA, மற்றும் Bible Geocoding (CC BY 4.0) ஆகியவற்றின் திறந்த தரவுகளைக் கொண்டு SGC-யால் உருவாக்கப்பட்டது. இது https://www.flickr.com/photos/sgc-library/52344178339, என்ற இணையதளத்தில் பொதுக் களத்தில் (CC0) கிடைக்கிறது.

பாடம் 1
ஊழியத்திற்கான ஆயத்தம்

பாடத்தின் நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:

(1) இயேசு கிறிஸ்து நமது ஊழியத்திற்கு ஒரு முன்மாதிரி என்பதை அங்கீகரித்தல்.

(2) தேவன் தாம் அழைப்பவர்களை ஆயத்தப்படுத்துவதில் கொண்டுள்ள பரம அதிகாரத்தை புரிந்துகொள்ளுதல்.

(3) தேவன் தமக்காகத் தேர்ந்தெடுக்கும் ஊழியப் பங்கிற்கான அவருடைய அழைப்பிற்குப் பணிந்து அர்ப்பணித்தல்.

(4) சோதனைகளை மேற்கொண்டு வெற்றிகொள்ள இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல்.

இந்த பாடத்திற்கான ஆயத்தம்

மத்தேயு 1-4, லூக்கா 1-3, மற்றும் யோவான் 1 ஆகிய அதிகாரங்களை வாசிக்கவும்.

ஊழியத்திற்கான கோட்பாடு

தேவன் யாரை ஊழியத்திற்கு அழைக்கிறாரோ, அவர்களை அந்த ஊழியத்திற்காக அவர் ஆயத்தப்படுத்துகிறார்.

முன்னுரை

இந்த பாடத்திட்டத்தில், இன்றைய நமது ஊழியத்திற்கு இயேசுவை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு நாம் படிப்போம். "நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:15) என்று இயேசு கூறினார். இயேசுவின் பூமிக்குரிய வாழ்க்கை அவரைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக அமைந்தது.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்தக் கோட்பாட்டைத் தெளிவாகப் புரிந்திருந்தார். பிலிப்பி பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இடையே மோதல்கள் நிலவியதைக் கேள்விப்பட்டபோது, பவுல் இயேசுவின் உதாரணத்தைச் சுட்டிக்காட்டினார்: "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப்பியர் 2:5). அந்தக் கிறிஸ்தவர்கள் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றினால், அவர்களுடைய மனத்தாழ்மை சபையில் உள்ள மோதல்களைத் தீர்க்கும் என்று பவுல் அறிந்திருந்தார்.

ஒருமுறை ஆப்பிரிக்காவிற்குப் பயணம் மேற்கொண்டபோது, யூதப் பத்திரிகையாளர் டேவிட் பிளாட்ஸ், மலாவி விமான நிலையத்தில் தவித்துக் கொண்டிருந்தார். அங்கே அவர் ஓர் ஆப்பிரிக்கப் போதகரைச் சந்தித்தார். அந்தப் போதகர் பிளாட்ஸைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று, இரண்டு நாட்களுக்கு உணவு அளித்து உபசரித்ததுடன், மேசியாவாகிய இயேசுவைப் பற்றி அவருக்குச் சாட்சி பகர்ந்தார். டேவிட் பிளாட்ஸ் பின்னர் இவ்வாறு எழுதினார்: "இந்த மனிதர் நம்பும் எதையும் நான் நம்பவில்லை, ஆனால் அவருடைய உறுதியான விசுவாசத்தைக் கண்டு நான் வியப்படைகிறேன். கிறிஸ்து தமக்குள் கிரியை செய்வதை அவர் உணருகிறார், அதனால்தான் அவர் ஒரு அந்நியரைத் தனது வீட்டிற்குள் ஏற்றுக்கொண்டு, அவருக்குத் தங்குமிடமும், உணவும், உடையும் அளித்தார்." இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்ற நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை அந்த ஆப்பிரிக்கப் போதகர் ஆழமாக உணர்ந்திருந்தார்.

இந்தப் பாடத்திட்டம் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வு அல்ல. மாறாக, இன்றைய ஊழியத்திற்கு மாதிரியாக விளங்கும் இயேசுவின் வாழ்க்கையின் குறிப்பிட்ட சில அம்சங்களில் மட்டுமே நாம் கவனம் செலுத்துவோம். இயேசுவின் முன்மாதிரியின் அடிப்படையில் நமது ஊழியத்தை எவ்வாறு வடிவமைப்பது என்பதை நாம் கற்றுக்கொள்வோம்.

இந்த முதல் பாடத்தில், ஊழியத்திற்காக இயேசு எவ்வாறு ஆயத்தமானார் என்பதைக் காண்போம். தேவன் யாரை அழைக்கிறாரோ, அவர்களை அந்த ஊழியத்திற்காக ஆயத்தப்படுத்துகிறார் என்கிற கோட்பாட்டை இது நமக்கு விளக்குகிறது.

தேவன் தமது ஊழியக்காரரின் குடும்பப் பின்னணியை ஆயத்தப்படுத்தினார்

► உங்கள் குடும்பப் பின்னணி மற்றும் ஆரம்பகால வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். உங்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்த தேவன் உங்கள் பின்னணியை எவ்வாறு பயன்படுத்தியுள்ளார்?

சுவிசேஷங்களில் உள்ள வம்சவரலாறுகள், பரம அதிகாரமுள்ள தேவன் இயேசு பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமது ஊழியக்காரருக்கான வழியை ஆயத்தப்படுத்தினார் என்பதைக் காட்டுகின்றன. இயேசு பிறப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, தேவன் அவருடைய வருகைக்கான பாதையை ஆயத்தப்படுத்தினார்.

இந்த வம்சவரலாறுகள் "இயேசு யார்?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கின்றன. ஆபிரகாம் மற்றும் தாவீதின் முக்கியத்துவத்தை இவை சுட்டிக்காட்டுகின்றன. இயேசுவின் வம்சாவளியில் ஆபிரகாம் முக்கியமானவர், ஏனெனில் தேவன் அவருக்கு, “பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்” (ஆதியாகமம் 12:3) என்று வாக்குறுதி அளித்தார். இந்த வாக்குறுதி நாசரேத் ஊராராகிய இயேசுவின் மூலம் நிறைவேறியது.

தாவீதின் சிங்காசனம் என்றென்றும் நிலைநிறுத்தப்படும் என்று தேவன் வாக்குறுதி அளித்ததால் (2 சாமுவேல் 7:16), வம்சவரலாறுகளில் அவர் முக்கியத்துவம் பெறுகிறார். இயேசு பிறந்தபோது, ஒரு தாவீது வம்சத்து ராஜா சிங்காசனத்தில் அமர்ந்து 500 ஆண்டுகளுக்கும் மேலாகியிருந்தது. மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இருவரும் இயேசுவே தாவீதிற்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம் என்பதைக் காட்டுகிறார்கள்.

இயேசு தாவீதின் குமாரன் (மத்தேயு 1:1-17)

கிரேக்க புதிய ஏற்பாட்டில், மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் முதல் இரண்டு வார்த்தைகள் அதன் முதல் வாசகர்களுக்கு ஆதியாகமம் புத்தகத்தை நினைவூட்டியிருக்கும் (ஆதியாகமம் 2:4, 5:1). ஆதியாகமம் சிருஷ்டிப்பின் மீது தேவனுக்குள்ள பரம அதிகாரத்தை விளக்குவது போல, மத்தேயு வரலாற்றின் மீது தேவனுக்குள்ள பரம அதிகாரத்தை விளக்குகிறார். இஸ்ரவேலின் ஒட்டுமொத்த வரலாறும் மேசியாவின் பிறப்பை நோக்கியே வழிநடத்தப்பட்டது என்பதை மத்தேயுவின் வம்சவரலாறு காட்டுகிறது.

மத்தேயுவின் வம்சவரலாறு 14 பெயர்களைக் கொண்ட மூன்று தொகுப்புகளைப் பதிவு செய்கிறது. இது யூதர்களின் பொதுவான ஒரு மனப்பாடம் செய்யும் முறையாகும். இந்தப் பெயர்ப் பட்டியலில் ஆபிரகாம் முதல் யோசேப்பு ஆகியோர்களுக்கு இடையேயுள்ள ஒவ்வொரு முன்னோரும் இடம் பெறவில்லை என்பதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். மத்தேயு பயன்படுத்திய "பெற்றான்" என்ற சொல் எந்தவொரு முன்னோரையும் குறிக்கலாம். யூத வம்சவரலாறுகள் பெரும்பாலும் சில தலைமுறைகளைத் தவிர்த்துவிடும். மத்தேயு முக்கியமான நபர்களில் மட்டும் கவனம் செலுத்தி, மற்ற பெயர்களைத் தவிர்த்துள்ளார்.

மத்தேயு சில தலைமுறைகளைத் தவிர்த்ததால், அவர் சேர்த்துள்ள பெயர்கள் மிகவும் சுவாரஸ்யமானவை. அவர் ஒரு நோக்கத்தோடு இந்தப் பெயர்களைத் தேர்ந்தெடுத்தார். உதாரணமாக, மத்தேயு நான்கு பெண்களைப் பட்டியலிடுகிறார். ஒரு யூத வம்சவரலாற்றில் இது வழக்கத்திற்கு மாறானது. அந்தப் பெண்கள் நாம் எதிர்பார்க்கும் தகுதிகளைக் கொண்டிருக்கவில்லை. ராகாப் மற்றும் ரூத் அந்நிய நாட்டவர். தாமார், ராகாப் மற்றும் பத்சேபாள் பாலியல் ரீதியான அவமானங்களோடு தொடர்புடையவர்கள்.

இதேபோல், பட்டியலில் உள்ள சில ஆண்கள் இழிவைச் சந்தித்தவர்கள். யூதா தாமாரை அவமானமாக நடத்தினார். எகொனியாவின் வம்சம் இஸ்ரவேலின் சிங்காசனத்திற்குத் தகுதியற்றதாகக் கருதப்பட்டது (மத்தேயு 1:12, எரேமியா 22:30). மிக முக்கியமாக, மத்தேயு தாவீதை அவருடைய பெரிய சாதனைகளால் அடையாளப்படுத்தாமல், "உரியாவின் மனைவியால் சாலொமோனைப் பெற்றவர்" என்று அடையாளப்படுத்துகிறார்.

இந்தப் பெயர்கள் இயேசுவைப் பாவமுள்ள மனிதகுலத்தோடு அடையாளப்படுத்துகின்றன. தேவன் தமது குமாரனை ஒரு களங்கமற்ற குடும்ப வரிசையின் மூலம் உலகிற்கு கொண்டு வராமல், சாதாரண பாவிகளின் வம்சாவளியாகக்

கொண்டு வந்தார். யூதத் தலைவர்கள் இயேசுவின் பிறப்பை ஏளனம் செய்து, அவரைத் தகுதியற்றவர் என்று நிராகரித்தனர் (யோவான் 8:41, 48). பாவமுள்ள முன்னோர்களைக் கொண்ட ஒரு நபரையும் தேவன் தமது பெரிய நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்த முடியும் என்பதை மத்தேயு காட்டுகிறார்.

► நமது கலாச்சாரத்தில், ஒரு நபரின் பின்னணியில் உள்ள எந்தக் காரணிகள் அவருக்குத் தகுதி குறைவு என்று நம்மை நினைக்கத் தூண்டுகின்றன?

தேவன் பெரும்பாலும் எதிர்பாராத பின்னணியைக் கொண்டவர்களையே தமது சேவைக்கு அழைக்கிறார். ஒருவருடைய குடும்பப் பின்னணியால் அவர் பயன்படுத்த முடியாதவர் என்று எவரும் இல்லை. ஒருவருக்குத் திறன் குறைவு என்று நாம் கருதும் பின்னணிக் காரணிகள் தேவனுக்கு ஒரு பொருட்டல்ல.

இயேசு ஆதாமின் குமாரன் (லூக்கா 3:23-38)

மத்தேயு "யூதர்களின் ராஜா"வின் வம்சாவளியை ஆபிரகாம் வரை கொண்டு செல்கிறார். லூக்காவோ இயேசுவின் வம்சாவளியை ஆதாம் வரை கொண்டு செல்கிறார். இது இயேசுவை "மனுஷகுமாரன்" என்று லூக்கா வலியுறுத்துவதோடு ஒத்துப்போகிறது. லூக்காவின் வம்சவரலாறு இயேசுவின் மனிதத்தன்மையை வலியுறுத்துகிறது. லூக்கா இந்த வம்சவரலாற்றை இயேசு சோதிக்கப்பட்ட சம்பவத்திற்குச் சற்று முன்பாக வைத்துள்ளார். இது முதல் ஆதாம் தோல்வியுற்ற இடத்தில், இரண்டாம் ஆதாமாகிய இயேசு வெற்றி பெற்றார் என்பதை வாசகருக்கு நினைவூட்டுகிறது.

ஒரு நெருக்கமான பார்வை: மத்தேயு மற்றும் லூக்காவின் வம்சவரலாறுகள்

மத்தேயு 1 மற்றும் லூக்கா 3 ஆகிய அதிகாரங்கள் இயேசுவின் வெவ்வேறு வம்சவரலாறுகளைத் தருகின்றன. மத்தேயு ஆபிரகாமிலிருந்து ராஜாவாகிய சாலொமோன் வழியாக யோசேப்பு வரை செல்கிறார். லூக்கா யோசேப்பிலிருந்து நாத்தான் (தாவீதின் மற்றொரு குமாரன்) வழியாக ஆதாம் வரை செல்கிறார்.

ஆபிரகாம் முதல் தாவீது வரை இரண்டு வம்சவரலாறுகளும் ஒன்றே. ஆனால், தாவீது முதல் யோசேப்பு வரை அவை வெவ்வேறு பாதைகளைப் பின்பற்றுகின்றன. இதற்கான சாத்தியமான விளக்கம் என்னவென்றால், மத்தேயு யோசேப்பின் வம்சாவளியையும் லூக்கா மரியாளினுடைய வம்சாவளியையும் பதிவு செய்கிறார்கள்.[2]

மத்தேயுவில் உள்ள யோசேப்பின் வம்சாவளி சாலொமோன் வழியாக வரும் ஒரு 'ராஜ வம்சவரலாறு' ஆகும். இது இயேசுவை ராஜாவாகச் சித்தரிக்கும் மத்தேயுவின்

[2] இதர சாத்தியமான விளக்கங்களுக்கு, மார்ச் 22, 2021 அன்று அணுகப்பட்ட http://www.gotquestions.org/Jesus-genealogy.html, என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

கருப்பொருளுக்குப் பொருந்துகிறது. இது இயேசுவின் 'சட்டபூர்வமான வம்சாவளி' (Legal descent) ஆகும்—இது யோசேப்பு வழியாகவே வர வேண்டும்.

லூக்காவில் உள்ள மரியாளினுடைய வம்சாவளி தாவீதின் குமாரன் நாத்தான் வழியாக வரும் 'சரீரப்பிரகாரமான' (Physical) வம்சாவளி ஆகும். இது இயேசுவை "மனுஷகுமாரன்" என்று காட்டும் லூக்காவின் நோக்கத்திற்குப் பொருந்துகிறது. இதை மெய்ப்பிக்க, லூக்கா மரியாளின் மூலம் இயேசுவின் சரீர வம்சாவளியைக் காட்டுகிறார். யூத வம்சவரலாறுகள் பெண்களின் வழியைப் பின்பற்றும்போதும் ஆண்களின் பெயரையே பயன்படுத்தியதால், அவர் "யோசேப்பின் குமாரன்" என்றே தொடங்குகிறார்.

மரியாளின் வம்சாவளி தாவீதுடனான இரத்தத் தொடர்பை வழங்குகிறது. யோசேப்பின் வம்சாவளி சாலொமோன் வழியாக சிங்காசன உரிமையை வழங்குகிறது.

தேவன் தமது ஊழியக்காரரின் குடும்பப் பின்னணியை ஆயத்தப்படுத்தினார் (தொடரும்)

இயேசு தேவனுடைய குமாரன் (யோவான் 1:1-18)

யோவான் சுவிசேஷம் ஒரு தெய்வீக வம்சவரலாற்றுடன் தொடங்குகிறது; இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார். “இயேசுவின் வாழ்வு அவர் பிறந்த தருணத்தில் தொடங்கவில்லை. அவர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, முன்னமே இருந்த நிலையிலிருந்து இந்த உலகிற்கு வந்தார்."[3]

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய பிரசன்னத்தை வாசஸ்தலத்தின் மேல் மேகமாகப் பார்த்தனர். இப்போது தேவன் இயேசு கிறிஸ்துவின் உருவில் நம்மிடையே வாழ்கிறார் (யோவான் 1:14). தேவனுடைய தெய்வீக மகிமை இப்போது மனித உருவில் வெளிப்பட்டுள்ளது.

வார்த்தையானவர் நித்தியமானவர்: “ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது” (யோவான் 1:1). பிதாவும் குமாரனும் நித்திய ஐக்கியத்தில் வாழ்ந்தனர்.[4] இயேசு ஏன் நம் உலகிற்கு வந்தார்? பிதாவை வெளிப்படுத்தவே வந்தார். எவரும் பிதாவைக் கண்டதில்லை, ஆனால் இயேசு அவரை நமக்குத் தெரியப்படுத்தியுள்ளார் (யோவான் 1:18). நாம் இயேசுவைக் காணும்போது பிதாவைக் காண்கிறோம் (யோவான் 14:9).

---

[3] J. Dwight Pentecost, *The Words and Works of Jesus Christ.* (Grand Rapids: Zondervan, 1981), 28

[4] இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர் என்ற யெகோவாவின் சாட்சிகளுடைய வாதத்தை யோவான் 1:3 மறுக்கிறது. சிருஷ்டிப்பின்போது இயேசு உடனிருந்தார். “சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.”

இன்று பலர் இயேசுவை அன்புள்ள நண்பராகவும், பிதாவைக் கடுமையான நீதிபதியாகவும் சித்தரிக்கின்றனர். இருப்பினும், இயேசுவின் குணாதிசயமும் பிதாவின் குணாதிசயமும் ஒன்றே என்பதை யோவான் 1 காட்டுகிறது. நாம் இயேசுவைக் காணும்போது, பிதாவைக் காண்கிறோம்.

அற்புதமான பிறப்பின் மூலம் தேவன் தமது ஊழியக்காரரை ஆயத்தப்படுத்தினார்

இயேசு ஏறக்குறைய கி.மு. 5-ஆம் ஆண்டில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்தார்.[5] ரோம மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக யோசேப்பு பெத்லகேமிற்குப் பயணம் செய்தார். ரோமின் கட்டுப்பாட்டில் இருந்த மாகாணங்களின் வரிப் பதிவேடுகளைப் பராமரிப்பதே இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

வழக்கமாக ரோம் மக்கள் வசிக்கும் மற்றும் வேலை செய்யும் இடங்களிலேயே அவர்களைப் பதிவு செய்யும். இருப்பினும், புரட்சி செய்யத் துடிக்கும் யூத மக்களோடு சமாதானத்தைப் பேணுவதற்காக, யூதேய மாகாணத்தில் உள்ளவர்கள் தங்கள் கோத்திரங்களின் பூர்வீக இடங்களுக்குச் சென்று பதிவு செய்யும் யூத முறையை ரோம் அனுமதித்தது. இதன் விளைவாக, யோசேப்பும் மரியாளும் நாசரேத்திலிருந்து பெத்லகேமிற்கு 100 கிலோமீட்டர் பயணம் செய்தனர். குடும்பத் தலைவர் மட்டும் பதிவு செய்தால் போதும் என்ற நிலை இருந்தும், யோசேப்பு மரியாளை பெத்லகேமிற்கு அழைத்துச் சென்றார். நாசரேத் போன்ற சிறிய கிராமத்தில் வதந்தி பேசும் அண்டை வீட்டாருடன் மரியாளை விட்டுச் செல்ல அவர் விரும்பவில்லை போலும்.

தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்ற உலக நிகழ்வுகளின் வாயிலாகச் செயல்படுகிறார். ஒரு புறஜாதி சக்கரவர்த்தி யூத மக்கள் தொகைக் கணக்கெடுப்பை "தேர்வு" செய்யும்படி தேவன் செய்தார். "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்" (நீதிமொழிகள் 21:1). தேவனுடைய ராஜ்யத்தின் ஊழியர்களாக, தீயவர்களின் கையில் அதிகாரம் இருப்பது போலத் தோன்றினாலும், தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையை இது நமக்கு அளிக்க வேண்டும்.

இந்த வரி கணக்கெடுப்பு, இயேசுவின் பிறப்பிற்காக தேவன் உலகை எவ்வாறு ஆயத்தப்படுத்தினார் என்பதைக் காட்டும் பல எடுத்துக்காட்டுகளில் ஒன்றாகும். கிரேக்க பேரரசின் கலாச்சார பின்னணி, ரோம பேரரசின் சட்ட அமைப்பு மற்றும் யூத மதக் கோட்பாடுகள் ஆகியவற்றின் மூலம் தேவன் மேசியாவிற்காக உலகை

---

[5] கிரிகோரியன் நாட்காட்டி கி.பி. 1582 வரை உருவாக்கப்படவில்லை. இந்த நாட்காட்டி தோராயமானதே தவிர துல்லியமானது அல்ல. ஏரோது மன்னன் தோராயமாக கி.மு. 4-ல் இறந்தான். இந்தத் தேதியின் அடிப்படையில், இயேசுவின் பிறப்பு தோராயமாக கி.மு. 5-6 எனத் தீர்மானிக்கப்படலாம்.

ஆயத்தப்படுத்தினார். இந்தப் பின்னணியைப் பற்றி அறிய, Shepherds Global Classroom பாடத்தின் பாடம் 1, *Exploring the New Testament* பார்க்கவும்.[6]

மேய்ப்பர்களின் வருகை (லூக்கா 2:8-20)

இயேசுவின் பிறப்பு குறித்த அறிவிப்பை முதலில் பெற்றவர்கள் பெத்லகேமிற்கு வெளியே இருந்த மேய்ப்பர்கள். இது மிகவும் குறிப்பிடத்தக்கது, ஏனெனில் முதலாம் நூற்றாண்டு யூதர்களால் மேய்ப்பர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர். மேய்ப்பர்களுக்குச் சமூக அந்தஸ்து மிகவும் குறைவாக இருந்ததால், யூத நீதிமன்றங்களில் அவர்களது சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேய்ப்பர்களை மையப்படுத்துவதன் மூலம், "மேய்ப்பர்களுக்கே வரவேற்பு உண்டு என்றால், தேவனுடைய ராஜ்யத்தில் **எவருக்கும்** வரவேற்பு உண்டு!" என்பதை லூக்கா உணர்த்துகிறார். தேவதூதன் மேய்ப்பர்களிடம், “இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்” (லூக்கா 2:10) என்றார்.

சுவிசேஷம் என்பது ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கோ (இஸ்ரவேல்) அல்லது ஒரு குறிப்பிட்ட சமூக வகுப்பிற்கோ மட்டுப்படுத்தப்பட்டதல்ல; சுவிசேஷம் எல்லா மக்களுக்கும் உரியது. இந்த கருத்தை லூக்கா சுவிசேஷம் முழுவதிலும் காணலாம். பெண்கள், சமாரியர்கள் மற்றும் சகேயு போன்ற ஒதுக்கப்பட்டவர்களிடம் இயேசு கொண்ட ஊழியத்திற்கு லூக்கா சிறப்பு கவனம் செலுத்துகிறார்.

சாஸ்திரிகளின் வருகை (மத்தேயு 2:1-12)

மத்தேயு சுவிசேஷம் முதலில் யூத வாசகர்களுக்காக எழுதப்பட்டது. லூக்கா எல்லா மக்களுக்கும் உரிய இயேசுவின் செய்தியில் கவனம் செலுத்தியபோது, மத்தேயு பரலோக ராஜ்யத்தைப் பற்றிய இயேசுவின் செய்தியில் கவனம் செலுத்தினார். மேய்ப்பர்களுக்குப் பதிலாக, சாஸ்திரிகளின் (Magi) வருகையை மத்தேயு காட்டுகிறார். இந்தப் பயணம் இயேசுவின் குடும்பம் ஒரு நிரந்தர வீட்டிற்கு மாறிய பிறகு, ஒருவேளை அவர் பிறந்து சில மாதங்களுக்குப் பிறகு நடந்திருக்கலாம் (மத்தேயு 2:11). இரண்டு வயதிற்குட்பட்ட அனைத்து ஆண் குழந்தைகளையும் கொல்ல ஏரோது இட்ட கட்டளை இதை உணர்த்துகிறது.

அந்தச் சாஸ்திரிகள் வானத்தை ஆராய்கிறவர்களாகவும், அதில் தோன்றும் அபூர்வமான விண்-அமைப்புகளைக் கூர்ந்து கவனிப்பவர்களாகவும் இருந்தார்கள். பயணம் செய்வது அபாயகரமானதாக இருந்த அந்தக் காலத்தில், வானத்தில் கண்ட விசித்திரமான அடையாளத்தை ஆராய அவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்தனர்.

---

[6] இது https://www.shepherdsglobal.org/ என்ற இணையதளத்தில் கிடைக்கிறது.

ஒரு யூத ராஜாவைக் காண்பதற்கு எருசலேமே தர்க்கரீதியான இடம் என்பதால் அவர்கள் முதலில் அங்கு வந்தனர். ஒரு போட்டி ராஜா வரக்கூடும் என்ற செய்தி ஏரோதை எட்டியபோது, அவன் கலங்கினான், அவனோடுங்கூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள் (மத்தேயு 2:3). "எருசலேம் நகரத்தார் அனைவரும்" என்ற சொற்றொடர், பிற்காலத்தில் எருசலேமின் மதத் தலைவர்களால் இயேசு நிராகரிக்கப்படுவதை முன்னறிவிப்பதாக உள்ளது.

சாஸ்திரிகளின் வருகையே புறஜாதிகளுக்கு மேசியா முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்வாகும். அடையாளத்தைக் கண்டு கலங்கிய எருசலேம் மக்களுக்கு மாறாக, சாஸ்திரிகள் விசுவாசத்துடன் பதிலளித்தனர். இயேசு யூதர்களுக்கு மட்டும் ராஜாவாக வராமல், எல்லா தேசங்களுக்கும் ராஜாவாக வந்தார்.

எத்தனை சாஸ்திரிகள் இயேசுவை வழிபட வந்தார்கள் என்று மத்தேயு குறிப்பிடவில்லை. மூன்று சாஸ்திரிகள் என்ற பாரம்பரியம் மத்தேயு 2:11-ல் குறிப்பிடப்பட்டுள்ள அவர்கள் வழங்கிய மூன்று காணிக்கைகளின் அடிப்படையில் உருவானது. ஒவ்வொரு காணிக்கையும் இயேசுவின் ஊழியத்தின் ஒரு அம்சத்தைப் பிரதிபலித்தது.

- பொன் ஒரு ராஜாவுக்குரிய பரிசு. இருப்பினும், இயேசு ஒரு சிங்காசனத்திலிருந்து அல்ல, சிலுவையிலிருந்தே ஆட்சி செய்வார்.

- தூபம் வர்க்கம் ஒரு ஆசாரியருக்குரிய பரிசு. பலிகளின் போது தூப வர்க்கம் நறுமணமாகப் பயன்படுத்தப்பட்டது. எல்லா மனிதர்களும் தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழைவதைச் சாத்தியமாக்கும் ஆசாரியராக இயேசு வந்தார்.

- வெள்ளைப்போளம் இறந்த உடல்களைப் பதப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. இயேசு மனிதகுலம் முழுவதிற்காகவும் மரிப்பதற்கே பிறந்தார்.

தேவன் தமது ஊழியரைப் பாதுகாத்தார்

இயேசுவின் பிறப்பிற்கு முன்பாக, தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்துவதற்காக ஒரு தூதன் யோசேப்பிடம் சொப்பனத்தில் பேசினார். சாஸ்திரிகளின் வருகைக்குப் பிறகு, ஒரு தூதன் யோசேப்பை எகிப்திற்கு ஓடிப்போகுமாறு எச்சரித்தார். ஏரோது இறக்கும் வரை (சுமார் கி.மு. 4 வரை) அந்த குடும்பம் எகிப்திலேயே தங்கியிருந்தது.

பல வழிகளில், மகா ஏரோது ஒரு திறமையான ஆட்சியாளராக இருந்தான். அவன் யூத உணவு முறைகளைக் கடைப்பிடிக்கும் அளவிற்கு யூத மக்களுக்கு மதிப்பளித்தான். இயேசுவின் வாழ்நாள் முழுவதும் நீடித்த தேவாலயப் புதுப்பிக்கும் பணியை அவனே தொடங்கி வைத்தான். கி.மு. 25-இல் ஏற்பட்ட பஞ்சத்தின் போது, யூதேயாவில் பசியால் வாடிய மக்களுக்கு உணவு வாங்க அவன் தனது சொந்தப் பணத்தைப் பயன்படுத்தினான்.

இருந்தபோதிலும், ஏரோது மிகுந்த சந்தேகப் புத்தி (paranoid) கொண்டவனாக இருந்தான். தனக்கு எதிராகச் சதி செய்வதாகச் சந்தேகித்தபோது, தனது மனைவிகளில் ஒருவரான மரியாம்னே என்பவளையும், அவளது தாயார் அலெக்சாண்ட்ராவையும் கொலை செய்தான். தனக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடும் என்று கருதிய அவனது மூன்று மகன்களும் வளர்ந்து ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியபோது, அவர்களையும் அவன் படுகொலை செய்தான். ஏரோது போன்ற ஒரு கொடூரமான மனிதனுக்கு, பெத்லகேமில் குழந்தைகளைக் கொன்று குவித்தது ஒரு பெரிய விஷயமல்ல. தனது பதவியைப் பாதுகாக்கச் சில டஜன் குழந்தைகளைக் கொல்வது அவனுக்கு ஒரு சிறிய இடையூறாகவே இருந்திருக்கும்.

ஏரோதின் கொடூரம் அவன் இறக்கும் வரை நீடித்தது. அவன் மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது, தான் இறந்தவுடன் எருசலேமின் முக்கியப் பிரமுகர்களைக் கைது செய்து கொல்லும்படி உத்தரவிட்டான். தான் இறக்கும் நாள் ஒரு துக்க நாளாக இருப்பதை உறுதி செய்யவே அவன் இப்படிச் செய்தான். (ஆனால், ஏரோதின் விதவை அந்த கைதிகளை விடுதலை செய்ததால், அது பாலஸ்தீனம் முழுவதும் ஒரு கொண்டாட்ட நாளாக மாறியது.)

ஏரோது இறந்த பிறகு, அவனது தேசம் மூன்று மகன்களுக்கு இடையே பிரிக்கப்பட்டது. அந்திப்பாவுக்குக் கலிலேயா மற்றும் பெரேயா மீதான கட்டுப்பாடும்; பிலிப்புவுக்குப் பாலஸ்தீனத்தின் வடகிழக்கு பகுதியும்; அர்க்கெலாயுவுக்கு யூதேயா, இதுமேயா மற்றும் சமாரியா மீதான அதிகாரமும் வழங்கப்பட்டது. அர்க்கெலாயுவிடம் அவனது தந்தையின் பலவீனங்கள் அனைத்தும் இருந்தன, ஆனால் அவனது தந்தையிடமிருந்த நல்ல குணங்கள் ஒன்றும் இல்லை என்று பண்டைய வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அவன் யூதர்களால் வெறுக்கப்பட்டான், மேலும் சீசருக்கு யூதர்கள் அளித்த புகார்களின் காரணமாக கி.பி. 6-இல் அவன் பதவியிலிருந்து நீக்கப்பட்டான். இதற்குப் பிறகு, பொந்தியு பிலாத்து போன்ற ரோமானிய ஆளுநர்களால் யூதேயா ஆளப்பட்டது.

ஏரோது இறந்த பிறகு, யோசேப்பை மீண்டும் இஸ்ரவேலுக்குத் திரும்புமாறு அறிவுறுத்த ஒரு தூதன் மீண்டும் சொப்பனத்தில் தோன்றினார். இருப்பினும், அர்கெலாயு ஏரோதைப் போலவே ஆபத்தானவனாக இருந்ததால், யோசேப்பு தனது குடும்பத்தைப் பெத்லகேமுக்கு அழைத்துச் செல்வதற்குப் பதிலாக நாசரேத்திற்கு அழைத்துச் சென்றார்.

► ஜான் வெஸ்லி சிறு குழந்தையாக இருந்தபோது, எரியும் வீட்டிலிருந்து அற்புதமாக மீட்கப்பட்டார். ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக தேவன் தன்னைப் பாதுகாத்ததாக அவர் நம்பினார். வெஸ்லி தன்னை, "அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி" (சகரியா 3:2) என்று குறிப்பிட்டுக்கொண்டார். அற்புதமாகப் பாதுகாக்கப்பட்டதன் மூலமோ அல்லது தேவனுடைய பராமரிப்பின் மூலமோ, தேவன் உங்களை ஊழியத்திற்காக எவ்வாறு

பாதுகாத்து வழிநடத்தினார் என்ற கதைகளை உங்கள் வகுப்பில் உள்ளவர்கள் பகிர்ந்து கொள்ளும்படி அழைக்கவும்.

ஒரு நெருக்கமான பார்வை: மத்தேயு 2:23

மற்ற சுவிசேஷ புத்தகங்களை விட, இயேசுவின் ஊழியம் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை எவ்வாறு நிறைவேற்றியது என்பதை மத்தேயு அதிகமாகக் காட்டுகிறது. யூத வாசகர்களுக்கு எழுதிய மத்தேயு, இயேசுவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா என்பதை நிரூபித்தார்:

- இயேசுவின் கன்னிகைப் பிறப்பு (மத்தேயு 1:22-23) ஏசாயா 7:14-ஐ நிறைவேற்றுகிறது.
- பெத்லகேமில் இயேசுவின் பிறப்பு (மத்தேயு 2:5-6) மீகா 5:2-ஐ நிறைவேற்றுகிறது.
- எகிப்திற்கு மேற்கொண்ட பயணம் (மத்தேயு 2:14-15) ஓசியா 11:1-ஐ நிறைவேற்றுகிறது.
- பெத்லகேமில் குழந்தைகள் கொல்லப்பட்டது (மத்தேயு 2:16-18) எரேமியா 31:15-ஐ நிறைவேற்றுகிறது.
- எருசலேமுக்குள் பிரவேசித்தது (மத்தேயு 21:1-5) சகரியா 9:9-ஐ நிறைவேற்றுகிறது.

தீர்க்கதரிசன நிறைவேற்றத்தின் கடினமான உதாரணங்களில் ஒன்று மத்தேயு 2:23-இல் காணப்படுகிறது. மத்தேயு எழுதுகிறார்: "நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினான். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது."

மேசியா 'நசரேயன்' என்று அழைக்கப்படுவார் என்பதற்குப் பழைய ஏற்பாட்டில் நேரடித் தீர்க்கதரிசனம் எதுவும் இல்லை என்பதுதான் இதில் உள்ள சிரமம். இந்த வசனத்தின் பின்னணியில் இரண்டு கருத்துக்கள் இருக்கலாம்:

1. இயேசுவின் காலத்தில், நாசரேத்து முக்கியத்துவமற்ற ஒரு கிராமமாக இருந்தது (யோவான் 1:46). யூத மக்கள் தங்கள் மேசியா யூதேயாவிலிருந்து வருவார் என்று எதிர்பார்த்தார்கள், வணிகப் பகுதியான கலிலேயாவிலிருந்து அல்ல (யோவான் 7:41, 52). இயேசு நாசரேத்து போன்ற ஒரு அற்பமான இடத்திலிருந்து வந்தது ஏசாயா 49:7 மற்றும் ஏசாயா 53:3 போன்ற தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியது.
2. ஏசாயா 11:1 மேசியாவை "ஒரு கிளை" என்று தீர்க்கதரிசனம் கூறுகிறது. 'கிளை' என்பதற்கான எபிரேய வார்த்தை *(netzer நெட்சர்)* 'நாசரேத்து' என்ற வார்த்தையைப் போலவே ஒலிக்கிறது. மத்தேயுவின் யூத வாசகர்கள் இந்த வார்த்தை விளையாட்டை எளிதாகப் புரிந்துகொண்டிருப்பார்கள்.

தேவன் தமது ஊழியருக்கு ஒரு முன்னோடி மூலம் வழியை ஆயத்தப்படுத்தினார்

யோவான் ஸ்நானகன் இயேசுவின் உறவினர். யோவானின் கதை, அவரது தந்தை சகரியா தேசத்திற்காகத் தூபம் காட்டும் பணியைச் செய்தபோது தொடங்குகிறது. இது ஒரு ஆசாரியனுக்குரிய மிகவும் மரியாதைக்குரிய கடமைகளில் ஒன்றாகும் (லூக்கா 1:9).

சகரியா இந்த புனிதமான கடமையைச் செய்துகொண்டிருந்தபோது, தூப பீடத்தின் வலது பக்கத்தில் ஒரு தூதன் தோன்றினார். யூத பாரம்பரியத்தின்படி, பலி செலுத்தும்போது தேவன் நிற்கும் இடமாக இது கருதப்பட்டது. காபிரியேல் தூதன் சகரியாவிடம், அவரது மகனுக்கான ஜெபங்கள் கேட்கப்பட்டதாகக் கூறினார்.

எலிசபெத் பிள்ளை பெறும் வயதைக் கடந்திருந்ததால், சகரியா தூதனின் வாக்குத்தத்தத்தை சந்தேகித்தார். அவரது அவிசுவாசத்தின் காரணமாக, யோவான் பிறக்கும் வரை அவரால் பேச முடியாமல் போனது. ஒரு ஆசாரியனாகவும், வேத வசனங்களைக் கற்றவராகவும் இருந்த சகரியா, அன்னாள் மற்றும் ராகேலின் பழைய ஏற்பாட்டுக் கதைகளை அறிந்திருக்க வேண்டும். தேவன் அற்புதமாக எலிசபெத்தின் கர்ப்பத்தைத் திறப்பார் என்ற வாக்குத்தத்தத்தை அவர் நம்பியிருக்க வேண்டும்.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, யோவான் தனது ஊழியத்தைத் தொடங்கினார். எருசலேமில் ஆசாரியனாகப் பணியாற்றுவதற்குப் பதிலாக, யோவான் யூதேயாவின் வனாந்தரத்தில் ஒரு தீர்க்கதரிசியாக ஊழியம் செய்தார். மேசியாவின் முன்னோடியாக (forerunner) யோவான் அனுப்பப்பட்டார். யோவான் பிரசங்கித்தபோது, மக்கள், "யோவான் தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" (லூக்கா 3:16) என்று பதிலளித்தார். தனது எஜமானரின் காலணிகளைக் கவனிப்பது ஒரு அடிமையின் மிகக் தாழ்வான கடமையாகும், ஆனால் யோவான், "வருகிறவர் எனக்கு மிகவும் மேலானவர், இந்தத் தாழ்வான கடமையைச் செய்யக்கூட நான் தகுதியற்றவன்" என்று கூறினார். யோவான் தாழ்மையான சேவைக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

வேதாகமம் முழுவதும், மற்றொருவருக்காக வழியை ஆயத்தப்படுத்த தேவன் மனிதர்களைப் பயன்படுத்தினார். பர்னபா மற்றும் பவுலின் உதாரணத்தைப் பாருங்கள். சவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருந்தபோது, பர்னபா சபையில் ஏற்கனவே மதிக்கப்படும் தலைவராக இருந்தார். சவுலை நம்புவதற்குப் பல கிறிஸ்தவர்கள் தயங்கியபோது, பர்னபா அவரை நம்பினார்.

அவர்கள் முதலாம் மிஷனரி பயணத்தைத் தொடங்கியபோது, அப்போஸ்தலர் அந்த அணியை "பர்னபாவையும் சவுலையும்" (அப்போஸ்தலர் 13:2) என்று குறிப்பிடுகிறார். விரைவில், அவர்கள் "பவுலையும் பர்னபாவையும்" (அப்போஸ்தலர் 13:43 மற்றும் அதற்குப்

பின்வருபவை) என்று அறியப்பட்டனர். ஆரம்பத்தில் பர்னபா தலைவராக இருந்தார், ஆனால் பவுல் தலைவராக உருவெடுக்க அவர் இடமளித்தார்.

சில சமயங்களில் உங்கள் பங்கு யோவான் ஸ்நானகனைப் போலவோ அல்லது பர்னபாவைப் போலவோ இருக்கலாம்—மற்றொருவருக்காக வழியை ஆயத்தப்படுத்துவது. தேவன் உங்களை எங்குப் பயன்படுத்தத் தேர்வு செய்தாலும், உங்கள் சிறந்ததைக் கொடுங்கள். தேவன் உங்களை ஒரு துணைப் பாத்திரத்தில் அமர்த்தினால், அந்த ஊழியத்தை நிராகரிக்காதீர்கள். மிகவும் பயனுள்ள முறையில் உங்களைப் பயன்படுத்த நீங்கள் தேவனை நம்பலாம்.

யோவான் ஸ்நானகன் தனது சீஷர்களை இயேசுவிடம் சுட்டிக்காட்டியபோது அவரது தாழ்மையை நாம் காண்கிறோம் (யோவான் 1:35-37). ஒரு ரபீயின் (போதகரின்) இலக்கு, தன்னைத் தொடர்ந்து வரும் மற்றும் மதிக்கும் சீஷர்களைப் பெறுவதாகும். அதற்குப் பதிலாக, யோவான் ஸ்நானகன் தனது சீஷர்களை ஒரு பெரிய போதகரிடம் சுட்டிக்காட்டினார். தனது பணி தனக்கு மேலான ஒருவரைச் சுட்டிக்காட்டுவது என்பதை அவர் புரிந்துகொண்டார். தனது சீஷர்கள் தன்னை விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றுவதை யோவான் பார்த்தார். அவரது இலக்கு தேவனுடைய ராஜ்யமாக இருந்ததே தவிர, சொந்த மகிமை அல்ல. கிறிஸ்தவத் தலைவர்களாகிய நாம், நமது இலக்கு மக்களை இயேசுவிடம் சுட்டிக்காட்டுவதே தவிர, நமக்கான வெற்றியைப் பெறுவது அல்ல என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது.

ஒரு நெருக்கமான பார்வை: மனந்திரும்புதல் என்றால் என்ன?

► மத்தேயு 3:1-6-ஐ வாசிக்கவும்.

யோவான் மனந்திரும்புதலின் செய்தியைப் பிரசங்கித்தார். இன்று, சிலர் மனந்திரும்புதல் என்பது உங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்வது மட்டுமே என்று கூறுகிறார்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலர் தங்கள் வாழ்க்கையில் மாற்றத்திற்கான எந்த அடையாளத்தையும் காட்டுவதில்லை.

இருப்பினும், "மனந்திரும்புதல்" என்ற வார்த்தை ஒரு மனரீதியான முடிவை விட மேலானது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் எபிரேய தீர்க்கதரிசிகளைப் போலவே 'மனந்திரும்புதல்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினர். இது வாழ்க்கையின் முழுமையான மாற்றத்தைக் குறித்தது. புதிய ஏற்பாட்டில், மனந்திரும்புதல் என்பது:

- உங்கள் எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் மாற்றுவது **மற்றும்**
- உங்கள் செயல்களையும் வாழ்க்கை முறையையும் மாற்றுவது.

சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் ஒரு பாப் பாடகர் இருந்தார், அவர் தனது பாவமான வாழ்க்கை முறைக்காக அறியப்பட்டார். அவர், "நான் ஒரு கிறிஸ்தவனாக

மாறிவிட்டேன், ஆவியால் நிறைந்திருக்கிறேன். நான் முன்ப போலவே தொடர்ந்து வாழ்கிறேன், ஆனால் இப்போது நான் ஒரு கிறிஸ்தவன். நான் இறந்தால் பரலோகத்திற்குச் செல்வேன்" என்று கூறினார். இந்த மனிதன் கூறிய 'மனந்திரும்புதலில்' அவரது வாழ்க்கை முறையில் எந்த மாற்றமும் இல்லை. இது உண்மையான மனந்திரும்புதல் அல்ல.

மனந்திரும்புதல் நமது வாழ்க்கை முறையை மாற்றுகிறது என்று யோவான் கற்பித்தார். ஞானஸ்நானம் பெற வருபவர்கள் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கிரியைகளை (நடத்தையை) கொண்டிருக்க வேண்டும் என்று யோவான் வலியுறுத்தினார் (லூக்கா 3:8). ஞானஸ்நானம் என்பது ஒரு வெற்று சடங்காக மாறிவிடக்கூடாது: "நான் நம்புகிறேன், எனவே இப்போது எனக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்." ஞானஸ்நானம் என்பது உண்மையான மனந்திரும்புதலுக்கும் மாற்றப்பட்ட வாழ்க்கைக்கும் ஒரு சாட்சியாக இருக்க வேண்டும்.

தேவன் சோதனையின் மூலம் தமது ஊழியரை ஆயத்தப்படுத்தினார்

சோதனைகளை நாம் எதிர்கொள்ளும் போது, சோதனையின் மீதான இயேசுவின் வெற்றி ஒரு முன்மாதிரியாக அமைகிறது. "அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்" (மத்தேயு 4:1). இயேசு தனது பகிரங்க ஊழியத்தைத் தொடங்குவதற்குச் சற்று முன்பே இந்த சோதனை வந்தது. மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கு முன், பிதாவின் சித்தத்திற்குத் தனது முழுமையான கீழ்ப்படிதலை இயேசு நிரூபித்தார்.

மத்தேயு, இயேசுவின் ஞானஸ்நானத்திற்குப் பிறகு உடனடியாகச் சோதனை கதையை வைக்கிறார். நமது மிகப்பெரிய சோதனைகள் பெரும்பாலும் ஒரு ஆவிக்குரிய வெற்றிக்குப் பின்பே வருகின்றன. கர்மேல் பர்வதத்தில் எலியா பெற்ற வெற்றிக்குப் பிறகு, அவர் தனது உயிருக்கு பயந்து ஓடும்போது நம்பிக்கையற்ற நிலைக்கும் சந்தேகத்திற்கும் ஆளாக்கப்பட்டதைக் காண்கிறோம் (1 இராஜாக்கள் 18-19).

லூக்கா, இயேசுவின் வம்சாவளியை ஆதாமுடன் இணைத்த பிறகு சோதனை கதையை வைக்கிறார். ஆதாம் தோல்வியுற்ற இடத்தில், மனுஷகுமாரனாகிய இயேசு வெற்றி பெற்றார் என்பதை லூக்கா காட்டுகிறார் (லூக்கா 3:38). இயேசு தன்னை மனிதகுலத்தோடு அடையாளப்படுத்திக் கொண்டார், மேலும் சாதாரண கிறிஸ்தவர்கள் பாவத்தின் மீது எவ்வாறு வெற்றி பெற முடியும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

சோதனைகள்

கற்களை அப்பமாக மாற்றும் சோதனை

இயேசு தமது தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தி, கற்களை அப்பங்களாக மாற்றும்படி சாத்தான் அவரைச் சோதித்தான். இயேசு பிதாவினைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, தமது வல்லமையைச் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தும்படி அவன் தூண்டினான். ஆனால் இயேசு, உணவுக்கான தமது உரிமையைப் பிதாவினிடம் முழுமையாக ஒப்புக்கொடுத்தார்.

> "நான் எனது உரிமைகளை நிலைநாட்டி எனது பலத்தை நிரூபிப்பேன்" என்று சொல்பவர்களை நாம் பாராட்டுகிறோம். ஆனால், ஒரு மனிதனின் சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் ஒப்புக்கொடுப்பதிலேயே உண்மையான பலம் அடங்கியுள்ளது என்பதை பூரண மனிதர் (இயேசு) வெளிப்படுத்தினார்."
>
> - ஜி. காம்ப்பெல் மோர்கன்

முந்தின ஆதாமானவர், தமக்கு விலக்கப்பட்ட உணவை உட்கொண்டபோது தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனார். ஆனால், பிந்தின ஆதாமாகிய இயேசு கிறிஸ்து உண்மையுள்ளவராயிருந்தார்.

தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து கீழே குதிக்கும் சோதனை

தேவாலயத்தின் உப்பரிகையிலிருந்து (கீதரோன் பள்ளத்தாக்கிற்கு 91 மீட்டர் உயரத்தில் உள்ளது) கீழே குதிக்கும்படி சாத்தான் இயேசுவைச் சோதித்தான். இது மக்களை ஆச்சரியப்பட வைக்கும் அதே வேளையில், பிதா தம்மைப் பாதுகாப்பேன் என்று கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படி வற்புறுத்துவதாகவும் அமையும்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சோதித்துப் பார்க்கும்படி சாத்தான் சங்கீதம் 91:11-12-ஐ மேற்கோள் காட்டினான். இந்தச் சோதனையின் மூலம், இயேசு பிதாவைத் தமக்கு ஊழியக்காரராக மாற்ற முயற்சித்திருப்பார்—அதாவது தேவனைத் தமது விருப்பங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் கட்டுப்பட்டவராக மாற்றுவது.

ஆனால், ஒரு வாக்குத்தத்தம் எதற்குப் பொருந்தாதோ, அத்தகைய சூழ்நிலையில் சங்கீதம் 91-ன் வாக்குத்தத்தத்தைப் பயன்படுத்த இயேசு மறுத்துவிட்டார். சாத்தானுக்குப் பதிலாக, இயேசு உபாகமம் 6:16-ஐ மேற்கோள் காட்டினார்: "உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரிட்சை பாராதிருப்பீர்களாக." தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், தேவன் தமது வல்லமையை நம்முடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது.

ஒரு நெருக்கமான பார்வை: மெய்யான விசுவாசம்

சில கிறிஸ்தவர்கள், "வேதத்திலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் எனக்கே உரியது" என்று கூறுகிறார்கள். வேதத்தின் ஒவ்வொரு வாக்குத்தத்தமும் உண்மையானது என்றாலும், "இந்த வாக்குத்தத்தம் இந்தச் சூழ்நிலைக்குப் பொருந்துமா?" என்று நாம்

எப்போதும் கேட்க வேண்டும். வனாந்தரத்தில் தாம் எதிர்கொண்ட சூழ்நிலைக்கு சங்கீதம் 91-ன் வாக்குத்தத்தம் தேவனுடைய சித்தமல்ல என்பதை இயேசு அறிந்திருந்தார். தேவனுடைய வல்லமையைக் கட்டுப்படுத்த முயலாமல், உண்மையான விசுவாசத்துடன் அவருடைய வாக்குத்தத்தங்களை நாம் உரிமைப்பாராட்டுகிறோம் என்பதை எப்படி உறுதிப்படுத்துவது?

(1) நாம் தேவனுடைய வார்த்தையை அறிந்திருக்க வேண்டும்.

வேதாகம வாக்குத்தத்தத்தின் பின்னணியையும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளையும் நாம் எவ்வளவு அதிகமாக அறிகிறோமோ, அவ்வளவாக அந்த வாக்குத்தத்தம் நமது சூழ்நிலைக்குப் பொருந்துமா என்பதைச் சரியாக அளவிட முடியும்.

சில வாக்குத்தத்தங்கள் குறிப்பிட்ட நபர்களுக்கு, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் கொடுக்கப்பட்டன. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலர்கள் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால், தேவன் அவர்களுக்கு லௌகிக ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணினார்: நிலம் அதிக பலன் தரும், களஞ்சியங்கள் நிரம்பும், யுத்தங்களில் வெற்றி கிடைக்கும். ஆனால் புதிய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்கள் பெரும்பாலும் ஆவிக்குரிய நன்மைகளைப் பற்றியவை. இதைக் கண்டு சிலர் ஏமாற்றமடையலாம், ஆனால் நாம் மகிழ வேண்டும். லௌகிகச் செல்வம் தற்காலிகமானது; ஆவிக்குரிய செழிப்பு நித்திய மதிப்புடையது. விசுவாசம் என்பது தேவன் தமது வாக்குத்தத்தங்களைத் தமது வழியில் நிறைவேற்றுவார் என்று நம்புவதே தவிர, நம்முடைய ஆசைகளைத் தேவன் நிறைவேற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதல்ல.

(2) குறிப்பான மற்றும் பொதுவான வாக்குத்தத்தங்களுக்கு இடையிலான வேறுபாட்டை நாம் அடையாளம் காண வேண்டும்.

ஒரு பொதுவான வாக்குத்தத்தத்தை வாசிக்கும்போது, தேவன் அந்த வாக்குத்தத்தத்தை நமது குறிப்பிட்ட சூழ்நிலைக்குத் தருகிறாரா என்று கேட்க வேண்டும். சில வாக்குத்தத்தங்கள் பொதுவானவை, அவை எல்லாச் சூழ்நிலைகளுக்கும் உலகளாவியவை அல்ல.

சங்கீதம் 103:3, “உன் நோய்களையெல்லாம் குணமாக்கி” என்று தேவனைத் துதிக்கிறது. சில கிறிஸ்தவர்கள் இதை, தேவன் விசுவாசிகளின் ஒவ்வொரு நோயையும் குணப்படுத்துவார் என்பதற்கான உலகளாவிய வாக்குத்தத்தமாக எடுத்துக்கொள்கிறார்கள். இருப்பினும், வேதம் காட்டுகிறபடி, ஒவ்வொரு சரீர வியாதியும் குணமாக்கப்படுவதில்லை. பவுல் சுகத்திற்காக ஜெபித்தார், ஆனால் தேவன் "இல்லை" என்று கூறிவிட்டார் (2 கொரிந்தியர் 12:7). சில நேரங்களில் தேவன் தமது பிள்ளைகளைக் குணமாக்கத் தெரிந்துகொள்கிறார்; சில நேரங்களில் அந்த வேதனையைத் தாங்குவதற்கான கிருபையை அளிக்கத் தெரிந்துகொள்கிறார்.

நாம் அந்த மூன்று எபிரெய இளைஞர்களைப் போலப் பதிலளிக்க வேண்டும். நேபுகாத்நேச்சார் ராஜா அவர்களை எரியும் அக்கினிச் சூளையில் போடுவதாக மிரட்டியபோது, அவர்கள் சொன்னார்கள்: “நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்” (தானியேல் 3:17-18). தேவன் தங்களை விடுவிக்க வல்லவர் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்; ஆனால் தேவன் வேறு பாதையைத் தேர்ந்தெடுத்தாலும், அவருக்கு உண்மையாகச் சேவை செய்ய அவர்கள் உறுதியாய் இருந்தார்கள்.

தேவன் தமது பிள்ளைகளைச் சரீர உபத்திரவங்களிலிருந்து விடுவிக்க முடியும், ஆனால் அவர் எப்போதும் அந்தப் பாதையைத் தேர்ந்தெடுப்பதில்லை. ஒரு வேதாகம வாக்குத்தத்தம் உங்களுக்குக் குறிப்பிட்டது என்று தேவன் தெளிவுபடுத்தும் வரை, தேவன் தமது விருப்பப்படி செய்யட்டும் என்று அவரை நம்புங்கள். அப்போஸ்தலனாகிய யோவான் இந்த வாக்குத்தத்தத்தைத் தருகிறார்: “நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்” (1 யோவான் 5:14-15).

வேதத்திலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் எனது குறிப்பிட்ட சூழ்நிலைக்குப் பொருந்தும் என்று நான் எண்ணக்கூடாது. விசுவாசம் என்பது, "நான் அவருடைய சித்தத்தின்படி கேட்பேன்" என்று சொல்வதாகும். நான் ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் தனிப்பட்ட வாக்குத்தத்தமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மாறாக, அந்த வாக்குத்தத்தம் எனது சூழ்நிலைக்காகக் கொடுக்கப்பட்டதா என்று கேட்க வேண்டும்.

(3) நாம் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும்.

“நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்” (யோவான் 14:13) என்று இயேசு வாக்குப்பண்ணினார். இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்பது, உங்கள் ஜெபம் இயேசுவின் முன்னுரிமைகள், சித்தம் மற்றும் சுபாவத்தோடு ஒத்துப்போக வேண்டும் என்பதாகும். தேவன் மகிமைப்படக்கூடிய காரியங்களுக்காக இயேசு ஜெபித்தார்; நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். நமக்கு உண்மையான விசுவாசம் இருந்தால், நமது சொந்த சித்தத்தை விட தேவனுடைய மகிமையையே தேடுவோம்.

பிதா மகிமைப்பட வேண்டும் என்று ஜெபிப்பது என்பது, நம் வாழ்வில் தேவனுடைய மேலான நோக்கங்களுக்கு நாம் கீழ்ப்படிகிறோம் என்பதாகும். தேவன் இஸ்ரவேலருக்கு வாக்குப்பண்ணினார்: "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே" (எரேமியா 29:11). இந்த வாக்குத்தத்தம் இஸ்ரவேலர்கள் பாபிலோனில் 70 ஆண்டுகள் அடிமைத்தனத்தை எதிர்கொண்டபோது கொடுக்கப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பாபிலோனிய அடிமைத்தனம் கூட தேவனுடைய மக்களுக்கு நன்மையையே செய்யும்; அந்த இக்கட்டில் இஸ்ரவேலர் தேவனை நோக்கிக் கூப்பிடுவார்கள், அவர் அவர்களுக்குச் செவிகொடுப்பார்.

இந்த வாக்குத்தத்தம் இன்று நமக்குப் பொருந்துமா? ஆம்! தேவனுடைய சுபாவம் மாறவில்லை; அவர் தமது பிள்ளைகளுக்கு நன்மையையே செய்கிறார். நடப்பவை அனைத்தும் நன்மையாகத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் இயேசுவின் நாமத்தில் நாம் நம்பிக்கையுடன் ஜெபிக்க முடியும், ஏனெனில் நம் வாழ்வில் நடக்கும் அனைத்திலும் தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்றி வருகிறார் என்பதை நாம் அறிவோம்.

தேவன் சோதனையின் மூலம் தமது ஊழியரை ஆயத்தப்படுத்தினார் (தொடரும்)

சோதனைகள் (தொடரும்)

உலகத்தின் ராஜ்யங்களை அளிக்கும் வாக்குறுதி

சாத்தானின் இறுதிச் சோதனை ஒரு **சமரசம்** ஆகும்; அதாவது சிலுவையின் மரணம் இல்லாமலேயே இயேசுவுக்குரிய எதிர்கால அரசாட்சியைப் பெறுவதற்கான ஒரு வழியாகும். இயேசு சாத்தானை வணங்கினால், அவர் சிலுவையின் வேதனையைத் தவிர்த்துவிடலாம் என்பதே அந்தச் சோதனை. அதற்கு இயேசு உபாகமம் 6:13-ஐக் கொண்டு பதிலளித்தார்: "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" (மத்தேயு 4:10).

சோதனையின் மேல் இயேசுவின் வெற்றி

இயேசுவின் சோதனை அனுபவத்திலிருந்து நாம் பலன் பெற வேண்டுமென்றால், அவர் முழு மனிதராக இருந்தார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராய்" இருந்தார் (எபிரெயர் 4:15).

► 1 கொரிந்தியர் 10:13 மற்றும் எபிரேயர் 4:15 ஆகியவற்றை வாசிக்கவும். இவை சோதனையைப் பற்றி என்ன கற்பிக்கின்றன?

1 யோவான் 2:16-ல், சோதனையானது மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றிலிருந்து வரலாம் என்று அப்போஸ்தலன் காட்டுகிறார். இயேசு இந்த ஒவ்வொரு பகுதியிலும் சோதிக்கப்பட்டார்.

- இயேசு அப்பத்திற்காகப் பசியாயிருந்தபோது, சாத்தான் அவர் மாம்சத்தைச் சோதித்தான்.
- உலகத்தின் ராஜ்யங்களை இயேசுவுக்குக் காட்டியதன் மூலம் சாத்தான் அவர் கண்களைச் சோதித்தான்.
- மக்களை ஆச்சரியப்பட வைக்கும் ஒரு வியக்கத்தக்கச் செயலைச் செய்யத் தூண்டியதன் மூலம் சாத்தான் இயேசுவின் ஜீவனத்தின் பெருமையைத் தூண்டினான்.

சோதனையின் போது இயேசு பெற்ற வெற்றி நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. சோதனையை வெல்ல இயேசு பயன்படுத்திய மூன்று காரியங்களைக் கவனியுங்கள்.

ஆவியானவரின் வல்லமை

இயேசு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலில் நடந்தார். ஆவியானவர் அவரை எங்கு வழிநடத்தினாரோ அதை அவர் செய்தார். "இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்" (லூக்கா 4:1).

தமது பூமிக்குரிய ஊழியக் காலம் முழுவதும், இயேசு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் செயல்பட்டார். அவர் ஆவியானவரின் வல்லமையால் பிசாசுகளைத் துரத்தினார் (மத்தேயு 12:28). "நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்" (அப்போஸ்தலர் 10:38).

இயேசு தனது பூமிக்குரிய ஊழியத்தை பரிசுத்த ஆவியின் வல்லமையில் செய்தார். நாமும் சோதனைகளை எதிர்கொள்ளப் பலமுள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்றால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் வாழ வேண்டும்.

ஜெபத்தின் வல்லமை

40 நாட்கள் உபவாசம் மற்றும் ஜெபத்தைத் தொடர்ந்தே இயேசு சோதிக்கப்பட்டார். ஜெபம் அவரை ஆவிக்குரிய யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்தியது. பின்வரும் பாடத்தில், இயேசுவின் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை நாம் காண்போம்.

இயேசுவே ஜெபத்தைச் சார்ந்திருந்தார் என்றால், ஜெபமின்றி ஆவிக்குரிய வெற்றிகளை நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

நமது ஜெப வாழ்க்கையில் நாம் கவனக்குறைவாக இருக்கும்போதே சாத்தான் பெரும்பாலும் நம்மைத் தாக்குகிறான். நாம் உயிர்மீட்சியுள்ள ஜெப வாழ்க்கையைக் கொண்டிருக்கவில்லை என்றால், சோதனையின் முன்னே பலவீனமாக இருப்போம் என்பதை அவன் அறிவான்.

வார்த்தையின் வல்லமை

ஒவ்வொரு சோதனைக்கும் இயேசு வேதவசனங்களைக் கொண்டே பதிலளித்தார். இந்த வசனங்களை அவர் எப்படி அறிந்தார்? யூதச் சிறுவர்கள் தங்கள் குழந்தைப் பருவக் கல்வியின் ஒரு பகுதியாக 'தோராவை' மனப்பாடம் செய்தனர். இயேசு சோதிக்கப்பட்டபோது, வேதவசனங்கள் உடனே அவர் நினைவிற்கு வந்தன.

கிறிஸ்தவர்களாகிய நாம், தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் பதிக்க வேண்டும். சோதனைக் காலங்களில், அந்த வசனங்களே நமக்கு பலத்தைத் தரும்.

சோதனையை எதிர்கொள்வதில், நம்மிடம் உள்ள அதே கருவிகளையே இயேசுவும் பயன்படுத்தினார். நாமும் இயேசுவைப் போலவே பரிசுத்த ஆவியின் வல்லமை, ஜெபத்தின் வல்லமை மற்றும் வார்த்தையின் வல்லமையுடன் சோதனையைச் சந்திக்க வேண்டும். அந்த ஆயுதங்கள் இல்லையென்றால், சாத்தானின் தாக்குதலுக்கு முன்னால் நாம் விழுந்துவிடுவோம்.

ஒரு நெருக்கமான பார்வை: மனுவுருவாதல்

ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் இயேசு தெய்வீகமானவர் என்பதில் ஒருமனப்பட்டிருந்தனர். ஏரியஸ் போன்ற வேதபுரட்டர்கள் இயேசுவின் தெய்வத்துவத்தை மறுத்தபோதிலும், சத்திய மார்க்க கிறிஸ்தவர்கள் இயேசு தெய்வீகமானவர் என்றே போதித்தனர்.

இயேசு முழுமையான மனிதர் என்பதையும் சத்திய மார்க்க கிறிஸ்தவம் போதித்தது. பெரும்பாலும் துர்ப்போதகர்களால் (Heretics) இந்த உபதேசம் மறுக்கப்பட்டது. இன்றும் கூட, பல சுவிசேஷக் கிறிஸ்தவர்கள் (Evangelicals) இயேசுவின் மனிதத்தன்மையை (Humanity) போதுமான அளவு தீவிரமாகக் கருதுவதில்லை. இயேசு முழுமையான தெய்வீகம் கொண்டவர் என்று நம்பும் பல கிறிஸ்தவர்கள், அவருடைய மனிதத்தன்மை உண்மையானது அல்ல என்று எண்ணுகிறார்கள். அவர் ஒரு மனித உடலை மட்டும் தற்காலிகமாகக் கடன் வாங்கினார் என்றும், அவர் முழு மனிதர் அல்ல என்றும் அவர்கள் நினைக்கிறார்கள்.

சில பிரசங்க உதாரணங்கள் இத்தகைய தவறான கருத்திற்கு வழிவகுக்கின்றன. ஒரு ராஜா ஒரு குடியானவனைப் போல வேடமிட்டு நகர்வலம் வந்த கதையைச் சில

பிரசங்கிகள் கூறுவதுண்டு. ஆனால் இயேசு, மனிதனைப் போல வேடமிட்ட தேவன் அல்ல; அவர் நம்மில் ஒருவராக மாறினார்.

இயேசுவின் மனிதத்தன்மை குறித்த உபதேசம் நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது. இயேசு முழுமையான மனிதராக இல்லாவிட்டால், அவருடைய வாழ்க்கை நமக்கு ஒரு நிஜமான முன்மாதிரியாக இருக்க முடியாது. ஒரு இறையியலாளர் இதை இவ்வாறு கூறுகிறார்: "இயேசு நம்மைப் போன்ற ஒருவராக இல்லையென்றால், நாம் அவரைப் போல வாழ்வதற்குப் பொறுப்பல்ல (அதாவது நமக்கு விலக்கு அளிக்கப்படுகிறது)."[7]

நாம் தொடர்ந்து பாவத்தில் விழ வேண்டும் என்பது பலருடைய நம்பிக்கையாக உள்ளது. ஆனால் இயேசு, ஒரு சாதாரணக் கிறிஸ்தவன் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பாவத்தின் மேல் வெற்றிகொள்ள முடியும் என்பதைத் தமது மனிதத்தன்மையின் மூலம் நிரூபித்தார்.

இயேசு நமது உடைந்த மனிதத்தன்மையின் ஒரு பகுதியாக மாறி, ஆவியானவரின் வல்லமைக்கான தேவையை அனுபவித்து, நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார் என்றால், சோதனையின் மேல் அவர் பெற்ற வெற்றி நமது அன்றாட வாழ்வில் எப்படி வெற்றி பெறுவது என்பதைக் காட்டுகிறது. பரிசுத்த ஆவியின் மூலம், நாம் ஒரு வெற்றிகரமான வாழ்க்கையை வாழ முடியும்.

► இயேசுவின் தெய்வத்துவம் அல்லது அவருடைய மனிதத்தன்மை - இதில் எதைப் புரிந்து கொள்வது உங்களுக்குக் கடினமாக உள்ளது? இந்த இரண்டு உபதேசங்களும் நமது கிறிஸ்தவ வாழ்விலும் ஊழியத்திலும் எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றி விவாதியுங்கள்.

முடிவுரை: தேவன் தமது ஊழியக்காரர்களை ஆயத்தப்படுத்துகிறார்

இந்தப் பாடத்தில், இயேசுவின் ஊழியத்திற்கான பாதையை தேவன் எப்படி ஆயத்தப்படுத்தினார் என்பதைக் கண்டோம். அவருடைய வம்சாவளி, ரோமப் பேரரசு, அற்புதப் பிறப்பு, யோவான் ஸ்நானகனின் ஊழியம் மற்றும் சோதனைகள் ஆகியவற்றின் மூலம் தேவன் இயேசுவுக்கான வழியை ஆயத்தப்படுத்தினார்.

வேதாகமம் முழுவதும் இந்த உண்மையை நாம் மீண்டும் மீண்டும் காண்கிறோம். பவுலின் உதாரணத்தைப் பாருங்கள். பவுல் தர்சு என்னும் ரோமப் பட்டணத்தில் வளர்ந்தார். சிறுவயதிலிருந்தே அவருக்குப் புறஜாதி நண்பர்கள் இருந்தனர். மற்ற யூதர்களைப் போலல்லாமல், பவுல் புறஜாதிகளோடு பழகுவதில் வசதியாக இருந்தார்.

---

[7] Cherith Fee Nordling, "Open Question" *Christianity Today,* April 2015, 26-27

பவுலின் தந்தை ஒரு ரோமக் குடிமகனாக இருந்ததால், பவுலுக்கு மதிப்பிற்குரிய ரோமக் குடியுரிமை உரிமைகள் இருந்தன. அவருடைய தாய் ஒரு யூதப் பெண் என்பதால், பவுல் சிறுவயதிலேயே பழைய ஏற்பாட்டுச் சுருள்களில் பயிற்சி பெற்றார். அவர் ஒரு சிறந்த அறிவாளியாக இருந்தார், மேலும் கமாலியேல் என்னும் சிறந்த ரபீயினிடத்தில் எபிரெய இறையியலைப் பயின்றார். தனது ரோமப் பின்னணியால், அவர் கிரேக்க மொழியையும் கிரேக்கத் தத்துவஞானிகளின் போதனைகளையும் கற்றார்.

இத்தகைய பின்னணியைக் கொண்ட பவுலை, தேவன் புறஜாதிகளுக்கு ஒரு மிஷனரியாக அழைத்ததில் ஆச்சரியமில்லை. பவுல் பிறந்ததிலிருந்தே, அவரைப் புறஜாதிகளுக்கான முதல் அப்போஸ்தலனாக தேவன் ஆயத்தப்படுத்தினார். இந்த ஊழியத்திற்காக தேவன் அளித்த ஆயத்தங்களை எண்ணிப் பாருங்கள்:

- பவுலின் ரோமக் குடியுரிமை, அவர் எங்கும் தடையின்றிப் பயணம் செய்ய அனுமதித்தது.
- அவருடைய எபிரெய மற்றும் கிரேக்கப் பயிற்சி, புதிய ஏற்பாட்டின் மிக ஆழமான புத்தகங்களை எழுதுவதற்கு அவருக்குக் கருவிகளாக அமைந்தன.
- அவர் கற்ற கிரேக்கத் தத்துவம், அத்தேனே போன்ற இடங்களில் இருந்த கிரேக்கச் சிந்தனையாளர்களுடன் உரையாட அவருக்குத் தகுதியை அளித்தது.

“தேவன் எனக்குப் பவுலைப் போலச் சிறந்த கல்வியையோ, குடும்பப் பின்னணியையோ கொடுக்கவில்லை” என்று நீங்கள் சொல்லலாம். அது பரவாயில்லை! முதலாம் நூற்றாண்டுச் சபையின் மற்றொரு தலைவரைப் பாருங்கள்.

சீமோன் ஒரு சாதாரண மீனவராக வளர்ந்தவர். பவுலைப் போன்ற கல்வியோ அல்லது அறிவுத்திறனோ அவரிடம் இல்லை. உண்மையில், பவுல் எழுதிய சில காரியங்கள் புரிந்துகொள்வதற்குக் கடினமாக இருப்பதாகப் பேதுருவே பின்னாளில் குறிப்பிட்டார் (2 பேதுரு 3:15-16). ஆனால் தேவன் பேதுருவை வல்லமையாகப் பயன்படுத்தினார். பவுலின் ஆழமான வார்த்தைகளைக் கண்டு வியந்த மக்கள், பேதுருவின் எளிய பிரசங்கங்களைப் புரிந்து கொண்டனர்.

தேவன் உங்களை உங்கள் ஊழியத்திற்காக ஆயத்தப்படுத்தியிருக்கிறார். உங்கள் பயிற்சி, பின்னணி மற்றும் தேவன் உங்களுக்குத் தந்துள்ள அனைத்தையும் அவரிடம் அர்ப்பணித்தால், அவர் உங்களைத் தமது நோக்கத்திற்காகப் பயன்படுத்துவார். தேவன் யாரை ஊழியத்திற்கு அழைக்கிறாரோ, அவர்களை அந்த ஊழியத்திற்காக ஆயத்தப்படுத்தவும் செய்கிறார்.

பாடம் 1 வீட்டுப்பாடங்கள்

(1) இந்தப் பாடத்தில், சோதனையின் மேல் இயேசு பெற்ற வெற்றியை ஒரு முன்மாதிரியாகக் கண்டோம். கீழே கொடுக்கப்பட்டுள்ள முதல் அட்டவணையில், சோதனையின் போது விசுவாசத்தில் உறுதியாக நின்று வெற்றி பெற்ற மூன்று வேதாகம நபர்களைப் பட்டியலிடுங்கள். சோதனையை எதிர்கொள்ள அவர்களுக்குப் பலன் அளித்த ஒரு முக்கிய காரியத்தைக் குறிப்பிடுங்கள். பின்பு, சோதனையில் விழுந்துபோன மூன்று வேதாகம உதாரணங்களைப் பட்டியலிடுங்கள். ஒவ்வொரு நிகழ்விலும், அவர்கள் விழுந்துபோவதற்குக் காரணமாக இருந்த ஒரு காரியத்தைக் கண்டறியுங்கள்.

(2) நீங்கள் பட்டியலிட்ட உதாரணங்களின் அடிப்படையில், 'சோதனை' குறித்த ஒரு பிரசங்கம் அல்லது வேதாகமப் படிப்பைத் தயார் செய்யுங்கள். அதில் இயேசுவின் முன்மாதிரியையும், உங்கள் அட்டவணையில் நீங்கள் குறிப்பிட்ட மற்ற உதாரணங்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

சோதனையின் மேல் வெற்றி	வேதப்பகுதி	வெற்றிக்குக் காரணம் எது?
யோசேப்பு (தார்மீக வாழ்வில் பரிசுத்தம்)	ஆதியாகமம் 39	தேவன் மேல் கொண்டிருந்த கவனம் (ஆதியாகமம் 39:9)

சோதனையில் தோல்வி	வேதப்பகுதி	தோல்விக்கு காரணம் எது?
பேதுரு (இயேசுவை மறுதலித்தல்)	லூக்கா 22:54-62	அதீத தன்னம்பிக்கை (லூக்கா 22:31-34)

பாடம் 2
இயேசுவைப் போல ஜெபம் செய்தல்

பாடத்தின் நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:

(1) இயேசுவினுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் ஜெபத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்.

(2) இயேசுவினுடைய போதனைகளிலிருந்து ஜெபத்திற்கான கோட்பாடுகளை கற்றுக் கொள்ளுதல்.

(3) இன்று நாம் செய்துவருகிற ஊழியத்தில் ஜெபத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுதல்.

(4) ஜெபிக்கிற ஒரு நபராக மாறுவதற்கான நடைமுறைப் படிகளை உருவாக்குதல்.

ஊழியத்திற்கான கோட்பாடு

நாம் இயேசுவைப் போலவே ஊழியம் செய்ய விரும்பினால், நாம் இயேசுவைப் போலவே ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

முன்னுரை

ஜெபத்தைப் பற்றிய ஒரு செய்தியில், பேராசிரியர் ஹோவர்ட் ஹென்ட்ரிக்ஸ் பின்வரும் இந்த உறுதியான கருத்தை முன்வைத்தார்:

> நீங்கள் ஜெபிக்கவில்லை என்றால், நீங்கள் வேதாகமத்தை வாசித்தாலும், சாத்தான் அதை ஒரு பொருட்டாக கருதுவதில்லை, ஏனென்றால் வேதவசனம் ஒருபோதும் உங்கள் வாழ்க்கையை மாற்றும்படிக்கு கிரியை செய்யாது. அதற்கு பதிலாக நீங்கள் வேதாகமத்தை நன்கு அறிந்திருக்கிறபடியால், அது உங்களுக்குள் ஒரு ஆழமான ஆவிக்குரிய பெருமையைக் கூட கொண்டுவரலாம்.
>
> நீங்கள் ஜெபிக்கவில்லை என்றால், உங்கள் விசுவாசத்தைப் பிறரோடு பகிர்ந்துகொண்டாலும், சாத்தான் அதை ஒரு பொருட்டாக கருதுவதில்லை, ஏனென்றால் மனிதர்களைக் குறித்து தேவனிடத்தில் பேசுவது, தேவனைக் குறித்து மனிதர்களிடம் பேசுவதைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவன் அறிவான்.

நீங்கள் ஜெபிக்கவில்லை என்றால், ஒரு உள்ளூர் திருச்சபையின் ஊழியத்தில் நீங்கள் ஈடுபட்டாலும், சாத்தான் அதை ஒரு பொருட்டாக கருதுவதில்லை, ஏனென்றால் நீங்கள் ஊழியத்தில் சுறுசுறுப்பாக இருப்பீர்கள், ஆனால் நீங்கள் பெரிய அளவில் எதையும் சாதிக்க மாட்டீர்கள்.[8]

இயேசு இவ்வுலகத்தில் இருந்தபோது செய்த ஊழியத்திற்கு ஜெபம் மையமாக இருந்தது. ஜெபத்தைவிட வேறு எதற்கும் அதிக முன்னுரிமை இருக்கவில்லை. இயேசுவின் ஊழியம் அவருடைய பரமபிதாவுடனான உறவில் வேரூன்றியிருந்தது. அந்த உறவு ஜெபம் மற்றும் தேவனுடனான நெருக்கமான ஐக்கியத்தின் மூலம் நிலைநிறுத்தப்பட்டது.

► இந்த பாடத்தைப் படிப்பதற்கு முன்பாக, உங்கள் வாழ்விலும் ஊழியத்திலும் ஜெபத்தின் பங்கு என்ன என்பது மதிப்பிடுங்கள். உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்:

- எனது ஜெப வாழ்க்கை சீராக இருக்கிறதா?
- கடைசியாக எப்போது ஜெபத்திற்கு ஒரு குறிப்பிட்ட பதிலை நான் கண்டேன்?
- எனது ஜெப வாழ்க்கைக்கான பெரிய சவால்கள் என்ன?
- எனது ஜெப வாழ்க்கையில் நான் வளர்கிறேனா?

"ஜெபம் ஆத்துமாவின் உடற்பயிற்சி கூடம்."
- சாமுவேல் ஸ்வெமர், "இஸ்லாமியர்களுக்கான அப்போஸ்தலர்"

இயேசுவினுடைய ஜெபத்தின் முன்மாதிரி

இயேசுவின் ஊழியக்காலம் முழுவதும், முக்கியமான தருணங்களில் அவர் ஜெபத்தில் தரித்திருந்ததை நாம் காண்கிறோம். இயேசு ஜெபித்த 15 குறிப்பிட்ட சம்பவங்களை சுவிசேஷ புத்தகங்கள் தெரிவிக்கின்றன. ஜெபம் ஒருபோதும் இரண்டாம் பட்சமாக இருக்கவில்லை; அது அவருடைய வாழ்க்கையின் மையமாக இருந்தது.

மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களைக் காட்டிலும் லூக்கா, இயேசுவின் ஊழியத்தில் ஜெபத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறார். பன்னிரண்டு சீடர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு இயேசு இரவு முழுவதும் ஜெபித்தார் என்பதை லூக்கா மட்டுமே நமக்குச் சொல்லுகிறார் (லூக்கா 6:12). பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரை ஜெபிப்பதற்காக இயேசு மலைக்கு அழைத்துச் சென்றபோதுதான் மறுரூபமடைந்தார் என்பதையும் லூக்கா மட்டுமே நமக்குச் சொல்லுகிறார் (லூக்கா 9:28). ஜெபத்திற்கான இந்த

[8] Howard G. Hendricks எழுதிய "Prayer—the Christian's Secret Weapon" ("ஜெபம்—கிறிஸ்தவனின் இரகசிய ஆயுதம்") என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. Veritas, ஜனவரி 2004 இதழில் மறுபிரசுரம் செய்யப்பட்டது.

முக்கியத்துவம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலும் தொடர்கிறது, ஏனெனில் ஆதித்திருச்சபையில் ஜெபத்தின் பங்கு குறித்து லூக்கா 35 முறை எழுதுகிறார்.

இயேசுவின் அனுதின ஊழியத்தில் ஜெபம்

► மாற்கு 1:32-39-ஐ வாசிக்கவும்.

இயேசுவினுடைய ஊழியத்தின் ஆரம்பகாலத்தில் நடந்த இந்தச் சம்பவம், ஜெபமும் ஊழியமும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதைக் காட்டுகிறது. இந்த உரைநடை விவரிப்பின் முன்னேற்றத்தைக் கவனியுங்கள். முந்தையநாள் மாலை, இயேசு தங்கியிருந்த வீட்டின் வெளியே மக்கள் கூடினர், அவர் அவர்களில் அநேகரைக் குணப்படுத்தினார்.

இயேசு அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார். சீமோனும் அவனோடே இருந்தவர்களும் அவரைப் பின் தொடர்ந்துபோய், "உம்மை எல்லாரும் தேடுகிறார்கள்" என்று சொன்னார்கள். அதற்கு இயேசு, "அடுத்த ஊர்களிலும் நான் பிரசங்கம் பண்ணவேண்டுமாதலால், அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள்; இதற்காகவே புறப்பட்டு வந்தேன்" என்று பதிலளித்தார். இயேசுவினுடைய ஊழியத்தின் மாதிரி, **ஜெபத்துடன் கூடிய சேவையாக** இருந்தது.

இதுவே ஊழியத்திற்கான மாதிரியாக இருக்க வேண்டும். ஜெபம் இல்லாமல், நமது ஊழியம் ஆவிக்குரிய ரீதியாக நம்மை சோர்வடையச் செய்யும். ஊழியம் இல்லாமல், நமது ஜெப வாழ்க்கை சுயநலமானதாகிவிடும்; நம்மைச் சுற்றியுள்ளவர்களின் தேவைகளைச் சந்திக்க நாம் எந்த முயற்சியும் செய்ய மாட்டோம். ஜெபமும் ஊழியமும் ஒன்றிணைந்ததாக இருக்கவேண்டும் என்பதை இயேசு காண்பிக்கிறார்.

தீர்மானம் எடுக்கும் காலங்களில் ஜெபம்

► லூக்கா 6:12-16-ஐ வாசிக்கவும்.

இயேசுவின் ஊழியத்தில் மிக முக்கியமான தீர்மானங்களில் ஒன்று பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தது ஆகும். அவர் பிரசங்கிப்பதைக் கேட்ட ஆயிரக்கணக்கானவர்களில், பலர் சீஷர்கள் என்று அழைக்கப்படும் அளவுக்கு அவரோடு நெருக்கமாக இருந்தார்கள் (யோவான் 6:60, 66). அவருடைய 72 சீஷர்கள் ஒரு பிரசங்கப் பயணத்தில் இயேசுவைக் குறித்து பிறருக்கு அறிவிக்கும் அளவுக்கு நெருக்கமாக இருந்தனர் (லூக்கா 10:1). ஆனால் இயேசு பன்னிரண்டு நபர்களை மட்டுமே அப்போஸ்தலர்களாகத் தேர்ந்தெடுத்தார்.

பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் இயேசுவுடன் அதிக நேரம் செலவிட்டனர். அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் முடிவில் அவர்கள் அவருடன் இருந்தார்கள். அவர் பரமேறிச்

சென்ற பிறகு, அப்போஸ்தலர்களில் பதினொருவர் ஆதித்திருச்சபையின் தலைவர்களாக மாறினர். பன்னிரண்டு பேரின் தேர்வு ஒரு முக்கியமான தீர்மானமாக இருந்தது. இயேசு எந்தப் புத்தகங்களையும் எழுதவில்லை அல்லது எந்தப் பள்ளிகளையும் நிறுவவில்லை. திருச்சபைக்கான அவருடைய நோக்கம் இந்த மனிதர்களால் நிறைவேற்றப்படும்.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு இயேசு என்ன செய்தார்? அவர் ஜெபித்தார். தாம் எடுக்கப்போகிற ஒரு முக்கியமான தீர்மானத்தை எதிர்கொண்ட இயேசு, இரவினை ஜெபத்தில் கழித்தார். தேவனுடைய குமாரனே ஒரு முக்கியமான தீர்மானத்தை எடுப்பதற்கு முன் இவ்வளவு உருக்கமாக ஜெபித்தாரென்றால், நாம் தீர்மானங்களை எடுக்கும்போது ஜெபம் நம்மில் எவ்வளவு முக்கியப் பங்கினை வகிக்க வேண்டும்!

பாடுகளுக்கு முன்பாக ஜெபம்

► மத்தேயு 26:36-46-ஐ வாசிக்கவும்.

கைது செய்யப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பாக, இயேசு ஜெபிப்பதற்காக கெத்செமனே தோட்டத்திற்குச் சென்றார். அவர் ஜெபிப்பதன் மூலம் பாடுகளை அனுபவிப்பதற்காகத் தம்மைத் தயார் செய்தார். இயேசு ஒருபோதும் தனது மனித சுபாவத்தின் வேதனைகளில் இருந்து தப்பிக்க தனது தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தவில்லை. மாறாக, பாடுகளை நேரிடுவதற்கான பலத்திற்காக ஜெபத்தையே சார்ந்திருந்தார்.

கெத்சமனே தோட்டத்தில் இயேசு செய்த ஜெபம் இன்று நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. அவரது ஜெபம் செயற்கையானது அல்ல; இயேசு துன்பத்தின் யதார்த்தத்தை எதிர்கொண்டார். இயேசு ஒரு மனிதனாக துன்பத்தை நேரிட்டார் என்பதை உணர்வது உங்களை உற்சாகப்படுத்துகிறதா? துன்பத்தைச் சந்தித்தபோது, இயேசு அதனிலிருந்து மீள்வதற்காக ஜெபித்தார்:

> கெத்சமனே தோட்டத்தில் அவர் ஜெபித்தபோது, “ஓ, ஆண்டவரே, உமக்காக பாடுகளை அனுபவிப்பதற்காக என்னை நீர் தேர்ந்தெடுத்ததற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்” என்று ஜெபிக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர் துக்கம், பயம், கைவிடப்படுதல், மற்றும் விரக்தி போன்ற உணர்வுகளை அனுபவித்தார். இருந்தபோதிலும், அவர் அதை சகித்துக்கொண்டார், ஏனெனில் இப்பிரபஞ்சத்தின் மத்தியில் அவரது பிதாவானவர் ஜீவிக்கிறார், ஆகவே சூழ்நிலைகள் எப்படி தோன்றினாலும் அவரில் முழுமையான நம்பிக்கையை

வைக்குமளவிற்கு ஒரு அன்பான தேவனாக அவர் இருக்கிறார் என்பதை அவர் அறிந்திருந்தார்.[9]

துன்பத்தை சந்திக்கும்போது, நாம் இருக்கும் நிலைக்கு மீறி அதைவிட வலிமையானவர்களாக நம்மை காண்பித்துக் கொள்ளக்கூடாது. யோபுவைப் போல, நாம் நமது காயத்தின் வலியில் இருக்கும்போது அழலாம். இப்பூமியிலே மனிதனாக வந்து வாழ்ந்தபோது, இயேசுவும் அதையே செய்தார்! இருப்பினும், இயேசுவைப் போலவே நாமும் உண்மையுள்ளவர்களாக இருக்க முடியும், ஏனென்றால் நம்முடைய அன்பான பரலோக பிதாவுக்கு எல்லாவற்றின் மேலும் பரிபூரண ஆளுகை உள்ளது என்பதை நாம் அறிவோம்.

நம் பிதாவின் சித்தத்தை நாம் ஜெபத்தில் தான் ஏற்றுக்கொள்ள முடியும். பாடுகளை சந்தித்தபோது இயேசுவினுடைய ஜெபத்தின் திறவுகோலும், பாடுகளை நேரிடும்போது நமது ஜெபத்தின் திறவுகோலும் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதேயாகும்: "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது."

ஜெபம் பற்றிய இயேசுவின் போதனை

இயேசு தனது முன்மாதிரியின் மூலமாக ஜெபத்தின் முக்கியத்துவத்தை மட்டுமல்லாமல், தனது போதனைகளில் பெரும்பகுதியை ஜெபத்திற்கே ஒதுக்கினார். தம்மைப் பின்பற்றுபவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையானது, ஜெப வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உள்ளடக்கியது என்பதை இயேசு அறிந்திருந்தார். இதன் காரணமாக, அவர் தம் சீடர்களுக்கு ஜெபம் பண்ணும்படிக்கு கற்றுக்கொடுத்தார்.

மலைப்பிரசங்கத்தில் இயேசுவின் போதனை

► மத்தேயு 6:1-18-ஐ வாசிக்கவும்.

மலைப்பிரசங்கத்தில் இயேசு, மூன்று ஆவிக்குரியச் செயல்பாடுகளைக் குறித்துப் போதித்தார்: ஏழைகளுக்குக் கொடுத்தல், ஜெபம், மற்றும் உபவாசம். இவை மூன்றும் அவருடைய சீடர்களின் வாழ்க்கையில் பொதுவான செயல்பாடுகளாக காணப்பட வேண்டும் என்பதை இயேசு விரும்பினார் என்பது அவருடைய போதனையிலிருந்து தெளிவாகிறது. இயேசு, "நீங்கள் ஏழைகளுக்குக் கொடுத்தால்..." அல்லது "நீங்கள் ஜெபித்தால்..." அல்லது "நீங்கள் உபவாசம் செய்தால்..." என்று சொல்லவில்லை. தம்முடைய சீடர்கள் தாராள மனப்பான்மையுள்ளவர்களாகவும், ஜெபிக்கிறவர்களாகவும், சுய ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இந்த நல்ல செயல்பாடுகள் தவறான நோக்கங்களிலிருந்து வந்தால் அவை அர்த்தமற்றதாகிவிடும் என்பதை இயேசு சுட்டிக் காட்டினார். பண்டைய உலகில்,

[9] Philip Yancey, *The Jesus I Never Knew.* (Grand Rapids: Zondervan, 1995), 161

மாயக்காரன் என்பவன் ஒரு நாடகத்தில் வெவ்வேறு வேடங்களில் நடிக்க வெவ்வேறு முகமூடிகளை அணிந்த ஒரு நடிகனாவான். மற்றவர்களுக்கு முன்பாக “பக்திமானைப்போல ஒரு வேஷத்தை” போட முடியும்.

- நம்முடைய தாராள மனப்பான்மையைக்கொண்டு மக்களைக் கவர்ந்து இழுக்கும் நோக்கத்தில், ஏழைகளுக்குக் கொடுக்க முடியும். இயேசு, "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தாயிற்று" என்று சொன்னார்.

- நம்முடைய அதிக வசனிப்பினால் பார்வையாளர்களைக் கவரும்படியாக ஜெபிக்க முடியும். இயேசு, "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தாயிற்று" என்று சொன்னார்.

- நம்முடைய பக்தியையும் சுயக் கட்டுப்பாட்டையும் மற்றவர்களுக்குக் காண்பித்து உபவாசம் இருக்க முடியும். இயேசு, "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்தாயிற்று" என்று சொன்னார்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஏழைகளுக்குக் கொடுத்த, ஜெபித்த அல்லது உபவாசித்த நபர், மற்றவர்களைக் கவர்ந்திழுக்கும்படிக்கே இவைகளைச் செய்தார். அவரது செய்கையால் மக்கள் கவரப்பட்டனர்; அதுவே அவருடைய பலன். எனவே, அவருக்கு தேவனிடமிருந்து எந்தப் பலனும் கிடைக்காது.

இந்த ஆவிக்குரிய செயல்பாடுகளுக்கான நோக்கம் நம்முடைய பரலோகப் பிதாவைப் பிரியப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஏழைகளுக்குக் கொடுப்பதாக இருந்தாலும், ஜெபிப்பதாக இருந்தாலும் அல்லது உபவாசிப்பதாக இருந்தாலும், அது நம்முடைய பலன் தேவன் தாமே என்கிற நிலையை அறிவுறுத்துகிறதாய் இருக்கவேண்டும். இந்த ஆவிக்குரியச் செயல்பாடுகளை உலகம் நம்மை புகழ்ந்து கைத்தட்டுதுவதற்காக நாம் செய்யக் கூடாது. அதற்குப் பதிலாக, தேவனுக்காக நம்மில் என்றென்றுமாய் பெருகிவரும் ஆழமான வாஞ்சையின் நிமித்தமாக இந்த காரியங்களைச் செய்கிறோம்.

இயேசு தம்முடைய சீடர்களுக்கு எளிய மற்றும் நேரடியான முறையில் எப்படி ஜெபிக்கவேண்டும் என்பதைக் கற்றுக்கொடுத்தார்:

> பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்,

ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே. (மத்தேயு 6:9-13).

இது மத்தேயு 6:7-8 ஆகிய வசனங்களில், வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள் என்று இயேசு கண்டித்தது போல, மனதில் வந்தபடி உச்சரிக்கப்பட வேண்டிய ஒரு ஜெபம் அல்ல. மாறாக, இந்த ஜெபமானது நம் ஜெபங்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை வழிநடத்த நமது மனப்பான்மைகளுக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது:

உறவு

“பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே” என்பது தேவனுடனான நமது நெருங்கிய உறவைக் காட்டுகிறது. அவர் ஒரு தூரமான இடத்திலுள்ள தெய்வம் என்பதைக் காட்டிலும், தன் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க விரும்பும் ஒரு பிதாவாக நாம் நம் தேவனைக் காண்கிறோம் (மத்தேயு 7:11). இந்த சொற்றொடர் நெருக்கம் ("எங்கள் பிதா") மற்றும் அதிகாரம் ("பரமண்டலம்") ஆகிய இரண்டையும் குறிக்கிறது. தேவன் மாட்சிமையும் தனிதத்துவமான நபரும் ஆவார்.

கனம்

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்பது நமக்கும் பரலோகத்திலுள்ள நம் பிதாவுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுகிறது. தேவன் ஒரு அன்பான பிதா என்கிறபோதிலும், அவர் பரிசுத்தமானவர்.[10] பிரசங்கி புத்தகத்தின் ஞானி கற்றுக்கொண்டது போல, நாம் தேவசமுகத்தில் பயபக்தியோடும் பிரமிப்போடும் பிரவேசிக்க வேண்டும் (பிரசங்கி 5:2).

கீழ்ப்படிதல்

"உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்பது அவருடைய அதிகாரத்திற்கு நம்முடைய மனப்பூர்வமான கீழ்ப்படிதலைக் குறிக்கிறது. தேவனுடைய சித்தம் பரலோகத்தில் பரிபூரணமாக நிறைவேற்றப்படுகிறதுபோல, அது பூமியிலும் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக நாம் ஜெபிக்க வேண்டும்.

வழங்குதல்

உலகிலுள்ள ஒரு பெரும் சதவீத மக்கள் தங்கள் உணவிற்காக அன்றாடம் உழைக்க வேண்டும். "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்பது பிதாவின் மீதுள்ள நமது தினசரி நம்பிக்கையைக் குறிக்கிறது. அவருடைய

---

[10] "பரிசுத்தப்படுவதாக" என்ற வார்த்தையின் பொருள் "பரிசுத்தமானது" அல்லது "தனியாக வேறு பிரிக்கப்பட்டது" என்பதாகும்.

பிள்ளைகளாகிய நாம், நம்முடைய தேவைகளை அவர் பூர்த்தி செய்வார் என்று நம்புகிறோம்.

அறிக்கைப்பண்ணுதல்

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." லூக்கா 11:2-4-ல், இந்த ஜெபம் "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நம் பாவம் தேவனுக்கு நாம் செலுத்த வேண்டிய கடன் என்பதால் (கொலோசெயர் 2:14), மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இரண்டிலும் இதன் பொருள் ஒன்றே.

மற்றவர்களுக்கு நாம் மன்னிப்பதையும் தேவனால் நாம் மன்னிக்கப்படுவதையும் இணைப்பதன் மூலம், நாம் மன்னிப்பை சம்பாதிக்கிறோம் என்று இயேசு போதிக்கவில்லை. மாறாக, மன்னிக்கப்பட்ட நாம், நமக்குத் தீங்கு இழைத்தவர்களுக்கும் மனப்பூர்வமாக மன்னிக்கிறோம். மன்னிக்க மனமற்ற ஊழியக்காரனைக் குறித்த இயேசுவின் உவமை நமது மன்னிப்புக்கும் மற்றவர்களை மன்னிக்க விருப்பம் காட்டுவதற்கும் இடையிலான உறவைக் காட்டுகிறது (மத்தேயு 18:21-35).

ஜெயங்கொள்ளுதல்

“எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்” என்பது சோதனை மற்றும் சோதித்தல் மீதுள்ள வெற்றிக்கான ஜெபம் ஆகும். தேவன் தமது பிள்ளைகளை ஒருபோதும் சோதிப்பதில்லை (யாக்கோபு 1:13), ஆனால் நாம் ஒவ்வொருவரும் சோதனை மற்றும் சோதிக்கப்படுதலின் காலங்களை எதிர்கொள்வோம் (1 பேதுரு 1:6-7). அத்தகைய நேரங்களில், நாம் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுகிறதற்கு அவர் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார் (1 கொரிந்தியர் 10:13).

தைரியமான ஜெபம் குறித்த இயேசுவின் போதனை

► லூக்கா 11:1-13-ஐ வாசிக்கவும்.

லூக்கா நற்செய்தியில், கர்த்தருடைய ஜெபத்தைத் தொடர்ந்து, தன் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க விரும்புகிற பிதாவிடம் நாம் தைரியமாக ஜெபிக்க வேண்டும் என்று போதிக்கிற ஒரு உவமை வருகிறது. மத்திய கிழக்குப் பகுதிகளில், ஒரு விருந்தினரை உபசரிக்க அண்டை வீட்டாரிடம் கடன் வாங்குவது சாதாரணமாக இருந்தது. ஒருவன் தைரியமாகக் கேட்டால், அவனுடைய அண்டை வீட்டார் தேவையானதைக் கொடுப்பார்கள். அந்தக் கலாச்சாரத்தில், ஒரு கோரிக்கைக்கு "இல்லை" என்று சொல்வது அநாகரிகமாகக் கருதப்பட்டது. அண்டை வீட்டார் தங்கள் குடும்பத்திற்கு இடையூறு செய்ய விரும்பவில்லை என்றாலும், அவர்கள் ஒரு உதவிக்கான அழைப்பை மறுக்க மாட்டார்கள்.

அதைவிட மேலாக, தைரியமாகக் கேட்கும் தன் பிள்ளைகளுக்கு தேவன் அந்த நல்ல ஈவுகளைக் கொடுக்க விரும்புகிறார். இந்த உவமையில் உள்ள மனிதன் தைரியமாகக் கேட்பது போலவே, நாமும் நம்முடைய பரலோகப் பிதாவை நம்பிக்கையுடன் அணுகலாம். ஏன்? நம்முடைய கோரிக்கையை மறுக்க தேவன் வெட்கப்படுவார் என்பதற்காக அல்ல, மாறாக நாம் கேட்கவும், தேடவும், தட்டவும் அனுமதி கொடுக்கப்பட்டிருப்பதாலேயே (லூக்கா 11:9).

ஒரு நெருக்கமான பார்வை: எபிரேய போதனை முறைகள்

லூக்கா 11:1-13-ல், இயேசு ஒரு கதையைக் கூறுகிறார். அதில், ஒரு விருந்தினருக்காக உணவு கடன் வாங்க வேண்டிய தேவை உள்ள தனது அண்டை வீட்டுக்காரருக்கு உதவ படுக்கையில் இருந்து எழுந்திருக்க விரும்பாத ஒரு மனிதனைப் பற்றிச் சொல்கிறார்.

இந்த உவமையைப் புரிந்துகொள்ள, நீங்கள் ஒரு எபிரேய போதனா முறையை—சிறியது முதல் பெரியது வரையிலான வாதத்தை—புரிந்துகொள்ள வேண்டும். இந்த போதனா முறை, "A (சிறியது) உண்மையானால், B (பெரியது) எவ்வளவு அதிகமாக உண்மையாக இருக்க வேண்டும்" என்று கூறுகிறது. இன்று நாம், "ஒருவன் ஒரு பசியுள்ள அந்நியனுக்கு உணவளிப்பான் என்றால் (A), ஒரு அன்புள்ள தகப்பன் தன் பிள்ளைகளுக்கு எவ்வளவு அதிகமாக உணவளிப்பான் (B)" என்று சொல்லலாம்.

இந்த உவமையை நீங்கள் வாசிக்கும்போது, "தேவன் தயங்காத அண்டை வீட்டுக்காரரைப் போன்றவர். என் ஜெபங்களுக்குப் பதிலளிக்க நான் அவரை வற்புறுத்த வேண்டும்" என்று நினைக்காதீர்கள். மாறாக, இயேசு தயங்காத நண்பனை, மனப்பூர்வமான பரலோக தகப்பனுடன் ஒப்பிடுகிறார். ஒரு பூலோக அண்டை வீட்டுக்காரன் துணிச்சலான வேண்டுகோளுக்குப் பதிலளிப்பான் என்றால், பரலோக தகப்பன் தன் பிள்ளைகளுக்கு எவ்வளவு அதிகமாகப் பதிலளிப்பார்!

ஜெபம் பற்றிய இயேசுவின் போதனை (தொடரும்)

தைரியமான ஜெபம் குறித்த இயேசுவின் போதனை (தொடரும்)

ஜெபம் ஒரு உறவு.

தேவன் தம் பிள்ளைகளின் ஜெபங்களுக்குப் பதிலளிக்க விரும்பினால், அவருடைய பதில் சில சமயங்களில் ஏன் தாமதமாகிறது? கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்பவை நிகழ்கால கட்டளைகள். நாம் தொடர்ந்து கேட்க வேண்டும், தேட வேண்டும், மற்றும் தட்ட வேண்டும் என்று அவை குறிக்கின்றன. ஏன்?

> "ஜெபம் என்பது நாம் விரும்பியவற்றைக் கேட்பதும், அதைப் பெறுவதும் அல்ல. ஜெபம் என்பது தேவனிடத்தில் கேட்பதும், நமக்குத் தேவையானதைப் பெறுவதும் ஆகும்."
>
> - பிலிப் யான்சி

ஒரு காரணம் என்னவென்றால், ஜெபம் என்பது நமக்குத் தேவையான கோரிக்கைப் பட்டியலைச் சமர்ப்பிப்பதை விட மேலானது. ஜெபம் என்பது நம் பரலோகத் தந்தையுடனான தொடர்ச்சியான உறவு. "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:17) என்று பவுல் கட்டளையிடுவது போலவே, இயேசுவும் தொடர்ந்து கேட்கவும், தேடவும், மற்றும் தட்டவும் நமக்குக் கட்டளையிடுகிறார். தேவனோடுள்ள இந்தத் தொடர்ச்சியான உரையாடலின் மூலம், நமது உறவு இன்னும் ஆழமாகிறது. ஜெபம் என்பது கோரிக்கைப் பட்டியலை விட மேலானது; ஜெபம் ஒரு உறவு ஆகும்.

தொடர்ச்சியான ஜெபம் பற்றிய ஒரு உவமை

லூக்கா 17-இல், பரிசேயர்கள் இயேசுவிடம் தேவனுடைய ராஜ்யம் எப்போது வரும் என்று கேட்டார்கள். கண்கவர் அடையாளங்களை அவர்கள் எதிர்பார்க்கக் கூடாது என்று அவர் பதிலளித்தார். அதற்கு பதிலாக, அவர் அவர்களிடம், "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" (லூக்கா 17:20-21) என்று சொன்னார். தேவனுடைய ராஜ்யம் இயேசுவைப் பின்பற்றுபவர்களிடம் ஏற்கனவே இருந்தது.

பின்னர் இயேசு தம் சீடர்களிடம் திரும்பி, தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி அவர்களுக்குப் போதித்தார். இயேசு உடனடியாக ஒரு அரசியல் ராஜ்யத்தை நிறுவுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள், ஆனால் இயேசு தாம் மரித்த பின்னரும் காத்திருக்க அவர்களை ஆயத்தப்படுத்தினார். காத்திருக்கும்போது, அவர்கள் ஜெபத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும், இருதயம் கலங்கிப்போகக்கூடாது. பின்னர் இயேசு விசுவாசமுள்ள ஜெபம் பற்றிய ஒரு கதையைச் சொன்னார்.

► லூக்கா 18:1-8-ஐ வாசிக்கவும்.

பல பண்டையகால நகரங்களில், நியாயாதிபதிகள் நேர்மையற்றவர்களாக இருந்தனர். லஞ்சம் கொடுத்தாலொழிய யாருக்கும் விசாரணை கிடைக்காது. இந்த விதவைக்கு நியாயாதிபதிக்கு லஞ்சம் கொடுக்க பணம் இல்லை, அதனால் அவர் அவளது வழக்கைக் கேட்க மறுத்துவிட்டார். இருப்பினும், இந்த விடாமுயற்சியுள்ள பெண் நியாயாதிபதியிடம் நீதியைப் பெறும் காரியத்தைக் கைவிட மறுத்துவிட்டாள். இறுதியாக, அநீதியுள்ள நியாயாதிபதி, “இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டுமென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.”

இந்த உவமையானது, துணிச்சலுள்ள அயலகத்தாரைப் பற்றிய உவமையைப் போலவே, குறைவானதிலிருந்து அதிகமானதைக் கற்பிக்கும் பாணியைப் பயன்படுத்துகிறது. இந்த உவமையை நீங்கள் வாசிக்கும்போது, பின்வருபனவற்றைப் புரிந்துகொள்ளுங்கள்:

- தேவன் ஒரு அநீதியுள்ள நியாயாதிபதி அல்ல. நம்முடைய பிதா தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு நீதியை வழங்க விரும்புகிறார்.
- நாம் அந்த விதவையைப் போல் அல்ல. அவள் ஒரு அந்நியமானவள்; நாமோ தேவனுடைய பிள்ளைகள்.
- அவளால் நியாயாதிபதியை அணுக முடியவில்லை; நாமோ இயேசுவின் மூலமாக தேவனை அணுகலாம்.

"ஜெபம் என்பது தேவனுடைய தயக்கத்தை வெல்வது அல்ல. ஜெபம் என்பது தேவனுடைய விருப்பத்தைப் பற்றிக்கொள்வது."

- மார்ட்டின் லூதர்

இது ஒரு வேற்றுமைகள் கொண்ட உவமை. ஒரு அநீதியுள்ள நியாயாதிபதி எப்பொழுதும் தொந்தரவு செய்கிற ஒரு விதவைக்கு பதிலளிப்பார் என்றால், பரலோகத்திலிருக்கும் நம்முடைய பிதா தம்முடைய பிள்ளைகளின் ஜெபங்களுக்கு எவ்வளவு அதிகமாக பதிலளிப்பார்!

தாழ்மையான ஜெபத்தைக் குறித்த ஒரு உவமை

► லூக்கா 18:9-14 ஐ வாசிக்கவும்.

ஜெபத்தைக் குறித்து இயேசு சொன்ன அடுத்த உவமை, “தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்” குறித்ததாகும். இந்த உவமை ஜெபத்தில் இருக்க வேண்டிய சரியான மனப்பான்மையை கற்றுக்கொடுக்கிறது.

இந்த உவமையின் மையக்கருத்து முடிவில் கூறப்பட்டுள்ளது: “தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.” பரிசேயர்கள் தங்கள் நீதியினிமித்தமே ஜெபங்களுக்குப் பதில் கிடைத்தது என்று நினைத்தார்கள். தங்களுக்கென்று சுயமாக நீதி இல்லாதவர்களுக்கு தேவன் அளிக்கும் கிருபையினிமித்தமே ஜெபத்திற்குப் பதில் கிடைக்கிறது என்று இயேசு காட்டுகிறார். பதிலளிக்கப்பட்ட ஜெபத்திற்கு எவரும் தகுதியற்றவர்கள்; ஒன்றுக்கும் தகுதியில்லாதவர்களுக்கு தேவன் தமது கிருபையினிமித்தமே ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார்.

பயன்பாடு: கிறிஸ்தவ வாழ்வில் ஜெபம்

கிறிஸ்துவைப் போன்றவர்கள் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். 19 ஆம் நூற்றாண்டின் லிவர்பூல் ஆயரான ஜே.சி. ரைல், வரலாறு முழுவதும் வாழ்ந்த தலைசிறந்த கிறிஸ்தவர்களின் வாழ்க்கையைப் படித்தார். அவர், சிலர் பணக்காரர்களாகவும், மற்றவர்கள் ஏழைகளாகவும் இருந்தனர் என்று கூறினார். சிலர் கல்வி கற்றவர்களாகவும், மற்றவர்கள் கல்வி கற்காதவர்களாகவும் இருந்தனர். சிலர் கால்வினிஸ்டுகளாகவும், மற்றவர்கள் அர்மினியர்களாகவும் இருந்தனர். சிலர் வழிபாட்டு முறைகளைப்

பயன்படுத்தினர்; சிலர் சுயாதீனமாக இருந்தனர். "ஆனால் அவர்களுக்குப் பொதுவான ஒரு விஷயம் இருந்தது. அவர்கள் அனைவரும் ஜெப மனிதர்களாக இருந்தனர்."[11]

சபை வரலாறு முழுவதும், கிறிஸ்துவைப் போன்றவர்கள் ஜெபிக்கிறவர்களாகவே இருந்துள்ளனர். சிறந்த கிறிஸ்தவ தலைவரான இ.எம். பவுண்ட்ஸ், ஒவ்வொரு நாளும் காலை 4:00 முதல் 7:00 மணி வரை ஜெபிப்பார். அவர் எழுதினார், "பரிசுத்த ஆவியானவர் வழிமுறைகள் மூலம் அல்ல, மனிதர்கள் மூலமாகவே பாய்கிறார். அவர் எந்திரங்கள் மீது அல்ல, மனிதர்கள் மீது வருகிறார். அவர் திட்டங்களுக்கு அல்ல, ஜெபிக்கிற மனிதர்களுக்கே அபிஷேகம் செய்கிறார்."[12]

ஜார்ஜ் முல்லர் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்காக அனாதை இல்லங்களை நடத்தினார். அவர் ஒருபோதும் வேறு எந்த மனிதரிடமும் உதவி கேட்க மாட்டேன், ஜெபத்தை மட்டுமே நம்புவேன் என்று தீர்மானித்தார். ஜெபத்தின் மூலமாகவே அவர் $7,000,000 க்கும் மேல் பெற்றார். அவர் தனது அனாதை இல்லங்களுக்கு ஆதரவளித்தது மட்டுமல்லாமல், முல்லர் மற்ற ஊழியங்களுக்கும் ஆயிரக்கணக்கான டாலர்களை வழங்கினார். ஜார்ஜ் முல்லர் ஜெபத்தின் வல்லமையை அறிந்திருந்தார்.

நாம் ஏன் ஜெபிக்கிறோம்?

நாம் தேவனைச் சார்ந்திருப்பதால்தான் ஜெபிக்கிறோம்.

மனிதனாக இருந்தபோது, இயேசு தம் பிதாவுடன் தொடர்புகொள்ள ஜெபத்தையே நம்பியிருந்தார். ஜெபம் என்பது தேவன்மீது சார்ந்திருக்கும் ஒரு செயலாகும். நாம் நம்மையே சார்ந்து இருக்காமல், தேவனைச் சார்ந்திருக்கிறோம் என்பதை அது காட்டுகிறது.

► மத்தேயு 26:31-46-ஐ வாசிக்கவும்.

சீமோன் பேதுருவின் வீழ்ச்சி ஜெபத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. இயேசு சீஷர்களுக்கு, "இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" என்று எச்சரித்தார். இன்னும் நேரடியாக, இயேசு பேதுருவிடம், “சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்” (லூக்கா 22:31) என்று எச்சரித்தார். பேதுரு இரண்டு பலவீனங்களினிமித்தம் விழுந்துபோனான்.

> “நீங்கள் ஜெபமின்றி எதையாவது செய்ய முடிந்தால், அது உண்மையில் செய்யத் தகுதியுடையதா?”
>
> - டாக்டர் ஹோவர்ட் ஹென்ட்ரிக்ஸ்

---

[11] Matt Friedeman, *The Accountability Connection.* (Wheaton, Illinois: Victor Books, 1992), 37 என்னும் நூலிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.
[12] Edward M. Bounds, *Power Through Prayer.* (Kenosha, Wisconsin: Treasures Media, n.d.), 2

1. **பேதுரு அதீத நம்பிக்கை கொண்டிருந்தான்.** “உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்... நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்” (மத்தேயு 26:33, 35) என்று அவன் வலியுறுத்தினான். பெருமையின் நிமித்தம் பேதுரு தன்னுடைய சொந்த பலத்தின்மேல் அதிக நம்பிக்கை வைக்கும்படிக்கு தள்ளப்பட்டான்.

2. **பேதுரு ஜெபிக்கத் தவறிப்போனான்.** தன் சொந்த பலத்தின்மேல் பேதுரு நம்பிக்கை வைத்திருந்ததால், அவன் தேவனைச் சார்ந்து கொள்ளவில்லை. இயேசுவோடு சேர்ந்து ஜெபிப்பதற்குப் பதிலாக, பேதுரு நித்திரைச் செய்துகொண்டிருந்தான். நாம் தேவனை முழுமையாகச் சார்ந்திருக்கிறோம் என்பதை உணரும்போதுதான், மிக ஊக்கமாக ஜெபிக்கிறோம். "ஜெபத்தில் மட்டுந்தான் நாம் நம்முடைய பிரச்சினைகளை முழுமையாக தேவனிடம் ஒப்படைக்கிறோம்" என்று டிக் ஈஸ்ட்மேன் எழுதினார்.[13]

நாம் தேவனை இன்னும் முழுமையாக அறிந்துகொள்ள ஜெபிக்கிறோம்.

> “நாம் நமக்காக எதையாவது பெறுவதற்கான ஒரு வழியாக ஜெபத்தைப் பார்க்கிறோம்; ஜெபத்தைப் பற்றிய வேதாகமத்தின் கருத்து என்னவென்றால், நாம் தேவனையே அறிந்துகொள்வதாகும்.”
>
> - ஆஸ்வால்ட் சேம்பர்ஸ்

இன்றைய நவீன காலத்து திருச்சபையினுடைய பெரும் பலவீனங்களில் ஒன்று, தேவனைப் பற்றிய நமது மேலோட்டமான அறிவாகும். பெரும்பாலும், நமது ஜெப விண்ணப்பங்கள் யாவும் பொருள்சார்ந்த தேவைகளையும் தனிப்பட்ட நிறைவேற்றுதலையும் மட்டுமே கொண்டிருக்கின்றன. "தேவனே, என் பிள்ளைகளை உமது சாயலுக்கு ஒப்பாக மாற்றும்” என்று ஜெபிப்பதைவிட “தேவனே, என் பிள்ளைகளுக்கு நல்ல வேலை கிடைக்க உதவி செய்யும்" என்று ஜெபிப்பதில்தான் நாம் அதிக நேரத்தை செலவிடுகிறோம். சரீரப்பிரகாரமான சுகத்திற்காக நாம் ஊக்கமாக ஜெபிப்பதைவிட, ஆவிக்குரிய சுகத்திற்காக குறைவாகவே ஜெபிக்கிறோம். இது ஜெபத்தைக் குறித்ததான மெய்யான அர்த்தத்தை நாம் எவ்வளவு குறைவாகப் புரிந்துகொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது.

ஜெபத்தின் முதன்மையான நோக்கங்களில் ஒன்று, தேவனை நாம் இன்னும் முழுமையாக அறிந்துகொள்ளவேண்டும் என்பதாகும். ஜெபத்தில், நாம் தேவனுடைய இருதயத்துடன் இணைகிறோம். ஜெபம் என்பது தேவனை நாம் விரும்பும் காரியங்களை செய்ய வைப்பது அல்ல. தேவனுடைய விருப்பம் நமது விருப்பமாக மாறும் வரையிலும் அவருடைய இருதயத்தைப் பற்றிய அறிவை ஜெபம் நமக்கு அளிக்கிறது.

இந்த நிலையை நாம் அடையும்போது, “நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்,

---

[13] Dick Eastman, *The Hour That Changes the World.* (Grand Rapids: Baker Book House, 1995), 12

அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்” என்று இயேசு சொன்னார் (மாற்கு 11:24). நமது இருதயம் தேவனுடைய இருதயத்துடன் இணைந்திருப்பதால், தவறான நோக்கங்களுக்காகவோ அல்லது தேவனுடைய சித்தத்திற்கு எதிராகவோ நாம் கேட்க மாட்டோம் (யாக்கோபு 4:3 மற்றும் 1 யோவான் 5:14). தேவனுடைய இருதயத்தைப் பற்றிய இந்த அறிவு நமது சீரான ஜெபத்தின் மூலம் வருகிறது.

பியூரிட்டன்கள், “நாம் ஜெபிக்கும் வரையிலும் ஜெபிக்க வேண்டும்” என்று கூறினர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வீண் வார்த்தைகளை அலப்பாமல் அவற்றைக் கடந்து தேவனுடைய சமூகத்திற்குள் பிரவேசிக்க நாம் நீண்ட நேரம் தொடர்ச்சியாக பொறுமையுடன் ஜெபிக்க வேண்டும். தேவனில் நாம் மகிழும் வரை நாம் ஜெபிக்க வேண்டும்.

► நீங்கள் ஜெபித்ததன் மூலம் தேவனையும் அவருடைய சித்தத்தையும் ஆழமாக அறிந்துகொண்ட ஒரு தருணத்தைக் கூறுங்கள்.

நாம் எப்படி ஜெபிக்கிறோம்?

இயேசுவின் ஜெப மாதிரியைப் படிப்பதன் மூலம், வல்லமையான ஜெபத்தைப் பற்றிய முக்கியமான பாடங்களை நாம் கற்றுக்கொள்கிறோம்.

நாம் பொறுமையோடு ஜெபிக்கிறோம்.

இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார். அவருடைய ஜெப வாழ்க்கையானது, “பிதாவே, நான் என்ன செய்ய வேண்டுமென்று நீர் விரும்புகிறீர்?” என்று கேட்டால், உடனடியாகப் பதில் பெறுவது ஒரு எளிய விஷயமாக இருக்கும் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம்! ஆனால், பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு இயேசு இரவு முழுவதும் ஜெபத்தில் செலவிடுவதைக் காண்கிறோம். கெத்செமனே தோட்டத்தில் அவர் ஜெபத்தில் போராடுவதைக் காண்கிறோம். ஜெபத்தைப் பொறுத்தமட்டில், இயேசுவுக்கும்கூட, பொறுமையும் நேரமும் தேவையாயிருந்தது. ஜெபம் என்பது தேவனுக்காகக் காத்திருப்பது.

ஜெபத்தில் காத்திருப்பதன் முக்கியத்துவம் பற்றி கிளென் பேட்டர்சன் எழுதும்போது, “நாம் காத்திருக்கும்போது தேவன் நமக்குச் செய்வதைப்போலவே, நாம் எதற்காகக் காத்திருக்கிறோமோ அதுவும் முக்கியமானது. காத்திருத்தல் என்பது தேவன் நம்மை எப்படியிருக்கவேண்டும் என்று விரும்புகிறாரோ அவ்வாறு நம்மை மாற்றும் செயல்முறையின் ஒரு பகுதி" என்று கூறினார். நாம் தேவனுக்காகக் காத்திருக்கும்போது, அவரை நன்கு அறிந்துகொள்ள கற்றுக்கொள்கிறோம்.

சங்கீதம் 37:1-9 வரையிலுள்ள பகுதியானது ஜெபத்தைப் பற்றிய முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறது. பிவரும் இந்தக் கட்டளைகளைப் பாருங்கள்:

- எரிச்சலடையாதே
- கர்த்தரை நம்பு
- கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு
- உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவி
- அவர்மேல் நம்பிக்கையாயிரு
- கர்த்தரை நோக்கி அமர்ந்திரு
- அவருக்குக் காத்திரு
- கோபத்தை அடக்கு
- எரிச்சலாகாதே (மீண்டும்!)

இந்தக் கட்டளைகள், உன்னைக் கருதி, உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்யும் தேவனிடத்தில் (சங்கீதம் 37:4) பொறுமையோடு வைத்திருக்கும் நம்பிக்கையைச் சுட்டிக்காட்டுகின்றன. பொறுமையான ஜெபத்தின் மூலம், தேவன் விரும்புகிற விசுவாசமுள்ள ஜனங்களாக நாம் மாறுகிறோம்.

இடைவிடாது ஜெபிக்கும் ஜெபத்திற்கான ஓர் மாதிரி

தனது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில், ஜார்ஜ் முல்லர் தனது நண்பர்கள் ஐவர் மனந்திரும்புவதற்காக ஜெபிக்கத் தொடங்கினார். பல மாதங்களுக்குப் பிறகு, அவர்களில் ஒருவர் கர்த்தரை ஏற்றுக்கொண்டார். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, மேலும் இருவர் மனந்திரும்பி கர்த்தரை ஏற்றுக்கொண்டார்கள். நான்காவது நபர் இரட்சிக்கப்படுவதற்கு ஏறக்குறைய 25 ஆண்டுகள் ஆனது.

> "மனிதர்கள் நமது வேண்டுகோள்களை அலட்சியப்படுத்தலாம், நமது செய்தியை நிராகரிக்கலாம், நமது வாதங்களை எதிர்க்கலாம், நமது ஆள்தத்துவத்தை இகழலாம்; ஆனால் நமது ஜெபங்களுக்கு எதிராக அவர்களால் ஒன்றுஞ்செய்யக் கூடாது."
>
> - ஜே. சிட்லோ பாக்சர்

முல்லர் தனது ஐந்தாவது நண்பருக்காக தான் இறக்கும் வரை ஜெபத்தில் நிலைத்திருந்தார். 52 ஆண்டுகளாக, இந்த நண்பர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார் என்று நம்பிக்கையோடு ஜெபிப்பதை அவர் ஒருபோதும் கைவிடவில்லை! முல்லரின் இறுதி சடங்கிற்கு சில நாட்களுக்குப் பிறகு, ஐந்தாவது நண்பரும் இரட்சிக்கப்பட்டார். முல்லர் இடைவிடாது ஜெபிக்கும் ஜெபத்தில் விசுவாசம் கொண்டிருந்தார்.

நாம் தாழ்மையோடு ஜெபிக்கிறோம்.

“என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” (லூக்கா 22:42) என்று இயேசு ஜெபம்பண்ணினார். இயேசு தன் பிதாவினுடைய பரிபூரண சித்தத்தில் நம்பிக்கை கொண்டிருக்க முடியும் என்பதை அறிந்திருந்தார்.

ஜெபம் என்பது தாழ்மையின் செயல்பாடு. நாம் மற்றவர்களுக்காக ஜெபிக்கிறோம், ஏனெனில் நம்முடைய ஞானத்தால் அவர்களுக்கு உதவ முடியாது; நாம் தேவனையே சார்ந்திருக்க வேண்டும். நமக்காக நாம் ஜெபிக்கிறோம், ஏனெனில் நம்முடைய சொந்த பலத்தால் நம் வாழ்க்கையை நம்மால் நிர்வகிக்க முடியாது; நாம் தேவனையே சார்ந்திருக்க வேண்டும்.

ஜெபமானது தேவனுடைய உதவிக்கான நமது தேவையை அங்கீகரிக்கிறது. வாழ்க்கையின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நமது சொந்த திறமையில் நாம் நம்பிக்கையுடன் இருக்கும்போது, நாம் மெய்யாகவே ஜெபிக்க வாய்ப்பற்றுப் போகிறோம். நம் சொந்த பலத்தால் வாழ்க்கையை நிர்வகிக்க முடியாது என்பதை நாம் உணரும்போதுதான், நாம் தாழ்மையுடன் ஜெபிக்கிறோம்.

நம் ஜெபமானது உறுதியான தாழ்மையுடன் ஏறெடுக்கப்பட வேண்டும். பதிலுக்காக நாம் தேவனுக்காகக் காத்திருக்கும்போது, நாம் உறுதியும் சமாதானமும் கொண்டிருக்கலாம், ஏனெனில் நம்மை நேசிக்கிறவரும், தம் பிள்ளைகளுக்குச் சிறந்ததை கொடுக்க விரும்புபவருமான ஒரு பரலோக பிதாவிடம் நாம் ஜெபிக்கிறோம். ஊழியம் மற்றும் வாழ்க்கையின் அழுத்தங்களில், தாழ்மையான ஜெபம் தேவன்மீதுள்ள அமைதியான நம்பிக்கையை நமக்குத் தருகிறது.

நாம் தனிப்பட்ட முறையில் ஜெபிக்கிறோம்.

இயேசு தமது சீடர்களுக்கு, "எங்கள் பிதாவே" என்று தனிப்பட்ட முறையில் தேவனை அழைத்து தங்கள் ஜெபத்தைத் தொடங்கும்படிக்குக் கற்றுக்கொடுத்தார். உண்மையான ஜெபம் தனிப்பட்டது. பால் மில்லர் அவர்கள், "எப்படி ஜெபிப்பது என்று கற்றுக்கொள்ள பலர் சிரமப்படுகிறார்கள், ஏனெனில் அவர்களது கவனம் முழுவதும் ஜெபத்தையே மையமாக கொண்டிருக்கிறதேயன்றி தேவன்மேல் அல்ல"[14] என்று எழுதினார். நாம் தேவனுடன் பேசுவதற்குப் பதிலாக, அடிக்கடி "ஜெபங்களைச் சொல்கிறோம்". இது "வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்" (மத்தேயு 6:7) என்ற இயேசுவின் எச்சரிக்கையின் முக்கிய அங்கமாகும்.

---

[14] Paul E. Miller, *A Praying Life: Connecting with God in a Distracting World*. (Colorado Springs: NavPress, 2009)

ஒருவர் தான் மனப்பாடம் செய்த வார்த்தைகளின் ஒரு பேச்சோடு இரவு உணவு மேசைக்கு வருகிறார் என நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அவர், "நான் என் குடும்பத்துடன் உரையாட விரும்புகிறேன், எனவே சில வார்த்தைகளை மனப்பாடம் செய்து வைத்திருக்கிறேன்" என்று கூறுகிறார். இது ஒரு உண்மையான உரையாடல் அல்ல! காரணம் ஒரு நபர் மேசையை சுற்றி அமர்ந்திருக்கிறவர்கள்மேல் கவனம் செலுத்தி அவர்களை மையமாகக் கொள்ள வேண்டும், மாறாக வெறுமனே அவர் பயன்படுத்தப்போகும் வார்த்தைகளை அல்ல என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

நம்மால் அல்லது மற்றவர்களால் எழுதப்பட்ட ஜெபங்கள், ஜெபத்தில் சேர்க்கப்பட வேண்டிய கருப்பொருள்களை நினைவூட்ட நமக்கு உதவும், ஆனால் ஜெபமானது மனப்பாடம் செய்யப்பட்ட வார்த்தைகளின் தொகுப்பை விட தேவன்மேலேயே முழு கவனத்தையும் செலுத்தி அவரையே மையமாகக் கொண்டிருக்கவேண்டும். ஜெபம் ஒரு அமைப்பு அல்ல; ஜெபம் ஒரு உறவு. ஜெபம் தனிப்பட்டதாக இருக்க வேண்டும்.

நாம் ஜெபிக்கிற ஜனங்களாக மாறுவது எப்படி?

ஐந்தாம் நூற்றாண்டில், அனிசியா ஃபால்டோனியா ப்ரோபா என்னும் ஒரு ரோம உயர்குலப் பெண், ஜெபம் குறித்து அகஸ்டீனிடம் ஆலோசனை கேட்டார். ஜெபமுள்ள மனிதராக எப்படி மாறுவது என்று ப்ரோபா அறிய விரும்பினார். ஜெபம் குறித்து ஞானமுள்ள ஆலோசனையுடன் ஒரு நீண்ட கடிதத்தை அகஸ்டீன் அவருக்கு எழுதினார்.[15] இந்தப் பிரிவில், ஜெபத்திற்கான அகஸ்டீனின் கோட்பாடுகளை நாம் ஆராய்வோம்.

எந்த வகையான நபர் ஒரு ஜெபமுள்ள நபராக மாற முடியும்?

முதலாவதாக, ஒரு ஜெபிக்கிற நபர் வேறு எந்தஒரு ஆதாரமும் வளமும் இல்லாத ஒருவராக இருக்க வேண்டும் என்று அகஸ்டீன் கூறுகிறார். ஒரு ஜெபிக்கும் மனிதன் ஜெபத்தை மட்டுமே சார்ந்திருப்பவனாக இருப்பான்.

ப்ரோபா ரோமில் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் பெரும் செல்வந்தர்களில் ஒருவரின் விதவை ஆவாள். அவளது மூன்று மகன்களும் ரோம தேசத்தினுடைய தூதரக பதவிகளில் பணியாற்றினார்கள். "இந்த உலகில் தான் ஒரு தனிமைப்படுத்தப்பட்டவளாக இருப்பதாக எண்ண வேண்டும்" என்று அகஸ்டீன் ப்ரோபாவிடம் கூறினார். நாம் எவ்வளவு பெரிய செல்வந்தர்களாகவோ, சக்திவாய்ந்தவர்களாகவோ, அல்லது வெற்றிகரமானவர்களாகவோ இருந்தாலும், தேவனுக்கு முன்பாக நமது உதவியற்ற தன்மையை நாம் அங்கீகரிக்க வேண்டும். இல்லையெனில், நமது ஜெபங்கள்

---

[15] Philip Schaff, ed. *The Confessions and Letters of St. Augustine: Nicene and Post-Nicene Fathers, First Series, Volume 1*. (Buffalo, New York: Christian Literature Publishing Company, 1886), 459-469

ஆயக்காரனின் ஜெபங்களைப் போலல்லாமல், பரிசேயனின் ஜெபங்களைப் போலவே இருக்கும்.

நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும்?

அகஸ்டீன் ப்ரோபாவுக்கு சுவாரஸ்யமான ஆலோசனையைத் தருகிறார். "மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கைக்காக ஜெபியுங்கள்" என்று கூறுகிறார். இது சுயநலமாகத் தோன்றலாம், ஆனால் உண்மையான மகிழ்ச்சி தேவனிடமிருந்து மட்டுமே வருகிறது என்பதை அகஸ்டீன் விளக்குகிறார். "தான் விரும்பும் அனைத்தையும் பெற்றுள்ளவன், மற்றும் தான் விரும்பக்கூடாத எதையும் விரும்பாதவன் உண்மையிலேயே ஒரு மகிழ்ச்சியான மனிதனாவான்."

கிறிஸ்தவன் மகிழ்ச்சியுள்ளவனாக இருக்கிறான், ஏனென்றால் அவனுக்கு தேவன் இருக்கிறார், மேலும் தேவன் அவனுக்கு எதை இருக்கவேண்டாமென்று விரும்புகிறாரோ அதை அவனும் விரும்பமாட்டான். சங்கீதக்காரனைப் போல, நாமும் தேவனுடைய சமூகத்தால் திருப்தி அடைகிறோம்.

> கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் (சங்கீதம் 27:4).

நாம் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய சமூகம் ஒன்றை மட்டுமே உண்மையாக விரும்பினால், தேவன் நம்முடைய உள்ளத்தின் ஆழத்திலுள்ள விருப்பத்தை தம்மையே தந்து நம்மைத் திருப்திபடுத்துவார் என்பதை அறிந்து நாம் மகிழ்ச்சிக்காக ஜெபிக்கலாம்!

இக்கட்டுக் காலங்களில் நாம் ஜெபிப்பது எப்படி?

"நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால்" (ரோமர் 8:26) என்று பவுல் அறிந்திருந்தார் என்பதை அகஸ்டின் ப்ரோபாவுக்கு நினைவூட்டுகிறார். நாம் உதவியற்ற நிர்பந்தமான ஒரு நிலையை அடையும்போது ஜெபிப்பது எப்படி?

அகஸ்டின் மூன்று வேதாகம வசனங்களைச் சுட்டிக்காட்டுகிறார். முதலாவதாக, பவுலின் “மாம்சத்திலே ஒரு முள்” கொடுக்கப்பட்டது, அது அவரை விட்டு நீங்கும்படி பவுல் ஜெபித்த உதாரணத்தை அவர் குறிப்பிடுகிறார். பவுலை விடுவிப்பதற்குப் பதிலாக, தேவன், "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்று வாக்களித்தார். "ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்... அந்தப்படி நான் பலவீனனாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (2 கொரிந்தியர் 12:8-10) என்று பவுல் சாட்சியளித்தார்.

இரண்டாவதாக, கெத்செமனே தோட்டத்தில் இயேசு ஜெபித்த உதாரணத்தை அகஸ்டின் சுட்டிக்காட்டுகிறார். இயேசு தனது விருப்பங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். இயேசு விடுவிக்கும்படியாக ஜெபித்தார்: "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்." அத்தோடு நிறுத்திவிடாமல், "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (மத்தேயு 26:39) என்று தனது ஜெபத்தை நிறைவுசெய்கிறார்.

இறுதியாக, அகஸ்டின் ரோமர் 8:26-ஐ சுட்டிக்காட்டுகிறார். எப்படி ஜெபிக்க வேண்டும் என்று நமக்குத் தெரியாதபோது, பரிசுத்த ஆவியானவர் நம் இருதயங்களை வழிநடத்துகிறார். ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். வார்த்தைகள் ஏதுமின்றி அற்றுப்போகும்போது, அவருடைய தீர்மானத்தின்படி அழைத்த, ஜெபங்களை ஏற்றுக்கொள்ளுகிற மற்றும் சகலவற்றையும் நன்மைக்கு ஏதுவாக முடியப்பண்ணுகிற பிதாவிடம் நமது ஜெபங்களை ஆவியானவர் கொண்டு செல்கிறார் (ரோமர் 8:26-28).

முடிவுரை: எப்படி ஜெபிப்பதென்று உங்களுக்குத் தெரியாதபோது

சில சமயங்களில் மௌனமாக இருப்பதே உங்களால் செய்யக்கூடிய மிகச் சிறந்த செயல்.[16] நீங்கள் ஜெபிக்க விரும்புகிறீர்கள், ஆனாலும் எப்படி ஜெபிப்பதென்று உங்களுக்குத் தெரியவில்லை; ஜெபங்களும் வருவதில்லை. நீங்கள் என்ன செய்வீர்கள்? அப்படிப்பட்ட தருணங்களில் கையாளவேண்டிய ஒரு இரகசியம் என்னவெனில், நமக்காகப் பரிந்துபேசுகிற நமது பிரதான ஆசாரியர் கிறிஸ்துவே என்பதைப் புரிந்துகொள்வதுதான்.

சுவிசேஷ திருச்சபை கிறிஸ்தவர்களாகிய நாம், விசுவாசிகள் அனைவரும் ஆசாரியர்கள் என்கிற கோட்பாட்டை நம்புகிறோம். இந்த மகத்தான சீர்திருத்தக் கோட்பாடு, நம் ஒவ்வொருவருக்கும் பிதாவின் சமூகத்தில் பிரவேசிக்கும் உரிமை உண்டு என்று போதிக்கிறது. இருப்பினும், இந்த கோட்பாடு தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டால், அது ஆவிக்குரியப் போராட்டத்திற்கு வழிவகுக்கும். "நான் போதுமான அளவு ஜெபித்தேனா? நான் என் பங்கைச் சரியாகச் செய்தேனா?" போன்ற பல்வேறு சந்தேகங்களால் நான் நிரம்பக்கூடும்.

2013 இல் நடந்த ஒரு மாநாட்டில், பேராசிரியர் ஆலன் டொரன்ஸ் அவர்கள் இப்படிப்பட்ட கேள்விகளுடனான தனது போராட்டங்களைப் பற்றி பின்வரும் தனது அனுபவ சாட்சியைப் பகிர்ந்து கொண்டார்.

---

[16] இந்த பகுதி Marc Cortez அவர்கள் எழுதிய, *Everyday Theology என்னும் நூலி*லிருந்து தழுவப்பட்டது.

2008 ஜனவரியில், என் மனைவி ஜேன் புற்றுநோயால் இறந்து போனாள். அவள் ஒரு அற்புதமான கிறிஸ்தவப் பெண், மனைவி மற்றும் தாயாக இருந்தாள். புற்றுநோய் அவள் உடல் முழுவதும் பரவி, வலியால் அவள் இறப்பதைக் காண்பது எனக்கு கடினமாக இருந்தது, மேலும் எங்கள் குழந்தைகள் அவள் துன்பப்படுவதைக் காண்பது இன்னும் கடினமாக இருந்தது. என் துயரத்தில், எப்படி ஜெபிப்பது மற்றும் எதற்காக ஜெபிப்பது என்று தெரியாமல் நான் போராடிய நேரங்கள் உண்டு. எனக்கு எப்படி ஜெபிப்பதென்றே தெரியவில்லை.

அந்த நேரத்தில், கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் நான் சொல்ல ஆரம்பிப்பதைக் காட்டிலும் மிகவும் பொருத்தமானதாக மாறியது. நான் ஜேனை என் கைகளில் பிடித்திருந்தபோது, பரமேறிச் சென்ற ஆசாரியர் (இயேசு கிறிஸ்து) எங்கள் சார்பாகப் பரிந்து பேசிக்கொண்டிருந்தார். அவருடைய சமுகத்தில் நாங்கள் இளைப்பாற முடிந்தது.

அந்த தருணத்தில் நான் கர்த்தருடைய ஜெபத்தையே பற்றிக்கொண்டிருந்தேன். நானாகவே என் விருப்பப்படி ஜெபிக்க விடப்படவில்லை. "நான் இருக்கும் இடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள—**என்** பரமண்டலங்களில் இருக்கும் பிதா." அதற்குப் பதிலாக, பரிசுத்த ஆவியின் மூலமாக, "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று ஜெபித்தேன்.

கிறிஸ்துவின் தொடர்ச்சியான ஆசாரியத்துவ ஊழியத்தின் முக்கியத்துவத்தைக் கண்டறிவது, நம் வாழ்வின் மற்றும் ஆராதனையின் ஒவ்வொரு பகுதியையும் மாற்றுகிற விதத்தில் சுவிசேஷத்தைக் கண்டறிவதாகும்.

விசுவாசிகள் அனைவரும் ஆசாரியர்களே என்கிற ஆசாரியத்துவத்தைப் பொருத்தமட்டில், நமது சொந்த ஆவிக்குரிய பலத்தில் பிதாவை அணுக வேண்டும் என்று நாம் தவறாகப் புரிந்துகொள்கிறோம். அது ஒரு தவறான எண்ணமாகும். விசுவாசிகள் அனைவரும் ஆசாரியர்களே என்பது, **கிறிஸ்துவைத் தவிர வேறு எந்த மத்தியஸ்தரும் நமக்குத் தேவையில்லை** என்பதை வலியுறுத்துகிறது. அவர்தான் நமக்காகப் பரிந்து பேசுகிறவர், ஜெபத்தில் நாம் செய்யும் குறைபாடுள்ள முயற்சிகளை ஏற்றுக்கொண்டு, அவற்றை பிதாவிடம் ஏற்கத்தக்க பலிகளாகப் படைக்கிறவர் அவரே. நமது ஜெபம் ஆவியினாவரால் பெலப்படுத்தப்பட்டு, நமது பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவால் பரிந்து பேசப்படுகிறது.

எப்படி ஜெபிப்பது என்று உங்களுக்குத் தெரியவில்லையென்றால், மனமுடைந்து போகாதீர்கள். நமக்காக ஜெபிக்கிற ஒருவர் இருக்கிறார், நம் பக்கத்தில் முழங்காலிட்டு, பிதாவிடம் பரிந்து பேசி, நம்மால் சொல்ல முடியாததை அவர் சொல்லுகிறார்.

பாடம் 2 வீட்டுப்பாடங்கள்

(1) ஒரு ஒத்தவாக்கிய அகராதி அல்லது வேதாகமத் தேடல் முறையைப் பயன்படுத்தி, வேதாகமத்திலுள்ள ஜெபத்திற்கான மூன்று உதாரணங்களைக் கண்டறியவும். ஒவ்வொரு ஜெபத்தையும் கர்த்தருடைய ஜெபத்துடன் ஒப்பிடுக. கர்த்தருடைய ஜெபத்தின் எந்தெந்த கூறுகள் மற்ற வேதாகம ஜெபங்களில் காணப்படுகின்றன? நீங்கள் காண்பதை பதிவு செய்ய அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையைப் பயன்படுத்தவும்.

(2) ஒரு மாதத்திற்கு ஒரு ஜெப நாட்குறிப்பை வைத்துக்கொள்ளுங்கள். ஜெபத்தில் உங்களுடைய விரக்திகள், ஜெபத்தில் உங்களுடைய வெற்றிகள் மற்றும் ஜெபங்களுக்கு தேவனுடைய பதில்கள் ஆகியவற்றை பதிவு செய்யுங்கள். உங்கள் ஜெப வாழ்க்கையில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக இந்த நாட்குறிப்பைப் பயன்படுத்தவும்.

வேதாகம ஜெபம்	வசனக்குறிப்பு	ஜெபத்திலுள்ள கூறுகள்
நெகேமியாவின் ஜெபம்	நெகேமியா 1:5-11	• உறவு: “உடன்படிக்கையை காக்கிற” • கனம்: “மகத்துவமும் பயங்கரமுமான தேவனே” • கீழ்ப்படிதல்: “உமது அடியேனுடைய ஜெபத்தை” • வழங்குதல்: “உமது அடியேனுக்கு காரியத்தைக் கைகூடிவரப்பண்ணி” • அறிக்கைப்பண்ணுதல்: “இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை அறிக்கையிடுதல்”

பாடம் 3
இயேசுவைப் போல வழி நடத்துதல்

பாடத்தின் நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:

(1) இயேசுவை ஒரு சிறந்த தலைவராக்கிய குணங்களை அறிந்துகொள்வது.

(2) அவரது தேவனால் கொடுக்கப்பட்ட ஊழியமும் அழைப்பும் அவரது அன்றாட முன்னுரிமைகளைத் தீர்மானிக்க அனுமதிப்பது.

(3) எதிர்காலத் தலைவர்களுக்கான பயிற்சிக்காகவும், ஒரு ஊழியக் குழுவை உருவாக்குவதற்காகவும் ஒரு செயல்முறையை உருவாக்குவது.

(4) அவர் வழிநடத்தும் மக்களுக்கு அவர் ஒரு ஊழியக்காரன் என்ற அவரது பாத்திரத்தைப் பாராட்டுவது.

ஊழியத்திற்கான கோட்பாடு

தலைவர்கள் மற்றவர்களுக்குச் சேவை செய்யும்போதுதான் இயேசுவைப் போல இருக்கிறார்கள்.

முன்னுரை

தலைமைத்துவம் என்பது வலுவான உணர்வுகளைத் தூண்டும் ஒரு வார்த்தை. உலகியல் எண்ணம் கொண்டவர்கள் தலைமைத்துவத்தைப் பற்றிக் கருதும் போது, அவர்கள் அதிகாரம் மற்றும் பதவியைப் பற்றி நினைக்கிறார்கள். தலைவர் என்றால் "முதலாளி". லட்சியம் கொண்ட தலைவர்கள் உயர்ந்த பதவிகளைப் பெறவும், மிக உயர்ந்த பட்டத்தைப் பெறவும் விரும்புகிறார்கள். போதகர்கள் கூட இந்த மனநிலையை எடுக்கலாம். அவர்கள் பெரிய திருச்சபைகள், உயர் பதவிகள் மற்றும் அதிக மரியாதையைப் பெறுவதில் தங்கள் கவனத்தைச் செலுத்தலாம்.

இந்த உலகியல் மனநிலைக்குப் பதிலளிக்கும் விதமாக, சில கிறிஸ்தவர்கள் தலைமைத்துவம் என்ற வார்த்தைக்கு எதிராக எதிர்வினை ஆற்றுகிறார்கள். ஒரு போதகர் ஒருமுறை, "நான் என் சபையில் தலைவராக இருக்க விரும்பவில்லை. நான் சேவை செய்ய மட்டுமே விரும்புகிறேன்," என்று கூறினார். இருப்பினும், அவரது கூற்று பணிவானது போல் ஒலித்தாலும், அது அவரது சபைக்கு எந்தவொரு திசை அல்லது நோக்கத்தையும் கொடுக்காமல் விட்டுவிட்டது. அனைத்து அமைப்புகளுக்கும், திருச்சபைகளுக்கும் கூட, தலைவர்கள் தேவை.

போதகர்கள், போதகர் என்ற வார்த்தையின் மூலப்பொருள் "இடையர்" (மேய்ப்பன்) என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஓர் இடையருக்கு மிகவும் ஈர்க்கக்கூடிய வேலை எதுவும் இல்லை! ஓர் இடையர் தன் நாட்களை நாற்றம் பிடித்த ஆடுகளுடன் கழிக்கிறார். அவரது வேலை சலிப்பான கடமைகளை உள்ளடக்கியது: உணவு மற்றும் தண்ணீரைக் கண்டுபிடிப்பது, அலைந்து திரியும் குட்டிகளைத் துரத்துவது, மற்றும் காயமடைந்த ஆடுகளைக் கவனித்துக்கொள்வது.

ஓர் இடையருக்கு முக்கியமான பங்கு உண்டு. ஓர் இடையர் பல தாழ்மையான வேலைகளைச் செய்கிறார், ஆனால் ஓர் இடையர் மந்தையை பாதுகாப்பாக வழிநடத்தும் கனமான பொறுப்பையும் சுமக்கிறார். மந்தை ஒரு தலைவராக இருக்கும் இடையரைச் சார்ந்துள்ளது.

இயேசுவே ஒரு உண்மையான தலைவரின் சிறந்த முன்மாதிரியை வழங்குகிறார். அவர் பணிவுடன் சேவை செய்த, ஆனால் ஆழமான நோக்க உணர்வுடன் இருந்த ஓர் இடையர். அவர் பலமுள்ளவர், ஆனால் இரக்கத்தால் நிறைந்தவர். அவர் பதவியைத் தேடவில்லை, ஆனால் தன் ஊழியத்தில் அவர் நம்பிக்கையுடன் இருந்தார். இயேசுவே ஊழியத் தலைவர்களுக்கான முன்மாதிரியை வழங்குகிறார்.

► நீங்கள் தனிப்பட்ட முறையில் அறிந்த மிக வெற்றிகரமான தலைவரைப் பற்றி சிந்தியுங்கள். இந்த நபரை ஒரு நல்ல தலைவராக ஆக்கிய மூன்று அல்லது நான்கு பண்புகளைப் பட்டியலிடுங்கள். இந்தப் பண்புகள் இயேசுவின் ஊழியத்தில் காணப்படுகின்றனவா? இந்தப் பண்புகள் உங்கள் ஊழியத்தில் காணப்படுகின்றனவா?

உண்மையான தலைமைத்துவம் பணிவான சேவையை உள்ளடக்கியது என்பதை இயேசு காட்டுகிறார். பணிவு என்பது பலவீனம் அல்லது முடிவெடுக்க இயலாமை என்று பொருள்படவில்லை; இயேசு பலமுள்ளவராக இருந்தார். மீண்டும் மீண்டும், சுவிசேஷங்கள் இயேசுவின் அதிகாரத்தை நிரூபிக்கின்றன.[17] இருப்பினும், இயேசு மரியாதையைக் கோருவதன் மூலம் அல்ல, மாறாகச் சேவை செய்வதன் மூலம் அதிகாரத்தைப் பெற்றார். அவருடைய சீஷர்கள் இராஜ்யத்தில் உள்ள பதவிகளைப் பற்றி வாதிட்டபோது, இயேசு கூறினார்:

> புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன். பந்தியிருக்கிறவனோ, பணிவிடைசெய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா?

[17] மத்தேயு 7:28-29, மாற்கு 1:22-28, லூக்கா 4:32-36, லூக்கா 20:1-8

அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன் (லூக்கா 22:25-27).

இந்த பாடத்தில், இயேசுவை ஒரு சிறந்த தலைவராக ஆக்கிய பண்புகளை நாம் பார்ப்போம். இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுவதன் மூலம் நாம் எவ்வாறு மிகவும் திறமையான தலைவர்களாக இருப்பது என்பதைப் பற்றி அறிந்துகொள்வோம்.

திறம்படச் செயல்படும் ஒரு கிறிஸ்தவ தலைவர் தனது ஊழியத்தை அறிந்திருக்கிறார்

ஒரு சிறந்த தலைவருக்கு ஒரு தெளிவான இலக்கு இருக்கும், அவர் அந்த இலக்கில் ஒரே மனதுடன் தீவிர கவனம் செலுத்துகிறார். இயேசு தனது இலக்கை அறிந்திருந்தார். இயேசுவின் இலக்கு மாற்கு 10:45-இல் சுருக்கமாக உள்ளது: "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்."

அவர் தம்முடைய முதல் பொதுப் பிரசங்கத்தில், ஏசாயாவினால் முன்னுரைக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றவே தாம் வந்திருப்பதாக இயேசு தம்மைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களிடம் சொன்னார்:

> கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு (லூக்கா 4:18-19-ல், ஏசாயா 61:1-3 ஐ மேற்கோள் காட்டுகிறார்).

இயேசுவின் பணி அவருடைய அன்றாட முடிவுகளை வழிநடத்தியது. அவர் யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்குப் பயணம் செய்தபோது, அவருடைய பணி அவருடைய வழியை வழிநடத்தியது. சமாரியர்களால் தீட்டுப்படுவதைத் தவிர்க்க, யூத ரபீக்கள் பெரும்பாலும் யோர்தான் நதியின் கிழக்கு பக்கமாகப் பயணம் செய்தனர். இருப்பினும், இயேசுவின் வழித்தடமானது ஒரு சமாரியப் பெண்ணுடன் தேவனுடைய இரக்கத்தைப் பகிர்ந்துகொள்வதற்கான அவருடைய பணியால் வழிநடத்தப்பட்டது. இதன் காரணமாக, அவர் சமாரியா வழியாகச் செல்ல வேண்டியிருந்தது (யோவான் 4:4). ஒரு கிறிஸ்தவத் தலைவராக, உங்களுடைய பணி உங்களுடைய அன்றாட முடிவுகளை வழிநடத்த வேண்டும்.

ஒரு தலைவராக, நீங்கள் செய்து முடிக்கக்கூடியதைவிட அதிக காரியங்கள் உள்ளன. உங்களுடைய முன்னுரிமைகளை நீங்கள் எவ்வாறு தீர்மானிக்கிறீர்கள்? நீங்கள்

எல்லாவற்றையும் செய்ய முடியாது, எல்லாவற்றையும் செய்யக் கூடாது. உங்களுடைய பணி மூலமாகவே நீங்கள் வாய்ப்புகளை மதிப்பிட வேண்டும். ஒவ்வொரு தலைவரிடமும் இரண்டு பட்டியல்கள் இருக்க வேண்டும்: ஒரு "செய்ய வேண்டியவை" பட்டியல் மற்றும் ஒரு "செய்யக் கூடாதவை" பட்டியல். செய்ய வேண்டியவை பட்டியலில் நீங்கள் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் அடங்கும். செய்யக் கூடாதவை பட்டியலில் உங்களுடைய பணியிலிருந்து உங்களைத் திசைதிருப்பும் காரியங்கள் அடங்கும். வேறு யாரோ அந்தக் காரியங்களைச் செய்ய அழைக்கப்படலாம், ஆனால் நீங்கள் அல்ல. உங்களுடைய பணிதான் உங்களுடைய அன்றாட முன்னுரிமைகளை வழிநடத்த வேண்டும்.

தம்முடைய பணியை அறிந்திருந்த ஒரு தலைவருக்கு அப்போஸ்தலன் பவுல் ஓர் உதாரணம். ரோமானியப் பேரரசின் முக்கிய நகரங்களில் சபைகளை நடும்படி பவுல் அழைக்கப்பட்டார். அவர் மற்றொருவர் போட்ட அஸ்திபாரத்தின்மேல் கட்ட விரும்பவில்லை, ஆனால் இன்னும் கேட்காதவர்களுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல விரும்பினார் (ரோமர் 15:20). இந்தப் பணியே பவுல் பயணம் செய்த இடங்கள், ஒவ்வொரு இடத்திலும் அவர் தங்கியிருந்த காலம் மற்றும் அவர் பிரசங்கித்த செய்தி ஆகியவற்றையும் வழிநடத்தியது. பவுலின் பணி ஒவ்வொரு முடிவையும் வழிநடத்தியது.

► இந்தக் கேள்விகளைப் பற்றிக் கலந்தாலோசிக்கவும்:

- தேவன் உங்களுக்கு அளித்துள்ள பணி என்ன? உங்களுடைய பணியைச் சில வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறுங்கள்.
- ஊழியத்தில் உங்களுடன் இணையும் நபர்களிடம் உங்களுடைய பணியைத் தெரிவித்துள்ளீர்களா?
- உங்களுடைய பணி உங்களுடைய அன்றாட முடிவுகளை வழிநடத்துகிறதா?

திறம்படச் செயல்படும் ஒரு கிறிஸ்தவ தலைவர் மற்ற தலைவர்களைப் பயிற்றுவிக்கிறார்

இயேசு தமது ஊழியத்தின் தொடக்கத்திலிருந்தே, தாம் பிதாவிடம் திரும்பிய பிறகு தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்யக்கூடிய ஒரு சீடர்கள் குழுவைத் கவனமாகத் தேர்ந்தெடுத்துப் பயிற்றுவித்தார். இந்தச் சீடர்கள் அவரிடமிருந்து கற்றுக்கொண்டார்கள், அவருடன் நேரம் செலவிட்டார்கள், அவருடன் ஊழியம் செய்தார்கள், அவருடைய செய்தியை உலகம் முழுவதும் பரப்பினார்கள். இயேசு தம்முடைய உருவத்தால் இந்தச் சீடர்களை

> "இயேசு ஒருபோதும் எந்தப் புத்தகங்களையும் எழுதவில்லை. மாறாக, அவர் தம் செய்தியை மனிதர்கள் மீது, அதாவது அப்போஸ்தலர்கள் மீது எழுதினார்."
>
> - வில்லியம் பார்க்லே

முத்திரையிட்டு, பின்னர் அவர்களைத் தமது சபையைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தினார்.

லூக்கா ஊழியத்தின் அழுத்தத்தைப் பற்றி எழுதினார். "அத்தருணத்திலே அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்கதாகக் கூடிவந்திருக்கையில், அவர் முதலாவது தம்முடைய சீஷரை நோக்கி" (லூக்கா 12:1). ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஊழியம் செய்வது மிகவும் பரவசமூட்டுவதாக இருந்தபோதிலும், சீடர்களுக்கு ஊழியம் செய்வதிலிருந்து இயேசுவின் கவனத்தைத் திசைதிருப்ப முடியவில்லை. ராஜ்யத்தை நிலைநாட்ட, சபையை வழிநடத்துவதற்குத் தம்முடைய சீடர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். சீடர்களைப் பயிற்றுவிப்பதன் மூலம், அடுத்த தலைமுறைக்கான தலைவர்களை நாம் தயார்படுத்துகிறோம்.

பவுலும் இதே வழிமுறையைப் பின்பற்றினார். அவர் மக்கள் கூட்டங்களுக்குப் பிரசங்கித்தார், ஆனால் ஒவ்வொரு நகரத்திலும் சில தலைவர்களைப் பயிற்றுவிப்பதில் அவர் முழுக் கவனத்தையும் செலுத்தினார். இது இன்றைய தலைவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைகிறது. ஊழியத்தின் வேலைக்காகப் பரிசுத்தவான்களைத் தகுதிப்படுத்தும்படி பவுல் போதகர்களுக்கு அழைப்பு விடுத்தார் (எபேசியர் 4:12). சபையின் எல்லா வேலைகளையும் செய்வதற்குப் போதகர் பொறுப்பாளரல்ல; மாறாக, சபையின் பணிகளைச் செய்வதற்கு உறுப்பினர்களைப் பயிற்றுவிப்பதும், அவர்களைத் தகுதிப்படுத்துவதுமே போதகரின் பொறுப்பாகும். திறம்படச் செயல்படும் தலைவர்கள் மற்ற தலைவர்களைப் பயிற்றுவிக்கிறார்கள்.

சீடர்களுக்கு வழிகாட்டுவதில் இயேசுவின் முன்மாதிரி

ஒரு வழிகாட்டி சீடர்களைக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்[18]

► யோவான் 1:35-51, யோவான் 2:1-11, மத்தேயு 4:18-22, லூக்கா 5:1-11, and லூக்கா 6:12-16-ஐ வாசிக்கவும்.

இந்த வசனங்களை நீங்கள் வாசிக்கும்போது, அந்தச் செயல்முறையை நீங்கள் கவனிக்கிறீர்களா? தமது பொது ஊழியத்தின் முதல் வாரத்தில், தம்மைப் பின்பற்றும்படி இயேசு அந்திரேயாவையும் யோவானையும் அழைத்தார். அந்திரேயா சீமோன் பேதுருவை இயேசுவிடம் அழைத்து வந்தார். இயேசு பிலிப்புவை அழைத்தார், பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டுபிடித்தார் (யோவான் 1:35-51). இது அவர்களின் அழைப்பின் முதல் படியாக இருந்தது. அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள்/அங்கீகரித்தார்கள், ஆனால் இன்னும் நிரந்தரமான சீடர்களாக மாறவில்லை. இது இயேசுவைப்

[18] Robert Coleman எழுதிய *The Master Plan of Evangelism.* (Grand Rapids: Baker Book House, 1963) என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

பின்பற்றுவதற்கான ஒரு அழைப்பாக இருந்தது. பின்னர், இயேசு அவர்களை முழுநேர சீடத்துவத்திற்கு அழைப்பார்.

இந்தச் செயல்முறையில் யோவான் 2 ஒரு முக்கியமான படியாகும். கானா ஊர் திருமணத்தில், இயேசு தம்முடைய மகிமையைச் சீடர்களுக்கு வெளிப்படுத்தினார். மற்ற விருந்தினர்கள் அந்த அற்புதத்தைப் பற்றி அறியவில்லை; இந்த அடையாளம் சீடர்களுக்கானது. தம்மைப் பின்பற்றுபவர்கள் தம் மீது நம்பிக்கை வைப்பதற்காக, இயேசு தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் (யோவான் 2:11).

மத்தேயு 4:18-22-ல் உள்ள நிகழ்வுகள், இயேசு நாசரேத்திலிருந்து கப்பர்நாகும் ஊருக்குச் சென்று பிரசங்கிக்கத் தொடங்கிய பிறகு நடைபெறுகிறது (மத்தேயு 4:12-17). கலிலேயா கடலோரமாய் நடந்து செல்லும்போது, இயேசு சீமோன், அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரைத் தம்மைப் பின்பற்றும்படி அழைத்தார். “உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்” (மத்தேயு 4:20). யோவான் 1-ல் விடுக்கப்பட்ட ஆரம்ப அழைப்பிற்குப் பிறகும், இந்தச் சீடர்கள் தங்கள் மீனவர் தொழிலைத் தொடர்ந்து செய்து வந்தார்கள். இப்போது, இயேசு அவர்களைச் சேவைக்கு அழைத்தார்: “இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்” (லூக்கா 5:10).

இந்தச் செயல்முறையின் அடுத்த கட்டம், பன்னிரண்டு அப்போஸ்தலர்களை இயேசு தேர்ந்தெடுத்ததே ஆகும். அவரைப் பின்பற்றிய பலரிலிருந்து (யோவான் 6-ல் இவர்கள் “சீடர்கள்” என்று அழைக்கப்படுகிறார்கள்), தமக்கு மிக நெருக்கமான சகாக்களாக மாறப்போகும் பன்னிரண்டு பேரை இயேசு தேர்ந்தெடுத்தார்.

பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுக்கும்போது இயேசு அவசரப்படவில்லை. இந்தச் செயல்முறை பல மாதங்கள் எடுத்ததாகத் தெரிகிறது. இது அவர்கள் ஒவ்வொருவருடனும் நேரம் செலவிட இயேசுவுக்கு வாய்ப்பளித்தது. பெரும்பாலும், ஒரு தலைவர் ஒரு நபரை முழுமையாக அறிந்துகொள்வதற்கு நேரம் செலவிடாமலேயே, தனக்குப் பின் வரப்போகிறவரை (successor) விரைவாகத் தேர்ந்தெடுத்துவிடுகிறார். ஆனால் ஒரு ஞானமுள்ள தலைவர், ஒரு நபரின் தலைமைத்துவத் திறனை மதிப்பிடுவதற்கான வாய்ப்புகளைத் தரும் பணிகளை அவர்களுக்கு ஒதுக்குகிறார்.

ஒரு வழிகாட்டி தம்முடைய சீடர்களுடன் நேரம் செலவிட வேண்டும்

► பலரைச் சென்றடைவது (ஊழியம் செய்வது) அதிக உற்சாகமூட்டுவதா அல்லது சிலருக்கு வழிகாட்டுவது அதிக உற்சாகமூட்டுவதா? நீண்ட கால நோக்கில் எது அதிக முக்கியமானது? இயேசு ஏன் அந்தப் பன்னிரண்டு பேர் மீது இவ்வளவு அதிக முயற்சிகளை எடுத்தார்?

பாடத்தின் முடிவில், "இன்று நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?" என்று கேட்கிறார்கள். பாடத்தின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டதா என்பதை மாணவர்கள் அறிந்துகொள்வதை அவர்கள் உறுதி செய்கிறார்கள்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► உங்களுக்குக் கற்பிக்கக் கிடைக்கும் அடுத்த வாய்ப்பில், மாணவர்கள் பார்க்கும்படி கரும்பலகையில் பாடத்தின் குறிக்கோளை எழுதுங்கள். அந்த இலக்கு தெளிவாகவும் எளிதில் புரியும்படியும் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். வகுப்பின் தொடக்கத்திலேயே அந்த இலக்கை அறிமுகப்படுத்துங்கள். பாடத்தின் முடிவில், "நமது இலக்கை நாம் அடைந்துவிட்டோமா?" என்று மாணவர்களிடம் கேளுங்கள்.

தலைசிறந்த போதகரான இயேசு, வழிகாட்டுதலுடன் கூடிய பயிற்சிக்கு வாய்ப்பளித்தார்

சிறந்த கற்பித்தல் என்பது விரிவுரைகளை விட அதிகமானது. உண்மையான கற்றலுக்குப் பயிற்சி தேவை.

► லூக்கா 10:1-24-ஐ வாசிக்கவும்.

இந்தச் சீஷர்கள் இன்னும் முழுமையாகப் பயிற்சி பெறவில்லை, ஆனால் இயேசு தாம் கற்பித்த பாடங்களைப் பயிற்சி செய்து பார்க்க அவர்களை அனுமதித்தார். சீஷர்கள் இந்த ஊழியப் பயணத்திலிருந்து திரும்பியபோது, இயேசுவிடம் அறிக்கை செய்தார்கள். அவர்கள் பாடங்களைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதை அவர் கண்டார், எனவே அவர்களுக்கு மேலும் அறிவுரைகளை வழங்கினார். மேலும் அவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக, "நீங்கள் காண்கிறவைகளைக் காணுங்கண்கள் பாக்கியமுள்ளவைகள்" என்றார் (லூக்கா 10:23). இயேசு அவர்களின் பயிற்சியை வழிநடத்தினார்.

பயிற்சிக்கு வாய்ப்பளிப்பது மட்டும் போதாது; அந்தப் பயிற்சி மதிப்பிடப்பட வேண்டும், அதைத் தொடர்ந்து கூடுதல் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். "பயிற்சி முழுமையாக்கும்" (Practice makes perfect) என்றொரு பழமொழி உண்டு. இது முற்றிலும் உண்மையல்ல. தவறான பயிற்சி சிறந்த செயல்பாட்டிற்கு வழிவகுக்காது. "**வழிகாட்டுதலுடன் கூடிய பயிற்சியே** முழுமையாக்கும்" என்று சொல்வதே சிறந்தது. ஒரு சிறந்த ஆசிரியர் மாணவர்களுக்குப் பயிற்சி செய்ய வாய்ப்பளிப்பார், மாணவர்களுடன் சேர்ந்து அந்தப் பயிற்சியை மறுஆய்வு செய்வார், பின்னர் மாணவர்களை உற்சாகப்படுத்தி வழிநடத்துவார்.

வழிகாட்டுதலுடன் கூடிய பயிற்சியின் மதிப்பை பவுல் அறிந்திருந்தார். அவர் தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் பயிற்சி அளித்து, அவர்களை ஊழியப் பொறுப்புகளில் அமர்த்தினார். போதக நிருபங்களில், பவுல் தீமோத்தேயுவுக்கும் தீத்துவுக்கும் கூடுதல்

அறிவுரைகளை வழங்கினார். தான் கற்பித்த ஊழியக் கொள்கைகளைத் தன் மாணவர்கள் நடைமுறைப்படுத்தும்போது அவர் அவர்களை வழிநடத்தினார்.

தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு பள்ளியில், ஒவ்வொரு மாணவரும் 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தை மனப்பாடம் செய்து வகுப்பில் ஒப்புவிக்க வேண்டும். ஒரு மாணவன் இந்தப் பணியைச் செய்யப் பல வாரங்களாகச் சிரமப்பட்டான். அவனால் சரியாக மனப்பாடம் செய்ய முடியவில்லை, மற்ற மாணவர்களுக்கு முன்னால் நிற்க மிகவும் கூச்சப்பட்டான். ஒரு நாள் இந்த மாணவன் இறுதியாக அந்த முழு அதிகாரத்தையும் வகுப்பில் ஒப்புவித்து வெற்றி பெற்றான்.

அவன் முடித்ததும், மற்ற மாணவர்கள் எழுந்து நின்று அந்த வாலிபனுக்காகக் கரகோஷம் எழுப்பி ஆரவாரம் செய்தனர். ஏன்? அந்த அதிகாரம் அன்பைப் பற்றியது, அன்பு மற்றவர்களை உற்சாகப்படுத்தும் என்று ஆசிரியர் மாணவர்களுக்குக் கற்பித்திருந்தார். தங்கள் வகுப்புத் தோழனை உற்சாகப்படுத்தியதன் மூலம், அந்த மாணவர்கள் 1 கொரிந்தியர் 13-ன் பாடத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார்கள்! சிறந்த ஆசிரியர்கள், மாணவர்கள் தாங்கள் கற்கும் கொள்கைகளைப் பயிற்சி செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்துகிறார்கள்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► உங்கள் மாணவர்கள் தாங்கள் கற்றுக்கொள்வதைப் பயிற்சி செய்ய அவர்களுக்கு வாய்ப்பளியுங்கள். நீங்கள் இளம் போதகர்களுக்குப் பயிற்சியளிக்கிறீர்கள் என்றால், அவர்கள் பிரசங்கிக்கவும், வியாதிப்பட்டவர்களைச் சந்திக்கவும், அல்லது விசுவாசியாத ஒருவருடன் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ளவும் வாய்ப்பளியுங்கள். அவர்கள் முடித்த பிறகு, அவர்களின் ஊழியத்தை மதிப்பிடுங்கள், மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குங்கள், மற்றும் அவர்கள் வெற்றிகரமாகச் செயல்பட்ட பகுதிகளைச் சுட்டிக்காட்டி அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

தலைசிறந்த போதகரான இயேசு, சூழ்நிலைக்கேற்ப வளைந்துகொடுப்பவராக இருந்தார்

இயேசு எந்தெந்த இடங்களிலும் சூழ்நிலைகளிலும் கற்பித்தார் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அவர் கற்பித்த இடங்கள்:

- கடற்கரையில் (லூக்கா 5)
- புயலின் போது (லூக்கா 8:22-25)
- ஒரு மாணவர் போராடுவதை அனுமதிப்பதன் மூலம் (மத்தேயு 14:25-33)
- பார்வையாளர்களால் தனது பாடம் தடைபட்டபோது (மத்தேயு 12:46-50)
- ஆலயத்திற்குச் சென்றிருந்தபோது (மத்தேயு 24)

- தனது வகுப்பறையின் கூரை பிரிக்கப்பட்டபோது (லூக்கா 5:18-26)

லூக்கா 5:18-26-ல் நடந்த அற்புதத்திற்குப் பிறகு வீட்டிற்குத் திரும்பிய மாணவர்களைக் கற்பனை செய்து பாருங்கள். இயேசுவின் வல்லமையைக் குறித்து அவர்கள் கற்றுக்கொண்ட இந்தப் பாடத்தை அவர்கள் ஒருபோதும் மறக்கவில்லை. லூக்கா எழுதுகிறார்: "அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப்படுத்தினார்கள்; அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி, அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்றார்கள்" (லூக்கா 5:26).

மாணவர்கள் கற்கத் தயாராக இருக்கும்போது, ஒரு சிறந்த ஆசிரியர் கற்பிப்பதற்கு ஏற்ற தருணங்களைக் கண்டுபிடிப்பார் என்பதை அறியும் அளவுக்கு இயேசு சூழ்நிலைக்கேற்ப வளைந்துகொடுப்பவராக இருந்தார். லூக்கா இந்தத் தத்துவத்திற்கு ஒரு உதாரணத்தைத் தருகிறார். "அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்" (லூக்கா 11:1). ஜெபத்தைப் பற்றிக் கற்பிக்க இயேசு இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டார்.

எட்டு வயது சிறுமி அனிதா தனது பியானோ வகுப்புக்காக அறைக்குள் நுழைந்ததும், "இன்று காலை என் பூனை இறந்துவிட்டது!" என்று அழத் தொடங்கினாள். பியானோ சுரவரிசைகளை வாசிப்பதிலோ அல்லது நுட்பங்களைக் கற்றுக்கொள்வதிலோ அனிதாவிற்கு எந்த ஆர்வமும் இருக்கவில்லை. இருப்பினும், அவளுடைய ஆசிரியர் "எனக்கு மிகவும் பிடித்த பூனைக்குட்டி" என்ற இசைக் குறிப்பை அவளிடம் கொடுத்தபோது, அனிதா, "என் பூனையின் நினைவாக நான் இதைக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன்!" என்று முடிவு செய்தாள்.

ஆசிரியர்களாகிய நாம், நம் மாணவர்களின் பேச்சைக் கேட்க வேண்டும் மற்றும் அவர்களின் சூழ்நிலைக்கு ஏற்ப பதிலளிக்க வேண்டும். தலைசிறந்த போதகரான இயேசுவைப் போல, நாமும் நம் கற்பித்தலில் வளைந்துகொடுப்பவர்களாய் இருக்க வேண்டும். நம் மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப நமது பாடத்தை மாற்றியமைக்க நாம் தயாராக இருக்க வேண்டும்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► உங்கள் கற்பித்தலில் நீங்கள் வளைந்துகொடுப்பவர்களாய் இருக்கிறீர்களா? ஒரு பாடத்தைக் கற்பிக்கக் குறைந்தது இரண்டு வெவ்வேறு வழிகளைத் திட்டமிடுங்கள். நீங்கள் வழக்கமாக விரிவுரை (Lecture) கொடுத்தால், விரிவுரை இல்லாமல் கலந்துரையாடல் அல்லது செயல்பாட்டின் அடிப்படையில் ஒரு பாடத்தைத் திட்டமிடுங்கள். நீங்கள் அடிக்கடி PowerPoint அல்லது பிற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தினால், மின்சாரம் தேவைப்படாத ஒரு பாடத்தைத் திட்டமிடுங்கள். நீங்கள் வகுப்பறையில்

கற்பிப்பவர் என்றால், ஒரு திறந்தவெளிப் பாடத்தைத் திட்டமிட்டு, இயற்கையை உங்கள் பாடத்தில் இணைத்துக்கொள்ளுங்கள்.

தலைசிறந்த போதகரான இயேசு, ஆக்கப்பூர்வமாகத் தொடர்பு கொண்டார்

இயேசு ஒருபோதும் அமர்ந்து கொண்டு, "இன்று நாம் நமது பாடப்புத்தகத்திலிருந்து 212-ம் பக்கத்தை வாசிப்போம். பேதுரு, நீ முதல் பத்தியை நமக்காக வாசி" என்று சொன்னதில்லை. மாறாக, ஆக்கப்பூர்வமாகத் தொடர்புகொள்வதற்கு இயேசு புதிய வழிகளைக் கண்டுபிடித்தார்.

► இயேசுவின் ஆக்கப்பூர்வமான கற்பித்தலின் இந்த உதாரணங்கள் ஒவ்வொன்றையும் கவனியுங்கள்:

- **லூக்கா 6:39-42.** ஒரு குருடன் இன்னொரு குருடனுக்கு வழிகாட்டுவதில் உள்ள முரண்பாட்டைச் சிந்தனைசெய்துப் பாருங்கள். தன் கண்ணில் உத்திரத்தை வைத்துக்கொண்டு இன்னொருவனின் கண்ணில் உள்ள துரும்பை எடுக்க முயற்சிக்கும் ஒரு மனிதனைக் கற்பனை செய்து பாருங்கள்.

- **லூக்கா 18:18-30.** தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க உலகப் செல்வத்தைப் பயன்படுத்த முடியுமா? ஒரு ஊசியின் காது வழியாக ஒட்டகத்தை நுழைப்பதை எப்படிக் கற்பனை செய்ய முடியும்!

- **லூக்கா 9:46-48.** மனத்தாழ்மையைக் குறித்துப் பாடம் புகட்ட, உயிருள்ள ஒரு உதாரணமாக இயேசு ஒரு சிறுபிள்ளையைப் பயன்படுத்தினார்.

- **லூக்கா 15:1-7.** வழிதப்பிப்போய் மீண்டும் வீட்டிற்கு வரும் ஓர் ஆத்துமாவிற்கு தேவன் எப்படிப் பதிலளிக்கிறார்? ஒரு ஆட்டின் மதிப்பை இயேசு விவசாயிகளுக்குச் சுட்டிக்காட்டினார்.

- **லூக்கா 15:11-32.** தகப்பனுக்கே முழு அதிகாரமும் இருந்த ஒரு தந்தைவழிச் சமூகத்தில் வாழ்ந்த மக்களுக்குப் போதிக்கும்போது, கலகக்கார மகனை வரவேற்பதற்காகத் தந்தை ஓடிச்சென்று பார்ப்போரை அதிர்ச்சியில் ஆழ்த்தும் ஓர் உவமையை இயேசு கூறினார்.

இயேசு அரிதாகவே ஒரு கேள்விக்கு நேரடியாகப் பதிலளித்தார். அதற்குப் பதிலாக, அவர் ஒரு கதையின் மூலமாகவோ அல்லது மற்றொரு கேள்வியின் மூலமாகவோ பதிலளித்தார். லூக்கா 10-ல், ஒரு நியாயசாஸ்திரி இயேசுவிடம், "போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். இயேசு நல்ல சமாரியன் கதையின் மூலம் பதிலளித்தார் (லூக்கா 10:25-37).

சிறந்த கேள்விகளைக் கேட்பது எப்படி என்று இயேசு அறிந்திருந்தார். எளிதாக “ஆம்” அல்லது “இல்லை” என்று பதிலளிக்கக்கூடிய கேள்விகளை இயேசு அரிதாகவே கேட்டார். மாறாக, கேட்பவர் தன் கண்களைத் திறந்து புதிய சாத்தியங்களைக் காணத்தூண்டும் கேள்விகளை அவர் கேட்டார்.

► இந்த உதாரணங்களைக் கவனியுங்கள்:

- **லூக்கா 7:36-50.** தன்னை விமர்சித்த ஒரு பரிசேயனிடம், “அதிகமாக மன்னிக்கப்பட்டவனா அல்லது குறைவாக மன்னிக்கப்பட்டவனா, யார் அதிகம் அன்பு கூறுவான்?” என்று இயேசு கேட்டார்.

- **மாற்கு 8:36.** சீஷத்துவத்தைப் பற்றிக் கற்பிக்கும்போது, இயேசு கேட்டார்: “மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?”

- **லூக்கா 6:46.** ஏற்க விரும்பாதவர்களை நோக்கி இயேசு கூறினார், “என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?”

இந்தக் கேள்விகள் எதற்கும் எளிதாகப் பதில் சொல்லிவிட முடியாது. ஒவ்வொன்றும் இயேசுவின் போதனையைப் பற்றி நம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது.

ஆசிரியர்கள் கேள்விகளைச் சரியாகப் பயன்படுத்தத் தவறும் இரண்டு வழிகள் உள்ளன.

1. நாம் மிகவும் எளிமையான கேள்விகளைக் கேட்கிறோம். நம் மாணவர்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், 'ஆம்' அல்லது 'இல்லை' என்றோ அல்லது பாடப்புத்தகத்தில் உள்ள ஒரு தகவலைக் கொண்டோ பதிலளிக்க முடியாத கேள்விகளை நாம் கேட்க வேண்டும்.

2. பதிலுக்காக நாம் போதுமான நேரம் காத்திருப்பதில்லை. பெரும்பாலான ஆசிரியர்கள் ஒரு மாணவனிடமிருந்து பதிலைப் பெறாமல், ஒரு வினாடிக்குள்ளாகவே மற்றொரு மாணவரிடம் செல்வதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஒரு மாணவன் கேள்வியைப் புரிந்துகொண்டு, பதிலை உருவாக்கத் தொடங்குவதற்குத் தோராயமாக மூன்று நொடிகள் ஆகும். உங்கள் கேள்வி கேட்கும் திறனை மேம்படுத்த, பதிலுக்காக வேறொரு மாணவரிடம் செல்வதற்கு முன் எப்போதும் ஏழு நொடிகள் காத்திருங்கள்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► உங்கள் கற்பித்தலில் நீங்கள் ஆக்கப்பூர்வமாக இருக்கிறீர்களா? கலாத்தியர் 6:7-8-ஐ அடிப்படையாகக் கொண்டு ஒரு பாடத்தைத் தயார் செய்யுங்கள். 'விதைப்பும் அறுப்பும்' என்ற கொள்கையைப் பற்றி மாணவர்கள் ஆழமாகச் சிந்திக்க உதவும் கேள்விகளைத்

தயார் செய்யுங்கள். உங்கள் கேள்விகளைத் தயார் செய்த பிறகு, நீங்கள் கேட்கக்கூடிய கூடுதல் கேள்விகளுக்குக் கீழே உள்ள அடிக்குறிப்பைப் பாருங்கள்.[25]

ஒரு நெருக்கமான பார்வை: உவமைகளை வியாக்கியானம் செய்தல்

உவமை என்பது இயேசுவுக்கு மிகவும் பிடித்த கற்பித்தல் கருவிகளில் ஒன்றாகும். ஒருவர் உவமையை, "பரலோகப் பாடத்தைக் கொண்ட பூமிக்குரிய கதை" என்று வரையறுத்தார். இயேசுவின் உவமைகள், தம் மாணவர்களின் ஆர்வத்தோடு தொடர்புபடுத்துவதற்காக, பழக்கமான கிராமப்புறச் சூழல்களையும் (விவசாயிகள், மேய்ப்பர்கள் மற்றும் ஆடுகள்), பழக்கமான மனிதர்களையும் (சமாரியர்கள், ஆசாரியர்கள், ஆயக்காரர்கள் மற்றும் பரிசேயர்கள்), மற்றும் பழக்கமான சூழ்நிலைகளையும் (காணாமற்போன ஆடு, காணாமற்போன வெள்ளி, வீட்டை விட்டு ஓடிப்போன மகன்) பயன்படுத்தின.

Shepherds Global Classroom பாடத்திட்டமான *Principles of Biblical Interpretation* உவமைகளுக்குப் பொருள் கொள்வது குறித்த ஒரு பகுதியைக் கொண்டுள்ளது. அந்தப் பாடத்திட்டத்தில் கற்பிக்கப்படும் கொள்கைகளின் சுருக்கம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு உவமையைப் படிக்கும்போது, நாம் இந்தக் கேள்விகளைக்கேட்க வேண்டும்:

(1) எந்தக் கேள்வி அல்லது சூழ்நிலை இந்த உவமையைச் சொல்லத் தூண்டியது?

நல்ல சமாரியன் உவமை, "எனக்குப் பிறன் யார்?" என்ற நியாயசாஸ்திரியின் கேள்விக்குப் பதிலளித்தது. இயேசுவின் கதை, "என் பாதையில் இருக்கும் தேவையுள்ள எந்தவொரு நபரும் என் பிறன், அவரே என் பொறுப்பு" என்று பதிலளிக்கிறது (லூக்கா 10:36-37).

பாவிகளுடன் தமக்கு இருந்த நட்பை விமர்சித்த மதத் தலைவர்களுக்கு இயேசு கெட்டகுமாரன் உவமையைச் சொன்னார். "சகல ஆயக்காரரும் பாவிகளும் அவருடைய வசனங்களைக் கேட்கும்படி அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள். அவர்களுக்கு அவர் சொன்ன உவமையாவது:" (லூக்கா 15:1-3).

- ஒரு மேய்ப்பன் தன் ஆட்டை இழந்தான். அதைக் கண்டுபிடித்தபோது அவன் சந்தோஷப்பட்டான்!

---

[25] கலாத்தியர் 6:7-8-ல் கூறப்பட்டுள்ள விதைத்தல் மற்றும் அறுத்தல் கோட்பாடு குறித்த கேள்விகள்:
இயற்கை அல்லது சமூகத்திலிருந்து விதைத்தல் மற்றும் அறுத்தல் கோட்பாட்டை விளக்கும் சில உதாரணங்கள் யாவை?
இந்த கோட்பாட்டை விளக்கும் சில வேதாகம கதாபாத்திரங்கள் யார்?
இந்த கோட்பாட்டிற்கு உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏதாவது உதாரணம் உங்களுக்குத் தெரியுமா?
உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில், நீங்கள் அறுக்க விரும்பாத விதைகளை விதைத்துக் கொண்டிருக்கிறீர்களா?

- ஒரு பெண் தன் வெள்ளிக்காசைக் தொலைத்தாள். அதைக் கண்டுபிடித்தபோது அவள் சந்தோஷப்பட்டாள்!

- ஒரு தகப்பன் தன் மகனை இழந்தார். மகன் திரும்பி வந்தபோது அவர் சந்தோஷப்பட்டார்!

“நான் பாவிகளுடன் சாப்பிடுவதைப் பார்த்து நீங்கள் அதிர்ச்சியடையக் கூடாது. ஒரு பாவி மனந்திரும்பும்போது பரலோகம் சந்தோஷப்படுகிறது!” என்பதை இயேசு இதன் மூலம் உணர்த்துகிறார்.

நமது விளக்கம் அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கவில்லை என்றால், அல்லது இயேசுவின் கதையைத் தூண்டிய சூழ்நிலையைத் தீர்க்கவில்லை என்றால், நாம் உவமையின் மையக்கருத்தைத் தவறவிட்டுவிட்டோம் என்று அர்த்தம்.

(2) உவமையின் முதன்மையான கருத்து (அல்லது கருத்துகள்) என்ன?

ஒரு உவமை பெரும்பாலும் கதையில் வரும் ஒவ்வொரு முக்கிய கதாபாத்திரத்திற்கும் ஒரு முக்கியக் கருத்தைக் கொண்டிருக்கும். உவமையின் முதன்மைப் பாடம், அந்த உவமையைச் சொல்லத் தூண்டிய கேள்வி அல்லது சூழ்நிலோடு நேரடியாகத் தொடர்புடையதாக இருக்கும். மற்ற பாடங்கள் கதையில் உள்ள கதாபாத்திரங்களிலிருந்து வருகின்றன.

கெட்டகுமாரனின் கதை மூன்று கதாபாத்திரங்களைக் கொண்டுள்ளது. மனந்திரும்புன்கிற ஒரு பாவியைக் குறித்துப் பரலோகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியே இக்கதையின் முதன்மைப் பாடம் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். இந்தப் பாடம் இயேசுவின் கதையைத் தூண்டிய சூழ்நிலைக்குப் பதிலளிக்கிறது. உவமையில் உள்ள ஒவ்வொரு கதாபாத்திரமும் கதையின் முதன்மைச் செய்தியோடு தொடர்புடைய பாடங்களைக் கற்பிக்கலாம். தகப்பன், நமது பரலோகப் பிதாவின் அற்புதமான அன்பைக் கற்பிக்கிறார். கெட்டகுமாரன், பாவத்தின் விலை மற்றும் மனந்திரும்புதலுக்கான சாத்தியம் ஆகிய இரண்டையும் கற்பிக்கிறான். ஒரு நல்ல மகனாகத் தோன்றினாலும், தகப்பனின் அன்பின் சிலாக்கியங்களை நாம் இழக்க நேரிடும் என்று மூத்த சகோதரன் எச்சரிக்கிறான்.

(3) உவமைக்கு முக்கியமான கலாச்சார விவரங்கள் என்ன?

இயேசுவின் உவமைகள் பெரும்பாலும் அவருடைய கலாச்சார விதிமுறைகளுக்கு முரணாக இருந்தன. இதுவே உவமைகளை மறக்க முடியாததாக மாற்றியது: ஒரு தகப்பன் கலகக்கார மகனை வரவேற்க ஓடுகிறார்; ஒரு சமாரியன் கதாநாயகனாக இருக்கிறான்; சக்தியற்ற ஒரு விதவை வலிமையான ஒரு நியாயாதிபதியை ஜெயிக்கிறாள். உவமையின் கலாச்சாரப் பின்னணியை நாம் எவ்வளவு நன்றாகப்

புரிந்துகொள்கிறோமோ, அவ்வளவு நன்றாக இயேசுவின் செய்தியைப் புரிந்துகொள்வோம்.

பயன்பாடு: ஆசிரியருக்கான ஏழு விதிகள்

டாக்டர் ஹோவர்ட் ஹென்ட்ரிக்ஸ்[26] டல்லாஸ் தியாலஜிக்கல் செமினரியில் 60 ஆண்டுகளுக்கும் மேலாகக் கற்பித்தார். தனது பணிக்காலத்தில், அவர் 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கற்பித்தார். அவரது தத்துவத்தை "ஆசிரியருக்கான ஏழு விதிகள்" என்று சுருக்கமாகக் கூறும் ஒரு சிறிய புத்தகமே, அவரது மிகவும் செல்வாக்கு மிக்க புத்தகங்களில் ஒன்றாகும். இந்த விதிகள் இயேசுவின் கற்பித்தல் பாணியை அடிப்படையாகக் கொண்டவை. இந்தக் கொள்கைகளை நீங்கள் நடைமுறைப்படுத்தும்போது, நீங்கள் இன்னும் சிறந்த ஒரு ஆசிரியராக மாறுவீர்கள்.

ஆசிரியருக்கான விதி

ஆசிரியருக்கான விதி: இன்று நீங்கள் வளர்வதை நிறுத்தினால், நாளை நீங்கள் கற்பிப்பதை நிறுத்திவிடுவீர்கள்.

டாக்டர் ஹென்ட்ரிக்ஸ் கேட்கிறார், "நீங்கள் தேங்கிப்போன குட்டையிலிருந்து தண்ணீர் குடிக்க விரும்புகிறீர்களா அல்லது ஓடுகின்ற நீரோடையிலிருந்து குடிக்க விரும்புகிறீர்களா?" தேங்கிப்போய் ஈர்ப்பில்லாமல் போன தண்ணீரை விட, ஓடுகின்ற நீரோடையிலிருந்து கிடைக்கும் நன்னீரே சிறந்தது.

சில ஆசிரியர்கள் தங்கள் பாடத்தில் ஒரு புதிய புத்தகத்தைக் கூட வாசிக்காமல் அல்லது புதிய கருத்துக்கள் எதையும் பெற்றுக்கொள்ளாமல் பல ஆண்டுகளைக் கடத்துகிறார்கள். அவர்களது கற்பித்தல் தேங்கிப்போன பழைய குட்டையைப் போல மாறிவிடுகிறது. போதகர்கள் தேவனுடைய வார்த்தையில் புதிய வெளிச்சத்தைப் பெற தொடர்ந்து படிப்பது போலவே, ஆசிரியர்களாகிய நாமும் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► ஒரு மாணவன் உங்களிடம், "ஆசிரியரே, சமீபத்தில் வேதாகமத்திலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?" என்று கேட்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் பதில் இந்த வாரத்திலிருந்து இருக்குமா, இந்த மாதத்திலிருந்து இருக்குமா, இந்த வருடத்திலிருந்து இருக்குமா அல்லது நீண்ட காலத்திற்கு முன்பிருந்ததாக இருக்குமா? தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவில் நீங்கள் தினமும் வளர்கிறீர்களா?

---

[26] இந்த பகுதியிலுள்ள கருத்துக்கள் Howard Hendricks எழுதிய *Teaching to Change Lives* (Colorado Springs: Multnomah Books, 1987) என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

கல்விக்கான விதி

கல்விக்கான விதி: மக்கள் கற்கும் விதமே நீங்கள் எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது.

இயேசு மேய்ப்பர்களுக்கு ஆடுகளைப் பற்றிய கதைகளைச் சொல்லி கற்பித்தார்; மீனவர்களிடம் "மனுஷரைப் பிடிப்பது" பற்றிப் பேசினார்; கிணற்றடியில் இருந்த பெண்ணிடம் தண்ணீரைக் குறித்துப் பேசினார். ஒரு சிறந்த ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் தேவைக்கும் ஏற்ப தன்னை மாற்றிக்கொள்வார் என்பதை இயேசு அறிந்திருந்தார்.

டாக்டர் ஹென்ட்ரிக்ஸ் கற்பித்தலை ஒரு கால்பந்துப் பயிற்சியாளரின் பணியோடு ஒப்பிடுகிறார். பயிற்சியாளர் விளையாடுவதில்லை; அவர்தான் வீரர்களை உற்சாகப்படுத்தி வழிநடத்துகிறார். அதேபோல், சிறந்த ஆசிரியர் விரிவுரைகள் மூலம் மட்டுமே எல்லா வேலைகளையும் செய்வதில்லை. ஒரு சிறந்த ஆசிரியர், ஒவ்வொரு மாணவரும் தங்களுக்கு ஏற்ற முறையில் கற்றுக்கொள்ள அவர்களைத் தூண்டுகிறார்.

> "கற்பித்தலின் உண்மையான பரீட்சை, நீங்கள் என்ன செய்கிறீர்கள் அல்லது எவ்வளவு நன்றாகச் செய்கிறீர்கள் என்பதல்ல; மாறாகக் கற்பவர் என்ன செய்கிறார், எவ்வளவு நன்றாகச் செய்கிறார் என்பதேயாகும்."
>
> - டாக்டர் ஹோவர்ட் ஹென்ட்ரிக்ஸ்

பிரகாஷ் வேதாகம வகுப்பில் ஒரு மாணவனாக இருந்தான். பரீட்சைக்குத் தயாராகும் வகையில் எல்லா மாணவர்களும் கவனமாகக் குறிப்புகளை எடுக்க வேண்டும் என்று ஆசிரியர் எதிர்பார்த்தார். குறிப்புகளை எடுக்க பிரகாஷ் விரும்பவில்லை. மாறாக, ஆசிரியர் பாடம் நடத்தும்போது, அவன் தன் நோட்டுப்புத்தகத்தில் படங்கள் வரைந்து கொண்டிருப்பான். பிரகாஷ் தான் சொல்வதைக் கவனிக்கவில்லை என்று ஆசிரியர் பயந்தார். பலமுறை அவர், "பிரகாஷ், தயவுசெய்து படம் வரையாதே. நான் கற்பிப்பதை எழுது" என்றார். பிரகாஷ் ஆசிரியர் கேட்டதைச் செய்ய முயன்றான், ஆனால் அவன் மிகவும் விரக்தியடைந்தான்.

அப்போது அந்த ஆசிரியர் டாக்டர் ஹென்ட்ரிக்ஸின் 'கல்விக்கான விதியை' நினைவுகூர்ந்தார். அவர், "பிரகாஷ், நாம் ஒரு பரிசோதனை செய்வோம். வகுப்பில் நான் சொல்வதை உன்னால் நினைவில் வைத்துக்கொள்ள முடியும் என்று எனக்குக் காட்டினால், நீ படங்கள் வரையலாம்" என்றார். அந்தப் பரிசோதனை வெற்றியடைந்தது. வார்த்தைகளைப் படங்களாக மாற்றுவதன் மூலம் பிரகாஷ் கற்றுக்கொண்டான். "மக்கள் கற்கும் விதமே நீங்கள் எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது" என்பதால், அந்த ஆசிரியர் தனது எதிர்பார்ப்புகளை மாற்றிக்கொள்ளக் கற்றுக்கொண்டார்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► உங்கள் வகுப்பில் உள்ள மற்றவர்களிடமிருந்து வித்தியாசமாகக் கற்கும் மாணவர் யாராவது இருக்கிறார்களா? அந்த மாணவர் இன்னும் திறம்படக் கற்றுக்கொள்ள உதவ நீங்கள் என்ன செய்யலாம்?

செயல்பாட்டுக்கான விதி

செயல்பாட்டுக்கான விதி: அதிகபட்ச ஈடுபாடு அதிகபட்ச கற்றலைக் கொண்டுவரும்.

> "நான் கேட்கிறேன்... நான் மறந்துவிடுகிறேன். நான் பார்க்கிறேன்... நான் நினைவில் கொள்கிறேன். நான் செய்கிறேன்... நான் புரிந்து கொள்கிறேன்."
>
> - சீனப் பழமொழி

தான் கற்பித்த பாடங்களைத் தன் மாணவர்கள் பயிற்சி செய்ய வேண்டும் என்பதை இயேசு அறிந்திருந்தார். அவர் அவர்களை ஊழியப் பயணங்களுக்கு அனுப்பினார்; கூட்டத்தினருக்கு அப்பங்களையும் மீன்களையும் விநியோகிக்க வைத்தார்; ஜெபம் பண்ணுவதற்காக அவர்களை வனாந்திரத்திற்கு அழைத்துச் சென்றார்; அவர்கள் கற்றதைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புகளை வழங்கினார். அதன் விளைவு என்ன? அந்த அப்போஸ்தலர்கள் உலகத்தைக் கலக்குகிறவர்கள் என்று அறியப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 17:6).

உளவியலாளர்கள் கூறுவது என்னவென்றால்

- நாம் கேட்பதில் 10%-க்கும் குறைவாகவே நினைவில் கொள்கிறோம்.
- நாம் பார்ப்பது மற்றும் கேட்பதில் 50%-க்கும் குறைவாகவே நினைவில் கொள்கிறோம், ஆனால்
- நாம் பார்ப்பது, கேட்பது மற்றும் செய்வதில் 90% வரை நினைவில் கொள்கிறோம்.

செயலில் ஈடுபடுவது கற்றலை வெகுவாக அதிகரிக்கிறது.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► உங்கள் அடுத்த பாடத்திற்குத் தயாராகும் போது, நீங்கள் கற்பிக்கும் கொள்கையை மாணவர்கள் பயிற்சி செய்ய அனுமதிக்கும் ஒரு செயல்பாட்டைத் தயார் செய்யுங்கள்.

தொடர்புகொள்ளுதல் விதி

தொடர்புகொள்ளுதல் விதி: உண்மையாகக் கற்பிக்க, நாம் கற்பவருடன் பாலங்களை அமைக்க வேண்டும்.

ஆசிரியர்களாகவும் போதகர்களாகவும், நாம் தொடர்புகொள்ளும் பணியில் இருக்கிறோம். நம் வேலை தகவல்களைக் கொடுப்பதை விடப் பெரியது; கேட்பவர்களுக்குச் சத்தியத்தைத் தெரியப்படுத்துவதே நம் வேலை. தொடர்புகொள்ளுதலுக்குப் பொதுவான ஒரு தளத்தைக் கண்டுபிடிப்பது அவசியம். கற்பவர்களுடன் பாலம் அமைப்பது அவசியம்.

கற்பவர்களுடன் பாலம் அமைப்பதற்கு இயேசு ஒரு மாதிரியை வழங்கினார். இயேசுவுக்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையில் இன, மத மற்றும் சமூகத் தடைகள் இருந்தன. இயேசு யூதர்; அவள் ஒரு சமாரியப் பெண். இயேசு ஒரு ஆண்; அவள் ஒரு பெண். இயேசு மதிக்கப்படும் ஒரு போதகர்; அவள் ஒழுக்கக்கேடான கடந்த காலத்தைக் கொண்டவள். இந்தக் தடைகளைக் கடந்து இயேசு எப்படிப் பாலத்தைக் கட்டினார்? அவர் ஒரு பொதுவான தளத்தைக் கண்டார்; இருவருமே தாகமாய் இருந்தார்கள். ஒரு சரீரத் தேவை, வாழ்க்கையை மாற்றும் ஒரு சந்திப்புக்குப் பாலமாக அமைந்தது (யோவான் 4:1-42).

தொடர்புகொள்ளுதல் என்பது மூன்று நிலைகளை உள்ளடக்க வேண்டும் என்று டாக்டர் ஹென்ட்ரிக்ஸ் எழுதினார்:

1. **அறிவு** - நான் அறிந்த ஒன்று. இது தொடர்புகொள்ளுதலின் மிக எளிமையான நிலை.
2. **வாஞ்சை** - நான் உணரும் ஒன்று. இது தொடர்புகொள்ளுதலின் ஆழமான நிலை.
3. **செயல்** - நான் செய்யும் ஒன்று. இந்த நிலை தொடர்புகொள்ளுதல் நம் மாணவர்களை மாற்றுகிறது.

ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு செமினரி நிர்வாகி, ஒரு பணக்கார நன்கொடையாளரிடம் தன் தரிசனத்தைப் பகிர்ந்துகொண்டதை கார்த்திக் கவனித்தான். கார்த்திக் கற்பனை செய்ததை விட அதிகமான பணத்தை அவர் அந்த நன்கொடையாளரிடம் கேட்டார்! கார்த்திக் ஆச்சரியப்படும் வகையில், அந்த நன்கொடையாளர் தாராளமாகக் கொடுத்தார். ஏன்? அந்த நிர்வாகி மூன்று நிலைகளில் தொடர்புகொண்டார்:

1. **அறிவு** - ஆப்பிரிக்காவில் செமினரி பயிற்சியின் தேவையை அவர் அறிந்திருந்தார்.
2. **வாஞ்சை** - ஆப்பிரிக்காவில் சபை தலைவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் அவர் மிகுந்த வாஞ்சையுள்ளவராயிருந்தார்.
3. **செயல்** - அவர் தன் வாழ்நாளை ஆப்பிரிக்காவில் செலவிட்டு, சபை தலைவர்களுக்குப் பயிற்சியளிக்கப் பல தியாகங்களைச் செய்துள்ளார். தான் ஆப்பிரிக்காவில் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை அந்த நிர்வாகி தொடர்புகொண்டார்.

திறம்படக் கற்பிக்க, நம் பாடத்தின் மேல் நமக்கு வாஞ்சை இருக்க வேண்டும். பல ஞாயிறு பள்ளி வகுப்பறைகளில் நடக்கும் இந்த உரையாடலைக் கற்பனை செய்து பாருங்கள்:

ஆசிரியர்: “இன்று நாம் யோவான் 6-ல் 5000 பேருக்கு உணவளித்ததைப் படிப்போம்.”

மாணவர்: “எனக்கொரு கேள்வி. வேதாகமம் ஆண்களை மட்டும் எண்ணியதாகச் சொல்கிறது. ஏன்?”

ஆசிரியர்: “எனக்குத் தெரியாது. அது முக்கியமல்ல. பாடத்தில் கவனம் செலுத்து.”

திடீரென்று, வேதாகமத்தில் உள்ள ஒரு சுவாரஸ்யமான கதை போரடிக்கிறது. இயேசு எப்படி சில அப்பங்களையும் மீன்களையும் வைத்து 20,000 பேருக்கு உணவளித்தார் என்பதை அறிய பிள்ளைகள் விரும்புவார்கள். அதை நாம் எப்படி சலிப்படையச் செய்ய முடியும்? இந்த ஆசிரியர் அறிவைத் தொடர்புகொள்ளவில்லை; யூத எழுத்தாளர்கள் ஏன் ஆண்களை மட்டும் எண்ணினார்கள் என்பதைப் புரிந்துகொள்ள அவர் பின்னணியைப் படிக்கவில்லை. இந்தக் கதையின் மேல் ஆசிரியருக்கு எந்த ஈர்ப்பும் இல்லை. இந்தப் பாடம் ஆசிரியரின் வாழ்க்கையை மாற்றியமைக்கவில்லை என்றால், அது மாணவர்களின் வாழ்க்கையை மாற்றுவதற்குச் சாத்தியக்கூறுகள் குறைவு.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► நீங்கள் ஒரு பாடத்தைத் தயார் செய்யும்போது, உங்கள் உலகத்திற்கும் உங்கள் மாணவர்களின் உலகத்திற்கும் இடையிலான தூரத்தைப் பற்றிச் சிந்தியுங்கள். உங்கள் மாணவர்களிடம் பாலம் அமைக்க நேரம் ஒதுக்குங்கள். மாணவர்களின் ஆர்வங்களோடு பாடத்தை இணைக்க ஒரு வழியைக் கண்டறியுங்கள்.

இருதயத்தின் விதி

இருதயத்தின் விதி: சிறந்த கற்பித்தல் என்பது அறிவோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல; அது இதயத்தோடு சம்பந்தப்பட்டது.

இயேசு மலைப்பிரசங்கத்தை முடித்தபோது, “அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்” (மத்தேயு 7:28-29). இயேசுவின் போதனை அவருடைய இதயத்திலிருந்து வந்தது, அது கேட்பவர்களின் இதயத்தைத் தொட்டது.

சுவிசேஷ புத்தகங்கள் மீண்டும் மீண்டும் இயேசுவின் மனதுருக்கத்தை விளக்குகின்றன. மக்கள் அவரது மனதுருக்கத்தால் தொடப்பட்டனர். அவரது இதயம் அவர்களின் இதயங்களைத் தொட்டது. சிறந்த கற்பித்தலின் கூறுகளை ஹோவர்ட் ஹென்ட்ரிக்ஸ் காட்டுகிறார்.

ஆசிரியரின் நற்பண்பு மாணவரிடம் நம்பிக்கையை உண்டாக்குகிறது.

மாணவன் ஆசிரியரின் நற்பண்பை நம்பினால், தனக்குக் கற்பிக்கப்படும் விஷயத்தின் மேல் அவனுக்கு நம்பிக்கை வரும். போதகர்களாகவும் ஆசிரியர்களாகவும், நாம் அந்த நம்பிக்கையை ஒருபோதும் சிதைக்கக்கூடாது. நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவது மிகவும் கடினமான விஷயம். ஞானமுள்ள கிறிஸ்தவத் தலைவர்கள் ஒழுக்க ரீதியான

அல்லது நன்னெறி ரீதியான வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் எதையும் விட்டு விலகி ஓடுவார்கள். உங்கள் நற்பண்பு உங்கள் மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்க வேண்டும்.

ஆசிரியரின் மனதுருக்கம் மாணவரிடம் ஊக்கத்தை உண்டாக்குகிறது.

ஆசிரியரின் மனதுருக்கத்தை மாணவன் உணரும்போது, அவன் கற்றுக்கொள்ள ஊக்கமடைகிறான். இயேசு தங்களை நேசித்தார் என்பதை அறிந்ததால் சீஷர்கள் அவரைப் பின்பற்றினர். உங்கள் மாணவர்களை நீங்கள் நேசிக்காவிட்டால், உங்களிடமிருந்து கற்றுக்கொள்ள அவர்களுக்கு ஆர்வம் இருக்காது.

சிறுபிள்ளைகளின் ஆசிரியர்களிடம் பேசும்போது டாக்டர் ஹென்ட்ரிக்ஸ், "கவிதா புதிய காலணி அணிந்திருந்தால், நீங்கள் அவளுடைய புதிய காலணியைக் கவனிக்க வேண்டும், இல்லையென்றால் அவள் உங்கள் புதிய பாடத்தை ஒருபோதும் கேட்கமாட்டாள்!" என்று கூறினார். (உங்கள் அன்பின் காரணமாக) நீங்கள் மாணவர் மீது ஆர்வம் காட்டிய பிறகு, நீங்கள் கற்பிக்கும் பாடத்தைக் கற்க அவர்கள் தயாராக இருப்பார்கள்.

ஆசிரியரின் உள்ளடக்கம் மாணவரிடம் புரிதலை உண்டாக்குகிறது.

மாணவன் கற்றுக்கொள்ள ஊக்கமடைந்த பிறகுதான் நீங்கள் உள்ளடக்கத்தைக் கற்பிக்கத் தயாராகிறீர்கள். நீங்கள் அவர்களின் நம்பிக்கையைப் பெற்ற பிறகு, உங்கள் இதயத்திலிருந்து உங்கள் மாணவரின் இதயத்திற்குப் பேசலாம்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► நீங்கள் உங்கள் மாணவர்களை நேசிக்கிறீர்களா? அதைவிட முக்கியமாக, நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள் என்பது அவர்களுக்குத் **தெரியுமா**? தேவன் உங்களிடம் அனுப்பும் மாணவர்களிடம் உங்கள் இதயத்தை இன்னும் சிறப்பாக எப்படி வெளிப்படுத்த முடியும்?

ஊக்கப்படுத்துதலின் விதி

ஊக்கப்படுத்துதலின் விதி: மாணவன் சரியாக ஊக்கப்படுத்தப்படும்போதே கற்பித்தல் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

ஊக்கப்படுத்துதல் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே, பல ஆசிரியர்கள் மிட்டாய்கள், சான்றிதழ்கள், மதிப்பெண்கள் அல்லது மாணவர்களை உற்சாகப்படுத்தும் பிற வழிகளைப் பற்றி நினைக்கிறார்கள். இந்தப் வெகுமதிகள் தவறானவை அல்ல, அவை இளைஞர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த உதவும், ஆனால் இந்த வெகுமதிகள் உண்மையான இலக்கோடு தொடர்பில்லாதவை. ஒரு வெகுமதிக்காக வேலை செய்யும் ஒரு மாணவன், தான் கற்கும் சத்தியத்தால் மாற்றமடைவது குறைவு. மாணவனின் அகத் தூண்டுதல்களோடு ஆசிரியர் பேசுவது சிறந்தது.

டாக்டர் ஹென்ட்ரிக்ஸ் சில அகத் தூண்டுதல்களைப் பட்டியலிடுகிறார்:

- **உரிமை உணர்வு**: "இது என் சபை. இது வளருவதற்கு உதவ, நான் பார்வையாளர்களை அழைப்பேன்."

- **தேவை**: "சோதனையை வெல்ல எனக்குத் தேவனுடைய வார்த்தை தேவை, எனவே நான் வேதவசனங்களை மனப்பாடம் செய்வேன்."

- **அங்கீகாரம்**: "நான் என் ஆசிரியரை நேசிக்கிறேன், அவரைப் பிரியப்படுத்த விரும்புகிறேன், எனவே நான் பாடத்தைப் படிப்பேன்."

மிட்டாய்கள் அல்லது மதிப்பெண்களை விட இந்தத் தூண்டுதல்கள் நீண்ட காலம் நீடிக்கும். இந்த ஊக்கப்படுத்தும் கருவிகளை நாம் பயன்படுத்தும்போது, நீண்டகாலக் கற்றலுக்கு நம் மாணவர்களை உற்சாகப்படுத்துகிறோம்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► உங்கள் மாணவர்களுக்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஊக்கிகளின் (Motivators) பட்டியலைத் தயார் செய்யுங்கள். கற்றலின் நன்மைகளைக் கூறி அவர்களை எப்படி நீங்கள் ஊக்கப்படுத்தலாம்?

ஆயத்தத்தின் விதி

ஆயத்தத்தின் விதி: மாணவரும் ஆசிரியரும் போதுமான அளவு ஆயத்தமாய் இருக்கும்போதே கற்பித்தல் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

உங்கள் சபையில் நடக்கும் ஒரு சாதாரண ஞாயிறு பள்ளி வகுப்பு போல இருக்கிறதா?

> ஆசிரியர்: "இன்று, நாம் எபேசியர் 5-ஐப் படிப்போம். தயவுசெய்து உங்கள் வேதாகமத்தைத் திறக்கவும்."
>
> மாணவர்கள் நினைப்பது: "நாம் ஏன் எபேசியர் 5-ஐப் படிக்க வேண்டும்?"

ஆசிரியர் எபேசியர் 5-ஐக் கற்பிக்க ஒரு மணிநேரம் செலவிடுகிறார். அவர் ஒரு நல்ல ஆசிரியை. அந்த ஒரு மணிநேர முடிவில், பவுலின் செய்தியால் மாணவர்கள் ஈர்க்கப்படுகிறார்கள். பாடம் முடிகிறது, மாணவர்கள் வீட்டிற்குச் செல்கிறார்கள். ஒரு வாரம் கழித்து, நாம் இதைக் கேட்கலாம்:

> ஆசிரியர்: "இன்று, நாம் எபேசியர் 6-ஐப் படிப்போம். தயவுசெய்து உங்கள் வேதாகமத்தைத் திறக்கவும்."
>
> மாணவர்கள் நினைப்பது: "நாம் ஏன் எபேசியர் 6-ஐப் படிக்க வேண்டும்?"

வகுப்புக்கு வருவதற்கு முன்பே மாணவர்கள் எபேசியர் 6-ஐப் படித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! மாணவர்கள் கேள்விகளின் பட்டியலோடு வகுப்பிற்கு வந்தால் பாடம் இன்னும் அதிகமாகச் சாதிக்குமா? நிச்சயமாக! இதை நீங்கள் எப்படிச் சாதிக்க முடியும்? அடுத்த வாரப் பாடத்திற்கு மாணவர்களைத் தயார்படுத்தும் வீட்டுப்பாடங்களை வழங்குமாறு பேராசிரியர் ஹென்ட்ரிக்ஸ் பரிந்துரைக்கிறார். உதாரணமாக:

- அடுத்த வாரம் படிக்கப்போகும் பாடத்தைப் பற்றி மாணவனைச் சிந்திக்க வைக்கும் வீட்டுப்பாடங்களைக் கொடுங்கள். "அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கு முன், எபேசுவில் பவுல் எப்படி சபையைத் தொடங்கினார் என்பதை அறிய அப்போஸ்தலர் 19-ஐ வாசியுங்கள்."

- பாடத்திற்கு ஒரு பின்னணியை வழங்கும் வீட்டுப்பாடங்களைக் கொடுங்கள். "அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கு முன், எபேசுவில் உள்ள அர்த்தெமிஸ் கோவிலைப் பற்றி ஒரு வேதாகம அகராதியில் படியுங்கள். எபேசியர் 6:10-20-ல் ஆவிக்குரிய யுத்தத்திற்குப் பவுல் கொடுக்கும் முக்கியத்துவத்தை விளக்க இது உதவும்."

- மாணவனின் சுயாதீனமாகப் படிக்கும் திறனை வளர்க்கும் வீட்டுப்பாடங்களைக் கொடுங்கள். "இந்த வாரம் ஒவ்வொரு நாளும் எபேசியர் 6-ஐ ஒருமுறை வாசியுங்கள். நீங்கள் வாசிக்கும்போது, இந்த அதிகாரத்தைப் பற்றி உங்களுக்கு எழும் ஒரு கேள்வியை எழுதுங்கள். அடுத்த ஞாயிற்றுக்கிழமை, உங்கள் கேள்விகளைப் பற்றி விவாதிப்போம்."

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► நீங்கள் கற்பிக்கும் அடுத்த வகுப்பில், அடுத்த பாடத்திற்குத் தயாராகும்படி மாணவர்களுக்கு ஒரு வீட்டுப்பாடத்தை கொடுங்கள். அந்த வீட்டுப்பாடம், அவர்கள் படிக்கப்போகும் பாடத்தைச் சிறப்பாகப் புரிந்துகொள்ள அவர்களைத் தயார்படுத்துவதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

முடிவுரை: ஆசிரியருடைய நற்பண்பின் முக்கியத்துவம்

"தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்" என்பதை இயேசு அறிந்திருந்தார் (லூக்கா 6:40). அவருடைய சீஷர்கள் இந்தக் கொள்கையை நிரூபிக்கிறார்கள். பரிபூரண அன்பின் மாதிரியால் பயிற்றுவிக்கப்பட்டதால், "இடிமுழக்க மக்களில்" ஒருவரான யோவான், "அன்பின் அப்போஸ்தலனாக" மாறினார். விசுவாசத்தின் மாதிரியால் பயிற்றுவிக்கப்பட்டதால், "சந்தேகத் தோமா," "இந்தியாவுக்கான அப்போஸ்தலனாக" மாறினார். அவர்கள் முழுமையாகத் தேறினபோது, சீஷர்கள் தங்கள் போதகரைப் போலவே இருந்தார்கள்.

உங்கள் மாணவர்கள் என்னவாக மாற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதுவாக நீங்கள் இருப்பதே ஒரு ஆசிரியருக்கான முதல் படியாகும். இயேசு உறுதியின் மாதிரியாக இல்லாதிருந்தால், அவரால் உறுதியற்ற பேதுருவை "கன்மலையாக" மாற்றியிருக்க முடியாது. நம் மாணவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அப்படியே நாமும் இருக்க வேண்டும்.

பவுல் இந்தக் கொள்கையைப் புரிந்துகொண்டார். அவர் கொரிந்தியர்களிடம், "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (1 கொரிந்தியர் 11:1) என்று கூறினார். எப்பேர்ப்பட்ட ஒரு தைரியமான அறிக்கை! "நீங்கள் சரியான வாழ்க்கையை வாழ விரும்பினால், என்னைப் போலச் செய்யுங்கள்" என்று பவுல் மறைமுகமாகக் கூறுகிறார். பவுல் கிறிஸ்துவைப் பின்பற்றியதால், கொரிந்தியர்கள் பவுலைப் பின்பற்றுவது பாதுகாப்பானதாக இருந்தது.

என் மாணவர்கள் என்னைப் போல மாறப்போகிறார்கள் என்றால், "என் மாணவர்கள் பின்பற்றுவதற்கு நான் வெட்கப்படக்கூடிய பண்புநலன்கள் என்னிடம் உள்ளனவா?" என்று நான் கேட்டுக்கொள்ள வேண்டும். மாணவர்களிடம் நான் கோபத்தோடும் பொறுமையின்மையோடும் நடந்துகொண்டால், என் மாணவர்கள் "முழுமையாகத் தேறினபின்" மற்றவர்களிடம் கோபத்தையும் பொறுமையின்மையையும் காட்டினால் நான் ஆச்சரியப்படக்கூடாது.

ஆசிரியருக்கு நற்பண்பு மிக முக்கியமானது. உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் முன்மாதிரியாகக் காட்டாத நற்பண்புகளை உங்கள் மாணவர்களிடம் வளர்க்க முடியாது. ஒரு ஆசிரியர் தனது சிறந்த கல்வியைக் காட்டுவதை விட, தேவபக்திக்குரிய நற்பண்பைக் காட்டுவது மிக முக்கியம். நம் மாணவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அப்படியே நாமும் இருக்க வேண்டும்.

பாடத்தை நடைமுறைப்படுத்துங்கள்

► இயேசுவைப் போலக் கற்பிப்பதைப் பற்றிய இந்தப் பாடத்தை நாம் முடிக்கும்போது, உங்கள் மாணவர்கள் பின்பற்றக் கூடாது என்று நீங்கள் நினைக்கும் பண்புநலன்கள் உங்களிடம் உள்ளனவா என்பதை உங்களுக்குக் காண்பிக்கும்படி தேவனிடம் கேளுங்கள். தேவையான மாற்றங்களைச் செய்ய தேவனிடம் கிருபை கேளுங்கள்; அப்போது உங்கள் மாணவர்கள் முழுமையாகத் தேறினபின், அவர்களின் வாழ்க்கையில் தேவனுடைய பண்புநலன்கள் பிரதிபலிப்பதை நீங்கள் காண்பீர்கள்.

பாடம் 4 வீட்டுப்பாடம்

இந்தப் பாடத்திற்கான வீட்டுப்பாடங்கள் பாடம் முழுவதும் செய்யப்பட்டன. பாடத்தின் போது பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு செயல்பாடுகளையும் நீங்கள் முடித்திருந்தால், பாடம் 4-க்குக் கூடுதல் வீட்டுப்பாடங்கள் எதுவும் இல்லை.

பாடம் 5
இயேசுவைப் போல பிரசங்கித்தல்

பாடத்தின் நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:

(1) இயேசுவை ஒரு சிறந்த பிரசங்கியாராக்கிய பண்புகளை அறிந்துகொள்ளுதல்.

(2) சிறந்த பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியானவரின் பங்கை உணர்ந்துகொள்ளுதல்.

(3) மேய்ப்பராகவும் போதகராகவும் உண்மையாயிருக்க அர்ப்பணித்தல்.

(4) இயேசுவின் பிரசங்க மாதிரியைப் பின்பற்றி ஒரு பிரசங்கத்தைத் தயார் செய்தல்.

ஊழியத்திற்கான கோட்பாடு

சிறந்த பிரசங்கம் என்பது மனித முயற்சியின் விளைவு மட்டுமல்ல; சிறந்த பிரசங்கம் பரிசுத்த ஆவியானவரால் வல்லமையூட்டப்படுவதாகும்.

முன்னுரை

இயேசுவின் பிரசங்கத்திற்கு ஜனங்கள் அளித்த பதிலைக் கேளுங்கள்.

- “இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது...ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்” (மத்தேயு 7:28-29).

- “ஜனங்களெல்லாரும் அவருடைய உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டபடியினாலே” (மாற்கு 11:18).

- “அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்” (மாற்கு 12:37).

இயேசுவின் பிரசங்கம் வல்லமை வாய்ந்ததாக இருந்தது. அவர் பிரசங்கிப்பதைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் கூடிவந்தார்கள். நிச்சயமாக அவருடைய பிரசங்கப் பாணி இன்று நமக்கு ஒரு மாதிரியாக இருக்க வேண்டும். பூமியில், இயேசு ஒரு மனிதராக ஊழியம் செய்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். “இயேசு தேவனாய் இருந்தபடியால் அவர் ஒரு வல்லமையான பிரசங்கியாராக இருந்தார்” என்று நினைக்காதீர்கள். மாறாக, “இயேசு ஒரு மனிதராக, வல்லமையோடும் அதிகாரத்தோடும் பேசும் வகையில் பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கம் கேட்பவர்களைச் சத்தியத்தை நோக்கி ஈர்த்தது. நற்செய்தியின்

சிறந்த பிரசங்கியாராக மாற, நான் இயேசுவிடமிருந்து என்ன கற்றுக்கொள்ள முடியும்?" என்று சிந்தியுங்கள்.

► நீங்கள் கி.பி. 30-ல் வாழ்ந்து, இயேசு பிரசங்கிப்பதைக் கேட்டதாகக் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் எதைப் பார்க்கவும் கேட்கவும் எதிர்பார்த்திருப்பீர்கள்?

இயேசு அதிகாரத்தோடு பிரசங்கித்தார்

► 2 கொரிந்தியர் 4:1-6-ஐ வாசிக்கவும்.

கப்பர்நகூமில் இயேசு பிரசங்கித்தபோது, ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள், ஏனெனில் அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தது (லூக்கா 4:32). மலைப்பிரசங்கத்திற்குப் பிறகு, "அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" (மத்தேயு 7:28-29). வேதபாரகர்கள் தங்கள் கொள்கைகளை ஆதரிக்க மற்ற ரபிமார்களின் (Rabbis) மேற்கோள்களைக் காட்டினார்கள், ஆனால் இயேசு அதிகாரத்தோடு பிரசங்கித்தார்.

போதகர்களாகிய நாம் அதிகாரத்தோடு பிரசங்கிக்க வேண்டும். நம் அதிகாரம் இயேசுவின் அதிகாரத்திலிருந்து வேறுபட்டது. அவருடைய அதிகாரம் அவரில் இயல்பாகவே இருந்தது; நமது அதிகாரம் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது; நாம் பிரசங்கிக்கும் செய்தியிலிருந்து நமது அதிகாரம் பெறப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக நாம் அதிகாரத்தோடு பிரசங்கிக்கிறோம்

இயேசு, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னார். அடுத்த வசனத்தில், அவர் தம்மைப் பின்பற்றுவோருக்குக் கட்டளையிட்டார்: "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி... இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:18-20). இயேசுவின் பிரதிநிதிகளாக நாம் நியமிக்கப்பட்டுள்ளதால் நமக்கு அதிகாரம் உள்ளது.

1783-ல், அமெரிக்கப் புரட்சிப் போரை முடிவுக்குக் கொண்டுவர பாரிஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட அமெரிக்காவின் பிரதிநிதிகளும், மன்னர் மூன்றாம் ஜார்ஜின் பிரதிநிதிகளும் சந்தித்தார்கள். மன்னர் மூன்றாம் ஜார்ஜ் உடன்படிக்கையில் கையெழுத்திட பாரிஸ் செல்லவில்லை. ஜார்ஜ் வாஷிங்டனும் உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை. ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகளுக்கும் தங்கள் ஆட்சியாளரின் பெயரால் உடன்படிக்கையில் கையெழுத்திட அதிகாரம் இருந்தது.

அதேபோல், நாம் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகப் பிரசங்கிக்கிறோம். பவுல் எழுதினார்: "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக்

கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:5). பவுலின் அதிகாரம் அவருடைய சொந்த அதிகாரம் அல்ல. அவர் ஒரு ஊழியக்காரர், ஆனால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதியாக இருந்தார்.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள செய்தியின் காரணமாக நாம் அதிகாரத்தோடு பிரசங்கிக்கிறோம்

நமது அதிகாரம் நாம் பிரசங்கிக்கும் வேதவசனத்தை அடிப்படையாகக் கொண்டது. பவுல் எழுதினார்: "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்" (2 கொரிந்தியர் 4:2). பவுல் நேர்மையற்ற எதையும் செய்யவோ அல்லது தேவனுடைய வார்த்தையின் செய்தியைப் பலவீனப்படுத்தும் எதையும் செய்யவோ மறுத்துவிட்டார்.

சில போதகர்கள் வேதாகமத்தை நம்பக்கூடாது என்று கற்பிக்கும் பல்கலைக்கழகங்களில் படித்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது அதிகாரத்தோடு பிரசங்கிப்பதில்லை. மாறாக, அவர்கள் சந்தேகத்தால் நிறைந்திருக்கிறார்கள். ஏன்? அவர்கள் வேதாகமத்தின் அதிகாரத்தைச் சந்தேகிக்கிறார்கள்; அவர்கள் மனித ஞானத்தை மட்டுமே நம்பியிருக்கிறார்கள். தேவனுடைய ஊழியர்களாக, நமது அதிகாரம் தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தையின் செய்தியை நீங்கள் நம்பாவிட்டால், அதைப் பிரசங்கிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. தேவனுடைய வார்த்தையின் செய்தியை நாம் நம்பும்போது மட்டுமே நம்மால் அதிகாரத்தோடு பிரசங்கிக்க முடியும்.

நமது அதிகாரம் இயேசுவிடமிருந்தும் நாம் பிரசங்கிக்கும் செய்தியிலிருந்தும் பெறப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வது, போதகர்களுக்கான இரண்டு ஆபத்துகளைத் தவிர்க்க நமக்கு உதவுகிறது.

(1) முதல் ஆபத்து ஆணவம். "நான்தான் போதகர். நான்தான் முதலாளி! யாரும் என்னைக் கேள்வி கேட்க முடியாது" என்று சொல்வது.

இந்த ஆணவம் மக்களை நற்செய்தியிலிருந்து விரட்டுகிறது. பவுல், "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும்... பிரசங்கிக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:5) என்றார். நமது அதிகாரம் இயேசுவிடமிருந்தும் தேவனுடைய வார்த்தையிலிருந்தும் பெறப்படுகிறது.

நாம் தவறு செய்யும்போது அதை ஒப்புக்கொள்ளும் மனத்தாழ்மை நமக்கு இருக்க வேண்டும். ஒரு போதகர் ஒருமுறை கூறினார், "நான் தவறு செய்தால் அதை ஒருபோதும்

சபையிடம் சொல்ல மாட்டேன். அவர்கள் என் அதிகாரத்தின் மீதான நம்பிக்கையை இழந்துவிடுவார்கள்." இந்த போதகர், நமது அதிகாரம் நமது சொந்தத் தவறாமைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டதல்ல; அது தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டது என்பதை மறந்துவிட்டார். தேவனுடைய வார்த்தையே இறுதியான அதிகாரம் என்பதை நாம் நம் சபைக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். என் வார்த்தைகள் முக்கியமானவை அல்ல; தேவனுடைய வார்த்தையே மிக முக்கியமானது.

(2) இரண்டாவது ஆபத்து போலியான மனத்தாழ்மை. "நான் வெறும் ஒரு போதகர். எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. உளவியலைப் பற்றித் தொழில்முறை ஆலோசகர்களுக்கு அதிகம் தெரியும்; பூமியின் தோற்றத்தைப் பற்றி விஞ்ஞானிகளுக்கு அதிகம் தெரியும்; மனிதனின் பாலியல் ஆசைகளைப் பற்றிச் சமூகவியலாளர்களுக்கு அதிகம் தெரியும். நான் ஒரு நிபுணன் இல்லாததால், என்னால் உணர்வுப்பூர்வமான தேவைகள், சிருஷ்டிப்பு அல்லது ஒழுக்கத்தைப் பற்றிப் பேச முடியாது" என்று சொல்வது.

பவுல், "நாங்கள் ஊழியக்காரர்கள், ஆனால் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக எங்களுக்கு அதிகாரம் உள்ளது" என்று கூறினார். ஒரு ஊழியக்காரராக, நாம் மனத்தாழ்மையுடன் வாழ வேண்டும். ஆனால் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக, நாம் நம்பிக்கையுடன் பிரசங்கிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை நாம் சரியாகப் பிரசங்கிக்கும்போது, பிரபஞ்சத்தின் ராஜாவின் அதிகாரத்தோடு நாம் ஊழியம் செய்கிறோம்.

இயேசுவின் பிரசங்கங்கள் தேவையிலுள்ள மக்களுக்கு நற்செய்தியைக் கொண்டுவந்தன

இயேசு தம் பார்வையாளர்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு பேசினார். இயேசு கலிலேயா எங்கும் சுற்றித்திரிந்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது, திரளான கூட்டங்களைப் பார்த்து மனதுருகினார், ஏனெனில் அவர்கள் தொய்ந்துபோனவர்களும் உதவியற்றவர்களுமாய் இருந்தார்கள் (மத்தேயு 9:35-36). யூதர்கள் ரோம அடிமைத்தனத்தில் இருந்தார்கள்; ஏழைகளுக்கு வறுமையிலிருந்து வெளியேறும் நம்பிக்கை குறைவாக இருந்தது; குஷ்டரோகிகள் ஒதுக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள்; ஆயக்காரர்கள் சமுதாயத்தால் நிராகரிக்கப்பட்டார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் இயேசு நம்பிக்கையை அளித்தார்.

மக்களின் தேவைகளைப் பற்றி நீங்கள் பேசும்போது, அவர்களின் கவனத்தை ஈர்க்கிறீர்கள். நான் ஒரு பாலைவனத்தில் வசிக்கிறேன் என்றால், நீங்கள் "இன்று நான் ஜீவத் தண்ணீரைப் பற்றிப் பிரசங்கிக்கப் போகிறேன்" என்று சொன்னால், நான் கவனமாகக் கேட்பேன்! நான் வயதானவனாகவும் பலவீனனாகவும் இருந்து, "கழுகுகளைப் போல உங்களுக்குப் பலன் தரும் தேவனைப் பற்றி இன்று நான் பிரசங்கிக்கப் போகிறேன்" என்று நீங்கள் சொன்னால், நான் நிச்சயம் கேட்பேன்!

சுவிசேஷம் என்றால் "நற்செய்தி" என்பதை இயேசு எப்போதும் நினைவில் வைத்திருந்தார். நம்பிக்கை தேவைப்பட்டவர்களுக்கு நற்செய்தியைக் கொண்டுவர அவர் வந்தார். சிறந்த பிரசங்கம் நம்மைக் கேட்பவர்களுக்கு நம்பிக்கையைக் கொண்டுவர வேண்டும். இயேசுவைப் போல, நாமும் "நான் யாருக்குப் பிரசங்கிக்கிறேன்? அவர்களின் தேவைகள் என்ன?" என்று கேட்டுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் ஒரு கார் விபத்தில் சிக்கி, இரத்தம் வெளியேறி இறக்கும் அபாயத்தில் இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். மருத்துவமனையில், மருத்துவர் கார் விபத்துக்கள் பற்றிய புள்ளிவிவரங்களைக் கொண்ட ஒரு வண்ண விளக்கப்படத்தை உங்களுக்குக் காட்டுகிறார். அவர் சப்தசோதனைக்குழலின் (Stethoscope) வரலாற்று வளர்ச்சியை குறித்து விளக்குகிறார். இறுதியாக, கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் ஆபத்து குறித்து அவர் உங்களை எச்சரிக்கிறார்.

மருத்துவர் சொல்வது எல்லாம் உண்மைதான், ஆனால் அது உங்கள் தேவையைச் சந்திக்கவில்லை. உங்கள் காயங்களைக் கட்டவும், உங்கள் வலிக்கு மருந்து கொடுக்கவும் உங்களுக்கு யாராவது தேவை. பிரசங்கம் வெறும் சத்தியங்களை முன்வைப்பதை விட அதிகமாகச் செய்ய வேண்டும்; பிரசங்கம் கேட்பவர்களின் தேவைகளைப் பற்றிப் பேச வேண்டும்.

நமது வீழ்ச்சியடைந்த உலகின் கெட்ட செய்திகளைப் பார்ப்பது எளிது. சுவிசேஷம் அதையும் தாண்டிச் செயல்படுகிறது; இது உடைந்த உலகுக்கு நம்பிக்கையைக் கொண்டுவருகிறது. இயேசு எப்போதும் தம்மை கேட்பவர்களுக்கு நம்பிக்கையைக் கொண்டுவந்தார். இயேசு ஒருபோதும் சத்தியத்தில் சமரசம் செய்து கொள்ளவில்லை, நாமும் சத்தியத்தில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளக்கூடாது. ஆனால் சரியாகப் பிரசங்கிக்கப்படும் சத்தியம் நம்பிக்கையைக் கொண்டுவரும் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஒரு வயதான போதகர் சொன்னார், "மக்களுக்கு எங்கே அரிப்பு இருக்கிறதோ, அங்கேதான் நீங்கள் சொரிய வேண்டும்." நீங்கள் யாரைச் சென்றடைய முயற்சிக்கிறீர்களோ அவர்களின் தேவைகளைப் பற்றிப் பேச வேண்டும்.

இயேசுவின் பிரசங்கங்கள் பாவத்தை உணர்த்தின

இயேசு கேட்பவர்களின் தேவைகளிலிருந்து தொடங்கினார், ஆனால் அவரது நோக்கம் அவர்களின் காயங்களுக்குத் தற்காலிகமாகக் கட்டுப் போடுவதை விட ஆழமானது. இயேசுவின் பிரசங்கம் அவர்களின் மனசாட்சியைக் கண்டித்து உணர்த்தி, அவர்களின் வாழ்க்கையை மாற்றியது.

இயேசு தம்மை கேட்பவர்களின் பாவத்திற்கான நியாயத்தீர்ப்பின் செய்தியைக் கொண்டு அவர்களை எதிர்கொள்ளப் பயப்படவில்லை. விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணிடம் இயேசு, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை" என்றார், ஆனால் அவர், "நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்றும் சொன்னார் (யோவான் 8:11).

பெதஸ்தா குளத்தருகே இருந்த திமிர்வாதக்காரனைக் குறித்து இயேசுவின் ஊழியத்திலிருந்து ஒரு கதையை யோவான் சொல்லுகிறார். அவரைக் குணமாக்கிய பிறகு, இயேசு, "இதோ, நீ சொஸ்தமானாய், அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே" என்றார் (யோவான் 5:14). பாவத்தை எதிர்கொள்ள இயேசு பயப்படவில்லை.

இயேசு பிரசங்கித்தபோது, அவரைக் கேட்டவர்கள் பாவ உணர்வடைந்தார்கள். பல சமகாலப் போதகர்களைப் போலல்லாமல், இயேசு நீதிமான வாழ்க்கை வாழ்வதன் அவசியத்தைப் பிரசங்கித்தார். "என் பிதா நீங்கள் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை" என்று இயேசு எங்கும் சொல்லவில்லை. மாறாக, இயேசு சொன்னார்: "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 5:20). இயேசுவின் பிரசங்கம் அவரைக் கேட்ட அனைவருக்கும் பாவ உணர்வைக் கொண்டுவந்தது.

இயேசுவின் பிரசங்கங்கள் வாழ்க்கையை மாற்றின

அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது, ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், டாக்டர் ஃபினியாஸ் கர்லி போதகராக இருந்த ஒரு சபைக்குச் சென்றார். ஆராதனை முடிந்ததும், ஒரு நண்பர், "அந்தப் பிரசங்கத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார். லிங்கன், "அது நன்றாக வழங்கப்பட்டது மற்றும் அழகான சிந்தனைகளைத் தந்தது" என்றார்.

> "வேதாகமம் நம் அறிவைப் பெருக்குவதற்காக மட்டுமல்ல, நம் வாழ்க்கையை மாற்றுவதற்காகவும் கொடுக்கப்பட்டது."
>
> - D.L. மூடியைத் தழுவியது.

அந்த நண்பர், "அப்படியானால் அது உங்களுக்குப் பிடித்திருந்ததா?" என்று கேட்டார். திரு. லிங்கன் தயக்கத்தோடு, "இல்லை". இன்றிரவு கனம்பொருந்திய கர்லி தோல்வியடைந்துவிட்டார் என்று நான் நம்புகிறேன்" என்றார். அந்த நண்பர் ஆச்சரியத்தோடு, "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு லிங்கன், "அவர் பெரிய காரியம் எதையும் செய்யும்படி நம்மைக்கேட்கவில்லை" என்று பதிலளித்தார். ஒரு பிரசங்கம் ஒரு செயல்பாட்டிற்கு (அல்லது பதிலுக்கு) அழைக்க வேண்டும் என்று ஜனாதிபதி லிங்கன் நம்பினார். ஒரு பிரசங்கம் வாழ்க்கையை மாற்ற வேண்டும் என்று அவர் நம்பினார்.

► மத்தேயு 18-ஐ வாசிக்கவும்.

வாழ்க்கையை மாற்றுவதற்காகவே இயேசு பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கம் நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தது. மத்தேயு 18-ம் அதிகாரம் "பரலோக ராஜ்யத்தில் உறவுகள்" என்பது குறித்த இயேசுவின் பிரசங்கத்தைப் பதிவுசெய்கிறது. இயேசு இவற்றைக் குறித்துப் போதிக்கிறார்:

- தாழ்மையின் முக்கியத்துவம் (18:2-6)
- சோதனையை எதிர்கொள்ளுதல் (18:7-9)
- வழிதப்பிப்போனவர்களைக் குறித்துச் செயல்படுதல் (18:10-14)
- உங்களுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறவர்களிடம் நடந்துகொள்ளும் முறை (18:15-20)
- மன்னிப்பின் அவசியம் (18:21-35)

இவையெல்லாம் அன்றாட வாழ்வின் நடைமுறைப் பிரச்சினைகள். இயேசு தம்மை கேட்பவர்களின் உண்மையான தேவைகளைப் பற்றிப் பேசினார். அவர் வாழ்க்கையை மாற்றும் விதமாகப் பிரசங்கித்தார்.

பிறவிக்குருடரான ஒரு மனிதனுக்கு, இயேசு சுகம் அளித்தார், பின்னர் அந்த மனிதனின் வாழ்க்கையை நித்தியத்திற்கும் மாற்றக்கூடிய செய்தியைக் கொடுத்தார்.

> அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார். உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான் (யோவான் 9:35-38).

பசியாய் இருந்த மக்களுக்கு, இயேசு அப்பம் கொடுத்தார், பின்னர் அவர்களின் வாழ்க்கையை நித்தியத்திற்கும் மாற்றக்கூடிய சத்தியத்தைப் பிரசங்கித்தார். “ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்” (யோவான் 6:35).

வாழ்க்கையை மாற்றும் பிரசங்கம், தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தையும் மக்களின் தேவைகளையும் ஒன்றிணைக்கிறது. பயனுள்ள பிரசங்கம் என்பது மக்களின் தேவைகளுக்குத் தேவனுடைய சத்தியத்தைப் பேசுவதாகும்.

இயேசு பிரசங்கித்தபோது, அவர் சிந்தை, உணர்ச்சிகள், மற்றும் சித்தம் ஆகியவற்றுக்குப் பேசினார். உண்மையான மாற்றத்தில் இந்த மூன்றும் அடங்கும்.

இயேசு சிந்தையினிடத்தில் பேசினார்

மத்தேயு 18-ல் உள்ள இயேசுவின் பிரசங்கத்தை நீங்கள் வாசிக்கும்போது, உறவுகளைப் பற்றி இதுவரை கொடுக்கப்பட்டதிலேயே மிக ஞானமான போதனையை வாசிக்கிறீர்கள். மக்கள் ஒருவருக்கொருவர் தாழ்மையுடன் பழகும் ஒரு சமூகத்தைக் கற்பனை செய்து

பாருங்கள். மன்னிப்பு இயல்பாக இருக்கும் ஒரு சமூகத்தைக் கற்பனை செய்து பாருங்கள். இயேசு தம்மை கேட்பவர்களின் சிந்தைக்கு ஞானத்தைப் பேசினார்.

இயேசு உணர்ச்சிகளிடத்தில் பேசினார்

சுவிசேஷங்கள் 34 முறை இயேசுவைக் கேட்டவர்களிடம் காணப்பட்ட ஆச்சரியத்தையும் பிரமிப்பையும் பற்றிக் குறிப்பிடுகின்றன. எம்மாவு ஊருக்குச் செல்லும் வழியில் சீஷர்கள், "வழியிலே அவர் நம்முடனே பேசி, வேதவாக்கியங்களை நமக்கு விளங்கக்காட்டினபொழுது, நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?" (லூக்கா 24:32) என்று சொன்னார்கள். இயேசுவைக் கேட்டவர்கள் அவருடைய கிருபையுள்ள வார்த்தைகளில் மகிழ்ச்சியையும், தங்கள் பாவங்களுக்காகத் துக்கத்தையும், எல்லாவற்றிற்கும் மேலாக எதிர்காலத்திற்கான நம்பிக்கையையும் உணர்ந்தார்கள்.

இயேசு சித்தத்தினிடத்தில் பேசினார்

வெறுமனே கேட்பவர்கள் மட்டும் இருந்தால் போதும் என்று இயேசு திருப்தியடையவில்லை; அவர் சீஷர்களை (பின்பற்றுபவர்களை) அழைத்தார். வெளிப்புற மாற்றம் மட்டும் போதும் என்று இயேசு திருப்தியடையவில்லை; அவர் மாற்றப்பட்ட இதயங்களையும் வாழ்க்கையையும் அழைத்தார். பாவம் நிறைந்த கடந்த காலத்தைக் கொண்ட சமாரியப் பெண்ணாக இருந்தாலும் சரி, அல்லது நியாயப்பிரமாணத்தைக் கவனமாகக் கடைப்பிடித்த ஐசுவரியமுள்ள வாலிபனாக இருந்தாலும் சரி, இயேசு தம்மை கேட்பவர்களைத் தங்கள் சித்தத்தை (விருப்பத்தை) தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்படி அழைத்தார். நாம் இயேசுவைப் போலப் பிரசங்கிக்கும்போது, நம்மைக் கேட்பவர்களைப் புதிய வாழ்க்கை முறைக்கு அழைப்போம்.

ஒரு நெருக்கமான பார்வை: நீங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறீர்களா?

ஒரு போதகர் ரோமர் முதலாம் அதிகாரத்திலிருந்து ஓரினச்சேர்க்கை என்னும் பாவத்திற்கு எதிராகப் பிரசங்கித்தார். அவர் சத்தியத்தைப் பிரசங்கித்தார். ஆனால் ஏதோ ஒன்று குறைவுபட்டது... சபையில் அமர்ந்திருந்த ஒரு வாலிபன் தன்பாலின ஈர்ப்பினால் போராடிக்கொண்டிருக்கிறான். ஓரினச்சேர்க்கை பாவம் என்று அவனுக்குத் தெரியும், அவன் அதிலிருந்து விடுதலையை வேண்டி ஜெபிக்கத் தொடங்கியிருக்கிறான். தன் பாவத்தைப் பற்றிய சத்தியத்தை அவன் அறிவான்; ஆனால் சோதனைக்கு மேல் தேவன் ஜெயத்தைக் கொடுக்க முடியும் என்ற நற்செய்தியை (சுவிசேஷத்தை) அவன் கேட்க வேண்டும்.

ஒரு போதகர் விவாகரத்து குறித்து இயேசுவின் எச்சரிக்கையை மேற்கோள் காட்டினார். எளிதாக விவாகரத்து செய்ய அனுமதிக்கும் சட்டங்களைக் குறித்து அவர் வருந்தினார். அவர் சத்தியத்தைப் பிரசங்கித்தார். ஆனால் ஏதோ ஒன்று குறைவுபட்டது... அந்த வாரம்,

இரண்டு சிறு குழந்தைகளைக் கொண்ட ஒரு இளம் தம்பதியினர், தங்கள் திருமண வாழ்வைப் பிரித்துக்கொண்டிருக்கும் கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க முடியாமல் விவாகரத்து வழக்கறிஞரைச் சந்தித்திருந்தனர். விவாகரத்து பாவம் என்று அவர்களுக்குத் தெரியும்; காயப்பட்ட திருமண வாழ்வுக்கு இயேசு சுகத்தைக் கொண்டுவர முடியும் என்ற நற்செய்தியை (சுவிசேஷத்தை) அவர்கள் கேட்க வேண்டும்.

“கருக்கலைப்பு என்பது ஒரு குற்றமற்ற குழந்தையைக் கொலை செய்வது” என்று ஒரு போதகர் சத்தமிட்டார். அவர் சத்தியத்தைப் பிரசங்கித்தார். ஆனால் ஏதோ ஒன்று குறைவுபட்டது... திருமணமாகாத இளம் பெண்ணாகத் தான் ஒரு கருக்கலைப்பு மையத்திற்குச் சென்ற நாளை நினைத்து அழும் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி அவருடைய சபையில் இருந்தார். இருபது ஆண்டுகளுக்குப் பிறகும், தேவன் தன் பாவத்தை மன்னிப்பாரா என்று அவள் இன்னும் சந்தேகிக்கிறாள். கருக்கலைப்பு பாவம் என்று அவளுக்குத் தெரியும்; தேவன் அவளுடைய கடந்த காலத்திற்கு மன்னிப்பை அளிக்கிறார் என்ற நற்செய்தியை (சுவிசேஷத்தை) அவள் கேட்க வேண்டும்.

இயேசு ஒருபோதும் சத்தியத்தில் சமரசம் செய்துகொள்ளவில்லை, ஆனால் நம்பிக்கையைக் கொண்டுவர அவர் ஒருபோதும் மறக்கவில்லை. சுவிசேஷம் வாழ்க்கையை மாற்றும் என்பதை அவர் அறிந்திருந்தார். தன்பாலின ஈர்ப்பால் போராடும் வாலிபனிடம், “சோதனையை வெல்ல என் கிருபை உனக்குப் போதும்” என்று இயேசு சொல்வார். உடைந்த திருமணத்தை எதிர்கொள்ளும் தம்பதியரிடம், “அன்பே இல்லாதது போல் தோன்றும் அந்தத் துணைவியின் மீதும் அன்பு கொண்ட இதயத்தை என்னால் மீண்டும் உருவாக்க முடியும்” என்று இயேசு சொல்வார். தன் கருவிலிருந்த குழந்தைக்கு விரோதமாய்ப் பாவம் செய்த பெண்ணிடம், “மற்ற பாவங்களை நான் மன்னிப்பதைப் போலவே கருக்கலைப்புப் பாவத்தையும் நான் மன்னிப்பேன். நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே” என்று இயேசு சொல்வார்.

சுவிசேஷம் பாவத்தின் மீதான நியாயத்தீர்ப்பின் செய்தியை உள்ளடக்கியது. நாம் அதிகாரத்தோடு நியாயத்தீர்ப்பைப் பிரசங்கிக்க வேண்டும். ஆனால் இயேசுவைப் போலப் பிரசங்கிக்க, வாழ்க்கையை மாற்றும் கிருபையின் வல்லமையை நாம் மறந்துவிடக் கூடாது. உடைந்த உலகுக்குத் தேவனுடைய கிருபையின் நற்செய்தியை நாம் கொண்டுவர வேண்டும்.

சுவிசேஷம் எப்போதும் இரண்டு நற்செய்திகளை உள்ளடக்கியது. முதலாவதாக, தேவன் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பதைச் சுவிசேஷம் நமக்குச் சொல்கிறது. அது நம்பிக்கையற்ற உலகுக்கு நம்பிக்கையைக் கொண்டுவருகிறது.

பின்னர், பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் நாம் என்னவாக மாற முடியும் என்பதைச் சுவிசேஷம் நமக்குச் சொல்கிறது. சுவிசேஷம் நம்மை நாம் இருந்த இடத்திலேயே விட்டுவிடுவதில்லை; அது தேவனுடனான ஆழமான நடத்தைக்கு நம்மை அழைக்கிறது.

இயேசுவின் பிரசங்கங்கள் எளிமையாகவும் நினைவில் நிற்கக்கூடியதாகவும் இருந்தன

இயேசு சத்தியத்தைக் கொண்டு மக்களை ஒருபோதும் சலிப்படையச் செய்யவில்லை. எளிமையாகவும் நேரடியாகவும் எப்படிப் பிரசங்கிப்பது என்று அவர் அறிந்திருந்தார். அவர் ஆழமான சத்தியங்களைத் தொடர்புகொண்டார், ஆனால் பார்வையாளர்களில் படிப்பறிவற்ற நபரின் ஆர்வத்தையும் அவர் தக்கவைத்துக்கொண்டார்.

ஒரு சிறந்த பிரசங்கியாரின் நோக்கம் தனது ஆழமான அறிவால் பார்வையாளர்களைக் கவர்வதல்ல. தேவனுடைய வார்த்தையை எளிமையாகவும் வல்லமையாகவும் தொடர்புகொள்வதும், தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தைக் கொண்டு கேட்பவர்களை உணர்த்தப் பரிசுத்த ஆவியானவரை அனுமதிப்பதுமே பிரசங்கியாரின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இயேசு தனது பிரசங்கங்களை எவ்வாறு எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும் மாற்றினார்?

இயேசு கதைகளைச் சொன்னார்

இயேசுவின் பிரசங்கங்களைக் கேட்டவர்கள் அடிக்கடி, "நான் உங்களுக்கு ஒரு கதையைச் சொல்கிறேன்" என்ற வார்த்தைகளைக் கேட்டார்கள். அவருடைய கதைகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன மற்றும் அவருடைய செய்திக்கு அவர்களின் காதுகளைத் திறந்தன.

நம்மில் பெரும்பாலோர் மூன்று குறிப்புகள் கொண்ட பிரசங்கக் குறிப்பை விட, ஒரு கதையை நீண்ட காலம் நினைவில் வைத்திருக்கிறோம். நல்ல கதைகள், பிரசங்கத்தின் முக்கியக் கருத்தை நினைவில் வைத்துக்கொள்ள உதவும் வகையில் பிரசங்கத்தை விளக்குகின்றன. பிரசங்கியார் தொடர்புகொள்ள முயற்சிக்கும் செய்தியை ஒரு சிறந்த கதை சுருக்கமாகக் கூறுகிறது.

► நீங்கள் கடைசியாக ஒரு பிரசங்கத்தில் கேட்ட கதையைப் பற்றி விவாதிக்கவும். அது பிரசங்கியாரின் செய்தியைத் திறம்படத் தொடர்புகொண்டதா? அந்தக் கதையின் நோக்கத்தை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அந்தக் கதை இல்லாவிட்டால் அந்தப் பிரசங்கம் அவ்வளவு பயனுள்ளதாகவும் மறக்க முடியாததாகவும் இருந்திருக்குமா?

இயேசு எளிய மொழியைப் பயன்படுத்தினார்

ஒரு ஆசிரியர் ஒரு கருத்தை எவ்வளவு நன்றாகப் புரிந்துகொள்கிறாரோ, அவ்வளவு எளிமையாக அதை ஒரு மாணவருக்கு விளக்க முடியும். கருத்தைக் கற்பிக்கச் சிக்கலான வார்த்தைகளைப் பயன்படுத்தும் ஒரு ஆசிரியர், பெரும்பாலும் தனது புரிதலின்மையையே மறைக்கிறார். நீங்கள் எதையாவது எவ்வளவு நன்றாகப் புரிந்துகொள்கிறீர்களோ, அவ்வளவு எளிமையாக அதை உங்களால் தொடர்புகொள்ள முடியும்.

சத்தியத்தைத் தம் பார்வையாளர்களின் மொழியில் எப்படி மொழிபெயர்ப்பது என்பதை இயேசு அறிந்திருந்தார். அவர் விவசாயிகளிடம் விதை விதைப்பதைப் பற்றிப் பிரசங்கித்தார். அவர் மேய்ப்பர்களிடம் ஆடுகளைப் பற்றிப் பிரசங்கித்தார். அவர் மீனவர்களிடம் மீன்பிடிப்பதைப் பற்றிப் பிரசங்கித்தார். பலர் இயேசுவின் செய்தியை நிராகரித்தனர், ஆனால் யாரும் அவருடைய பிரசங்கங்களால் சலிப்படையவில்லை.

இயேசுவின் செய்தியை மீனவர்கள், விவசாயிகள் மற்றும் குடும்பத் தலைவிகள் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் அது அறிஞர்கள், மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் அதிகாரிகளின் பிரச்சினைகளையும் பேசியது. அவரது பிரசங்கம் சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் பேசியது. எளிமை என்றால் ஆழமற்றது (shallow) என்று அர்த்தமல்ல. நமது பிரசங்கங்கள் சுவிசேஷத்தின் மகத்தான உண்மைகளைத் தெளிவோடும் எளிமையோடும் தொடர்புகொள்ள வேண்டும்.

இயேசு திரும்ப திரும்பக் கூறும் முறையைப் பயன்படுத்தினார்

ஒரு இளம் போதகர் தனது சபையைப் பார்த்து விரக்தியடைந்தார். அவர், "இதை அவர்கள் ஏற்கனவே அறிந்திருக்க வேண்டும்; நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இதைப் பற்றிப் பிரசங்கித்தேன்" என்றார். அவரது நண்பர், சீஷர்கள் புரிந்துகொள்வதற்கு முன்பு இயேசு ஒரே செய்தியைப் பலமுறை பிரசங்கித்தார் என்பதை அவருக்கு நினைவுபடுத்தினார்.

அந்த நண்பர் அந்தப் போதகரிடம், "உங்கள் பிரசங்கம் இயேசுவை விடச் சிறந்தது என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"நிச்சயமாக இல்லை!"

"உங்கள் சபை உறுப்பினர்கள் சீஷர்களை விட ஞானமுள்ளவர்கள் என்று நினைக்கிறீர்களா?"

"இல்லை!"

"அப்படியானால், இயேசு செய்ததைப் போலவே நீங்களும் சத்தியங்களைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும்."

இயேசு ஒரே சத்தியங்களைத் திரும்பத் திரும்பப் பிரசங்கித்தார். அவர் தனது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றி மீண்டும் மீண்டும் சீஷர்களுக்குக் கற்பித்தார். அவர் ராஜ்யத்தின் செய்தியைப் பலமுறை பிரசங்கித்தார். இந்தச் சத்தியங்கள் மிக முக்கியமானவை என்பதை இயேசு அறிந்திருந்தார், எனவே தனது பார்வையாளர்களைச் சென்றடைய எத்தனை முறை தேவையோ அத்தனை முறை அந்தச் செய்தியைப் பிரசங்கித்தார்.

இயேசுவின் பிரசங்கங்கள் உண்மையானவையாக இருந்தன

இயேசுவின் பிரசங்கம் உண்மையானதாக இருந்தது. அவருடைய வாழ்க்கை அவருடைய செய்திக்குப் பொருத்தமாக இருந்தது. இயேசு தேவபக்திக்குரிய வாழ்க்கையைப் பற்றி வெறுமனே பிரசங்கிக்கவில்லை; அவர் தேவபக்திக்குரிய வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசுவின் செய்திக்கும் அவருடைய வாழ்க்கைக்கும் இடையில் ஒரு முரண்பாடு உள்ளது என்று யாராலும் சுட்டிக்காட்ட முடியவில்லை. இயேசு எதைப் பிரசங்கித்தாரோ, அதையே வாழ்ந்தார்.

நீங்கள் கார் ஓட்டக் கற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் இரண்டு ஆசிரியர்களை நீங்கள் காண்கிறீர்கள். ஒரு ஆசிரியர் இதுவரை காரை ஓட்டியதே இல்லை, ஆனால் கார் ஓட்டுவது பற்றிப் பல புத்தகங்களைப் படித்திருக்கிறார். மற்றவரோ பல ஆண்டுகளாகப் பாதுகாப்பாக வண்டி ஓட்டுபவர் என்று பெயர் பெற்றவர். எந்த ஆசிரியரை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்?

இப்போது நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் இரண்டு போதகர்களைக் காண்கிறீர்கள். ஒரு போதகர் பாவ வாழ்க்கை வாழ்கிறார், ஆனால் அவர் நல்ல பிரசங்கங்களைச் செய்கிறார். மற்றொரு போதகர், தேவனுடனான தனது நெருங்கிய உறவை வெளிப்படுத்தும் விதத்தில் வாழ்கிறார். எந்தப் போதகரை நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்?

> "இயேசு, 'அவர்களுடைய ஊழியத்தின் அளவைக் கொண்டு அவர்களை அறிவீர்கள்' என்று ஒருபோதும் சொல்லவில்லை. ஆனால், 'அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்'—அதாவது பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவதினாலே அறிவீர்கள் என்று அவர் சொன்னார்."
>
> - கிரேக் கீனர்

நமது பிரசங்கம் உண்மையானதாக இருக்க வேண்டும். நாம் பிரசங்கிக்கும் வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். பல பிரசங்கியார்கள், சிறிது காலத்திற்கு நேர்மையைப் போல நடிப்பது சாத்தியம் என்பதைக் கண்டறிந்துள்ளனர். நேர்மையைப் பற்றிப் பிரசங்கித்துக்கொண்டே காணிக்கைப் பணத்தைத் திருடும் ஒரு பிரசங்கியாரால் மக்கள் ஏமாற்றப்படலாம். ஒழுக்கத்தைப் பற்றிப் பிரசங்கித்துக்கொண்டே விபச்சாரம் செய்யும் ஒரு பிரசங்கியாரால் அவர்கள் தவறாக வழிநடத்தப்படலாம். அன்பைப் பற்றிப் பிரசங்கித்துக்கொண்டே தன் மனைவியை அடிக்கும் ஒரு போதகரால் அவர்கள் ஏமாற்றப்படலாம். ஆனால் இறுதியில், உண்மை வெளியே வரும். வெறுமையான இதயம், ஆவிக்குரிய வல்லமையற்ற ஒரு ஊழியத்தையே விளைவிக்கும். தேவன் நமக்குள் கிரியை செய்ய நாம் அனுமதிக்கும்போது, அவர் நம் மூலமாக கிரியை செய்கிறார்.

பிரசங்க ஊழியத்தின் கவர்ச்சி, ஒரு பாவமுள்ள வாழ்க்கையை மறைக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். சிறந்த பிரசங்கம் தேவனை அறிந்த இதயத்திலிருந்தே தொடங்குகிறது.

பயன்பாடு: மேய்ப்பராகிய போதகர்

► மாற்கு 6:30-34-ஐ வாசிக்கவும்.

ஒரு போதகருக்கான சிறந்த உருவகங்களில் ஒன்று மேய்ப்பன். "இயேசு கரையில் வந்து, அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார்." இயேசு மக்கள் கூட்டத்தைப் பார்த்தபோது, ஒரு மேய்ப்பன் தேவைப்படுகின்ற ஆடுகளாகக் கண்டார்.

► மாற்கு 6-ல் இருந்த 5,000 பேர் கொண்ட அந்த கும்பலில் யார் யார் இருந்திருப்பார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். ஒரு பட்டியலைத் தயார் செய்யுங்கள்.

- மக்களை ஏமாற்றிய ஆயக்காரர்கள் உங்கள் பட்டியலில் இருக்கிறார்களா? அவர்கள் அங்கே இருந்தார்கள். நேர்மையற்ற இந்த ஆயக்காரர்களைப் பார்த்துக் கண்டனம் தெரிவித்துச் சத்தமிடுவது எளிது, ஆனால் மீட்கப்பட வேண்டிய காணாமல்போன ஆடுகளை இயேசு கண்டார்.

- இயேசுவைப் பொறியில் சிக்கவைக்கக் காத்திருந்த, நியாயந்தீர்க்கிற பரிசேயர்கள் உங்கள் பட்டியலில் இருக்கிறார்களா? அவர்கள் அங்கே இருந்தார்கள். கூட்டத்திற்கு முன்னால் அவர்களை அவமானப்படுத்துவது இயேசுவுக்கு எளிதாக இருந்திருக்கும், ஆனால் சரியான பாதை தேவைப்படும் பிடிவாதமுள்ள ஆடுகளை இயேசு கண்டார்.

- விபச்சாரம் செய்ததால் தன் மனசாட்சியால் குற்றவாளிகள் என்று தீர்க்கப்பட்ட உண்மையில்லாத கணவன் உங்கள் பட்டியலில் இருக்கிறானா? அவன் அங்கே இருந்தான். சீர்திருத்தமும் பின்னர் சுகமும் தேவைப்படும் ஒரு விழுந்துபோன ஆட்டை இயேசு கண்டார்.

- வீட்டிற்கு எதிராகக் கலகம் செய்து, பள்ளியிலிருந்து ஓடிப்போய், அடையாளம் தெரியாத அந்தக் கூட்டத்தில் இணைந்த டீனேஜர்கள் உங்கள் பட்டியலில் இருக்கிறார்களா? அவர்கள் அங்கே இருந்தார்கள். தாங்கள் இன்னும் தூரம் வழிவிலகிச் செல்வதற்கு முன்பாக, சரியான பாதைக்குத் திரும்பக் கொண்டுவரப்பட வேண்டிய, அலைந்து திரியும் ஆடுகளை இயேசு கண்டார்.

நீங்கள் பிரசங்கிக்கும்போது யாரைப் பார்க்கிறீர்கள்? உங்கள் சபையின் குறைகளை மட்டுமே பார்க்கிறீர்களா அல்லது உங்கள் ஆடுகளின் ஆழமான தேவைகளைப்

பார்க்கிறீர்களா? கோபமுள்ள ஒரு சபை நிர்வாகக் குழு உறுப்பினரை மட்டுமே பார்க்கிறீர்களா அல்லது மற்றவர்களைக் காயப்படுத்தும், காயப்பட்ட ஓர் ஆட்டைப் பார்க்கிறீர்களா? பின்மாற்றம் அடைந்த ஒருவரைமட்டுமே பார்க்கிறீர்களா அல்லது பாவத்தினால் அவதிப்படும் ஓர் ஆட்டைப் பார்க்கிறீர்களா? இயேசு தேவையிலுள்ள ஆடுகளைக் கண்டார்.

► யோவான் 10:1-18-ஐ வாசிக்கவும்.

போதகர்களாகிய நாம் மேய்ப்பர்களாக இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ஒரு மேய்ப்பன் ஆடுகளுக்கு எப்படிச் சேவை செய்கிறான்? யோவான் 10 ஒரு மாதிரியை வழங்குகிறது.

ஒரு மேய்ப்பன் ஆடுகளை வழிநடத்துகிறான்

நீங்கள் ஒரு மேய்ப்பனைப் பார்த்தால், அவன் ஆடுகளைத் தடியால் அடித்து ஓட்டிக்கொண்டு போவதை நீங்கள் பார்க்க மாட்டீர்கள். மாறாக, ஒரு மேய்ப்பன் ஆடுகளைச் சரியான திசையில் வழிநடத்திச் செல்கிறான். "ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது" (யோவான் 10:3-4) என்று இயேசு சொன்னார்.

நாம் சுவிசேஷங்களை வாசிக்கும்போது, பல நேரங்களில் இயேசு பேதுருவையோ, யோவானையோ அல்லது தோமாவையோ தடியால் அடிப்பார் என்று நாம் எதிர்பார்க்கலாம்! மீண்டும் மீண்டும், அவர்கள் பிரச்சினையில் சிக்கிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களை அடிப்பதற்குப் பதிலாக, பலவீனமான, போராடுகிற இந்தச் சீஷர்களைத் தூக்கிவிடுவதற்கும், அவர்களைச் சரியான பாதையில் நிறுத்துவதற்கும் இயேசு ஒரு மேய்ப்பனின் கோலைப் பயன்படுத்துகிறார்.

ஒரு மேய்ப்பராக, தேவன் உங்கள் சபையில் வைத்திருக்கும் ஆடுகளை நீங்கள் வழிநடத்துகிறீர்களா அல்லது ஓட்டுகிறீர்களா? நீங்கள் ஆடுகளை **வழிநடத்தும்** மேய்ப்பரா அல்லது ஆடுகள் கீழ்ப்படிய வேண்டும் என்று கட்டளையிடும் ஒரு **நிர்வாகியா**?

ஒரு மேய்ப்பன் ஆடுகளைப் பராமரிக்கிறான்

"காலை 9:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை வேலை, வார இறுதி நாட்கள் விடுமுறை, மாலை 5:00 மணிக்குப் பிறகு தொலைபேசி அழைப்புகள் எதுவும் இல்லை என்ற ஒரு வேலை எனக்கு வேண்டும்" என்று நீங்கள் சில சமயங்களில் நினைக்கிறீர்களா? அது சில நேரங்களில் கேட்பதற்கு அற்புதமாகத் தோன்றலாம்! ஆனால் அது ஒரு மேய்ப்பனின் வாழ்க்கை அல்ல.

மேய்ப்பன் அலுவலக நேரங்களில் மட்டுமல்ல, ஆடுகளுக்கு உதவி தேவைப்படும்போதெல்லாம் அவற்றைப்பராமரிக்கிறான். காயப்பட்ட ஒரு ஆட்டுக்குட்டியிடம், "நாளை காலை 9:00 மணிக்கு நான் பணிக்கு வரும் வரை அங்கேயே இரு" என்று ஒரு மேய்ப்பனால் சொல்ல முடியாது. அந்த ஆட்டுக்குட்டியை மீட்பதற்காக மேய்ப்பன் இரவிலும் வெளியே செல்கிறான்.

அதேபோல், போதகரும் தன் ஆடுகளுக்கு உதவி தேவைப்படும்போது அவற்றைப் பராமரிக்கிறார். ஆவிக்குரிய ஆடுகளைப் பராமரிப்பது என்பது பிரசங்கம் பண்ணுவதை விட மேலானது. அது பிரசங்கத்தை உள்ளடக்கியதுதான், ஆனால் அது ஆலோசனை கூறுவது, சந்திப்பது, செவிகொடுப்பது, ஜெபிப்பது, மற்றும் சில சமயங்களில் காயப்பட்ட ஆட்டுக்குட்டியுடன் சும்மா அமர்ந்திருப்பது ஆகியவற்றையும் உள்ளடக்கியது.

ஆம் போதகர்களே, உங்களை நீங்களே பராமரித்துக்கொள்ள வேண்டும். சரீர ரீதியாகவும், மன ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் உங்களை நீங்களே வருத்திக்கொண்டால், உங்களால் ஒரு சிறந்த மேய்ப்பராக இருக்க முடியாது. இயேசு தனித்திருக்க நேரம் ஒதுக்கினார், நீங்களும் தனித்திருக்க நேரம் ஒதுக்க வேண்டும். ஆனால் வேறு சில நேரங்களில், ஆடுகளைப் பராமரிக்கத் தன் சௌகரியத்தைத் தியாகம் செய்ய வேண்டும் என்பதை இயேசு அறிந்திருந்தார்.

ஊழியம் மற்றும் ஓய்வு ஆகியவற்றுக்கு இடையிலான இந்தச் சமநிலை கடினமாக இருக்கலாம். ஞானமுள்ள ஒரு மேய்ப்பராகிய போதகர், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கும், உங்களைச் சுற்றியுள்ளவர்களின் ஞானமான ஆலோசனைக்கும் உணர்வுள்ளவராக இருக்க வேண்டும். "ஓய்வுக்கும் புதுப்பித்தலுக்கும் ஒதுங்கியிருக்க இதுவே நேரம்" என்று ஆவியானவர் சொல்லும்போது, அந்தச் சத்தத்திற்குச் செவிசாயுங்கள். "உங்களுக்குச் சிறிது ஓய்வு தேவை" என்று சொல்லும் உங்கள் மனைவி அல்லது உடன் ஊழியரின் குரலுக்குச் செவிசாயுங்கள். தேவன் உங்களிடம் ஒப்படைத்த ஆடுகளைப் பராமரிப்பதற்கு, புதுப்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஒரு புதிய வாஞ்சையோடு திரும்பி வாருங்கள்.

ஒரு மேய்ப்பன் ஆடுகளைப் பாதுகாக்கிறான்

ஆபத்தைக் கண்டதும் ஓடிப்போகும் கூலி ஆளுக்கும், தன் உயிருக்கு ஆபத்து வந்தாலும் ஆடுகளைப் பாதுகாக்கும் நல்ல மேய்ப்பனுக்கும் உள்ள வித்தியாசத்தை இயேசு எடுத்துக்காட்டினார். கூலி ஆளுக்கு ஆடுகளைக் குறித்துக் கவலையில்லை, ஆனால் மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான் (யோவா 10:13, 15).

இயேசு தனது கடைசி நேரத்தில்கூட, சீஷர்களைப் பராமரித்தார். இராபோஜனத்தின்போது, அவர்கள் விரைவில் சந்திக்கவிருந்த சோதனைக்கு அவர்களைத் தயார்படுத்தினார். கெத்செமனே தோட்டத்திலே, அவர் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருக்குத் தொடர்ந்து போதித்தார். சிலுவையில், அவர் மரியாளையை யோவானின் பராமரிப்பில்

ஒப்படைத்தார். முடிவுபரியந்தம், அந்த நல்ல மேய்ப்பர் தன் ஆடுகளைப் பராமரித்துக்கொண்டிருந்தார்.

எபேசு சபையின் மூப்பர்களை மேய்ப்பர்களாக ஊழியம் செய்யும்படி பவுல் பொறுப்புவித்தார். இயேசுவின் சொந்த இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட மந்தையை அவர்கள் பராமரிக்க வேண்டியிருந்தது. அடுத்த வசனத்தில், மந்தையைத் தாக்கும் கொடிய ஓநாய்களைக் குறித்துப் பவுல் எச்சரித்தார். மந்தையைப் பாதுகாப்பது மேய்ப்பர்களின் பொறுப்பாக இருந்தது (அப்போஸ்தலர் 20:28-31).

ஒரு மேய்ப்பராகிய போதகரே, தேவன் உங்கள் சபையில் வைத்துள்ள ஆடுகளை நீங்கள் பாதுகாக்கிறீர்களா? உபதேசத் தவறுகளிலிருந்தும், அவர்களின் திருமணம் மற்றும் குடும்பத்தின் மீதான தாக்குதல்களிலிருந்தும், பிற ஆவிக்குரிய தாக்குதல்களிலிருந்தும் நீங்கள் அவர்களைப் பாதுகாக்கிறீர்களா? நீங்கள் மேய்ப்பரா அல்லது கூலி ஆளா?

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நீங்கள் பிரசங்கிப்பதற்கு முன், உங்கள் ஆடுகளின் தேவைகளை உங்களுக்குக் காண்பிக்கும்படி தேவனிடம் கேளுங்கள். உங்கள் மந்தையில் உள்ள உடைந்த இதயங்களை உங்களுக்குக் காண்பிக்கும்படி அவரிடம் கேளுங்கள். நீங்கள் பிரசங்கிக்கும்போது, தொய்ந்துபோனவர்களும் உதவியற்றவர்களுமாய் இருக்கிற, தேவபக்திக்குரிய ஒரு மேய்ப்பனின் அன்பு தேவைப்படுகிற ஆடுகளைப் பாருங்கள்.

ஒரு நெருக்கமான பார்வை: "ஐயோ!"

► மத்தேயு 23:1-39-ஐ வாசிக்கவும்.

தம்மை நிராகரித்த நகரங்களிடமும் (மத்தேயு 11:21), மக்களைத் தவறாக வழிநடத்திய பரிசேயர் மற்றும் வேதபாரகரிடமும் (மத்தேயு 23:13-29), தம்மை காட்டிக்கொடுக்கப்போகிற யூதாஸைப் பற்றியும் (மாற்கு 14:21) பேசும்போது இயேசு "உனக்கு ஐயோ" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். தம்மை நிராகரித்தவர்களிடமும் இயேசு அன்பு காட்டினார் என்பதை மறந்துவிட்டு, சில நேரங்களில் நாம் இந்த "ஐயோ" என்ற வார்த்தைகளைக் கோபமான தொனியில் வாசிக்கிறோம்.

"ஐயோ" என்ற வார்த்தையில் நியாயத்தீர்ப்பு இருக்கிறது, ஆனால் அதில் துக்கமும் இருக்கிறது. "ஐயோ" என்பது நியாயத்தீர்ப்பையும், அதே நேரத்தில் நியாயந்தீர்க்கப்படுபவர் மீதான "துக்கம் மற்றும் பரிதாபத்தையும்" உள்ளடக்கியது. "தங்கள் நிலையின் உண்மையான துயரத்தை உணராதவர்களுக்காக இயேசு கொள்ளும்

வருத்தத்தை" இது வெளிப்படுத்துகிறது.[27] "ஐயோ" என்பது எச்சரிக்கையை மட்டுமல்ல, ஆழ்ந்த துக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

மதத் தலைவர்கள் மீதான நியாயத்தீர்ப்பை அறிவித்து முடித்த பிறகு, இயேசு தான் நேசித்த நகரத்தின் முடிவை நினைத்து அழுதார். "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று." விரைவில் தன்னைச் சிலுவையில் அறையப்போகும் அந்த நகரத்தின் முடிவை நினைத்து இயேசு அழுதார் (மத்தேயு 23:37 மற்றும் லூக்கா 19:41).

நியாயத்தீர்ப்பைப் பிரசங்கிப்பதற்கு இதுவே நமக்கு மாதிரியாக இருக்க வேண்டும். பாவத்தைக் குறித்த எச்சரிப்பும், மனந்திரும்ப மறுப்பவர்களுக்கு வரும் நியாயத்தீர்ப்பின் செய்தியும் நம் பிரசங்கத்தில் இருக்க வேண்டும். ஆனால் நம் செய்தி பாவியின் மீதான கோபத்தை அல்ல, பாவத்தின் நிமித்தம் நமக்கு உண்டாகும் துக்கத்தையே காட்ட வேண்டும்.

நரகத்தைப் பற்றிய ஒரு பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு, கலகக்காரனான ஒரு டீனேஜ் பையன் வீட்டுக்குச் சென்றான். அவனது தந்தை, "மகனே, அந்தப் பிரசங்கத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டார். அவன், "எனக்கு அது பிடிக்கவில்லை. அது எனக்குக் கோபத்தை உண்டாக்கியது!" என்று பதிலளித்தான். அடுத்த வாரம், அந்த மகன் இன்னொரு பிரசங்கியார் நரகத்தைப் பற்றிப் பிரசங்கிப்பதைக் கேட்டான். அவனது தந்தை மீண்டும், "அந்தப் பிரசங்கத்தைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டார். மகன், "நான் இயேசுவுக்கு ஊழியம் செய்ய வேண்டும். அந்தப் பயங்கரமான இடத்திற்கு நான் ஒருபோதும் போகவே கூடாது!" என்று பதிலளித்தான்.

தந்தை ஆச்சரியப்பட்டார். "போன வாரம் நரகத்தைப் பற்றிய பிரசங்கம் உனக்குக் கோபத்தை உண்டாக்கியது. இந்த வாரம் நரகத்தைப் பற்றிய பிரசங்கம் உன்னை மனந்திரும்ப வைத்திருக்கிறது. என்ன வித்தியாசம்?" என்று கேட்டார். அந்தப் பையன், "இந்தப் பிரசங்கியார் நரகத்தைப் பற்றி என்னை எச்சரித்தபோது அழுதார்" என்று சொன்னான்.

---

[27] Martin H. Manser, *Dictionary of Bible Themes.* (London: Martin Manser, 2009). See also Joel B. Green and Scot McKnight, *Dictionary of Jesus and the Gospels.* (Westmont, Illinois: InterVarsity Press, 1992).

நியாயத்தீர்ப்பைப் பிரசங்கிக்கும்போது நீங்கள் அழுகிறீர்களா? நரகத்தைப் பற்றிப் பிரசங்கம் தயாரிக்கும்போது அழுகிறீர்களா? நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரிக்க வேண்டியிருந்தாலும் ஆடுகளை நேசிக்கிற ஒரு மேய்ப்பராக நீங்கள் இருக்கிறீர்களா?

முடிவுரை: பிரசங்கத்தில் பரிசுத்த ஆவியானவரின் பங்கு

பிரசங்கியார்களாகிய நாம், கேட்பவர்களுக்குப் பாவ உணர்வை (Conviction) உண்டாக்கப் பரிசுத்த ஆவியின் வல்லமையைச் சார்ந்திருக்க வேண்டும். உணர்ச்சிகளைத் தூண்டும் மனித நுட்பங்களை மட்டும் நாம் பயன்படுத்தினால், உடனடி முடிவுகளைக் காணலாம், ஆனால் ஆவிக்குரிய முடிவுகள் இருக்காது. பரிசுத்த ஆவியானவர் மட்டுமே நம்மைக் கேட்பவர்களிடம் நிலையான மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

► 1 கொரிந்தியர் 2:1-16-ஐ வாசிக்கவும்.

ஆவிக்குரிய மாற்றம் பரிசுத்த ஆவியின் வல்லமையால் மட்டுமே நிகழும் என்பதை பவுல் புரிந்திருந்தார். அத்தேனே பட்டணத்தில் அரியொபாகில் தத்துவஞானிகளுடன் விவாதித்த பிறகு, அவர் கொரிந்துவுக்கு வந்தார் (அப்போஸ்தலர் 17:16-18:1). கொரிந்துவிலே, உயர்ந்த வசனத்தையாவது ஞானத்தையாவது பயன்படுத்தாமல், இயேசு கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் தவிர வேறொன்றையும் பிரசங்கிக்கவில்லை என்று தீர்மானித்திருந்தார். அவர் பிரசங்கம் "ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" (1 கொரிந்தியர் 2:1-5).

ஆவிக்குரிய காரியங்களை ஆவிக்குரியவர்களுக்கு ஆவியானவர் விளக்குவார் என்று பவுல் அறிந்திருந்தார் (1 கொரிந்தியர் 2:13). பவுல் கல்வியை மதித்தார்; அவர் சிறந்த அறிஞர். பொது மேடையில் சிறப்பாகப் பேசுவது எப்படி என்று அவருக்குத் தெரியும்; அவர் சிறந்த கிரேக்கப் பேச்சாளர்களைப் படித்தவர். தர்க்கரீதியான வாதத்தை எப்படிக் கட்டமைப்பது என்று அவருக்குத் தெரியும்; ரோமர் நிருபம் தர்க்கரீதியான கட்டமைப்பின் ஒரு தலைசிறந்த படைப்பு. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, பவுல் பரிசுத்த ஆவியின் வல்லமையை மதித்தார். உண்மையான உணர்த்துதல் ஆவியானவரின் கிரியையினால் மட்டுமே வரும் என்று அவர் அறிந்திருந்தார்.

பவுல் கொரிந்தியர்களுக்கு, "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:7) என்று நினைப்பூட்டினார். பாத்திரம் பொக்கிஷம் அல்ல! ஊழியத் தலைவர்களாகிய நாம் களிமண்ணால் செய்யப்பட்ட உடைந்த பானைகள். ஆனால் நாம் ஊழியம் செய்பவர்களுக்கு நற்செய்தி என்னும் பொக்கிஷத்தைச் சுமந்து செல்லும் அற்புதமான சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

இது ஊழியத் தலைவர்களுக்கு ஒரு சக்திவாய்ந்த எச்சரிக்கை. ஜாடியில் உள்ள பொக்கிஷத்தை விட ஜாடியின் மீது கவனம் செலுத்துவது எளிது. செய்தியை விட நமது வழங்கல் முறைக்கு (presentation) நாம் அதிக கவனம் செலுத்தலாம்; பொக்கிஷத்தை விட ஜாடிக்கு அதிக கவனம் செலுத்தலாம். வல்லமை தேவனுக்குரியது, நமக்குரியது அல்ல என்பதைக் காட்டவே தேவன் வேண்டுமென்றே மண்பாண்டங்களைப் பயன்படுத்துகிறார் என்று பவுல் நினைப்பூட்டுகிறார். நாம் தேவனுடைய வல்லமைக்குத் தடையாய் இருக்கக்கூடாது. அவருக்கு மட்டுமே சேரவேண்டிய மகிமையை நாம் எடுக்கக்கூடாது. நாம் ஆவியின் வல்லமையோடு பிரசங்கிக்க வேண்டும்.

பாடம் 5 வீட்டுப்பாடங்கள்

(1) மத்தேயு சுவிசேஷம் ஐந்து முக்கிய பிரசங்கங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு பிரசங்கத்தையும் வாசித்து, அந்தப் பிரசங்கத்தை பயனுள்ளதாக்கும் ஒரு பண்பைக் கண்டறிந்து, அதைக் கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள். இந்த ஒப்படைப்புக்குச் சரியான பதில் அல்லது தவறான பதில் என்று எதுவும் இல்லை. "இயேசு எப்படி என்னை உணர்த்துகிறார், என்னை உற்சாகப்படுத்துகிறார் அல்லது அவருடைய செய்தியை நினைவில் வைத்துக்கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் எனக்கு உதவுகிறார்?" என்று கேட்டுக்கொள்ளுங்கள்.

(2) உங்கள் அடுத்த பிரசங்கத்தை நீங்கள் தயார் செய்யும்போது, இயேசுவின் பிரசங்கங்களில் நீங்கள் கண்டறிந்த பண்புகளை மறுஆய்வு செய்யுங்கள். திறம்படத் தொடர்புகொள்வதற்கு அவருடைய பிரசங்கங்களை ஒரு மாதிரியாகப் பயன்படுத்துங்கள். இந்தப் பிரசங்கத்தை வகுப்பில் உள்ள மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். "இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி நான் என் பிரசங்கத்தை அமைத்தேனா**?"** என்ற கேள்வியுடன் அந்தப் பிரசங்கத்தை மதிப்பிடுங்கள்.

பிரசங்கம்	பண்புகள்
மலைப்பிரசங்கம் (மத்தேயு 5-7)	
அப்போஸ்தலர்களை அனுப்புதல் (மத்தேயு 10)	
ராஜ்யத்தின் உவமைகள் (மத்தேயு 13)	
ராஜ்யத்தின் வாழ்வு (மத்தேயு 18)	
ஒலிவமலை பிரசங்கம் (மத்தேயு 24-25)	

பாடம் 6
இயேசுவும் தேவனுடைய ராஜ்யமும்

பாடத்தின் நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:

(1) சுவிசேஷ நூல்களில் தேவனுடைய ராஜ்யத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளுதல்.

(2) தேவனுடைய ராஜ்யத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால அம்சங்களை அறிந்துகொள்ளுதல்.

(3) மலைப்பிரசங்கத்தில் இயேசு கூறிய ராஜ்யத்தின் வாழ்க்கைக் கொள்கைகளைப் பின்பற்றுதல்.

(4) ராஜ்யத்தைக் குறித்த இயேசுவின் உவமைகளைச் சரியாக வியாக்கியானம் பண்ணுதல்.

(5) சீஷத்துவத்திற்கான இயேசுவின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிதல்.

ஊழியத்திற்கான கோட்பாடு

நமது உலகில் தேவனுடைய ராஜ்யத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்தானாதிபதிகளாக நாம் ஊழியம் செய்கிறோம். [28]

---

[28] இந்த பாடத்தில் பயன்படுத்தப்பட்ட ஆதாரங்கள் பின்வரும் நூல்களை உள்ளடக்கியது:
D. Mathew Allen, “The Kingdom in Matthew.” (1999). இது https://bible.org/article/kingdom-matthew March 22, 2021 என்னும் இணையதளத்தில் கிடைக்கிறது.
Darrell L. Bock, *Luke: Baker Exegetical Commentary on the New Testament*. (Grand Rapids: Baker Books, 1994-1996)
J. Dwight Pentecost, *The Words and Works of Jesus Christ.* (Grand Rapids: Zondervan, 1981)
Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount.* (Grand Rapids: Eerdmans, 1959)

முன்னுரை

புதிய ஏற்பாட்டில் 'தேவனுடைய ராஜ்யம்' என்பது ஒரு முக்கியக் கருப்பொருள். 'ராஜ்யம்' என்ற சொல் மத்தேயுவில் 56 முறையும், மாற்குவில் 21 முறையும், லூக்காவில் 39 முறையும், யோவான் சுவிசேஷத்தில் ஐந்து முறையும் வருகிறது.[29]

இயேசுவின் உவமைகளில் ஏறக்குறைய பாதி தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிக் கற்பிக்கின்றன. அவர் ராஜ்யத்தைப் பற்றிப் பிரசங்கிக்கிறார். ராஜ்யத்தின் வல்லமையை நிரூபிப்பதற்காக அவர் சுகப்படுத்தினார் மற்றும் பிசாசுகளைத் துரத்தினார். பரமேறுதலுக்குப் பிறகு, ஆதித் திருச்சபை ராஜ்யத்தின் செய்தியைத் தொடர்ந்து பிரசங்கித்தது (அப்போஸ்தலர் 8:12, அப்போஸ்தலர் 28:23).

இந்தப் பாடத்தில், இயேசுவின் ஊழியத்தில் தேவனுடைய ராஜ்யத்தையும், இன்றைய ஊழியத்தில் அந்த ராஜ்யத்தின் தாக்கத்தையும் குறித்துப் படிப்போம். இந்தப் பாடத்திட்டத்தின் இறுதியில், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து நைஜீரியாவில் பிரசங்கிக்கப்பட்ட ஒரு பிரசங்கம் கொடுக்கப்பட்டுள்ளது. நமது உலகில் ராஜ்யத்தின் செய்தி ஊழியத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை அந்தப் பிரசங்கம் விளக்குகிறது.

தேவனுடைய ராஜ்யம்

தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய படிப்பை அறிமுகப்படுத்த இரண்டு கேள்விகள் உள்ளன.[30]

1. தேவனுடைய ராஜ்யம் என்றால் என்ன?
2. தேவனுடைய ராஜ்யம் எப்போது ஸ்தாபிக்கப்படுகிறது?

தேவனுடைய ராஜ்யம் என்றால் என்ன?

► அப்போஸ்தலர் 1:1-8-ஐ வாசிக்கவும்.

---

[29] மத்தேயு வழக்கமாக “பரலோக ராஜ்யம்” என்று குறிப்பிட்டார், அதே சமயம் லூக்கா “தேவனுடைய ராஜ்யம்” என்று குறிப்பிட்டார். மத்தேயுவின் முதல் வாசகர்கள் யூதர்களாக இருந்தனர்; யூதர்கள் தேவனுடைய பெயரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, அடிக்கடி “பரலோகம்” என்பதைத் தேவனைக் குறிக்கும் ஒரு சொல்லாகப் பயன்படுத்தினர். மத்தேயு பெரும்பாலான இடங்களில் “தேவனுடைய ராஜ்யம்” என்பதற்குப் பதிலாக “பரலோக ராஜ்யம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இந்தப் பாடத்தில், மத்தேயுவை நேரடியாக மேற்கோள் காட்டும் போது தவிர மற்ற இடங்களில் நாம் “தேவனுடைய ராஜ்யம்” என்ற சொற்றொடரையே பயன்படுத்துவோம்.

[30] தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய வீடியோ விரிவுரைக்கு, Scot McKnight வழங்கிய “What and Where is the Kingdom of God?” என்ற உரையை http://www.seedbed.com/where-is-the-kingdom-of-god/ என்ற இணையதளத்தில் பார்க்கலாம். (மார்ச் 22, 2021 அன்று அணுகப்பட்டது.)

உயிர்த்தெழுதலுக்குப் பிந்தைய 40 நாட்களில், இயேசு தம் சீஷர்களுடன் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். அவர் பரமேறுவதற்கு சற்று முன்பு, சீஷர்கள், "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?" என்று கேட்டார்கள். சீஷர்கள் எதிர்பார்த்தது:

1. **ஓர் உடனடி ராஜ்யம்**: "இக்காலத்திலா." இயேசு உடனடியாக ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.
2. **ஓர் அரசியல் மற்றும் புவியியல் ரீதியான ராஜ்யம்**: "திரும்பக் கொடுப்பீர்." இயேசு ரோம சாம்ராஜ்யத்தை வீழ்த்தி, இஸ்ரவேலின் அரசியல் அதிகாரத்தை மீட்டெடுப்பார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.
3. **ஒரு தேசத்திற்கான ராஜ்யம்**: "இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத்." பழைய ஏற்பாட்டின் தாவீது ராஜாக்களைப் போல இயேசு தேசத்தை ஆளுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள்.[31]

அதற்கு இயேசு, "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப்பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்று பதிலளித்தார்.

இயேசுவின் பதில் அவருடைய ராஜ்யம் எப்படிப்பட்டது என்பதைக் காட்டுகிறது:

1. **காலங்களுக்கு அப்பாற்பட்ட ராஜ்யம்**: "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும்." இயேசுவின் ராஜ்யம் மனிதனின் காலக்கணிப்பைச் சார்ந்ததல்ல, பிதாவின் காலக்கணிப்பைச் சார்ந்தது.
2. **இயற்கைக்கு அப்பாற்பட்ட ராஜ்யம்**: "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து." இயேசுவின் ராஜ்யம் அரசியல் அதிகாரத்தை அல்ல, பரிசுத்த ஆவியின் வல்லமையை அடிப்படையாகக் கொண்டது.
3. **உலகளாவிய ராஜ்யம்**: "பூமியின் கடைசிப்பரியந்தமும்." இயேசுவின் ராஜ்யம் எல்லா தேசங்களையும் எட்டியது. அது இஸ்ரவேலுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

காலங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை என்று இயேசு சீஷர்களிடம் கூறினார். மாறாக, அவர்கள் இரண்டு விஷயங்களில் அக்கறை

---

[31] John Stott, *The Message of Apostles* (Westmont, Illinois: InterVarsity Press, 1990), 41

கொள்ள வேண்டும்: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வது மற்றும் பூமியின் எல்லைகள் வரை அவருக்குச் சாட்சிகளாக இருப்பது.

தேவனுடைய ராஜ்யம் எப்போது ஸ்தாபிக்கப்படுகிறது?

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இறையியலாளர்களிடையே மூன்று முதன்மைக் கண்ணோட்டங்கள் உள்ளன.

> "ராஜ்யம் வந்துவிட்டது; ராஜ்யம் வருகிறது; ராஜ்யம் இனிமேல்தான் வரப்போகிறது."
>
> - மார்ட்டின் லாயிட்-ஜோன்ஸ்

ராஜ்யம் இனி வரும்.

சில இறையியலாளர்கள், இயேசு ஆயிரம் வருட அரசாட்சியின்போது (millennium) பூமியில் ஆட்சி செய்யும்போது ஸ்தாபிக்கப்படும் ஒரு கடைசி கால ராஜ்யத்தை எதிர்பார்க்கிறார்கள். ராஜ்யத்தின் அரசியல் மற்றும் பிராந்திய அம்சங்களை வலியுறுத்தும் மத்தேயு 24-25 போன்ற வேதப்பகுதிகளை இந்த எழுத்தாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ராஜ்யம் வந்துவிட்டது.

மற்ற இறையியலாளர்கள், இயேசு பூமியில் இருந்தபோதே அவருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது என்று போதிக்கிறார்கள். "பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" மற்றும் "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" (மத்தேயு 4:17 மற்றும் லூக்கா 11:20) போன்ற இயேசுவின் கூற்றுகளை இவர்கள் வலியுறுத்துகிறார்கள். இந்தக் கண்ணோட்டம் ராஜ்யத்தின் ஆவிக்குரிய தன்மையையும், விசுவாசிகளின் இருதயங்களில் தேவனின் ஆட்சியையும் மையமாகக் கொண்டுள்ளது.

ராஜ்யம் ஏற்கனவே வந்துவிட்டது, ஆனால் இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை.

பல இறையியலாளர்கள் ராஜ்யம் என்பது தற்போதைய மற்றும் எதிர்கால அம்சங்கள் இரண்டையும் உள்ளடக்கியது என்று போதிக்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தின்படி, தேவனுடைய ராஜ்யம் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் போது தொடங்கப்பட்டது; அது சபையின் கிரியைகள் மூலம் தொடர்ந்து பரவுகிறது; கிறிஸ்து ஆட்சி செய்யத் திரும்பும்போது அது முழுமையாக விரிவடையும்.[32] கிறிஸ்துவின் வருகையின்போது, அவர் எல்லாத் துரைத்தனத்தையும் எல்லா அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து,

[32] வேத வல்லுநர்கள் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் போது ராஜ்யம் தொடங்கியதைக் குறிக்க "ராஜ்யத்தின் தொடக்கம்" என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். "ராஜ்யத்தின் பரிபூரணம்" என்பது கிறிஸ்துவின் வருகையின் போது ராஜ்யத்தின் வாக்குத்தத்தங்கள் முழுமையாக நிறைவேற்றப்படுவதைக் குறிக்கிறது.

ராஜ்யத்தைப் பிதாவாகிய தேவனிடம் ஒப்புக்கொடுப்பார் (1 கொரிந்தியர் 15:24). இதுவே தேவனுடைய ராஜ்யத்தின் முழுமையான ஸ்தாபிதமாகும்.

► ராஜ்யத்தைப் பற்றிய இந்தக் கண்ணோட்டங்களில் எதை நீங்கள் கொள்கிறீர்கள்? ஒவ்வொரு கண்ணோட்டமும் ஊழியத்தில் ஏற்படுத்தும் நடைமுறைத் தாக்கம் என்ன?

இந்தப் பாடத்தில், ஏற்கனவே கிரியை செய்து கொண்டிருக்கும் ராஜ்யத்தின் அம்சங்களையும், இனி நிறைவேற வேண்டிய ராஜ்யத்தின் அம்சங்களையும் நாம் காண்போம். ஒரு ராஜ்யம் பின்வருவனவற்றை உள்ளடக்கியது:

- **ராஜா:** பிறப்பில் சாஸ்திரிகள் முதல் சிலுவையில் எழுதப்பட்ட வாசகம் வரை, இயேசு ராஜாவாக வந்தார்.

- **அதிகாரம்:** இயேசு தனது அற்புதங்கள் மூலமாகவும், கல்லறையின் மீதான வெற்றியின் மூலமாகவும் தனது அதிகாரத்தை நிரூபித்தார்.

- **சட்டம் (பிரமாணம்):** இயேசு மலைப்பிரசங்கத்தில் ராஜ்யத்தின் சட்டத்தைச் சுருக்கமாகக் கூறினார்.

- **எல்லை (பிராந்தியம்):** தனது ராஜ்யம் பூமியின் எல்லைகள் வரை நீண்டுள்ளது என்றும், ஒவ்வொரு மொழியிலிருந்தும் ஒவ்வொரு மக்களிடமிருந்தும் மக்களை உள்ளடக்கியது என்றும் இயேசு போதித்தார்.

- **மக்கள்:** ராஜாவால் மீட்கப்பட்டு, அவரால் ஆளப்படும் அனைவரும் இயேசுவின் ராஜ்யத்தின் குடிமக்கள் ஆவர்.

ராஜ்யத்தின் வாக்குத்தத்தம்

► மத்தேயு 3:1-12-ஐ வாசிக்கவும்.

புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய முதல் குறிப்பு யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தில் காணப்படுகிறது. பழைய உடன்படிக்கையின் கடைசித் தீர்க்கதரிசியாக, இஸ்ரவேலின் மதத் தலைவர்களின் மாய்மாலத்தை யோவான் கண்டித்தார். புதிய ஏற்பாட்டின் முதல் தூதுவனாக, அவர் ஒரு புதிய ராஜாவுக்கு வழியை ஆயத்தம் பண்ணினார். “மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது” (மத்தேயு 3:2). “சமீபித்திருக்கிறது” என்ற சொற்றொடர் ராஜ்யம் மிக விரைவில் நெருங்கிக்கொண்டிருந்தது என்பதைக் குறிக்கிறது. அது இன்னும் வரவில்லை, ஆனால் மிக அருகில் இருந்தது. ஒரு புதிய ராஜ்யத்தைக் கொண்டுவரப்போகும் மேசியாவின் வருகைக்காக இஸ்ரவேலைத் தயார்படுத்த யோவான் பிரசங்கித்தார்.

யோவான் கைது செய்யப்பட்ட சிறிது காலத்திலேயே, இயேசு தனது பொது ஊழியத்தைத் தொடங்கினார். அவர் கலிலேயா எங்கும் சுற்றித்திரிந்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (மத்தேயு 4:23). யோவான் ஸ்நானகனைப் போலவே, இயேசுவும், "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத்தேயு 4:17) என்று பிரகடனப்படுத்தினார்.

► மத்தேயு 10:5-42-ஐ வாசிக்கவும்.

இஸ்ரவேல் வம்சத்தாராகிய காணாமல்போன ஆடுகளிடம் ராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கிக்க இயேசு பன்னிரண்டு சீஷர்களை அனுப்பினார். யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசுவைப் போலவே, அவர்களும், "பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத்தேயு 10:5-7) என்று பிரசங்கித்தார்கள்.

சீஷர்களின் ஊழியம் தங்கள் எஜமானரின் ஊழியத்தை மாதிரியாகக் கொண்டிருந்தது. இயேசுவைப் போலவே, அவர்களும் ராஜ்யத்தைப் பிரகடனப்படுத்தவும் மக்களின் சரீரத் தேவைகளைச் சந்திக்கவும் வேண்டியிருந்தது. தேவனுடைய ராஜ்யம் சாத்தானின் ஆளுகைக்குள் ஊடுருவிக்கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளங்களாக, இயேசுவைப் போலவே அவர்களும் நோயாளிகளைக் குணப்படுத்தினர் மற்றும் பிசாசுகளைத் துரத்தினர். வியாதியுள்ளவர்களைச் சுகமாக்கவும், மரித்தோரை எழுப்பவும், குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் இயேசு தனது பிரதிநிதிகளை அனுப்பினார் (மத்தேயு 10:8).

ராஜ்யத்தின் துவக்கம்

► மத்தேயு 12:22-32-ஐ வாசிக்கவும்.

ஒரு ராஜ்யத்தைப் பற்றிய வாக்குத்தத்தம் புதிதல்ல. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் ஒரு எதிர்கால ராஜ்யத்தை வாக்களித்திருந்தனர். இருப்பினும், ராஜ்யம் என்பது வெறும் எதிர்கால நம்பிக்கை மட்டுமல்ல, அது ஒரு உடனடி நிஜம் என்று இயேசு பிரகடனப்படுத்தினார். தேவனுடைய ராஜ்யத்தின் துவக்கத்தை இயேசு அறிவித்தார். இயேசு எங்கெல்லாம் இருந்தாரோ அங்கெல்லாம் தேவனுடைய ராஜ்யம் இருந்தது.

பிசாசுகளின் மீதான தனது வல்லமையின் மூலம், சாத்தானின் ராஜ்யத்தை ஜெயித்த ராஜாவின் அதிகாரத்தை இயேசு காட்டினார். பிசாசு பிடித்த ஒரு மனிதனை அவர் குணமாக்கிய பிறகு, பிசாசுகளின் தலைவனாகிய பெல்சிபூலைக் கொண்டு இயேசு பிசாசுகளைத் துரத்துகிறார் என்று பரிசேயர்கள் கூறினர். தேவனுடைய வல்லமையின் மூலம் தான் சாத்தானின் ராஜ்யத்தை ஜெயித்துக்கொண்டிருப்பதாக இயேசு பதிலளித்தார்: "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" (மத்தேயு 12:28). இயேசு சாத்தானின் ராஜ்யத்திற்குள் படையெடுத்திருந்தார்.

► மத்தேயு 11:1-24-ஐ வாசிக்கவும்.

இயேசுவின் அற்புதங்கள் அவரது ராஜ்யத்தின் தொடக்கத்திற்கான அடையாளங்களாக இருந்தன. யோவான் சுவிசேஷம் இயேசுவின் அற்புதங்களைக் குறிக்க 'அடையாளங்கள்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறது. அந்த அற்புதங்கள் இயேசுவின் தெய்வீகத்தன்மைக்கான அடையாளங்களாகவும், புதிய ராஜ்யத்திற்கான சான்றுகளாகவும் இருந்தன.

யோவான் ஸ்நானகன் “பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது” என்று பிரகடனப்படுத்தினார். இஸ்ரவேலுக்கு விடுதலையைக் கொண்டுவரும் ஓர் அரசியல் ராஜ்யத்தை அவர் எதிர்பார்த்தார். ஆனால் அதற்கு மாறாக, மரணத்தை எதிர்நோக்கியவாறு யோவான் தன்னைச் சிறையில் கண்டார்! அவர் தன் சீஷர்களை அனுப்பி, “வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா?” (மத்தேயு 11:3) என்று கேட்கச் சொன்னார். பூமிக்குரிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் ஓர் அரசியல் மேசியாவைப் பற்றிய யோவானின் எதிர்பார்ப்புகளோடு இயேசுவின் ஊழியம் பொருந்தவில்லை.

தனது மேசியாவுக்குரிய கிரியைகளைச் சுட்டிக்காட்டி இயேசு பதிலளித்தார்.

> இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார் (மத்தேயு 11:4-6).

மேசியாவைக் குறித்து முன்னறிவிக்கப்பட்ட அடையாளங்கள் நிறைவேறுவதை இயேசு யோவானுக்கு நினைப்பூட்டினார். யோவானின் வலிமையையும் தைரியத்தையும் இயேசு பாராட்டினாலும், பரலோகராஜ்யத்தில் சிறியவன் யோவானை விடப் பெரியவன் என்று அறிவித்தார். ஏன்? ராஜ்யத்தின் அனைத்துச் சிலாக்கியங்களுடனும் ஒரு புதிய உடன்படிக்கையை ஸ்தாபிக்க இயேசு வந்திருந்தார். பழைய ஏற்பாட்டின் மிகப் பெரிய பரிசுத்தவான் ஒருபோதும் கண்டிராத சிலாக்கியங்களைப் புதிய ஏற்பாட்டின் மிகச் சிறிய விசுவாசியும் பெற்றிருந்தான். பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலைப் புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் கண்டார்கள். வாக்களிக்கப்பட்ட ராஜ்யம் தொடங்கப்பட்டுவிட்டது.

ராஜ்யத்தின் வாழ்க்கை: மலைப்பிரசங்கம்

சுவிசேஷங்களில் பதிவுசெய்யப்பட்ட ஒரே நீண்ட பிரசங்கம் இயேசுவின் மலைப்பிரசங்கம் ஆகும். தேவனுடைய ராஜ்யம் என்பது இந்தப் பிரசங்கத்தை ஒன்றிணைக்கும் ஒரு கருப்பொருளாகும். இது பல வழிகளில் காணப்படுகிறது:

- பரலோகராஜ்யம் ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கு உரியது என்று முதலாவது பாக்கியவசனம் போதிக்கிறது (மத்தேயு 5:3). பரலோகராஜ்யம் நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்கு உரியது என்று கடைசிப் பாக்கியவசனம் போதிக்கிறது (மத்தேயு 5:10). பாக்கியவசனங்களின் முதன்மையான கருப்பொருள் பரலோகராஜ்யம் என்பதைக் காட்டும் விதமாக, இவை இரண்டும் மற்ற பாக்கியவசனங்களைச் சுற்றி ஓர் உறை போல அமைந்துள்ளன.

- நியாயப்பிரமாணத்திற்குப் புதிய விளக்கம் அளிக்கும் அதிகாரத்தைத் தனக்கு இருப்பதாக இயேசு கோருகிறார் (மத்தேயு 5:21-48). இது தனது ராஜ்யத்தின் சட்டங்களுக்கு விளக்கமளிக்கவும் அவற்றை நடைமுறைப்படுத்தவும் அதிகாரம் கொண்ட ஒரு ராஜாவின் செயல்.

- இயேசு சீஷர்களுக்கு இப்படி ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார்: "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத்தேயு 6:9-13). பூமியில் தேவனுடைய ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காக ஜெபிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். தேவனுடைய மக்கள் மலைப்பிரசங்கத்தின்படி வாழும்போது, ராஜ்யம் விரிவடைகிறது மற்றும் தேவனுடைய அதிகாரம் ராஜ்யத்தின் புதிய குடிமக்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது.

- பிரசங்கத்தின் முடிவில், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கப் பலத்த செய்கைகள் (அற்புதங்கள்) மட்டும் போதாது என்று இயேசு போதித்தார். பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் மட்டுமே ராஜ்யத்தில் பிரவேசிப்பான் (மத்தேயு 7:21).

மலைப்பிரசங்கத்தை வாசிப்பதற்கான கொள்கைகள்

மலைப்பிரசங்கத்தை நாம் வாசிக்கும்போது மூன்று கொள்கைகளை நினைவில் கொள்ள வேண்டும்.

(1) மலைப்பிரசங்கத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது பரலோகராஜ்யத்தில் குடியுரிமையைப் "பெற்றுத் தருவதில்லை".

"இப்படி வாழ்ந்தால் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறுவீர்கள்" என்று நாம் நினைக்கக்கூடாது. மாறாக, ராஜ்யத்தின் குடிமகனாக வாழ்வதற்கான ஒரு வழிகாட்டியாக

இந்தப் பிரசங்கத்தை நாம் வாசிக்க வேண்டும்: "நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பதினால் இப்படி வாழுங்கள்." நாம் கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்படுகிறோம்; பின்னர், தேவனுடைய ராஜ்யத்தின் அங்கத்தினர்களாக, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறோம்.

(2) மலைப்பிரசங்கம் சீஷர்களுக்கானது, அவிசுவாசிகளுக்கானது அல்ல.

இது ஒரு மதச்சார்பற்ற நாட்டிற்கான அரசியலமைப்புச் சட்டம் அல்ல. விசுவாசியாத உங்கள் அயலார் இந்தக் கொள்கைகளின்படி வாழ மறுக்கும்போது ஆச்சரியப்பட வேண்டாம்! இது தேவனுடைய ராஜ்யத்தில் உள்ள வாழ்க்கையின் விளக்கமே தவிர, மனித ராஜ்யங்களில் உள்ள வாழ்க்கைக்கான விளக்கம் அல்ல.

(3) மலைப்பிரசங்கம் *ஒவ்வொரு* விசுவாசிக்குமானது.

இந்தக் கொள்கைகள் சாதாரண விசுவாசிகளுக்குப் பொருந்தாது என்று வாதிடுவதன் மூலம் பலர் மலைப்பிரசங்கத்தின் கோரிக்கைகளைத் தவிர்க்க முயன்றனர். சிலர், "இந்தச் சட்டம் எதிர்கால ஆயிரம் வருட அரசாட்சிக்கான (millennial kingdom) சட்டம்" என்று கூறினர். சிலர், "இது ஒரு சில பரிசுத்தவான்களுக்கானது. பெரும்பாலான கிறிஸ்தவர்களால் இந்தக் கட்டளைகளைப் பின்பற்ற முடியாது" என்று கூறினர். இன்னும் சிலர், "தேவனுடைய கட்டளைகளை நம்மால் ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது என்பதை இந்தப் பிரசங்கம் காட்டுகிறது. தேவனுடைய கோரிக்கைகளை நம்மால் ஒருபோதும் நிறைவேற்ற முடியாது என்பதை நாம் காணும்போது, நாம் கிருபையை மட்டுமே சார்ந்திருப்போம்" என்று கூறினர்.

இருப்பினும், ஆதித் திருச்சபை மலைப்பிரசங்கத்தை ஒவ்வொரு விசுவாசிக்குமான ஒரு வழிகாட்டியாக வாசித்தது. யாக்கோபு மற்றும் 1 பேதுரு நிருபங்கள் இந்தப் பிரசங்கத்தின் பல கட்டளைகளைத் திரும்பத் திரும்பக் கூறுகின்றன. தேவனுடைய பரிசுத்தத்தின் தரத்தைக் குறைக்க இயேசு மறுத்துவிட்டார். பரிசேயர்களை விடக் குறைந்த தரத்திற்குப் பதிலாக, இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை உயர்ந்த தரத்தில் வைத்திருந்தார்: "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்தேயு 5:20).

தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்க்கை

► மத்தேயு 5-7-ஐ வாசிக்கவும்.

இயேசு தனது பூமிக்குரிய ஊழியத்தின் போது ராஜ்யத்தைத் தொடங்கினார் என்றால், நாம் இப்போது தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்கிறோம். மலைப்பிரசங்கம் பரலோகராஜ்யக் குடிமகனின் பண்புநலனை விவரிக்கிறது. பிரசங்கத்தின் கருப்பொருள்களின் சுருக்கமான கண்ணோட்டம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

(1) தேவனுடைய ராஜ்யத்தின் மதிப்புகள் இவ்வுலகத்தின் மதிப்புகளுக்கு முரணானவை.

ஏழ்மையாக இருப்பது, துயரப்படுவது, நம் உரிமைகளை விட்டுக்கொடுப்பது அல்லது துன்பப்படுத்தப்படுவது பாக்கியம் என்று எந்த பூமிக்குரிய ஆட்சியாளரும் சொல்வதில்லை. இயேசுவின் காலத்தில் இருந்த ரோமப் பேரரசு மற்றும் இன்றைய நம் உலகின் மதிப்புகளுக்கு நேர் எதிரானதை பாக்கியவசனங்கள் கூறுகின்றன. தேவனுடைய ராஜ்யம் மனிதனுடைய ராஜ்யத்திலிருந்து வேறுபட்டது.

(2) தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்கள் தங்கள் உலகத்தில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த எசெனியர்கள் (Essenes), நீதிமான்கள் சமூகத்திலிருந்து விலகித் தனிமையில் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டும் என்று கூறினர். இயேசு சொன்னார், "இல்லை! உங்கள் உலகத்தைப் பாதுகாக்கும் மற்றும் சுவையூட்டும் உப்பாக நீங்கள் இருக்க வேண்டும். பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு மகிமையைக் கொண்டுவரும் வெளிச்சமாக நீங்கள் இருக்க வேண்டும்." தேவனுடைய ராஜ்யம் முதன்மையாக ஆவிக்குரியதாக இருந்தாலும், ராஜ்யத்தின் குடிமக்களின் பிரசன்னத்தால் நம் உலகம் அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாகப் பயனடைய வேண்டும்.

> "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பது மட்டுமல்லாமல், சமூகம் அவரைத் தரிசிப்பதற்கு உதவும் நிருபங்களாகவும் (கடிதங்களாகவும்) மாறுகிறார்கள்."
>
> - லியோன் ஹின்சன்

மதச்சார்பற்ற சமூகத்தில் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருந்த கிறிஸ்தவர்களின் பல உதாரணங்களை நாம் பட்டியலிடலாம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அடிமை வர்த்தகத்தை ஒழிக்க வில்லியம் வில்பர்ஃபோர்ஸ் பாராளுமன்றத்தை வழிநடத்தினார்; மெத்தடிஸ்ட் எழுப்புதல் ஆங்கிலேய சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் சமூகச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தது; வில்லியம் கேரி இந்தியாவில் சிசுக்கொலை மற்றும் சதி (உடன்கட்டை ஏறுதல்) ஆகியவற்றை எதிர்த்துப் போராடினார்; கிறிஸ்தவர்கள் கல்வியறிவைப் பரப்பினார்கள், மருத்துவமனைகள் மற்றும் அனாதை இல்லங்களை நிறுவினார்கள், மேலும் பல நாடுகளில் ஏழைகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் சேவை செய்தார்கள்.

(3) தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்கள் பிதாவின் அன்பை வெளிப்படுத்த நியாயப்பிரமாணத்தின் குறைந்தபட்சத் தேவைகளுக்கும் மேலாகச் செல்கிறார்கள்.

இயேசு நியாயப்பிரமாணத்தை நீக்க வரவில்லை, அதை நிறைவேற்ற வந்தார். "அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" (மத்தேயு 5:17). ஒன்றை நிறைவேற்றுவது என்பது அதை முழுமைக்குக் கொண்டுவருவது அல்லது அதைச்

சாதிப்பதாகும். இயேசு நியாயப்பிரமாணத்தை நீக்க வரவில்லை, ஆனால் நியாயப்பிரமாணத்திற்குப் பின்னால் உள்ள ஆவியை (நோக்கத்தை) வெளிப்படுத்த வந்தார். ஆறு உதாரணங்களின் வரிசையில், ராஜ்யத்தின் குடிமக்களின் நீதி வேதபாரகர் மற்றும் பரிசேயர்களின் நீதியை விட அதிகமாக இருக்க வேண்டும் என்று இயேசு காட்டுகிறார்.

நியாயப்பிரமாணம்	ராஜ்யத்தின் குடிமக்கள்
நியாயப்பிரமாணம் கொலை செய்தலைத் தடை செய்கிறது.	ராஜ்யத்தின் குடிமக்கள் கோபம் என்கிற ஆணிவேரான காரணத்தைக் கவனத்தில் கொண்டிருக்கிறார்கள்.
நியாயப்பிரமாணம் விபச்சாரத்தைத் தடை செய்கிறது.	ராஜ்யத்தின் குடிமக்கள் ஒரு பெண்ணை இச்சையோடு பார்ப்பதில்லை.
நியாயப்பிரமாணம் ஒரு "தள்ளுதற்சீட்டை" அவசியமாக்குகிறது.	ராஜ்யத்தின் குடிமக்கள் திருமண உறவிலிருந்து வெளியேறுவதற்கான சாக்குப்போக்குகளைத் தேடாமல், அதில் நிலைத்திருப்பதற்கான வழிகளைத் தேடுகிறார்கள்.
நியாயப்பிரமாணம் பொய்யாணைகளைத் தடை செய்கிறது.	ஒரு ராஜ்யத்தின் குடிமகன் சொல்லும் "ஆம்" அல்லது "இல்லை" என்பதே போதுமானது.
நியாயப்பிரமாணம் பழிக்குப்பழி வாங்குவதை ("கண்ணுக்குக் கண்" என்று) மட்டுப்படுத்துகிறது.	ராஜ்யத்தின் குடிமக்கள் பழிவாங்கும் எண்ணத்தால் அல்ல, அன்பினால் செயல்படுகிறார்கள்.
நியாயப்பிரமாணம் உங்கள் பிறனிடத்தில் அன்புகூரக் கட்டளையிடுகிறது.	ராஜ்யத்தின் குடிமக்கள் தங்கள் சத்துருக்களையும் நேசிக்கிறார்கள்.[33] அவர்கள் தங்கள் பரலோகப் பிதாவின் அன்பையும் இரக்கத்தையும் பிரதிபலிக்கிறார்கள் (லூக்கா 6:36).

[33] பழைய ஏற்பாடு இஸ்ரவேலரை "உன் பகைவனைப் பகைப்பாயாக" என்று கட்டளையிட*வில்லை*. இது பழைய ஏற்பாட்டைப் பற்றிய ஒரு பொதுவான தவறான புரிதலாகும்.

(4) ராஜ்யத்தின் குடிமக்கள் மற்றவர்களைப் பிரியப்படுத்துவதை விடத் தேவனைப் பிரியப்படுத்துவதிலேயே அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

பரிசேயர்கள் தங்கள் தாராள குணத்தை மக்கள் பார்க்க வேண்டும் என்று விரும்பினர்; ராஜ்யத்தின் குடிமக்கள் அந்தரங்கமாகக் கொடுக்கிறார்கள். மாய்மாலக்காரர்கள் தங்கள் ஈர்க்கக்கூடிய ஜெபங்களை மற்றவர்கள் கேட்க வேண்டும் என்று விரும்பினர்; ராஜ்யத்தின் குடிமக்கள் எளிமையாகவும் ஊக்கமாகவும் ஜெபிக்கிறார்கள். பரிசேயர்கள் தங்கள் நீண்ட உபவாசங்களுக்காக மற்றவர்கள் தங்களை மதிக்க வேண்டும் என்று விரும்பினர்; ராஜ்யத்தின் குடிமக்கள் பிதாவின் பலனுக்காக மட்டுமே உபவாசிக்கிறார்கள்.

(5) ராஜ்யத்தின் குடிமக்கள் தங்கள் செல்வத்தை நம்புவதில்லை அல்லது தங்கள் தேவைகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

மாறாக, அவர்கள் தங்கள் பரலோகப் பிதாவின் ஏற்பாட்டை (provision) நம்புகிறார்கள்.

(6) ராஜ்யத்தின் குடிமக்கள் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதில்லை.

இருப்பினும், கள்ளப் போதகர்களின் கெட்ட கனியைப் பகுத்தறிவதில் அவர்கள் கவனமாக இருக்கிறார்கள்.

(7) ராஜ்யத்தின் குடிமக்கள் தங்கள் ஜெபங்களில் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

பரலோகத்திலிருக்கிற தங்கள் பிதா தம்மிடம் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பார் என்பதை அறிந்திருப்பதால், ராஜ்யத்தின் குடிமக்கள் தங்கள் ஜெபங்களில் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்! (மத்தேயு 7:11).

(8) இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன என்பதை ராஜ்யத்தின் குடிமக்கள் புரிந்துகொள்கிறார்கள்.

அங்கே ஒரு விரிவான வாசல் மற்றும் ஒரு இடுக்கமான வாசல் உள்ளது. ஒரு நல்ல மரம் மற்றும் ஒரு கெட்ட மரம் உள்ளது. ஒரு புத்தியுள்ள சிற்பாச்சாரி மற்றும் ஒரு புத்தியில்லாத சிற்பாச்சாரி இருக்கிறான். ராஜ்யத்தின் குடிமக்கள் பகுத்தறிவு உள்ளவர்கள்.

> "மலைப்பிரசங்கம் என்பது நிபந்தனைகளுடன் நேசிப்பதற்கும், சுயலாபத்துக்காக நேசிப்பதற்கும், அல்லது உண்மையான நீதிக்கான அழைப்பைப் புறக்கணிப்பதற்கும் எதிரான ஒரு எச்சரிக்கையாகும். உண்மையில், இப்பிரசங்கம் தேவனைப் போன்ற மன்னிப்பு, கொடுத்தல், நன்றியுணர்வு மற்றும் மனதுருக்கமுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கான ஓர் அழைப்பாகும்."
>
> - டாரெல் பாக்

ராஜ்யத்தின் கொள்கைகளின்படி வாழ்தல்

மலைப்பிரசங்கத்தின் கொள்கைகளின்படி நாம் எப்படி வாழ முடியும்? இதற்கான திறவுகோல் மத்தேயு 5:48-ல் உள்ளது. ராஜ்யத்தின் குடிமக்கள் நம் பரலோகப் பிதாவைப் போலவே இருக்கும்படி அழைக்கப்பட்டுள்ளார்கள். இயேசுவின் போதனை

அவ்வளவு எளிமையானது, அதே சமயம் அவ்வளவு கடினமானது. இயேசுவின் போதனைப்படி வாழ தேவனுடைய கிருபை மட்டுமே நமக்கு வல்லமையளிக்கிறது. நம் சொந்த பலத்தால், மலைப்பிரசங்கத்தின் கோரிக்கைகளுக்கு ஏற்ப நம்மால் ஒருபோதும் வாழ முடியாது. ஆவியானவர் மட்டுமே ராஜ்யத்தின் வாழ்க்கையைச் சாத்தியமாக்குகிறார்.

மலைப்பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது இந்தக் கொள்கையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் மலைப்பிரசங்கத்தை வெறும் சட்டமாக (நியாயப்பிரமாணமாக) மட்டுமே பிரசங்கித்தால், அது மக்களை விரக்திக்கும் சோர்வுக்கும் உள்ளாக்கும். தேவனுடைய கிருபையால் வழங்கப்பட்டு, குமாரனின் தியாகத்தால் சம்பாதிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் வல்லமையூட்டப்படுகிற ராஜ்யத்தின் வாழ்க்கைக்கான ஒரு மாதிரியாக நாம் மலைப்பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது மட்டுமே, அது உண்மையாகவே சுவிசேஷமாக, அதாவது "நற்செய்தியாக" மாறுகிறது.

► மலைப்பிரசங்கத்தை வாசித்து, இச்சுருக்கத்தை மறுஆய்வு செய்த பிறகு, கலந்துரையாடுங்கள்:

- மலைப்பிரசங்கத்தின் எந்தப் போதனைகள் உங்கள் சமூகத்தில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு மிகவும் கடினமானவை?

- ஒரு கிறிஸ்தவத் தலைவராக உங்களுக்கு மலைப்பிரசங்கத்தின் எந்தப் போதனைகள் மிகவும் கடினமானவை?

ராஜ்யத்தின் இரகசியம்: ராஜ்யத்தின் உவமைகள்

கோட்பாட்டு அறிக்கைகளை விட, கதைகளை நாம் நீண்ட காலம் நினைவில் வைத்திருக்கிறோம் என்பதை யூதப் போதகர்கள் அறிந்திருந்தார்கள். இதன் காரணமாக, உவமைகள் யூத ரபிமார்களிடம் பிரபலமான ஒரு கற்பித்தல் வடிவமாக இருந்தன. தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய ஆழமான சத்தியங்களைத் தொடர்புகொள்ள இயேசு உவமைகளைப் பயன்படுத்தினார்.

அவரது ஊழியத்தின் ஆரம்ப காலத்தில், உவமைகளைப் பயன்படுத்தியதன் மூலம், எதிரிகளுடன் நேரடி மோதலைத் தவிர்த்து, சீஷர்களுக்குக் கற்பிக்க இயேசுவால் முடிந்தது. பின்னர், எருசலேமில் உள்ள மதத் தலைவர்களை இயேசு நேரடியாக எதிர்த்து நின்றார்; ஆனால் இந்த ஆரம்ப ஆண்டுகளில், அவரது கவனம் சீஷர்களுக்குக் கற்பிப்பதாகவே இருந்தது.

அநேகர் உவமைகளைக் கேட்டார்கள், ஆனால் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் கேட்டும் உணராதிருக்கிறார்கள்; கண்டும் அறியாதிருக்கிறார்கள் (மத்தேயு 13:14). ஏன்? ஏனென்றால் அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தியிருந்தார்கள். ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்திருந்தபடி இது நடந்தது:

> இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே (மத்தேயு 13:15, ஏசாயா 6:9-லிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது).

உவமைகள் மூலம், கேட்கும் காதுள்ளவர்களுக்கு இயேசுவால் போதிக்க முடிந்தது.

மத்தேயு 13, ராஜ்யத்தின் இரகசியங்களைப் பற்றிய உவமைகளின் வரிசையை முன்வைக்கிறது (மத்தேயு 13:11). இந்த உவமைகள் விசுவாசியாத தலைவர்களிடமிருந்து இயேசுவின் போதனையின் பெரும்பகுதியை மறைக்கும் அதே வேளையில், இயேசுவைப் பின்பற்றுபவர்களுக்குத் தேவனுடைய ராஜ்யத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

► தொடர்வதற்கு முன், இங்கே நிறுத்தி மத்தேயு 13:1-52 மற்றும் லூக்கா 19:11-27 ஆகியவற்றை வாசியுங்கள். நீங்கள் ஒவ்வொரு உவமையையும் படிக்கும்போது, அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணையில் அதன் முதன்மையான கருப்பொருளை ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் சுருக்கமாக எழுதுங்கள். ஒவ்வொரு உவமைக்கும், இன்றைய ஊழியத்திற்கான ஒரு பயன்பாட்டைக் கண்டறியவும். முதல் உவமை உங்களுக்கு ஒரு உதாரணமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

ராஜ்யத்தின் உவமைகள்		
உவமை	**கருப்பொருள்**	**இன்றைய ஊழியத்திற்கான பாடம்**
விதைக்கிறவன்	விதையைக் கேட்பவர் அதற்கு அளிக்கும் பதில் நடவடிக்கையே அதன் பலனைத் தீர்மானிக்கிறது.	நான் பிரசங்கிக்கும்போதும் போதிக்கும்போதும், அதன் விளைவுகளுக்காகத் தேவனையே நம்பியிருக்க வேண்டும். அறுவடைக்கு நான் பொறுப்பல்ல; உண்மையோடு விதையை விதைப்பதே என் பொறுப்பு.
களைகள்		
கடுகு விதை		
புளித்த மாவு		
நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷம்		
விலையுயர்ந்த முத்து		
வலை		
வீட்டெஜமானாகிய மனுஷன்		
பத்துராத்தல் திரவியம்		

விதைக்கிறவனைப் பற்றிய உவமை (மத்தேயு 13:3-9, 18-23; லூக்கா 8:5-18)

ராஜ்யத்தைப் பற்றிய இந்த உவமைகளின் வரிசையில் முதல் உவமை, விதைக்கு நாம் அளிக்கும் பதில் நடவடிக்கையே அதன் பலனைத் தீர்மானிக்கிறது என்று போதிக்கிறது. பரலோகராஜ்யத்தில், சிலர் விசுவாசித்து கனி கொடுப்பார்கள், மற்றவர்களோ விசுவாசிக்க மறுப்பார்கள் அல்லது ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டு பின்னர் பின்வாங்கிப் போவார்கள்.

இந்த உவமையை 'நிலங்களைப் பற்றிய உவமை' என்று அழைக்கலாம், ஏனெனில் இது வெவ்வேறு விவசாயிகளைப் பற்றியது அல்ல, வெவ்வேறு நிலங்களைப் பற்றிய கதை. ஒவ்வொரு உதாரணத்திலும், விதை ஒன்றாகவே இருந்தது, விவசாயியும் ஒருவரே; வித்தியாசம் நிலத்தில் மட்டுமே இருந்தது. நாம் ராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கிக்கும்போது, சிலர் மற்றவர்களை விடக் குறைவாக ஏற்றுக்கொள்வதைக் கண்டு அதிர்ச்சியடையக் கூடாது. நாம் சோர்வடையக் கூடாது. சிலர் கனி கொடுக்கும் நிலமாக இருப்பார்கள் என்றும், மற்றவர்கள் வார்த்தைக்கு எதிராகத் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொள்வார்கள் என்றும் இயேசு போதித்தார்.

விதைக்கிறவனைப் பற்றிய உவமைக்கு லூக்கா அளிக்கும் முடிவுரை, இது சத்தியத்திற்குக் செவிகொடுப்பதைப் பற்றிய ஒரு உவமை என்பதைக் காட்டுகிறது. "ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்துக் கவனியுங்கள்; உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனெவனோ அவன் தனக்குண்டென்று நினைக்கிறதும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்றார்" (லூக்கா 8:18). ஒரு நபர் சத்தியத்திற்குச் சாதகமாகப் பதிலளிக்கும்போது, அவர்கள் அதிக சத்தியத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். பிரசங்கத்தில் மற்ற உவமைகளைக் கூறுவதற்கு முன்பு, கனி கொடுக்கும் நிலத்தைப் போல எப்படிக் கேட்பது என்று இயேசு தன் பார்வையாளர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

களைகளைப் பற்றிய உவமை (மத்தேயு 13:24-30, 36-43)

தேவனுடைய ராஜ்யம் துன்மார்க்கர் மீது உடனடி நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும் என்று யூத மக்கள் எதிர்பார்த்தார்கள். உலகத்தில் விசுவாசிகளும் அவிசுவாசிகளும் ஒன்றாக வாழும் ஒரு காலக்கட்டத்திற்காக இயேசு தம் சீஷர்களைத் தயார்படுத்தினார். இந்தக் கதையில், வயல் என்பது உலகம் (மத்தேயு 13:38). உலகத்தின் முடிவில்தான் தேவதூதர்கள் களைகளைச் சேர்த்து அக்கினியில் சுட்டெரிப்பார்கள் (மத்தேயு 13:40). தேவனுடைய ராஜ்யம் மனிதனின் காலக்கணிப்பின்படி அல்ல, தேவனுடைய காலக்கணிப்பின்படியே வளர்ச்சியடையும்.

கடுகுவிதையைப் பற்றிய உவமை (மத்தேயு 13:31-32)

இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தைப் பார்த்த எவரும், உலகம் முழுவதும் சபை பரவும் என்று கணித்திருக்க முடியாது. சீஷர்கள் படிப்பறிவில்லாதவர்கள், ஏழைகள் மற்றும் பயந்த சுபாவமுள்ளவர்கள். அவர்களுக்குக் கவர்ச்சியோ (charisma), சமூக அந்தஸ்தோ அல்லது அரசியல் அதிகாரமோ இல்லை. அவர்கள் அந்தச் சிறிய கடுகுவிதையைப் போல இருந்தார்கள். ஆனால் ஒரு சிறிய கடுகுவிதை எப்படி ஒரு பெரிய மரமாக அல்லது செடியாக வளர்ந்ததோ, அப்படியே தேவனுடைய ராஜ்யம் உலகம் முழுவதும் பரவும்.

தேவனுடைய ராஜ்யத்தைக் கடுகுவிதைக்கு இயேசு ஒப்பிடுவதைக் கேட்டு அவருடைய பார்வையாளர்கள் அதிர்ச்சியடைந்திருப்பார்கள். தேவனுடைய ராஜ்யம் வல்லமையோடும் மகிமையோடும் வரும் என்று யூத ரபிமார்கள் எதிர்பார்த்தார்கள். பாவிகள் மீதான நியாயத்தீர்ப்பு வெளிப்படும் என்று எதிர்பார்த்தார்கள்; ரோமுக்கு எதிராக இராணுவப் புரட்சியை எதிர்பார்த்தார்கள்; புதிய யூத ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது சமூகப் புரட்சியை எதிர்பார்த்தார்கள். அதற்கு மாறாக, ராஜ்யத்தின் மிகச் சாதாரணமான (கவர்ச்சியற்ற) தொடக்கத்திற்காக இயேசு தம் சீஷர்களைத் தயார்படுத்தினார்.

நாம் புதிய ஏற்பாட்டை வாசிக்கும்போது, முதல் நூற்றாண்டில் யூதேயாவின் அற்பமான நிலையை மறந்துவிடக்கூடும். யூதேயா புதிய ஏற்பாட்டின் மையமாக இருக்கிறது, ஆனால் அது முதல் நூற்றாண்டு உலகின் மையத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தது. உங்கள் நாட்டின் தலைநகரைப் பற்றிச் சிந்தியுங்கள். முதல் நூற்றாண்டில் யூதேயாவின் பங்கு அதுவல்ல; அந்தப் பங்கு ரோமுக்கு உரியது. சிறந்த பல்கலைக்கழகமும் கல்வி முறையும் கொண்ட ஒரு நகரத்தைப் பற்றிச் சிந்தியுங்கள். முதல் நூற்றாண்டில் யூதேயாவின் பங்கு அதுவல்ல; அந்தப் பங்கு அத்தேனே (Athens) அல்லது அலெக்ஸாந்திரியாவுக்கு உரியது.

உலகின் பிற நாடுகளோடு ஒப்பிடுகையில், யூதேயா அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை; பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை; சமூக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை. உங்கள் நாட்டில் மிகவும் முக்கியத்துவமற்ற பிராந்தியங்களில் ஒன்றை நினைத்துப் பாருங்கள்; ரோமப் பேரரசில் யூதேயாவின் இடம் அதுவாகவே இருந்தது.

ரோமப் பேரரசின் ஒரு மூலையிலிருந்து வந்த ஒரு சிறிய குழுவிலிருந்து, எல்லா தேசங்களையும் எட்டும் ஒரு மரமாகத் தேவனுடைய ராஜ்யம் வளர்ந்ததை கடுகுவிதை உவமை காட்டியது.[34] தேவனுடைய ராஜ்யம் யூதர்களுக்கு மட்டுமே உரியது என்று யூத

[34] தானியேல் 4:12 மற்றும் எசேக்கியேல் 31:6-ல், மரத்தில் வந்து தங்கும் பறவைகள் பல தேசங்களைச் சென்றடையும் ஒரு பெரிய ராஜ்யத்தைக் குறிக்கின்றன.

ரபிமார்கள் போதித்தார்கள்; தேவனுடைய ராஜ்யம் பூமியின் எல்லைகள் வரை எட்டும் என்று இயேசு போதித்தார்.

புளித்தமாவைப் பற்றிய உவமை (மத்தேயு 13:33)

புளித்தமாவைப் பற்றிய உவமையும் ராஜ்யத்தின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வளர்ச்சியை விளக்குகிறது. ராஜ்யம் பரவுவதற்கான அடையாளமாக இயேசு புளித்தமாவைப் பயன்படுத்தினார். மூன்று படி மாவு 100 பேருக்கு அப்பத்தை உண்டாக்கும். அதன் ஆரம்பம் அற்பமாக இருந்தாலும், ராஜ்யம் ஒரு வல்லமைமிக்க சக்தியாக வளரும்.

புளித்தமாவைப் பற்றிய உவமை ராஜ்யத்தின் நிலையான வளர்ச்சியைக் காட்டுகிறது. புளித்தமாவு நாடகத்தனமானது அல்ல; அது டைனமைட் போல வெடிக்காது; அது அப்பம் முழுவதும் அமைதியாகத் தனது வேலையைச் செய்கிறது. தேவனுடைய ராஜ்யம் உலகளாவிய அடையாளங்களுடன் அறிமுகப்படுத்தப்படும் என்று யூத ரபிமார்கள் போதித்தார்கள்; ஆனால் ராஜ்யம் உலகம் முழுவதும் பரவும் வரை மெதுவாக, ஆனால் நிலையாக வளரும் என்று இயேசு காட்டினார்.

நிலத்தில் புதைந்திருக்கிற பொக்கிஷம் மற்றும் விலையுயர்ந்த முத்து பற்றிய உவமைகள் (மத்தேயு 13:44-46)

இந்த இரண்டு உவமைகளும் ராஜ்யத்தின் மகிழ்ச்சியைப் பற்றியவை. இரண்டிலும், ஒரு மனிதன் மிகப்பெரிய மதிப்புள்ள ஒன்றைக் கண்டறிந்து, தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று அதை வாங்கினான். இந்த உவமைகளின் மையம் அந்த மனிதனின் தியாகம் அல்ல, அவ்வளவு மதிப்புள்ள ஒன்றைக் கண்டுபிடித்த அவனது மகிழ்ச்சியே. அவன் தனது மகிழ்ச்சியினாலே போய் எல்லாவற்றையும் விற்கிறான்! உண்மையான சீஷர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள்.

இந்த உவமைகள் ராஜ்யத்தின் மேலான மதிப்பை எடுத்துக் காட்டுகின்றன. தேவனுடைய ராஜ்யம் வாழ்க்கையின் மீதான நம் கண்ணோட்டம் முழுவதையும் பாதிக்கிறது. மற்றோரிடத்தில் இயேசு, "உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்" (மாற்கு 9:47) என்று கூறினார். தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எத்தகைய பூமிக்குரிய தியாகத்திற்கும் ஈடானது.

வலையைப் பற்றிய உவமை (மத்தேயு 13:47-50)

கலிலேயாக் கடலில் உள்ள மீன்பிடிப் படகுகள் ஒரு பெரிய வலையை இழுத்து, உண்ணக்கூடிய மற்றும் உண்ணக்கூடாத மீன்கள் என இரண்டையும் பிடிக்கும். கரைக்குத் திரும்பியதும், மீனவர்கள் நல்ல மீன்களைக் கெட்டவைகளிலிருந்து பிரிப்பார்கள்.

களைகளைப் பற்றிய உவமையைப் போலவே, இந்த உவமையும் உலகத்தின் முடிவில் நியாயத்தீர்ப்பு வரும் என்பதைச் சீஷர்களுக்கு நினைப்பூட்டியது. உடனடி நியாயத்தீர்ப்பை எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, தேவன் தனது காலக்கணிப்பில் பொல்லாதவர்களையும் நீதிமானங்களையும் நியாயந்தீர்ப்பார் என்பதை அறிந்து அவர்கள் ராஜ்யத்தைப் பிரசங்கிக்க வேண்டும். நல்லதுக்கும் கெட்டதுக்கும் இடையே பிரிவினையை உண்டாக்கும் ஒரு இறுதி நியாயத்தீர்ப்பு இருக்கும், ஆனால் அதன் காலத்தை நாம் தேவனிடம் விட்டுவிட வேண்டும்.

வீட்டெஜமானாகிய மனுஷனைப் பற்றிய உவமை (மத்தேயு 13:51-52)

இயேசு இந்த உவமைகளின் வரிசையை, சீஷர்கள் கனி கொடுக்கும் நிலமாக இருக்க வேண்டும் என்று போதிப்பதன் மூலம் தொடங்கினார். மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய அவர்களின் பொறுப்பைப் போதிப்பதன் மூலம் அவர் இந்த வரிசையை முடித்தார். பரலோக ராஜ்யத்துக்காகப் பயிற்றுவிக்கப்பட்ட வேதபாரகன் ஒவ்வொருவனும், தனது அறிவாகிய பொக்கிஷத்திலிருந்து மற்றவர்களுக்குக் கற்பிக்க எதையாவது கொண்டுவர வேண்டும். நாம் நமது நன்மைக்காக மட்டும் கற்றுக்கொள்வதில்லை. சீஷர்கள் மற்ற சீஷர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவே பயிற்றுவிக்கப்பட்டனர்.

பத்து ராத்தல்[35] பற்றிய உவமை (லூக்கா 19:11-27)

► லூக்கா 19:11-27-ஐ வாசிக்கவும்.

இந்த உவமை லூக்காவிலிருந்து வருகிறது, ஆனால் மத்தேயு, ஒலிவமலைப் பிரசங்கத்தின் போது இயேசு கூறிய இதே போன்ற ஒரு உவமையை உள்ளடக்கியுள்ளார். இயேசு எருசலேமுக்குச் சமீபமாயிருந்தபடியினாலும், தேவனுடைய ராஜ்யம் உடனே தோன்றும் என்று அவர்கள் நினைத்தபடியினாலும், அவர் இந்தப் பத்து ராத்தல் உவமையைச் சொன்னார் (லூக்கா 19:11).

இயேசு எருசலேமை நெருங்க நெருங்க, மக்கள் ஒரு அரசியல் மேசியாவை எதிர்பார்த்து மிகுந்த உற்சாகமடைந்தனர். ராஜ்யத்திற்காகக் காத்திருக்கும்போது சீஷர்கள் உண்மையாக இருக்க வேண்டும் என்று போதிக்க இயேசு இந்த உவமையைச் சொன்னார். எஜமான் தங்களுக்குக் கொடுத்ததை அவர்கள் கவனமாக மறைத்து வைக்கக்கூடாது; மாறாக, ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காகத் தங்கள் வளங்களைப் பயன்படுத்த வேண்டும்.

---

[35] ஒரு "ராத்தல்" என்பது ஒரு பண அலகாகும். இது ஒரு தொழிலாளியின் சுமார் மூன்று மாத ஊதியத்திற்குச் சமமானது.

ராஜ்யத்தின் முழுமையான ஸ்தாபிதம்

► மத்தேயு 24-25-ஐ வாசிக்கவும்.

இயேசுவின் ஆரம்பகாலப் போதனைகளில் பெரும்பகுதி ராஜ்யத்தின் உடனடித் தொடக்கத்தை மையமாகக் கொண்டிருந்தது. அவர் தனது பூமிக்குரிய ஊழியத்தின் முடிவை நெருங்கியபோது, எதிர்காலத்தில் ராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படுவதைக் குறித்து இயேசு அதிகம் பேசினார். மத்தேயு 24 மற்றும் 25-ல் உள்ள ஒலிவமலைப் பிரசங்கம், ராஜ்யத்தின் வாக்குத்தத்தங்களின் எதிர்கால நிறைவேறுதலைப் பற்றிய இயேசுவின் மிக விரிவான போதனையாகும்.

ஒரு நெருக்கமான பார்வை: ஏரோதுவின் தேவாலயம்



கி.மு. 19-ல், மகா ஏரோது தேவாலயத்தைப் புதுப்பிக்கும் ஒரு பெரிய பணியைத் தொடங்கினான்.[36] கி.மு. 516-ல் செருபாபேலால் கட்டி முடிக்கப்பட்ட இந்த ஆலயம்,

[36] "Temple Comparison" என்பது Ricardo Gandelman அவர்களால் (CC BY 2.0) புகைப்படம் மற்றும் EB Vol. IV and Gal m ஆகியவற்றின் தேவாலயத் திட்டவரைபடங்களைக் கொண்டு SGC-யால் உருவாக்கப்பட்டது. இது https://www.flickr.com/photos/sgc-library/52345523784 என்ற இணையதளத்தில் பொதுக் களத்தில் (CC0) கிடைக்கிறது.

சாலொமோனின் முதல் ஆலயத்தை விடச் சிறியதாகவும் எளிமையாகவும் இருந்தது. ஏரோது தேவாலயத்தை அதன் முந்தைய அழகிற்கு மீட்டெடுக்க விரும்பினான். 80 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த ஒரு கட்டுமானத் திட்டத்தை அவன் தொடங்கினான். ஏரோது கட்டுமானத்திற்காக 10,000 திறமையான தொழிலாளர்களை நியமித்தான், மேலும் ஆசாரியர்கள் மட்டுமே நுழையக்கூடிய தேவாலயத்தின் பகுதிகளில் வேலை செய்ய 1,000 லேவியர்களுக்குப் பயிற்சி அளித்தான்.

உலகின் மிகப் பெரிய தேவாலயத்தைக் கட்டியவராகத் தான் நினைவுகூரப்பட வேண்டும் என்று ஏரோது நம்பினான். இயேசுவின் ஊழியக் காலத்திற்குள், வேலை 46 ஆண்டுகளாகத் தொடர்ந்துகொண்டிருந்தது (யோவான் 2:20). கி.பி. 63 வரை முழு ஆலயமும் கட்டி முடிக்கப்படவில்லை, ஆனால் கி.பி. 70-ல் ரோமத் தளபதி தீத்து எருசலேமை முற்றுகையிட்டதைத் தொடர்ந்து, ஏழே ஆண்டுகளில் அது அழிக்கப்பட்டது.

ஏரோதுவின் தேவாலயம் சாலொமோனின் தேவாலயத்தை விட இரண்டு மடங்கு பெரியதாக இருந்தது, பண்டிகைகளுக்காக எருசலேமுக்கு வந்த ஆயிரக்கணக்கான யூத யாத்ரீகர்களுக்குப் போதுமான இடவசதி இருந்தது. இது ரோமப் பேரரசின் அதிசயங்களில் ஒன்றாக இருந்தது.

ராஜ்யத்தின் முழுமையான ஸ்தாபிதம் (தொடரும்)

எருசலேமில் இயேசுவின் கடைசி வாரத்தில், சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க வந்தார்கள். தேவாலயத்தின் கட்டுமானம் இன்னும் நடந்துகொண்டிருந்ததால், அவர்கள் தேவாலயத்திற்கு முன்பு வந்ததிலிருந்து மாற்றப்பட்ட ஒரு அம்சத்தைச் சுட்டிக்காட்டியிருக்கலாம்.

தேவாலயத்தின் அழிவைப் பற்றிய ஒரு தீர்க்கதரிசனத்துடன் இயேசு பதிலளித்தார். “இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று கூறினார். அப்பொழுது சீஷர்கள், “இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும்” (மத்தேயு 24:2, 3) என்று கேட்டார்கள்.

சீஷர்களின் கேள்வி இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது; இயேசுவின் பதிலிலும் இரண்டு பகுதிகள் இருந்தன. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் உடனடி மற்றும் எதிர்கால அம்சங்கள் இரண்டையும் உள்ளடக்கியது போலவே, இயேசுவின் தீர்க்கதரிசனமும் விரைவில் நடக்கவிருக்கும் சில நிகழ்வுகளையும், உலகத்தின் முடிவில் வரவிருக்கும் சில நிகழ்வுகளையும் உள்ளடக்கியிருந்தது.

- சீஷர்கள், "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?" என்று கேட்டார்கள். "இவைகள்" (ஒரு கல்லின் மேல் ஒரு கல் இராதபடிக்கு தேவாலயம் இடிக்கப்படுவது) கி.பி. 70-ல் நடந்தது.

- சீஷர்கள், "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்று கேட்டார்கள். "மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை" (மத்தேயு 24:30) பற்றிய எதிர்கால வருகையைக் குறித்து இயேசு பேசினார்.

யூதர்கள் மற்றும் புறஜாதிகள் என எல்லா தேசத்தாரையும் ராஜ்யம் உள்ளடக்கும் என்று இயேசு காட்டினார். ராஜ்யத்தில் புறஜாதிகளைச் சேர்ப்பது "உலகம் உண்டானது முதல்" (மத்தேயு 25:34) தேவனுடைய திட்டமாக இருந்தது என்று அவர் காட்டினார். தேவனுடைய ராஜ்யம் அவருடைய மக்களுக்கான நித்தியத் திட்டமாக இருந்தது.

ஒலிவமலைப் பிரசங்கத்தில் உள்ள இரண்டு உவமைகள், நாம் ராஜ்யத்திற்காகக் காத்திருக்கும்போது உண்மையாக இருக்க வேண்டும் என்று போதிக்கின்றன. ஐந்து புத்தியில்லாத கன்னிகைகள் காத்திருந்தார்கள், ஆனால் சரியான ஆயத்தம் இல்லாமல் இருந்தார்கள். ஒரு தாலந்து வாங்கிய ஊழியக்காரன் காத்திருந்தான், ஆனால் அதை உண்மையோடு நிர்வகிக்கவில்லை. ராஜ்யத்தின் குடிமக்களாக, நாம் ராஜாவுக்குச் செய்யும் சேவையில் உண்மையுள்ளவர்களாகவும் விடாமுயற்சியுள்ளவர்களாகவும் இருக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

இறுதி நியாயத்தீர்ப்பில், மத்தேயு 13-ல் வாக்களிக்கப்பட்ட நல்லது மற்றும் கெட்டதுக்கு இடையிலான பிரிவினை நிகழும். இந்த நியாயத்தீர்ப்பு எப்போது, எப்படி நடக்கும் என்பது பற்றியது அல்ல முதன்மைப் பாடம். மாறாக, இறுதி நியாயத்தீர்ப்பிற்குத் தயாராகும் வகையில் ராஜ்யத்தின் குடிமக்கள் இன்று எப்படி வாழ வேண்டும் என்பதே இயேசுவின் போதனையாகும். அந்த நாளில், ராஜா, "மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" (மத்தேயு 25:40) என்று சொல்வார். ராஜாவின் வருகைக்காக நாம் எப்போதும் ஆயத்த நிலையில் வாழ வேண்டும். அவர் திரும்பும்போது நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும்.

பயன்பாடு: சீஷத்துவத்தின் விலை

► லூக்கா 9:21-27-ஐ வாசிக்கவும்.

தேவனுடைய ராஜ்யத்தின் குடியுரிமை கிருபையினால் மட்டுமே கிடைக்கிறது. நற்கிரியைகளைச் செய்வதன் மூலம் நாம் ராஜ்யத்தின் குடிமக்களாக ஆவதில்லை. இருப்பினும், சீஷத்துவ வாழ்க்கைக்கு எந்த விலைக்கிரயமும் இல்லை என்று இதற்கு

அர்த்தமல்ல. லூக்கா 9-ல், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குச் சீஷத்துவத்தின் விலைக்கிரயத்தைப் பற்றிக் கற்பித்தார்.

டாலஸ் வில்லார்ட், "கிருபை முயற்சிக்கு எதிரானது அல்ல; கிருபை சம்பாதிப்பதற்குத் தான் எதிரானது" என்று எழுதினார்.[37] சீஷர்களாக நாம் எடுக்கும் முயற்சி கிருபைக்க்கு எதிரானது அல்ல. உண்மையில், சீஷத்துவத்தைப் பின்தொடரும் வல்லமை நமக்குக் கிடைப்பதே தேவனுடைய கிருபையினால் தான்.

இயேசுவின் போதனையில் உள்ள இந்த மாதிரியைக் கவனியுங்கள்: **சிலுவை, அதன் பிறகு மகிமை**.

- இயேசு தனது மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்தார் (லூக்கா 9:21-22). ராஜ்யத்தில் நமக்குக் குடியுரிமையை வழங்குவதற்காக இயேசு செலுத்திய விலை இதுவே.

- தம்முடைய சீஷர்களாக இருப்பதற்கு என்ன விலை கொடுக்க வேண்டும் என்பதை இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களிடம் கூறினார் (லூக்கா 9:23-25). "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்." ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக இயேசு சிலுவையில் பாடுபட்டார்; நாம் ராஜ்யத்தில் வாழ விரும்பினால் சிலுவையைச் சுமக்க வேண்டும்.

- இயேசு தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிப் பேசினார் (லூக்கா 9:26-27). "என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்."

சிலுவையில் பங்குபெறாமல் நாம் ராஜ்யத்தின் மகிமையில் பங்குபெற முடியாது. இயேசு, "மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்" (பிலிப்பியர் 2:8-9).

தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் அதே மாதிரியைப் பின்பற்றுகிறோம். "கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக" (1 பேதுரு 5:10). ராஜ்யத்தில் வாழ்க்கையின் வடிவம் இதுதான்.

---

[37] Dallas Willard, *The Great Omission: Reclaiming Jesus's Essential Teachings on Discipleship*. (New York: HarperOne, 2006)

மகிமைக்கு உயர்த்தப்படுவதற்கு முன்பாகக் கிறிஸ்து சிலுவையில் பாடுபட்டார். அவருடைய சீஷர்கள் அவருடைய நித்திய மகிமையை அனுபவிப்பதற்கு முன்பாகச் சிலுவையைச் சுமக்க வேண்டும்.

இயேசு அர்ப்பணிப்புள்ள சீஷர்களைத் தேடினார். தம் சீஷர்களுக்குத் தலைசிறந்த அறிவு இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை; அவர்களுக்கு உண்மையுள்ள இதயம் இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். ஒரு சீஷனாக இருப்பதற்கு என்ன விலை கொடுக்க வேண்டும்? "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத்தேயு 16:24).

1. **சீஷன் தன்னைத்தான் வெறுக்க வேண்டும்**. சுயத்திற்கு "இல்லை" என்று சொல்வது கடினமான விஷயம்.

2. **சீஷன் தன் சிலுவையைச் சுமக்க வேண்டும்.** சிலுவை என்பது மரணத்தைக் குறிக்கிறது என்பதை இயேசுவைப் பின்பற்றியவர்கள் புரிந்திருந்தார்கள். சிலுவை துன்பத்தையும் அவமானத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. ஆனால் சீஷத்துவத்திற்குச் சிலுவை தேவை என்பதை ஆதி கிறிஸ்தவர்கள் அறிந்திருந்தார்கள். இக்னேஷியஸ் இரத்தசாட்சியாக மரிப்பதற்கு ரோமுக்குப் பயணம் செய்தபோது, "நான் இப்போதுதான் ஒரு சீஷனாக இருக்கத் தொடங்குகிறேன்" என்று கூறினார். சீஷத்துவத்திற்குச் சிலுவை தேவை.

3. **சீஷன் பண்பிலும் நடத்தையிலும் தொடர்ந்து இயேசுவைப் பின்பற்ற வேண்டும்**. 'பின்பற்று' என்ற வினைச்சொல் நிகழ்காலத்தில் உள்ளது.

சீஷத்துவமானது அதன் விலைக்கிரயத்திற்குத் தகுதியானதா? ஒரு சீஷனாக இருப்பதற்கு இயேசு மூன்று காரணங்களைக் கூறினார். முரண் என்னவென்றால், பலரும் சீஷத்துவத்தைத் தவிர்ப்பதற்குக் கூறும் அதே காரணங்கள் இவைதான். நாம் ஏன் சீஷத்துவத்தின் விலையைச் செலுத்த வேண்டும்?

1. **பாதுகாப்பு.** சிலுவையைத் தவிர்ப்பதன் மூலம் தன் ஜீவனை இரட்சிக்க முயலுகிறவன் அதை இழந்துபோவான் (லூக்கா 9:24).

2. **மெய்யான செல்வம்.** கிறிஸ்துவோடு தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள மறுப்பவன் எல்லாவற்றையும் இழப்பான் (லூக்கா 9:25).

3. **வெகுமதி.** கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் மட்டுமே ராஜ்யத்தில் வரவேற்கப்படுவார்கள் (லூக்கா 9:26-27).

► லூக்கா 14:25-33-ஐ வாசிக்கவும்.

இயேசு பின்னர் சீஷத்துவத்தைப் பற்றிய தனது போதனையை விரிவுபடுத்தினார். அவரது அறிவுரை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. சீஷத்துவத்தின் விலை (லூக்கா 14:26-27)
2. விலையைக் கணக்கிடாமல் சீஷனாவதில் உள்ள மதியீனம் (லூக்கா 14:28-32)
3. சீஷத்துவத்தின் விலையைப் பற்றிய நினைவூட்டல் (லூக்கா 14:33)

நீங்கள் ஒரு கார் வாங்கச் சென்றால், விற்பனையாளர் சில நேரங்களில் இறுதி விலையை மறைக்க முயற்சிப்பார். அவர், "இந்த அழகான காரைப் பாருங்கள்!", "இந்தக் காரின் சக்தியை உணருங்கள்!" என்று கூறுவார். நீங்கள் அந்தக் காரின் மேல் காதல் கொண்ட பிறகே அவர் விலையைச் சொல்வார்.

இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு ராஜ்யத்திற்குச் செல்லும் எளிதான பாதையை ஒருபோதும் வழங்கவில்லை. அவர் விலைப்பட்டியலுடனே தொடங்கினார்:

> யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் (லூக்கா 14:26-27).

இப்பகுதியில், ஒன்றை வெறுப்பது என்பது அதை வேறொன்றை விடக் குறைவாக நேசிப்பதாகும். இயேசு, "உங்கள் சொந்தத் தகப்பன், தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், ஏன் உங்கள் சொந்த ஜீவனையும் விட என்னை அதிகமாக நேசிக்காவிட்டால் நீங்கள் என் சீஷராக இருக்க முடியாது!" என்று கூறுகிறார்.

ஒரு சீஷனாக இருக்க எவ்வளவு விலை கொடுக்க வேண்டும்? எல்லாம்! கிறிஸ்துவின் சீஷனாக இருப்பது என்பது மேசியாவின் வாக்குத்தத்தங்களின் மகிழ்ச்சியில் பங்கு கொள்வதை விட அதிகம்; அதற்குச் சிலுவையில் பங்குபெறுவது அவசியம்.

► யோவான் சுவிசேஷம் சீஷத்துவத்திற்கான மூன்று கூடுதல் நிபந்தனைகளைத் தருகிறது. யோவான் 8:31, யோவான் 13:35, மற்றும் யோவான் 15:8 ஆகியவற்றை வாசியுங்கள். லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்களில் உள்ள சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளின் அடிப்படையில், உங்கள் ஊழியத்தில் நீங்கள் சீஷர்களை உருவாக்குகிறீர்களா?

முடிவுரை: தேவனுடைய ராஜ்யம் என்றால் என்ன?

கிறிஸ்து திரும்ப வரும் வரை, ராஜ்யத்தைப் பற்றிய அவரது போதனையின் எல்லா விவரங்களையும் நாம் புரிந்து கொள்ள மாட்டோம். இருப்பினும், சுவிசேஷங்கள் தேவனுடைய ராஜ்யத்தின் பல பண்புகளைக் காட்டுகின்றன:

- தேவனுடைய ராஜ்யம் ஒரு ஆவிக்குரிய ராஜ்யம். “தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது” (ரோமர் 14:17). மறுபிறப்பு நம்மைச் சாத்தானின் வல்லமையிலிருந்து விடுவித்து, தேவனுடைய ராஜ்யத்தின் பங்காளிகளாக மாற்றுகிறது.

- தேவனுடைய ராஜ்யம், கடைசிக் காலத்தில் ஒரு சரீரப்பிரகாரமான, அரசியல் ரீதியான ஆட்சியையும் உள்ளடக்கும்.

- தேவனுடைய ராஜ்யம் உலகளாவியது; அது யூத தேசத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

- தேவனுடைய ராஜ்யம் என்பது உலகில் கிரியை செய்யும் தேவனுடைய வல்லமையாகும். ராஜ்யம் என்பது ஒரு பௌதிக ஆளுகை அல்ல. 10 ராத்தல் உவமையில், ராஜ்யம் என்பது ஆளுவதற்கான அதிகாரமே தவிர, ஒரு புவியியல் இடம் அல்ல (லூக்கா 19:11-12).

- தேவனுடைய ராஜ்யம் இயற்கைக்கு அப்பாற்பட்டது (அதிசயமானது). மனிதன் விதையை விதைக்கிறான்; அவனால் அதை வளரச் செய்ய முடியாது. தேவனுடைய வல்லமையின் மூலம் ராஜ்யம் வளர்கிறது.

- தேவனுடைய ராஜ்யம் என்பது ஒரு தெளிவற்ற எதிர்கால நம்பிக்கை மட்டுமல்ல; அது உடனடிப் பதிலை (செயல்பாட்டை) கோருகிற ஒரு தற்போதைய எதார்த்தமாகும்.

- தேவனுடைய ராஜ்யம் இயேசுவின் ஊழியத்தின் மூலம் தொடங்கப்பட்டது. பிசாசுகளின் மீதான அவருடைய வல்லமை, சாத்தானின் ராஜ்யத்தின் மீது தேவனுடைய ராஜ்யம் கொண்ட வெற்றியை நிரூபித்தது.

- தேவனுடைய ராஜ்யம் சபையின் கிரியைகள் மூலம் தொடர்ந்து முன்னேறி வருகிறது. தற்போதைய காலத்தில் விசுவாசிகள் எப்படி வாழ அழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மலைப்பிரசங்கம் காட்டுகிறது.

- மகிமையில் ஆட்சி செய்ய கிறிஸ்து கடைசியாகத் திரும்பும்போது தேவனுடைய ராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும். சாத்தானின் வல்லமை முறியடிக்கப்படும், தேவன் நித்தியமாக ஆட்சி செய்வார்.

► இந்தப் பாடத்திட்டத்தின் பின்பகுதியில் “ராஜ்யத்தின் சுவிசேஷம்” என்ற தலைப்பிலான ஒரு பிரசங்கம் உள்ளது. பாடம் 7-ஐத் தொடர்வதற்கு முன் இதை வாசிக்கவும்.

பாடம் 6 வீட்டுப்பாடம்

இயேசுவின் மலைப்பிரசங்கத்தை அடிப்படையாகக் கொண்டு மூன்று பிரசங்கங்களின் வரிசையைத் தயார் செய்யுங்கள். உங்கள் பிரசங்கங்களின் கருப்பொருள் “தேவனுடைய ராஜ்யத்தில் வாழ்க்கை” என்பதாக இருக்க வேண்டும். தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்களாக நாம் இன்று எப்படி வாழ வேண்டும் என்பதைக் காட்டுங்கள். நீங்கள் அந்தப் பிரசங்கத்தை நற்செய்தியாகப் பிரசங்கிப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். தேவனுடைய ராஜ்யத்தில் குடிமக்களாக வாழ தேவனுடைய கிருபை எப்படி நமக்கு வல்லமையளிக்கிறது என்பதைக் காட்டுங்கள்.

பாடம் 7
இயேசுவைப்போல அன்பு கூறுதல்

பாடத்தின் நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:
(1) இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் அன்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல்.

(2) தேவனிடத்தில் அன்பு கூறுவது என்பது தேவனுடனான உறவு, தேவனுடைய வார்த்தையின் அறிவு மற்றும் தேவனுடைய சித்தத்தில் நம்பிக்கை வைப்பதை உள்ளடக்கியது என்பதைப் புரிந்துகொள்ளுதல்.

(3) ஊழியத்தில் மக்களிடம் இயேசு காட்டிய அன்பைப் பின்பற்றுதல்.

(4) தேவனுக்குத் தொடர்ந்து ஒப்புக்கொடுத்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல்.

(5) அன்றாட வாழ்வில் இயேசுவின் குணாதிசயத்தை வெளிப்படுத்துதல்.

ஊழியத்திற்கான கோட்பாடு

கிறிஸ்துவைப் போன்ற ஊழியத்திற்கு, கிறிஸ்துவைப் போன்ற அன்பே உந்துசக்தியாக இருக்கிறது.

முன்னுரை

இயேசுவின் முழு வாழ்க்கையும் ஊழியமும் அன்பினால் தூண்டப்பட்டதாக இருந்தது. தேவனிடத்தில் அன்பு கூருவதும் மற்றவர்களிடத்தில் அன்பு கூருவதுமே தனது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மையமாக இருந்தது என்பதை அவர் திரும்பத் திரும்பக் காட்டினார். நாம் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றினால், அன்பு நமது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மையமாக இருக்க வேண்டும். நல்ல சமாரியன் உவமையை விட இது எங்கும் தெளிவாக இல்லை.

► லூக்கா 10:25-37-ஐ வாசிக்கவும்.

இந்த உவமையைச் சொல்வதற்குச் சற்று முன்பு, இயேசு, “பிதாவே... இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்” (லூக்கா 10:21) என்று கூறினார். இது ஆவிக்குரிய புரிதலைப் பற்றிய முக்கியமான பாடத்தைப் போதிக்கிறது. ஆவிக்குரிய சத்தியத்தைப்

புரிந்துகொள்வதற்கு அறிவார்ந்த படிப்பை விட அதிகம் தேவை; அதற்கு ஆவிக்குரிய வெளிப்பாடு தேவை. தேவனுடைய சத்தியம், தேவ ஆவியின் உதவியுடன் ஒரு குழந்தை புரிந்துகொள்ளும் அளவுக்கு எளிமையானது, ஆனால் மனத் திறமையை மட்டுமே கொண்டு ஒரு அறிஞர் புரிந்துகொள்வதற்கு அது மிகவும் ஆழமானது.

இது எப்படி இருக்க முடியும்? சத்தியத்தை விரும்புகிறவர்களுக்கு தேவன் அதை மறைக்கிறாரா? இதற்கான பதிலில் இரண்டு கொள்கைகள் அடங்கியுள்ளன.

1. **ஆவிக்குரிய சத்தியம் பரிசுத்த ஆவியின் மூலம் மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது**. பவுல், "தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்" என்று எழுதினார். இதனால்தான், நாம் ஆவியானவரால் போதிக்கப்பட வேண்டும், "ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" (1 கொரிந்தியர் 2:11, 13).

2. **ஆவிக்குரிய சத்தியம் ஏற்றுக்கொள்ளும் இருதயமுள்ள கேட்பவர்களுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறது**. பவுல் தொடர்ந்து கூறுகிறார், "ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14).

கேட்பவரின் மனப்பான்மையே விதையின் பலனைத் தீர்மானிக்கிறது என்று விதைக்கிறவனைப் பற்றிய உவமை காட்டுகிறது (மத்தேயு 13:1-23). சத்தியத்தை ஏற்றுக்கொள்ளும் மனதுள்ளவர்கள் மட்டுமே தாங்கள் கேட்கும் சத்தியத்தைப் புரிந்துகொள்வார்கள்.[38]

லூக்கா 10:25-ல் உள்ள நியாயசாஸ்திரி இந்த இரண்டாவது கொள்கைக்கு ஒரு நிஜ வாழ்க்கை உதாரணம். அந்த நியாயசாஸ்திரியின் கேள்வி சத்தியத்தின் மீதான பசியிலிருந்து வரவில்லை, இயேசுவைச் சிக்கவைக்கும் விருப்பத்திலிருந்தே வந்தது; அவர் இயேசுவைச் சோதிக்க விரும்பினார். இயேசுவின் பதிலைக் கேட்ட பிறகும், நியாயசாஸ்திரியின் பதில் கனி கொடுக்கும் நிலத்தின் பதிலாக இல்லை. மாறாக, தன்னை நீதிமான் என்று காட்டிக்கொள்ள விரும்பி அவர் மற்றொரு கேள்வியைக் கேட்டார் (லூக்கா 10:29).

---

[38] குறிப்பாக மத்தேயு 13:12-ஐக் கவனியுங்கள். சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவன் அதிக சத்தியத்தைப் பெறுகிறான்: "உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்." சத்தியத்தை நிராகரிகிறவன் ஏற்கனவே தான் கேட்ட சத்தியத்திற்கே குருடாயிருக்கிறான்: "இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்."

“நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும்?” என்ற கேள்விக்கு இயேசு பதிலளித்தார். அதற்கான பதில் நியாயப்பிரமாணத்தில் எழுதப்பட்டிருந்தது, “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக” (லூக்கா 10:27).

இதுவே நமக்கான இயேசுவின் மாதிரியின் இதயமாகும். இயேசு செய்ததைப் போல நாமும் வாழ்வதற்கும் ஊழியம் செய்வதற்கும், இயேசு நேசித்தது போல நாமும் தேவனிடத்திலும் நம் அயலாரிடத்திலும் அன்புகூர வேண்டும். கிறிஸ்துவைப் போன்ற அன்பு இல்லாவிட்டால், இந்தப் பாடத்திட்டத்தில் உள்ள மற்ற பாடங்கள் எதுவும் பெரிதாகப் பொருட்படுத்தப்படாது. ஜெபம், தலைமைத்துவம், போதித்தல் மற்றும் பிரசங்கித்தல்—அன்பு இல்லாவிட்டால், இவை எதுவும் உண்மையில் முக்கியமல்ல.

ஒருவேளை இது மிகவும் எளிமையானதாகத் தோன்றலாம். “நிச்சயமாக, நாம் தேவனிடமும் மக்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். எனக்கு அது ஏற்கனவே தெரியும்!” என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் ஊழியத்தின் அன்றாடச் சுமைகளில், நாம் அன்புள்ள இருதயத்தை இழக்க நேரிடும். நம் சபை மக்களை நேசிக்காமலே அவர்களுக்குச் சேவை செய்ய முடியும். நம் குடும்பங்களை நேசிக்காமலே அவர்களுக்குச் சேவை செய்ய முடியும். தேவனை நேசிக்காமலே கிறிஸ்தவப் பணிகளைச் செய்ய முடியும். கிறிஸ்தவ ஊழியத்திற்கான நம் உந்துதல் கிறிஸ்துவைப் போன்ற அன்பாக இருக்க வேண்டும்.

இயேசு அன்புகூர்ந்தது போல தேவனில் அன்பு கூருதல்

மனிதகுலத்திற்கு இயேசு ஆற்றிய சேவையானது பிதாவின் மீதான அவரது அன்பினால் தூண்டப்பட்டது. ஊழியத்தில் சோர்வு மற்றும் விரக்தியைத் தவிர்க்க, மக்களுக்கான நம் சேவை தேவன் மீதான அன்பால் ஈர்க்கப்பட வேண்டும். தேவன் மீதான அன்பு இல்லாத ஊழியம் விரைவில் வெறுமையாகவும் கனியற்றதாகவும் மாறிவிடும்.

பிதாவின் மீதான இயேசுவின் அன்பின் மூன்று அம்சங்கள் நமக்கு மாதிரியாக இருக்க வேண்டும்: உறவு, அறிவு மற்றும் நம்பிக்கை.

இயேசு தம் பிதாவுடன் ஒரு நெருக்கமான உறவைப் பேணி வந்தார்

திரும்பத் திரும்ப, சுவிசேஷ புத்தகங்கள் இயேசு தம் பிதாவுடன் கொண்டிருந்த நெருக்கமான உறவைக் காட்டுகின்றன. இது பின்வருவனவற்றில் காணப்படுகிறது:

- தம் பெற்றோருக்கு இயேசு கூறியது: “என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா?” (லூக்கா 2:49).
- யோவான் 17-ல் உள்ள இயேசுவின் நெருக்கமான ஜெபம்.

- சிலுவையில் வேதனையில் இயேசுவின் கூக்குரல், “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?” (மத்தேயு 27:46).

கெத்செமனே தோட்டத்தில், ஒரு குடும்பத்தின் நெருக்கமான மொழியைப் பயன்படுத்தி இயேசு தேவனை, “அப்பா பிதாவே” என்று அழைத்தார் (மாற்கு 14:36). இது தன் பிதாவுடனான உறவில் பாதுகாப்பாக இருந்த ஒரு குமாரனின் மொழியாக இருந்தது.

பாரம்பரிய யூத ஜெபங்கள் தேவனுக்குப் பல பெயர்களைப் பயன்படுத்தின: ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனும்; எங்கள் பிதாக்களின் தேவன்; ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவன்; யாக்கோபின் வல்லவர்; இஸ்ரவேலின் மீட்பர். இயேசு அப்பா என்ற நெருக்கமான பெயரைப் பயன்படுத்தினார். இயேசு தம் பிதாவுடன் நெருக்கமான உறவில் வாழ்ந்தார்.

கென்னத் ஈ. பெய்லி மத்திய கிழக்கில் பல ஆண்டுகள் போதித்தார். மத்திய கிழக்கில் குழந்தைகள் முதலில் கற்றுக்கொள்ளும் வார்த்தை *அப்பா* என்று அவர் எழுதுகிறார். ஒரு குழந்தை தன் தந்தையை அழைக்கப் பயன்படுத்தும் பெயர் *அப்பா*.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும், “*அப்பா* பிதாவே!” என்று கூப்பிடும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம் என்று பவுல் நமக்குச் சொல்கிறார் (ரோமர் 8:15, கலாத்தியர் 4:6). தொலைவில் இருக்கும் ஒரு தேவனை நாம் ஆராதிப்பதில்லை. மாறாக, இயேசுவைப் போலவே நாமும் நம் பிதாவின் அன்பில் பாதுகாப்பாகவும் வசதியாகவும் வாழ்கிறோம்.

போதகர்களாக, நமது ஊழியத்தின் வெற்றியைக் கொண்டு நம்மை அளவிட நாம் சோதிக்கப்படலாம். நமது சபையின் அளவு, நமது சபை மக்களின் அங்கீகாரம் அல்லது நமது சகாக்களின் பாராட்டு ஆகியவற்றிலிருந்து நமது மதிப்பு வருமானால், வெற்றிக்காக நேர்மையைத் தியாகம் செய்ய நாம் சோதிக்கப்படுவோம். நமது முயற்சிகள் தோல்வியடையும் போது நாம் சோர்ந்து போவோம். இருப்பினும், நமது வெற்றி எதுவாக இருந்தாலும் நம்முடைய அப்பா நம்மை நேசிக்கிறார் என்பதில் நாம் நம்பிக்கையாக இருந்தால், முடிவுகளை அவரிடம் விட்டுவிடலாம். அவருடைய அன்பு நம் செயல்பாட்டைச் சார்ந்ததல்ல.

இயேசு தன் பிதாவின் சித்தத்தை அறிந்திருந்தார்

அவரது பூமிக்குரிய ஊழியத்தின் முடிவில், இயேசு சாட்சியளித்தார்: “நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்” (யோவான் 17:4). தம் பிதா தம்மை எதைச் சாதிக்க அனுப்பினார் என்பதை இயேசு அறிந்திருந்தார், மேலும் அந்தப் பணியைச் செய்துமுடிக்க அவர் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

இயேசு தனது மனிதத்தன்மையில், ஜெபத்தின் மூலமாகவும் வார்த்தையின் (வேதத்தின்) மூலமாகவும் பிதாவின் சித்தத்தைக் கற்றுக்கொண்டார். ஜெபத்தின் மூலம், இயேசு பிதாவின் சித்தத்தைக் கண்டறிந்தார்.

இயேசு வார்த்தையின் மூலமாகவும் பிதாவின் சித்தத்தைக் கற்றுக்கொண்டார். கப்பர்நாகூமில், ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலே தனது ஊழியம் என்று இயேசு சுருக்கமாகக் கூறினார் (லூக்கா 4:18-19). யோவான் ஸ்நானகனிடமிருந்து வந்த தூதர்களுக்கு அவர் பதிலளித்தபோது, இயேசு தனது மேசியாவிற்குரிய ஊழியத்திற்கான ஆதாரமாக ஏசாயாவின் வார்த்தைகளைப் பயன்படுத்தினார் (மத்தேயு 11:4-5). இயேசு வார்த்தையை அறிந்திருந்தார்.

புதிய ஏற்பாடு முழுவதும், கஷ்டங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக கிறிஸ்தவர்கள் வேதவசனங்களைக் குறிப்பிடுவதைக் காண்கிறோம். இரத்தசாட்சி மரணத்தை எதிர்நோக்கியபோது, ஸ்தேவானின் இறுதிப் பிரசங்கம் முதன்மையாகப் பழைய ஏற்பாட்டு வசனங்களையும் இயேசு கிறிஸ்துவில் அவற்றின் நிறைவேறுதலையும் கொண்டிருந்தது (அப்போஸ்தலர் 7:1-53). இயேசுவின் செய்தியைப் பிரசங்கிப்பதை நிறுத்துமாறு யூதத் தலைவர்கள் கிறிஸ்தவர்களுக்குக் கட்டளையிட்டபோது, சபை ஜெபத்திற்காகக் கூடிவந்தது. அவர்களின் ஜெபத்தில் சங்கீதம் 2-லிருந்து ஒரு நீண்ட மேற்கோள் உள்ளது (அப்போஸ்தலர் 4:24-30, சங்கீதம் 2:1-2). ஆரம்பகால விசுவாசிகள் வேதவசனங்களை அறிந்திருந்தார்கள். பிரசங்கத்திற்கும் ஜெபத்திற்கும் அது அவர்களின் இயல்பான மொழியாக இருந்தது.

திருச்சபை வரலாறு முழுவதும், உலகத்தை மாற்றிய பிரசங்கியார்கள் வார்த்தையின் (வேதத்தின்) மனிதர்களாக இருந்தனர். மார்ட்டின் லூதர் 'டயட் ஆஃப் வார்ம்ஸ்' (Diet of Worms) ஆலோசனை சங்கத்தில் சாட்சியளித்தார், “நான் வேதவசனங்களால் கட்டுண்டுள்ளேன், என் மனசாட்சி தேவனுடைய வார்த்தைக்கு அடிமைப்பட்டுள்ளது.” ஜான் வெஸ்லி தன்னை “ஒரே புத்தகத்தின் மனிதர்” என்று விவரித்தார். “வேதாகமத்தின் சாராம்சமே உங்களிலிருந்து பாயும்” வரை பிரசங்கியார்கள் வார்த்தையை உட்கொள்ள வேண்டும் என்று சார்லஸ் ஸ்பர்ஜன் கூறினார். ஹட்சன் டெய்லர் வார்த்தையில் அதிக நேரம் செலவிட்டதால், ஒரு எழுத்தாளர், “வேதாகமமே டெய்லர் வாழ்ந்த வளிமண்டலமாக இருந்தது” என்று எழுதினார். இந்த மனிதர்கள் உலகத்தை மாற்றினார்கள், ஏனென்றால் அவர்கள் வார்த்தையை அதிகாரத்துடன் பிரசங்கித்தார்கள்.

> “நல்ல புத்தகங்கள் வேதாகமத்தின் இடத்தைப் பிடிக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். கிணற்றிலிருந்து குடியுங்கள்!”
>
> - எமி கார்மைக்கேல்

நாம் இயேசுவைப் போலவும், ஆதி கிறிஸ்தவர்களைப் போலவும், வரலாற்றின்ச் சிறந்த பிரசங்கியார்களைப் போலவும் ஊழியம் செய்ய வேண்டுமானால், நாமும் நமது

மனப்பான்மைகளையும் சிந்தனையையும் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு வடிவமைக்க வேண்டும். பவுலின் ஊழியத்திற்கு வேதவசனமே மேலான அதிகாரமாக இருந்தது (2 தீமோத்தேயு 3:16-17). தனது சீஷர்கள் பரிசுத்தமாக்கப்பட வேண்டும், அல்லது சேவைக்காகப் பிரித்தெடுக்கப்பட வேண்டும் என்று இயேசு ஜெபித்தார். இது வார்த்தையின் மூலமாகவே நிறைவேற்றப்படும்: "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17). வார்த்தை சீஷர்களை ஊழியத்தில் பயனுள்ளவர்களாக்கியது; வார்த்தை நம்மையும் ஊழியத்தில் பயனுள்ளவர்களாக்குகிறது.

அஜித் பெர்னாண்டோ இலங்கையில் ஊழியம் செய்வதில் தன் வாழ்நாளைச் செலவிட்டவர். பிரசங்கத்தில் வேதாகமத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் எந்த ஒரு பெரிய கருத்தையும் கூறுவதில்லை என்பதை அவர் ஒரு வழக்கமாகவே கொண்டிருப்பதாக எழுதுகிறார். இது அவரது பிரசங்கத்தை வார்த்தையில் வேரூன்றச் செய்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம், தேவனுடைய வார்த்தையின் மூலம் அவரை அறிகிறோம். ஊழியர்களாகிய நாம், தேவனுடைய வார்த்தையில் வேரூன்றிய ஊழியத்தின் மூலம் பலமான சபைகளைக் கட்டுகிறோம்.

இயேசு தம் பிதாவில் நம்பிக்கை கொண்டிருந்தார்

இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் போது பிதாவுடனான அவரது உறவை, கெத்செமனே தோட்டத்தில் அவர் செய்த ஜெபத்தின் வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறலாம்: "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (மத்தேயு 26:39). இது முழுமையான நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதலின் மொழியாகும்.

நாம் நம்பாத ஒருவரின் விருப்பத்திற்கு முழுமையாக இணங்குவது கடினம். வெளிப்புறமாக இணங்க நாம் கட்டாயப்படுத்தப்படலாம், ஆனால் நாம் நம்பாத ஒருவரிடம் கட்டுப்பாட்டை ஒப்படைக்க நம் உள்ளம் எதிர்க்கும். பிதாவின் அன்பு மற்றும் நற்குணத்தின் மீது வைத்திருந்த முழுமையான நம்பிக்கையின் காரணமாக இயேசு பிதாவின் சித்தத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

► யோவான் 5:1-47-ஐ வாசிக்கவும்.

இயேசுவின் முழு ஊழியமும் பிதாவை முழுமையாகச் சார்ந்திருக்கும் இந்த மனப்பான்மையைக் காட்டுகிறது. ஓய்வுநாளில் ஒரு முடவனைச் சுகப்படுத்தியதற்காக யூதத் தலைவர்கள் இயேசுவை எதிர்த்தபோது, அவர் பதிலளித்தார்:

> மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்... நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை; நான்

> கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது (யோவான் 5:19, 30).

இயேசு ஏற்கனவே தான் தெய்வீகமானவர் என்று உரிமை கோரியிருந்தார்: "என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன்" (யோவான் 5:17). அவர் முழுமையான தெய்வீகத்தன்மை கொண்டவராக இருந்தாலும், இயேசு தனது பூமிக்குரிய பணியின் கீழ்நிலைப் பாத்திரத்திற்கு மனமுவந்து ஒப்புக்கொடுத்தார். அவரும் பிதாவும் சமம், ஆனாலும் அவர் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார்.

சில மாதங்களுக்குப் பிறகு வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவை எதிர்த்தபோது, அவர் மீண்டும் பிதாவின் அதிகாரத்தைச் சுட்டிக்காட்டித் தனது செயல்களை நியாயப்படுத்தினார்: "நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்" (யோவான் 8:28). அவர் பிதாவை முழுமையாக நம்பியதால், இயேசுவால் பிதாவின் சித்தத்திற்கு மனமுவந்து ஒப்புக்கொடுக்க முடிந்தது.

சபைத் தலைமைத்துவத்திற்கு ஒரு கடினமான சமநிலை தேவைப்படுகிறது. பல போதகர்கள் மற்றும் சபைத்தலைவர்கள் வலுவான தலைமைத்துவத் திறன்களைக் கொண்டுள்ளனர். தலைவர்களாக, அவர்களுக்கு வலுவான கருத்துக்களும் ஆளுமைகளும் உள்ளன. ஒரு தலைவருக்கு இது ஒரு மதிப்புமிக்க பலமாக இருக்கும். இருப்பினும், இந்தப் பலம் தேவனுக்கு மனமுவந்து கீழ்ப்படிதலுடன் சமப்படுத்தப்பட வேண்டும். நாம் நம்பிக்கையுடன் தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுக்காவிட்டால், தேவனுடைய வழிக்கு இணங்குவதற்குப் பதிலாக நம்முடைய சொந்த வழியைத் திணிக்க முற்படுவோம்.

வேதாகமத்தில் இதற்குச் சிறந்த உதாரணம் மோசே. "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" (எண்ணாகமம் 12:3). மோசே வலிமையானவர், ஆனால் அவர் சாந்தகுணமுள்ளவராகவும் (meek) இருந்தார். எகிப்தின் மிகவும் சக்திவாய்ந்த மனிதரான பார்வோனை அவர் எதிர்கொண்டார். பிடிவாதமுள்ள இஸ்ரவேல் மக்களை அவர் பாலைவனத்தின் வழியாக வழிநடத்தினார். மோசே ஒரு வலிமையான தலைவர். ஆனால் அதே நேரத்தில், அவர் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தார். பயனுள்ள சபைத்தலைமைத்துவத்திற்கு, நமது இயற்கையான பலம் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். விசுவாசம் மற்றும் நம்பிக்கை நிறைந்த வாழ்க்கையில் நாம் தேவனுடனே நடக்கும்போது மட்டுமே இது சாத்தியமாகும்.

► பிதாவை நேசிப்பதன் இந்த மூன்று அம்சங்களில் (உறவு, அவருடைய வார்த்தையின் அறிவு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் ஒப்புக்கொடுத்தல்) தனிப்பட்ட முறையில் உங்களுக்கு எது பெரிய சவாலாக இருக்கிறது?

ஒரு நெருக்கமான பார்வை: இயேசு தான் தேவன் என்று உரிமை கோரினாரா?

மோர்மனிசம் மற்றும் யெகோவா சாட்சிகள் போன்ற கள்ள மார்க்கங்களும், இஸ்லாம் போன்ற கிறிஸ்தவமல்லாத மதங்களும் இயேசு உண்மையிலேயே தேவன் என்பதை மறுக்கின்றன. அவர்கள் இயேசுவை ஒரு சிறந்த போதகராகவோ அல்லது தீர்க்கதரிசியாகவோ, முதலாவது படைக்கப்பட்ட உயிரினமாகவோ, மற்றும் மேசியாவாகக் கூட அங்கீகரிப்பார்கள். ஆனால் அவர் உண்மையிலேயே தேவன் என்பதை அவர்கள் மறுக்கிறார்கள்.[39]

இந்த மதங்களைப் பின்பற்றுபவர்கள் பெரும்பாலும், "இயேசு ஒருபோதும் தான் தேவன் என்று சொல்லிக்கொள்ளவில்லை. நாம் ஒவ்வொருவரும் எப்படித் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோமோ, அதே விதத்தில்தான் அவரும் தேவனுடைய குமாரன் என்று சொன்னார்" என்று கூறுவார்கள்.

இயேசு தான் தேவன் என்று உரிமை கோரினாரா? ஆம். இயேசுவைக் கேட்ட மக்கள் அவருடைய கூற்றுக்களைப் புரிந்துகொண்டார்கள். இயேசு தேவனை "என் பிதா" என்று குறிப்பிட்டபோது, யூதத் தலைவர்கள் அவரைக் கொல்ல முயன்றார்கள். ஏன்? "அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ் சொல்லித் தம்மை தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்" (யோவான் 5:18).

இயேசு தான் தேவன் என்று மிகத் தெளிவாகக் கூறிய சந்தர்ப்பங்களில் ஒன்றில், அவர் யூதத் தலைவர்களிடம், "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 8:58) என்றார். எரியும் முட்செடியில் மோசேக்குத் தன்னை வெளிப்படுத்த தேவன் பயன்படுத்திய வார்த்தைகள் இவைதான்: "இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக" (யாத்திராகமம் 3:14). இந்த வார்த்தைகளின் மூலம், மோசேக்குத் தோன்றிய தேவன் தானே என்று இயேசு உரிமை கோரினார். இயேசு தனது வார்த்தைகளால் எதை அர்த்தப்படுத்தினார் என்பதை யூதத் தலைவர்கள் சரியாக அறிந்திருந்தார்கள். அதற்குப் பதிலளிக்கும் விதமாக, அவர்கள் அவரைக் கொல்லக் கற்களை எடுத்தார்கள். தேவதூஷணத்திற்கான—அதாவது

[39] இந்தத் தவறான மதங்களின் போதனைகளைப் படிக்க, Shepherds Global Classroom-ன் *Faith Traditions of the World* என்ற பாடத்தைப் படிக்கவும்.

பொய்யாகத் தன்னைத் தேவன் என்று உரிமை கோருவதற்கான—சரியான தண்டனை இதுவே (லேவியராகமம் 24:16).

இயேசுவின் விசாரணையின்போது, காய்பா, "நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" என்று கேட்டான். இயேசுவின் பதில் திட்டவட்டமாக இருந்தது: "நான் அவர்தான்; மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள்." இந்தப் பதிலின் மூலம், தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்திருப்பவர் தான்தான் என்றும், உலகத்தை நியாயந்தீர்க்க வரப்போகிறவர் என்று தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்த அந்த மனுஷகுமாரன் தான்தான் என்றும் இயேசு உரிமை கோரினார் (சங்கீதம் 110:1 மற்றும் தானியேல் 7:13-14). இயேசு தன்னைத் தேவன் என்று உரிமை கோருவதைக் காய்பா அறிந்திருந்தான். அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, "தேவதூஷணத்தைக் கேட்டீர்களே" என்றான் (மாற்கு 14:61-64).

இயேசுவின் கூற்றுக்களை நம்ப நீங்கள் மறுக்கலாம், ஆனால் இயேசு தன்னைத் தேவனுடைய குமாரன் என்று உரிமை கோரினார் என்பதை ஒப்புக்கொள்ளாமல் உங்களால் சுவிசேஷங்களைக் கவனமாக வாசிக்க முடியாது. அவரைக் கேட்டவர்கள் அவருடைய கூற்றுக்களைக் கேட்டார்கள், எனவே அவர்கள் அவரைத் தேவன் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அவரை ஒரு கள்ளத் தீர்க்கதரிசி மற்றும் தேவதூஷணம் சொல்பவர் என்று கருதிக் கொல்ல வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இயேசு அன்புகூர்ந்தது போல நம் அயலாரிலும் அன்புகூருதல்

இயேசு போதித்துக்கொண்டிருந்தபோது, அவர் பெரும்பாலும் ஆயக்காரர்கள் மற்றும் பாவிகள் அடங்கிய பார்வையாளர்களை ஈர்த்தார். இயேசு இந்த மக்களுக்குப் போதித்தது மட்டுமல்லாமல், அவர்களுடன் போஜனம்பண்ணினார். இயேசு பாவிகளுடன் மனமுவந்து உண்பதைப் பரிசேயர்கள் பார்த்தபோது, அவர்கள் அவரை விமர்சிக்கத் தொடங்கினார்கள். இயேசு மூன்று கதைகளுடன் பதிலளித்தார். இந்தக் கதைகளை நீங்கள் வாசிக்கும்போது, பின்னணியின் இரண்டு முக்கியமான விஷயங்களை நீங்கள் உணர வேண்டும்.

1. இயேசுவின் காலத்தில், ஒரு நபருடன் சாப்பிடுவது என்பது நீங்கள் அவருடன் உறவை ஏற்படுத்துகிறீர்கள் என்று பொருள்படும்.[40] இயேசு பாவிகளுடன் சாப்பிட்டபோது, அவர் வேண்டுமென்றே அவர்களுடன் ஐக்கியம் கொள்கிறார் என்று அர்த்தம். மக்கள் தன்னிடம் வருவதற்கு தேவன் காத்திருப்பதில்லை; மாறாக,

[40] இது நீதிமொழிகள் புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது. ஞானமானவள் தன் மேசையில் அமர்ந்து உணவருந்த "பேதைகளை" அழைக்கிறாள் (நீதிமொழிகள் 9:1-6). ஞானத்துடனான உறவின் மூலம், பேதைகள் ஞானிகளாவார்கள்.

காணாமல் போனவர்களைத் தேவன் மும்முரமாகத் தேடுகிறார் என்பதை இயேசு காட்டினார்.

2. இயேசுவின் காலத்தில் இருந்த யூத மக்கள், ஒரு நீதிமான் பாவமுள்ளவர்களுடனான தொடர்பைத் தவிர்க்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். மேசியா வரும்போது, அவர் துன்மார்க்கருடனான எல்லாத் தொடர்பையும் தவிர்ப்பார் என்றும், நீதிமான்களுடன் மட்டுமே போஜனம்பண்ணுவார் என்றும் ரபிமார்கள் போதித்தனர்.

► லூக்கா 15:1-32-ஐ வாசிக்கவும்.

இது மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு பெரிய உவமையாகும்: காணாமல் போன ஆடு, காணாமல் போன காசு மற்றும் காணாமல் போன மகன் (கெட்ட குமாரன்). ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், காணாமல் போனதைக் கண்டுபிடிப்பவர் அடையும் மகிழ்ச்சியே இந்த உவமையின் மையப்பொருளாக உள்ளது. பாவிகள் மனந்திரும்பும்போது பரலோகத்தில் உண்டாகும் மகிழ்ச்சியை இயேசு வெளிப்படுத்துகிறார்.

யூத போதகர்களிடம் (Rabbis) ஒரு பிரபலமான பழமொழி இருந்தது: "ஒரு பாவி தேவனுக்கு முன்பாக அழிக்கப்படும்போது பரலோகத்தில் சந்தோஷம் உண்டாகும்." ஆனால் இயேசு அதைத் தலைகீழாக மாற்றினார்: “மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்.” இயேசுவுக்கும் மற்ற போதகர்களுக்கும் என்ன வித்தியாசம்? அன்பு. அன்பான உள்ளத்தோடு ஊழியம் செய்வது என்றால் என்ன என்பதை இயேசு காண்பித்தார்.

> “எல்லாம் சரியாக இருப்பவர்களுக்கானது அல்ல சுவிசேஷம். தங்களிடத்தில் எல்லாம் சரியாக இல்லை என்பதை அறிந்தவர்களுக்கானதே சுவிசேஷம்.”
>
> - சாமுவேல் லாமர்சன்

நாம் அன்பில்லாமல் ஊழியம் செய்யும்போது, மக்களை விட அந்தஸ்தும் பதவியும் முக்கியமானதாகிவிடும். ஆனால், நாம் அன்பான உள்ளத்தோடு ஊழியம் செய்யும்போது, காணாமல் போனவர்களுக்காக நம் அந்தஸ்தைத் தியாகம் செய்யவும் தயாராக இருப்போம். அன்பே அதிகம் தேவைப்படுபவர்களுக்கு அதை வெளிப்படுத்துவதற்காக, மதத் தலைவர்களின் விமர்சனங்களைச் சகித்துக்கொள்ளவும் இயேசு சித்தமாயிருந்தார்.

► நாம், “கெட்ட குமாரனிடத்தில் நீங்கள் அன்பு காட்டுவீர்களா?” என்று கேட்டால், நாம் அனைவரும் “ஆம்” என்று பதிலளிப்போம். சரியான பதில் நமக்குத் தெரியும்! அதற்குப் பதிலாக, “கடைசியாக என் பாதையில் குறுக்கிட்ட ஊதாரி யார்? அந்த நபரிடம் நான் எப்படி அன்பை வெளிப்படுத்தினேன்?” என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்.

வேதனைப்படுபவர்கள் மீதான மனதுருக்கத்தின் மூலம் இயேசு அன்பை வெளிப்படுத்தினார்

சுவிசேஷ நூல்களை வாசிக்கும்போது, மற்ற மதத் தலைவர்களிடமிருந்து *விலகி* ஓடிய பாவிகள், இயேசுவை *நோக்கி* ஓடிவந்ததை கவனித்தீர்களா? இயேசுவின் சமூகத்தைத் தேட பாவிகளைத் தூண்டியது எது?

இயேசு அவர்களின் பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருந்தார் என்பதல்ல; எந்த ஒரு பரிசேயனையும் விட அவர் நீதியின் தரத்தை உயர்வாகவே வைத்தார் (மத்தேயு 5:20). இயேசு மனதுருக்கம் உள்ளவராக இருந்ததாலேயே பாவிகள் அவரிடம் ஓடிவந்தார்கள். அவர் பாவத்திற்குச் சாக்குப்போக்குச் சொல்லவில்லை, ஆனால் பாவத்திற்கு அடிமையான மனிதர் மீது அவர் மனதுருக்கம் கொண்டார்.

விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் இயேசு கூறிய வார்த்தைகளில் இதை நாம் காண்கிறோம். அவர்மேல் குற்றம் சுமத்தியவர்கள் போனபின்பு, இயேசு: "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்றார் (யோவான் 8:11). இயேசு பாவத்தை நியாயப்படுத்தவில்லை; அந்தப் பெண் தனது பாவ வாழ்க்கையை விட்டுவிட வேண்டும் என்று அவர் கோரினார். ஆனால் அவர் ஆக்கினைத் தீர்ப்பைக் காட்டிலும் மனதுருக்கத்தையே காண்பித்தார்.

லூக்கா சுவிசேஷம் இயேசுவின் மனதுருக்கத்திற்குச் சிறப்புக் கவனம் செலுத்துகிறது. மற்ற மதத் தலைவர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட வரிவசூலிப்பவரான சகேயுவின் கதையை லூக்கா கூறுகிறார். வேடிக்கை பார்த்தவர்கள் அதிர்ச்சியடையும் வகையில், பாவியான ஒரு மனிதனின் வீட்டில் தங்கும்படி இயேசு தாமே அழைப்பு விடுத்தார் (லூக்கா 19:7).

► லூக்கா 5:12-16-ஐ வாசிக்கவும்.

குஷ்டரோகியைச் சுகமாக்கிய சம்பவத்தில், கூட்டத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தக்கூடிய ஒரு விவரத்தை லூக்கா தருகிறார். இயேசு கையை நீட்டி அவனைத் தொட்டார். பண்டைய காலத்தில் யாரும் குஷ்டரோகியைத் தொடமாட்டார்கள்! தொற்றுநோய் பரவும் அபாயம் இருந்ததால் மருத்துவ ரீதியாக அது ஆபத்தானது. யூதர்களைப் பொறுத்தவரை, அது ஒரு நபரைச் சடங்காச்சார முறைப்படி தீட்டுப்படுத்தும்.

> "நீங்கள் அவர்கள் மீது எவ்வளவு அக்கறை உள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை அறியும் வரை, உங்களுக்கு எவ்வளவு தெரியும் என்பதைப் பற்றி மக்கள் கவலைப்படுவதில்லை."
>
> — தியோடர் ரூஸ்வெல்ட்

இயேசு ஏன் இந்தக் குஷ்டரோகியைத் தொட்டார்? அவர் மனதுருகினார். "இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு..." (மாற்கு 1:41). இந்தக் குஷ்டரோகிக்கு சரீர சுகம் தேவைப்பட்டது, ஆனால் அவனுக்கு உணர்வுரீதியான சுகமும் தேவைப்பட்டது. குஷ்டரோகிகள்

மற்றவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. குஷ்டரோகம் வந்த பிறகு, இம்மனிதன் வேறொரு மனிதனின் தொடுதலை உணர்ந்திருக்கவில்லை. இந்த உருக்குலைந்த மனிதனைத் தொடாமலே இயேசுவால் நோயைக் குணப்படுத்தியிருக்க முடியும், ஆனால் அவனுக்கு மற்றொரு நபரின் தொடுதல் தேவை என்பதை இயேசு அறிந்திருந்தார். இயேசு மனதுருகினார்.

நாம் இயேசுவைப் போல ஊழியம் செய்ய விரும்பினால், இயேசுவைப் போன்ற மனதுருக்கமுள்ள இதயம் நமக்கு இருக்க வேண்டும். பாவிகள் இயேசுவின் கண்களைப் பார்த்தபோது, அவர்கள் அன்பான மனதுருக்கத்தைக் கண்டார்கள். பாவிகள் உங்கள் கண்களைப் பார்க்கும்போது, அவர்கள் எதைக் காண்கிறார்கள்?

ஏழைகளுக்கு ஊழியம் செய்வதன் மூலம் இயேசு அன்பை வெளிப்படுத்தினார்

“எனக்கு ஏழைகள் மீது பரிதாபம் இருக்கிறது” என்று சொல்வது எளிது; ஆனால் அவர்களின் தேவைகளைச் சந்திப்பது கடினம். தம்மைச் சுற்றியுள்ளவர்களின் தேவைகளுக்குப் பணிவிடை செய்வதன் மூலம் இயேசு அன்பை வெளிப்படுத்தினார். இயேசுவின் முழு ஊழியமும் சேவையாற்றுவதாகவே இருந்தது. இயேசு அடிமையின் ரூபமெடுத்து, தம்மைத்தாமே வெறுமையாக்கினார் என்று பவுல் எழுதினார் (பிலிப்பியர் 2:7). இயேசு தம் சீடர்களிடம், “அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்” என்றார் (மாற்கு 10:45).

இயேசுவின் அற்புதங்கள் மற்றவர்களுக்கு அவர் செய்த ஊழியத்தைக் காட்டுகின்றன. அந்த அற்புதங்கள் அவருடைய மேசியானியப் பணியின் அடையாளங்களாக இருந்தன, அதே வேளையில் அவை மனிதத் தேவைகளைச் சந்திக்கும் ஊடகமாகவும் இருந்தன. சில நேரங்களில் அற்புதங்கள் ஒரு சிலருக்காக மட்டுமே செய்யப்பட்டன. சில நேரங்களில் அவை அதிகாரமோ செல்வாக்கோ இல்லாத மக்களுக்குப் பயனளித்தன. சில நேரங்களில் அவருடைய அற்புதங்கள் (ஓய்வுநாளில் செய்தவை) அவருக்கு மேலும் நிராகரிப்பையே கொண்டு வந்தன.

இயேசு அதிகாரம் படைத்தவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அற்புதங்களைச் செய்யவில்லை; ஏழைகளுக்குச் சேவை செய்வதற்காகவே அற்புதங்களைச் செய்தார். இயேசு அற்புதங்கள் செய்ய மறுத்த இரண்டு சந்தர்ப்பங்களை வேதம் பதிவு செய்கிறது. பரிசேயர்கள் அவரோடு தர்க்கம்பண்ணி, “அவரைச் சோதிக்கும்படி, வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்கவேண்டும் என்று கேட்டார்கள்” (மாற்கு 8:11). இயேசு அடையாளம் காட்ட மறுத்துவிட்டார். பின்னர் இயேசுவின் விசாரணையின்போது, ஏரோது அவராலே ஏதாகிலும் ஒரு அடையாளம் செய்யப்படுவதைக் காணலாம் என்று காத்திருந்தான் (லூக்கா 23:8). இயேசு ஏரோதுக்குப் பதிலளிக்கக்கூட மறுத்துவிட்டார்.

சந்தேகப்படும் பார்வையாளர்களைக் கவர்வதற்காகவோ அல்லது வேண்டுகோளின் அடிப்படையிலோ இயேசு அற்புதங்களைச் செய்யமாட்டார்.

ஏரோது அந்திப்பாவுக்காக ஒரு அற்புதத்தைச் செய்ய இயேசு மறுத்தாலும், அவருக்குப் கைமாறு செய்ய முடியாத ஒரு மீனவனின் மாமியாரையும், குஷ்டரோகிகளையும், பார்வையற்ற பிச்சைக்காரர்களையும், பிசாசு பிடித்தவர்களையும் குணப்படுத்தினார். தம்மைக் கைவிட்டு ஓடிப்போவதன் மூலம் நன்றியின்மையைக் காட்டப்போகும் 5,000 பேருக்கு அவர் உணவளித்தார்; மேலும், தம்மைக் கைது செய்ய வந்த பிரதான ஆசாரியனின் ஊழியக்காரனையும் குணப்படுத்தினார். இயேசு தமது அற்புதங்கள் மூலம் ஏழைகளுக்கு ஊழியம் செய்தார்.

போதகர்களாகவும் சபைத்தலைவர்களாகவும் இருக்கும் நாம், நமக்கு உதவி செய்யக்கூடியவர்களுக்கு மட்டும் நாம் உதவுவதை நியாயப்படுத்துவது எளிது. நாம் ஏழைகளை விட பணக்காரர்களுடன் அதிக நேரம் செலவிடும்போது, "அந்தத் தொழிலதிபரால் சபையின் ஊழியத்தைத் தாங்க முடியும்" என்று சொல்லலாம். செல்வாக்கு மிக்க ஒரு அதிகாரியைச் சந்திப்பதற்காக ஒரு விதவையைச் சந்திப்பதை நாம் ரத்து செய்யும்போது, "அவருக்குச் செல்வாக்கு இருக்கிறது, தேவனுடைய பணிக்கு உதவ முடியும்" என்று சாக்குப்போக்குச் சொல்லலாம். இயேசு ஒருபோதும் அப்படிச் செய்யவில்லை. நாம் இயேசுவைப் போல ஊழியம் செய்ய விரும்பினால், இயேசுவைப் போல ஒரு ஊழியக்காரனாக மாற வேண்டும். அவரைப் போலவே, நாம் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவே நாட வேண்டும் (மத்தேயு 20:28). பவுல் எழுதினார், "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:5).

சில போதகர்கள், "நான் நன்றாகப் படித்தவன். என் சபையில் உள்ள ஒரு விவசாயிக்கு நான் வேலைக்காரன் அல்ல!" என்று நினைக்கிறார்கள். பவுல் ஒருபோதும் அப்படி உணரவில்லை. பவுல் மிகச் சிறந்த கல்வியைப் பெற்றிருந்தார், ஆனாலும் இயேசுவுக்காக அவர் கொரிந்தியர்களுக்கு அடிமையானார். "என் கல்வியைப் பாருங்கள்; யூத இலக்கியம், கிரேக்கத் தத்துவம் மற்றும் கிறிஸ்தவ இறையியலில் நான் பயிற்சி பெற்றவன். என்னால் ஆலோசனை சங்கம் (Sanhedrin), கிரேக்க அரியோபாகு மற்றும் ரோம செனட் சபையில் பேச முடியும்" என்று அவர் சொல்லியிருக்கலாம். மாறாக, "என் எஜமானாகிய இயேசுவுக்காக, கொரிந்துவிலுள்ள படிப்பறிவற்ற ஒரு மனிதனுக்கும் நான் ஊழியக்காரனாக இருக்கிறேன்" என்றே அவர் கூறினார்.

நாம் இயேசுவைப் போல ஊழியம் செய்ய விரும்பினால், ஒரு ஊழியக்காரனைப் போல வாழ்வதற்கான மனத்தாழ்மை நமக்கு இருக்க வேண்டும். ஊழியக்காரர்களாக, நமது வாழ்க்கை முறை ஒரு ஆளுநரின் ஆடம்பர வாழ்க்கை முறையைப் போன்றது அல்ல. நாம்

இயேசுவைப் போல நேசிக்க விரும்பினால், நாம் தாழ்மையுள்ள ஊழியக்காரர்களாக இருக்க வேண்டும்.

சத்துருக்களிடத்தில் இரக்கம் காட்டுவதன் மூலம் இயேசு அன்பை வெளிப்படுத்தினார்

► மத்தேயு 5:43-48-ஐ வாசிக்கவும்.

உங்கள் பரலோகப் பிதா பூரணராக இருக்கிறதுபோல நீங்களும் பூரணராக இருக்க வேண்டும் என்பது, பரலோகப் பிதா அன்பு செலுத்துவது போல நீங்களும் அன்பு செலுத்த வேண்டும் என்பதையே குறிக்கிறது என்று இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குப் போதித்தார். அதாவது, உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் மற்றும் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். அத்தகைய அன்பை நீங்கள் வெளிப்படுத்தும்போது, நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருக்கிறீர்கள் என்பதை உலகம் அறிந்துகொள்ளும்.

இயேசு மலைப்பிரசங்கத்தைப் பிரசங்கிப்பதற்கு சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு யூத வேதபாரகர் 'சீராக்' (Sirach) என்ற தொகுப்பை எழுதினார். உதவி பெறத் தகுதியற்றவர்களை எப்படி நடத்த வேண்டும் என்று அவர் தனது சீடர்களுக்குப் போதித்ததைக் கேளுங்கள்:[41]

- நீங்கள் ஒரு நற்செயலைச் செய்யும்போது, அதிலிருந்து யார் பயனடைகிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்; அப்போது நீங்கள் செய்வது வீணாகாது.
- தாழ்மையுள்ளவர்களுக்கு நன்மை செய்யுங்கள், ஆனால் பக்தியற்றவர்களுக்கு எதையும் கொடுக்காதீர்கள்.
- அவர்களுக்கு உணவு கொடுக்காதீர்கள், இல்லையெனில் அவர்கள் உங்கள் கருணையை உங்களுக்கு எதிராகவே பயன்படுத்துவார்கள். அத்தகையவர்களுக்கு நீங்கள் செய்யும் ஒவ்வொரு நன்மையான காரியத்திற்கும், பதிலாக உங்களுக்கு இரண்டு மடங்கு துன்பமே கிடைக்கும்.
- உன்னதமானவர் தாமே பாவிகளை வெறுக்கிறார், அவர்களைத் தண்டிப்பார்.
- நல்லவர்களுக்குக் கொடுங்கள், ஆனால் பாவிகளுக்கு உதவாதீர்கள்.

பென் சீராவின் (Ben Sira) எழுத்துக்கள் இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதர்களால் வேதவாக்கியமாகக் கருதப்பட்டன. “உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப்

---

[41] Sirach 12:1-7, *Good News Translation*

பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (மத்தேயு 5:43) என்று இயேசு சொன்னபோது, அவர் இந்த எழுத்துக்களைக் குறிப்பிட்டிருக்கலாம். *சீராக்* சொன்னார்: "நீதிமான்களுக்கு மட்டுமே நன்மை செய்யுங்கள். துன்மார்க்கருக்காக நற்செயல்களை வீணாக்காதீர்கள்."

► இப்போது மத்தேயு 5:43-48 ஐ மீண்டும் படியுங்கள். இயேசுவின் போதனை ஏன் கேட்பவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்று புரிகிறதா?

பழைய ஏற்பாட்டில், தேவன் தம் மக்களைத் தங்கள் சத்துருக்களையும் நேசிக்கும்படி போதித்தார். இது புதிய விஷயம் அல்ல. ஒரு கல்லூரிப் பேராசிரியர் பழைய ஏற்பாடு பற்றிய வகுப்பில் மாணவர்களுக்குக் கொடுத்த ஒரு கேள்வி இதோ.

உங்கள் அண்டைவீட்டார் சபைக்கு விரோதி. நீங்கள் கடந்து செல்லும்போது, அவர் உங்களைச் சபிக்கிறார். அவர் உங்களை ஏமாற்றவும், உங்கள் கால்நடைகளைத் திருடவும் முயற்சிக்கிறார். ஒரு நாள் மழைக்காலத்தில், உங்கள் அண்டைவீட்டாரின் பசு அவிழ்ந்து ஓடுவதைப் பார்க்கிறீர்கள். உங்கள் அண்டைவீட்டாருக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமை என்ன?

1. *சாட்டையை எடுத்து அப்பசுவை இன்னும் தூரமாக விரட்டுவீர்களா?*

இது சரியான பதில் இல்லை என்பது மாணவர்களுக்குத் தெரியும்!

2. *அதைப் புறக்கணித்துவிட்டு, "அது என் பிரச்சனை இல்லை" என்று சொல்வீர்களா?*

பல மாணவர்கள் இந்த விருப்பத்தைத் தேர்வு செய்கிறார்கள். "அது அண்டைவீட்டாரின் பசு, என்னுடையது அல்ல. நான் என் வேலையைப் பார்ப்பேன். அதுமட்டுமல்லாமல், அந்த அண்டைவீட்டாருக்கு என்னைப் பிடிக்காது; என் உதவியை அவர் மெச்சப்போவதும் இல்லை" என்று அவர்கள் கூறுகிறார்கள்.

3. *யாத்திராகமம் 23:4-க்குக் கீழ்ப்படிவீர்களா? "உன் சத்துருவின் மாடாவது அவனுடைய கழுதையாவது தப்பிப்போகக்கண்டால், அதைத் திரும்ப அவனிடத்தில் கொண்டுபோய் விடுவாயாக."*

பழைய ஏற்பாட்டில்கூட, தேவனுடைய மக்கள் தங்கள் சத்துருவை நேசிக்கும்படி அழைக்கப்பட்டார்கள். ஆனால் இயேசுவின் காலத்தில், மக்கள் யாத்திராகமம் 23-ஐ மேற்கோள் காட்டுவதை விட சீராக் நூலை மேற்கோள் காட்டுவதையே விரும்பினர். தங்கள் அண்டைவீரை நேசிக்கவும், சத்துருவை வெறுக்கவும் அனுமதிக்கும் போதனையை அவர்கள் விரும்பினர்! ஆனால் இயேசு, "உங்கள் சத்துருக்களை நேசியுங்கள், ஏனெனில் உங்கள் பரலோகப் பிதா தீயோர்மேலும் நல்லோர்மேலும் அன்பாயிருக்கிறார்" என்றார்.

நிஜ வாழ்க்கையில் இது எப்படி இருக்கும்? உங்கள் ஊழியத்தில் இந்தச் சூழ்நிலையை கற்பனை செய்து பாருங்கள்:

உங்கள் நம்பிக்கைகள் பலவற்றைப் பகிர்ந்துகொள்வது போலத் தோன்றும் ஒரு குழுவினர், பொதுவெளியில் உங்களைத் தொடர்ந்து எதிர்க்கிறார்கள். உங்களைச் சிக்கவைக்கும் நோக்கத்துடன் கேள்விகளைக் கேட்கிறார்கள்; நீங்கள் ஒரு கள்ளப் போதகர் என்று உங்கள் சபை மக்களிடம் சொல்கிறார்கள்; உங்களைப் பின்பற்றுபவர்களிடத்தில் உங்களுக்குப் பிரச்சனையை உண்டாக்கும் எதையாவது நீங்கள் செய்வீர்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்களை நீங்கள் எப்படி நடத்துவீர்கள்?

1. *அவர்களை விரட்டிவிட்டு, மீண்டும் வரக்கூடாது என்று சொல்வீர்களா?*
2. *அவர்கள் உங்களை நடத்துவது போலவே நீங்களும் அவர்களை நடத்துவீர்களா?*
3. *அவர்களின் தவறுகளைப் பற்றி நேர்மையாக இருந்து, ஆனால் அன்புடன் அவர்களுக்குப் பதிலளிப்பீர்களா?*

பரிசேயர்கள் இயேசுவை எதிர்க்க எல்லா வழிகளிலும் முயன்றார்கள். அவர் அவர்களின் தவறுகளைப் பற்றி நேர்மையாக இருந்தார்; அவர்களுக்குச் சத்தியத்தைப் போதிக்க முயன்றார்; ஆனால் அவர் எப்போதும் அவர்களை அன்போடு நடத்தினார்.

நாம் இயேசுவைப் போல ஊழியம் செய்ய விரும்பினால், நம் சத்துருக்களை நேசிக்க வேண்டும். இது இயேசுவின் மிகக் கடினமான போதனைகளில் ஒன்றாகும். நம்மைக் காட்டிக்கொடுப்பவருக்கும், நம் செய்தியைப் புறக்கணிப்பவருக்கும், நம்மைத் துன்புறுத்துபவருக்கும், நாம் இயேசுவின் நிபந்தனையற்ற அன்பைக் காட்ட வேண்டும்.

பயன்பாடு: ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் இயேசுவின் நற்பண்பு

நாம் தேவனை நேசிப்பது மற்றும் நம் அயலானை நேசிப்பது பற்றி எழுதுவது எளிது. ஆனால் அந்த அன்பை அன்றாட வாழ்வில் வெளிப்படுத்துவது மிகவும் கடினம். நம் சொந்த வாழ்க்கையில் இயேசுவின் சுபாவத்தை நாம் வளர்த்துக் கொள்ளும்போது மட்டுமே, அவரை நம் உலகிற்குப் பகிர்ந்துகொள்ள நாம் ஆயத்தமாகிறோம்.

இயேசுவின் சுபாவத்தை நாம் கொண்டிருக்க முடியுமா? தேவன் தம்முடைய மக்களைத் தம்மைப் போலவே சிந்திக்க வைக்க முடியும் என்று வேதம் போதிக்கிறது. தேவன் விரும்புவதை நாமும் விரும்பவும், அவர் நம்மை வாழ அழைப்பது போல நாம் மனமுவந்து வாழவும் காரணமாயிருக்கிற ஒரு புதிய ஆவியை அவர் தம் மக்களுக்குக் கொடுக்க விரும்புகிறார் (எசேக்கியேல் 36:26-27). தம்முடைய குமாரனின் சுபாவத்தை நமக்குள் உருவாக்க தேவன் விரும்புகிறார்.

அன்றாட சேவையில் உண்மையுள்ளவர்களாய் இருப்பது குறித்து ஆஸ்வால்ட் சேம்பர்ஸ் கூறியதைக் கேளுங்கள்:

> "உங்கள் வாழ்க்கையில் தேவனிடமிருந்து எந்த தரிசனமும் இல்லாதபோது, உற்சாகம் இல்லாதபோது, உங்களைக் கவனிப்பதற்கோ அல்லது உற்சாகப்படுத்துவதற்கோ யாரும் இல்லாதபோது, அவரிடத்தில் நீங்கள் கொண்டிருக்கும் பக்தியில் அடுத்த அடியை எடுத்து வைப்பதற்கு

> சர்வவல்லமையுள்ள தேவனின் கிருபை தேவைப்படுகிறது... சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குத் தேவைப்படுவதை விட, அந்த அடுத்த அடியை எடுத்து வைப்பதற்கு, அதிகமான தேவ கிருபையும், அவரைச் சார்ந்து இருக்கிறோம் என்ற அதிகப்படியான விழிப்புணர்வும் தேவை."
>
> நீண்ட கால ஓட்டத்தில் தேவனுக்காகவும், தேவனுடைய மக்களுக்காகவும் உண்மையாகச் சாட்சியிடுவது, மற்றவர்கள் நம் பணியைப் பார்க்காதபோதும் நாம் காட்டும் நிலையான விடாமுயற்சியே ஆகும். தோல்வியற்ற வாழ்க்கையை வாழ்வதற்கான ஒரே வழி, தொடர்ந்து தேவனை நோக்கிப் பார்ப்பதே. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நோக்கி உங்கள் ஆவியின் கண்களைத் திறந்திருக்கும்படி தேவனிடம் கேளுங்கள்...[42]

ஊழியத்தில் இந்த உண்மையுள்ள தன்மையை நாம் எவ்வாறு காத்துக்கொள்வது? வாரத்திற்கு வாரம், வருடத்திற்கு வருடம் தேவனையும் நம் அயலானையும் நாம் எப்படித் தொடர்ந்து நேசிக்க முடியும்? நம் அன்றாட வாழ்வில் இயேசுவின் சுபாவத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு கிறிஸ்துவின் சிந்தை நமக்குத் தேவை.

கிறிஸ்துவின் சிந்தை குறித்த விவரணம்

► பிலிப்பியர் 2:1-16-ஐ வாசிக்கவும்.

பிலிப்பியர் சபைக்கு பவுல் எழுதிய அறிவுரை, இயேசு கிறிஸ்துவின் சுபாவத்தைக் கொண்டிருப்பது என்றால் என்ன என்பதற்கு ஒரு வல்லமையான வழிகாட்டியாகும். தனிப்பட்ட மோதல்களால் பிளவுபட்டிருந்த ஒரு சபைக்கு பவுல் எழுதினார்: "ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலிப்பியர் 2:3-4).

பரிவுணர்வின் வார்த்தைகள்

இயேசு தன் தாயைப் பராமரிக்கும் பொறுப்பை யோவானிடம் ஒப்படைத்தார்: "ஸ்திரீயே, அதோ, உன் மகன்" என்றும், யோவானைப் பார்த்து, "அதோ, உன் தாய்" என்றும் சொன்னார் (யோவான் 19:26-27). முன்னதாக, மிக ஆழமான குடும்ப உறவுகள் ஆவிக்குரியவை என்று இயேசு போதித்திருந்தார். "இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறான்" (மத்தேயு 12:49-50).

அவர் மரிக்கும் நேரத்தில், இயேசுவின் சரீரப்பிரகாரமான சகோதரர்கள் அவிசுவாசிகளாக இருந்தனர்; அவர்கள் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தின் ஒரு பகுதியாக இருக்கவில்லை. எனவே, இயேசு தனது தாயை, தனக்கு அன்பானவனாயிருந்த ஆவிக்குரிய சகோதரனான யோவானின் பராமரிப்பில் ஒப்படைத்தார்.

சரீர வேதனையின் வார்த்தைகள்

தேவனுடைய குமாரனாக இருந்தது, சிலுவையின் சரீர வேதனைகளிலிருந்து இயேசுவை விடுவிக்கவில்லை. தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளிக்குரிய அனைத்து உடல் வேதனைகளையும் அவர் அனுபவித்தார். கொடூரமான வெப்பத்தில் தண்ணீர் இல்லாமல் பல மணிநேரம் இருந்த பிறகு, "தாகமாயிருக்கிறேன்" என்று இயேசு கதறினார் (யோவான் 19:28).

ஆவிக்குரிய வேதனையின் வார்த்தைகள்

சிலுவையில் இயேசு உச்சரித்த மிகவும் நெஞ்சுருகப்பண்ணும் வார்த்தைகளை மத்தேயுவும் மாற்குவும் பதிவு செய்துள்ளனர்: "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத்தேயு 27:46 மற்றும் மாற்கு 15:34, சங்கீதம் 22:1-ஐ மேற்கோள் காட்டுகிறார்).

தமது மனித தன்மையில், தாவீது உணர்ந்த அதே கைவிடப்பட்ட உணர்வை இயேசுவும் உணர்ந்தார். மக்கள் தாவீதைப் பரியாசம்பண்ணி, அவர் முன்னாகத் தங்கள் தலைகளைத் துலுக்கினது போல (சங்கீதம் 22:7), அவர்கள் இயேசுவையும் நிந்தித்து, தங்கள் தலைகளைத் துலுக்கினார்கள் (மத்தேயு 27:39). அந்தத் தருணத்தில் தாவீது உணர்வுப்பூர்வமாக தேவனால் கைவிடப்பட்டதாக உணர்ந்தது போலவே, இயேசுவும், "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கதறினார் (மத்தேயு 27:46).

இருப்பினும், தேவன் தன்னை உண்மையாகவே கைவிடவில்லை என்பதை தாவீது கண்டுகொண்டார். இந்த சங்கீதத்தின் பிற்பகுதியில், "உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்" என்று தாவீது சாட்சி கூறுகிறார் (சங்கீதம் 22:24).

அதே வழியில், தேவன் தன்னைக் கைவிடவில்லை என்பதை இயேசு கண்டார். சிலுவையிலிருந்து வந்த இயேசுவின் அடுத்த வார்த்தைகள் அவருடைய பிதாவை நோக்கிச் செய்யப்பட்ட கதறலாகும். பிதா தன்னை கைவிடவில்லை என்பதை அறிந்து, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று இயேசு ஜெபித்தார் (லூக்கா 23:46).

தேவன் நம் ஜெபங்களைக் கேட்பதில்லை என்று தோன்றும் போது நாம் உணரும் அதே தனிமை உணர்வை, இயேசுவும் தமது மனித தன்மையில் அனுபவித்தார். ஆனால், பரம பிதா ஒருபோதும் தம் பிள்ளைகளைக் கைவிடுவதில்லை என்ற உண்மையையும் இயேசு அனுபவித்தார். அவருடைய பிரசன்னத்தை நாம் உணராதபோதும், அவர் நம்மைக் கேட்கிறார் என்பதை அறிந்து நாம் அவரை நோக்கி கூப்பிடலாம்.

ஒப்புக்கொடுத்தலின் வார்த்தைகள்

"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக்கா 23:46). இயேசு தனது வாழ்நாள் முழுவதும் பிதாவுக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்து வாழ்ந்தார். சிலுவையை எதிர்நோக்கியபோது, "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று அவர் ஜெபித்தார் (மத்தேயு 26:39). இப்போது அவர் பிதாவின் சித்தத்திற்குத் தன் இறுதி ஒப்புக்கொடுத்தலை வெளிப்படுத்தினார்.

வெற்றியின் வார்த்தைகள்

"முடிந்தது" (யோவான் 19:30). இந்த வெற்றிக் குரலின் மூலம், பிதா தன்னை அனுப்பிய நோக்கத்தை நிறைவேற்றிவிட்டதாக இயேசு அறிவித்தார். பாவத்திற்கான தண்டனை செலுத்தப்பட்டது; சாத்தான் தோற்கடிக்கப்பட்டான். பழைய ஏற்பாட்டு ஆட்டுக்குட்டிகளால் முன்னறிவிக்கப்பட்டதும், ஏசாயா 53-ல் வாக்களிக்கப்பட்டதுமான பாவநிவாரணம் நிறைவேறியது.

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை தேவன் நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரிந்தியர் 5:21). ஏசாயா 53-ல், நம்முடைய பாவங்களைச் சுமக்கும் பாடுபடும் ஊழியக்காரனைப் பற்றித் தீர்க்கதரிசி பேசினார் (ஏசாயா 53:4-12). இந்தப் பதிலீடான பாவநிவாரணம் (substitutionary atonement) சிலுவையில் நிறைவேற்றப்பட்டது என்பதை பவுல் காட்டுகிறார்.

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு இயேசு நமக்காகப் பாவமானார் (2 கொரிந்தியர் 5:21). நாம் இனியும் பாவத்திற்கு அடிமைப்பட்டு வாழ்வதில்லை; கிறிஸ்துவின் மரணத்தின் மூலம், நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். அவருக்குள் நாம் நீதிமான்கள் என்று அழைக்கப்படுகிறோம் என்று மட்டும் பவுல் சொல்லவில்லை. மாறாக, அவருக்குள் நாம் உண்மையில் தேவனுடைய நீதியாகும்படிக்கு என்கிறார். சிலுவையில் கிறிஸ்துவின் கிரியையின் மூலம், ஒரு உண்மையான மாற்றம் நிகழ்கிறது. நாம் நீதிமான்களாக மாறும்படி கிறிஸ்து பாவமானார்.

ஓ தெய்வீக அன்பே, நீர் என்ன செய்தீர்!

ஓ தெய்வீக அன்பே, நீர் என்ன செய்தீர்!
அழியாத தேவன் எனக்காக மரித்தார்!
பிதாவின் நித்திய குமாரன்
என் பாவங்கள் அனைத்தையும் சிலுவை மரத்திலே சுமந்தார்.
அழியாத தேவன் எனக்காக மரித்தார்:
என் ஆண்டவர், என் அன்பர், சிலுவையில் அறையப்பட்டார்!

எனக்காகவும் உனக்காகவும் அவர் சிலுவையில் அறையப்பட்டார்,

கலகக்காரர்களாகிய நம்மை தேவனிடம் திருப்பிக்கொண்டுவரவே.
விசுவாசியுங்கள், இந்தச் சாட்சியை மெய்யென்று விசுவாசியுங்கள்,
நீங்கள் அனைவரும் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டீர்கள்.
மன்னிப்பு அனைத்தும் அவர் விலாவிலிருந்து பாய்கிறது:
என் ஆண்டவர், என் அன்பர், சிலுவையில் அறையப்பட்டார்!

வழியில் கடந்துபோகிறவர்களே, அவரைப் பாருங்கள்,
இரத்தம் சிந்தும் ஜீவனுக்கும் சமாதானத்துக்கும் அதிபதியை!
பாவிகளே, உங்கள் இரட்சகர் மரிப்பதைப் பாருங்கள்,
'அவருடைய துக்கத்தைப் போல் ஒரு துக்கம் உண்டா?' என்று சொல்லுங்கள்.
வாருங்கள், என்னுடனே அவர் இரத்தம் பூசப்பட்டதை உணருங்கள்:
என் ஆண்டவர், என் அன்பர், சிலுவையில் அறையப்பட்டார்!
- சார்லஸ் வெஸ்லி

விசாரணையும் சிலுவை மரணமும் (தொடரும்)

அடக்கம் பண்ணப்படுதல்

► மத்தேயு 27:57-61-ஐ வாசிக்கவும்.

கொரிந்தியர்களுக்கு பவுல் அளித்த செய்தியில், இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார் என்று பிரசங்கித்தார் (1 கொரிந்தியர் 15:3-4). பவுலுக்கும் ஆதிகால திருச்சபைக்கும், அடக்கம் பண்ணப்படுதல் முக்கியமானதாக இருந்தது.

இன்று பல 'பாடுகளின் வார' அனுசரிப்புகள் புனித வெள்ளியிலிருந்து நேரடியாக ஈஸ்டர் ஞாயிறுக்குத் தாவுகின்றன. ஆனால் திருச்சபை வரலாற்றின் பெரும்பகுதியில், "புனித சனி" என்பது ஈஸ்டர் விழிப்புணர்வு ஆராதனையின் முக்கிய பகுதியாக அங்கீகரிக்கப்பட்டது. அடக்கம் பண்ணப்படுவதன் முக்கியத்துவம் என்ன?[51]

வரலாற்று முக்கியத்துவம்

இயேசு உண்மையில் மரித்தார் என்பதை அடக்கம் பண்ணப்படுதல் காட்டுகிறது. இயேசு மூர்ச்சை அடைந்தார், பின்னர் அதிலிருந்து விழித்துக்கொண்டார் என்ற இஸ்லாமியக் கூற்றுகளுக்கு மாறாக, அவர் உண்மையில் மரித்தார் என்பதை அடக்கம் பண்ணப்படுதல் காட்டுகிறது. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியை எப்படிக் கொல்வது என்பது

[51] James Boice, “The Burial of Jesus” என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இது http://www.alliancenet.org/tab/the-burial-of-jesus-christ-part-one என்னும் இணையதளத்தில் மார்ச் 22, 2021 அன்று அணுகப்பட்டது.

ரோமானியர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் இறப்பதற்கு முன் சிலுவையிலிருந்து அவரை இறக்குவதற்கு வாய்ப்பே இல்லை.

மேலும், பெரிய கல்லும், காவலர்களும் கல்லறையிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தினர். ஒருவேளை ரோம வீரர்கள் தவறுதலாக இயேசு இறப்பதற்கு முன்பே அவரை அடக்கம் செய்திருந்தாலும், சிலுவையில் பல மணிநேர வேதனையை அனுபவித்த ஒரு மனிதன் பிரேதத் துணிகளை அவிழ்த்து, கனமான கல்லைத் தள்ளிவிட்டு, தொழில்முறை காவலர்கள் கூட்டத்தை மீறிச் சென்றிருக்க முடியும் என்பது நினைத்துப்பார்க்க முடியாத ஒன்று. நாசரேத்தாகிய இயேசு மரித்தார் என்ற வரலாற்று உண்மையை அடக்கம் பண்ணப்படுதல் உறுதிப்படுத்துகிறது.

தீர்க்கதரிசன முக்கியத்துவம்

அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஆட்டுக்குட்டியைப் பற்றி எழுதிய ஏசாயா, "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்" என்று தீர்க்கதரிசனம் உரைத்தார் (ஏசாயா 53:9). இயேசுவின் அடக்கம் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது.

இயேசு மரித்த பிறகு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு பிலாத்துவிடம் சென்று சரீரத்தைக் கேட்டார். யோசேப்பு ஆலோசனை சங்கத்தின் உறுப்பினராக இருந்தார், ஆனால் அவர் இயேசுவைக் குற்றவாளியாகத் தீர்த்ததை ஏற்றுக்கொள்ளவில்லை. பெரும்பாலான தலைவர்கள் இயேசுவுக்கு எதிராகத் திரும்பிய பின்னரும், சிலர் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடிக்கொண்டிருந்தார்கள். யோசேப்பு இந்த அந்தரங்க சீடர்களில் ஒருவர். அவரும் நிக்கொதேமுவும் யோசேப்பின் கல்லறையில் இயேசுவின் உடலை அடக்கம் செய்தனர் (மத்தேயு 27:57-60, மாற்கு 15:42-46, லூக்கா 23:50-54, யோவான் 19:38-42).

இதற்கு எவ்வளவு தைரியம் தேவைப்பட்டிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். சீடர்கள் கூட இயேசுவைக் கைவிட்ட பிறகு, மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளியுடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள யோசேப்பு முன்வந்தார். இந்த பகிரங்க நிலைப்பாடு, ஆலோசனை சங்கத்தில் யோசேப்பின் பதவியையும் சமூகத்தில் அவருக்கு இருந்த நிலையையும் ஆபத்துக்குள்ளாக்கியது. மேலும், யோசேப்பு பிலாத்துவின் கோபத்திற்கு ஆளாகும் அபாயமும் இருந்தது. சிலுவையில் அறையப்பட்டவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய ரோமானிய அதிகாரிகள் அரிதாகவே நண்பர்கள் அல்லது உறவினர்களை அனுமதித்தனர். மற்ற குற்றவாளிகளுக்கு எச்சரிக்கையாக உடல்கள் பொதுப் பார்வையில் விடப்பட்டன. பிலாத்து அனுமதி அளித்தது, இயேசு எந்தக் குற்றமும் செய்யாதவர் என்பதை பிலாத்து அறிந்திருந்தார் என்பதற்கு மற்றொரு சான்றாகும்.

இறையியல் முக்கியத்துவம்

பவுல் நமது ஞானஸ்நானத்தை இயேசுவின் அடக்கத்தோடு ஒப்பிட்டார்:

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3-4).

அடக்கம் பண்ணப்படுதல் என்பது இயேசுவின் மரணத்தை பகிரங்கமாக உறுதிப்படுத்துவதாகும். அதே வழியில், ஞானஸ்நானம் என்பது இயேசுவின் மரணத்தில் நமது பங்களிப்பிற்கான பகிரங்க சாட்சியாகும். ஞானஸ்நானத்தில், நமது பழைய வாழ்க்கை முறைக்கு நாம் மரித்தவர்கள் என்று அறிவிக்கப்படுகிறோம்.

ஒரு நபரின் மரணத்தை அங்கீகரிப்பதில் அடக்கம் பண்ணப்படுதல் இறுதிப் படியாகும். மேற்கத்திய நாடுகளில், இந்த பூமியில் சொல்லப்படும் "பிரியாவிடை" முடிந்துவிட்டது என்பதை அங்கீகரிக்க, துக்கப்படுபவர்கள் சவப்பெட்டியின் மீது மண்ணைப் போடுவார்கள். பாவத்திற்கு நாம் மரித்தோம் என்பது முடிவானது என்பதை பவுல் வலியுறுத்துகிறார். கிறிஸ்து மரித்தது போல, நாமும் பாவத்திற்கு மரித்திருக்கிறோம். கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்ட பிறகு மீண்டும் பாவத்திற்குத் திரும்புவது, ஒரு பிணத்தைத் தோண்டி எடுப்பதைப் போன்றது.[52] நாம் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டோம்; இனி நாம் பாவத்திற்குப் பிழைத்திருக்கிறவர்கள் அல்ல.

உயிர்த்தெழுதல்

பவுல் கொரிந்துவில் சிலுவையைப் பற்றிப் பிரசங்கித்தார்; கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார். பின்னர், பவுல் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பிரசங்கித்தார்; கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, அநேக சாட்சிகளுக்குத் தரிசனமானார் (1 கொரிந்தியர் 15:3-8). உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ விசுவாசத்தின் மையமாக உள்ளது.

► மத்தேயு 27:62-28:15-ஐ வாசிக்கவும்.

சிலுவையில் எழுதப்பட்டிருந்த வாசகத்தை மாற்றுமாறு மதத் தலைவர்கள் பிலாத்துவிடம் கேட்டபோது, அவர் மறுத்துவிட்டார். "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா" (யோவான்

---

[52] James Boice, “The Burial of Jesus” என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இது http://www.alliancenet.org/tab/the-burial-of-jesus-christ-part-one என்னும் இணையதளத்தில் மார்ச் 22, 2021 அன்று அணுகப்பட்டது.

19:19) என்ற வாசகம் அடங்கிய பலகைக்குக் கீழே அவர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தார். மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளிக்கு இந்தப் பட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம், தான் வெறுத்த யூதர்களை பிலாத்து ஏளனம் செய்தார்.

சிலுவையில் அறையப்பட்ட பிறகு, மதத் தலைவர்கள் மீண்டும் பிலாத்துவிடம் வந்து, கல்லறையைப் பாதுகாக்க ரோமானியக் காவலைக் கேட்டார்கள்.

> ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது. ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றுநாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள் (மத்தேயு 27:63-64).

பிலாத்துவின் அனுமதியுடன், அவர்கள் கல்லறையை முத்திரை இட்டு, தோட்டத்தில் இயேசுவைக் கைது செய்த அதே படையைச் சேர்ந்த காவலர்களைக் கொண்டு அதைப் பாதுகாத்தனர். ஆனால் திடீரென்று:

> அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்தமழையைப்போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள் (மத்தேயு 28:2-4).

இயேசு உயிர்த்தெழுந்தார்!

► யோவான் 20:1-29-ஐ வாசிக்கவும்.

சுவிசேஷங்கள் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அளித்த பல தரிசனங்களைப் பதிவு செய்கின்றன. அவர் பலவிதமான சூழ்நிலைகளில் பலருக்குத் தோன்றினார்.

சந்தேகவாதிகள் சில நேரங்களில், "கல்லறையில் இருந்த பெண்கள் பிரமை (hallucination) பிடித்த நிலையில் இருந்தார்கள். அவர்கள் எதைப் பார்க்க எதிர்பார்த்தார்களோ அதையே பார்த்தார்கள்" என்று வாதிடுகிறார்கள். இருப்பினும், இந்த சாட்சிகள் இயேசுவை உயிருள்ளவராகப் பார்க்க எதிர்பார்க்க**வில்லை**; அவர் இறந்துவிட்டார் என்பது அவர்களுக்குத் தெரியும்! அவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய தீர்க்கதரிசனங்களை அவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை (யோவான் 20:9). இயேசுவைக் கண்டதாக முதல் சாட்சிகள் சொன்னபோதும், மற்ற சீடர்கள் அதை நம்பவில்லை (மாற்கு 16:13). இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

படிப்படியாக, மகதலேனா மரியாள் (யோவான் 20:11-18), எம்மாவு ஊருக்கு நடந்து சென்ற இரண்டு சீடர்கள் (லூக்கா 24:13-32), பதினொரு அப்போஸ்தலர்கள் (யோவான் 20:19-31), மற்றும் 500 பேர் கொண்ட குழுவிற்கும் (1 கொரிந்தியர் 15:6) தரிசனமானதன் மூலம், இயேசு உண்மையில் உயிர்த்தெழுந்தார் என்பதை அவருடைய சீடர்கள் உணர்ந்தனர். ஆதி திருச்சபை, "அவர் உயிர்த்தெழுந்தார். அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்!" என்ற வார்த்தைகளுடன் ஆராதனையைத் தொடங்கியது.

பயன்பாடு: சிலுவை மற்றும் உயிர்த்தெழுதலின் வல்லமையில் ஊழியம் செய்தல்

பல தாராளவாத இறையியலாளர்கள் உயிர்த்தெழுதலை ஒரு கட்டுக்கதை என்று ஒதுக்கித்தள்ள முயன்றனர். இருப்பினும், அப்போஸ்தலர்களின் விசுவாசம், இயேசுவின் வாழ்க்கை ஏற்படுத்திய நீடித்த தாக்கத்தைப் பற்றிய ஒரு அழகான கதையின் அடிப்படையில் அல்ல, மாறாக அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற உறுதியான உண்மைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. இயேசு மரித்தார் என்றும், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்றும் அப்போஸ்தலர்கள் அறிந்திருந்தார்கள். இது துன்புறுத்தலையும் மரணத்தையும் கூட எதிர்கொள்ளும் நம்பிக்கையை அவர்களுக்கு அளித்தது. இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் இன்றைய ஊழியத்திற்கு எவ்விதம் பேசுகிறது?

சிலுவையின் வல்லமையில் ஊழியம் செய்தல்

► 1 கொரிந்தியர் 1:17-2:5-ஐ வாசிக்கவும்.

தனது இரண்டாவது மிஷனரி பயணத்தின் போது, மார்ஸ் மேடையில் பிரசங்கித்த பிறகு பவுல் அத்தேனே பட்டணத்திலிருந்து கொரிந்துவுக்குப் பயணம் செய்தார். அத்தேனே பட்டணத்தில் பவுல் தனது ஊழியத்தின் மூலம் குறைந்தபட்ச பலன்களையே கண்டார் என்று தோன்றுகிறது (அப்போஸ்தலர் 17:16-34). அவர் அத்தேனேவில் ஒரு சபையை நிறுவவில்லை, மேலும் தத்துவ மனப்பான்மை கொண்ட அத்தேனே பட்டணத்தார் அவருடைய உயிர்த்தெழுதலின் செய்தியைப் பரியாசம் பண்ணினார்கள். அத்தேனேவிலிருந்து, அகாயா மாகாணத்தின் மிகவும் செல்வாக்கு மிக்க நகரமான கொரிந்துவுக்கு மேற்கே 75 கிலோமீட்டர் தூரம் பவுல் பயணம் செய்தார்.

தெசலோனிக்கே, பெரோயா மற்றும் அத்தேனே ஆகிய மூன்று தொடர்ச்சியான நகரங்களில் எதிர்ப்பைச் சந்தித்த பிறகு பவுல் கொரிந்துவுக்கு வந்தார். இதனால்தான் அவர், "அல்லாமலும் நான் பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்" (1 கொரிந்தியர் 2:3) என்று கூறியிருக்கலாம். கிரேக்கப் பார்வையாளர்கள் சொல்லாற்றலையும் (eloquence) அறிவுப்பூர்வமான திறமையையும் எதிர்பார்த்த போதிலும், பவுல் சிலுவையை மட்டுமே பிரசங்கிக்கத் தீர்மானித்தார். அவருடைய செய்தியின் வல்லமை அவருடைய சொல்லாற்றலிலிருந்து வரவில்லை,

சிலுவையிலிருந்தே வந்தது. பவுல் "கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல்" பிரசங்கித்தார் (1 கொரிந்தியர் 1:17).

கொரிந்துவில் பவுல், "இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" (1 கொரிந்தியர் 2:2) என்று கூறினார். சிலுவையின் செய்தி பலருக்கு இடறலாக இருக்கும் என்பதை பவுல் அறிந்திருந்தார்.

> யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார் (1 கொரிந்தியர் 1:22-23).

இந்தச் செய்தி யூதர்களுக்கு ஒரு இடறலாக அல்லது அவமானமாக இருந்தது. மேசியாவை உறுதிப்படுத்தும் அடையாளங்களை அவர்கள் எதிர்பார்த்தார்கள். சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதன் தேர்ந்தெடுக்கப்பட்ட மேசியாவாக இருக்க முடியும் என்ற எண்ணம் அவர்கள் பார்வையில் அபத்தமானது. நியாயப்பிரமாணம், "தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்" (உபாகமம் 21:23) என்று கூறியது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே மேசியா என்று கூறுவது யூதப் பார்வையாளர்களுக்கு அவமானகரமானதாக இருந்தது.

சிலுவையின் செய்தி புறஜாதியாருக்குப் பைத்தியக்காரத்தனமாக இருந்தது. கிரேக்கர்கள் ஒரு தியாகியின் உன்னதமான மரணத்தை மதித்தனர். இயேசு ரோமானியர்களுக்கு எதிரான போரில் கொல்லப்பட்டிருந்தால், கிரேக்க சிந்தனையாளர்கள் அவருடைய துணிச்சலுக்காக அவரைக் கௌரவித்திருப்பார்கள். ஆனால் சிலுவையில் அறையப்படுதல் பாதிக்கப்பட்டவரை அவமானப்படுத்தியது; இது ஒரு உன்னதமான மரணம் அல்ல. சிலுவையில் அறையப்பட்டவர்களுக்கு வழக்கமாக முறையான அடக்கம் மறுக்கப்பட்டது. அவர்களின் சரீரம் பறவைகளாலும் எலிகளாலும் தின்னப்பட்டு, எலும்புகள் ஒரு பொதுவான குழியில் வீசப்பட்டன. சிலுவையில் அறையப்பட்ட ஒரு யூதக் குடியானவரை "ஆண்டவர்" என்று உரிமை கோருவது புறஜாதிப் பார்வையாளர்களுக்கு அபத்தமாகத் தோன்றியது.

சிலுவை யூதர்களுக்கு இடறலாகவும், புறஜாதியாருக்குப் பைத்தியமாகவும் இருந்தது, ஆனால் பவுல் சிலுவையின் செய்தியைத் தயக்கமின்றிப் பிரசங்கித்தார். பவுலின் உதாரணம் நமக்கு ஒரு முன்மாதிரியாக அமைகிறது. இன்றும், முதல் நூற்றாண்டைப் போலவே, சிலுவை சிலரைப் புண்படுத்தும், மற்றவர்களுக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும், ஆனாலும் நாம் பிரசங்கிக்க வேண்டிய செய்தி அதுவே.

ஊழியர்களாகவும் சபைத்தலைவர்களாகவும் நம்முடைய நம்பிக்கை நம் திறமையிலிருந்து வருவதில்லை; நமது நம்பிக்கை சிலுவையின் செய்தியை

அடிப்படையாகக் கொண்டது. பவுல் ஒரு அற்புதமான கல்வியறிவையும், சிறந்த அறிவாற்றலையும் கொண்டிருந்தார், மேலும் அக்காலத்தின் சிறந்த அறிஞர்களுடன் வாதிடக்கூடியவர். ஆனால் அவரது இறுதி நம்பிக்கை சிலுவையில் இருந்தது. நாம் வாதங்களால் மட்டும் மக்களை வென்றால், அவர்களின் விசுவாசம் மனிதர்களின் ஞானத்தில் தங்கியிருக்கக்கூடும்; ஆனால் நாம் அவர்களைச் சிலுவைக்கு நேராகச் சுட்டிக்காட்டும்போது, அவர்களின் விசுவாசம் தேவனுடைய பலத்தில் நிலைநிற்கும் (1 கொரிந்தியர் 2:5).

உயிர்த்தெழுதலின் வல்லமையில் ஊழியம் செய்தல்

► அப்போஸ்தலர் 2:22-36-ஐ வாசிக்கவும்.

உயிர்த்தெழுதலே ஆதி கிறிஸ்தவ பிரசங்கத்தின் மையப் பொருளாக இருந்தது என்பதை **அப்போஸ்தலர்** நடபடிகள் புத்தகம் காட்டுகிறது. பெந்தெகோஸ்தே நாளில், தீர்க்கதரிசிகளால் செய்யப்பட்ட வாக்குறுதிகளின் நிறைவேறுதல் இயேசுவே என்பதற்கு ஆதாரமாக பேதுரு உயிர்த்தெழுதலைச் சுட்டிக்காட்டினார்.

அகிரிப்பா ராஜா முன்பாகத் தன்னைத் தற்காத்துப் பேசுகையில் பவுல்: “தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற நம்பிக்கைக்காகவே நான் இப்பொழுது நியாயத்தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன். இரவும் பகலும் இடைவிடாமல் ஆராதனை செய்துவருகிற நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்று நம்பியிருக்கிறார்கள்” என்று கூறினார். அந்த வாக்குறுதி என்ன? உயிர்த்தெழுதல். “தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன?” (அப்போஸ்தலர் 26:6-8).

► 1 கொரிந்தியர் 15:12-34-ஐ வாசிக்கவும்.

1 கொரிந்தியர் நிருபத்தில், தனது ஊழியம் சிலுவையின் வல்லமையில் மட்டுமல்ல, உயிர்த்தெழுதலின் வல்லமையிலும் நிலைத்திருக்கிறது என்பதை பவுல் காட்டுகிறார். உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், தனது ஊழியம் அர்த்தமற்றது என்று பவுல் வலியுறுத்துகிறார். "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா" (1 கொரிந்தியர் 15:14). உயிர்த்தெழுதல் இல்லாமல், இயேசு தோல்வியுற்ற மற்றொரு மேசியாவை விட மேலானவர் அல்ல. உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், இயேசு ஒரு துன்பியல் தியாகியாக இருக்கலாம், ஆனால் அவர் வாக்களிக்கப்பட்ட மேசியா அல்ல.

உயிர்த்தெழுதலே நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை. "கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" (1 கொரிந்தியர் 15:17). சிலுவையில், கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காகப் பாவநிவாரணம் செய்தார், ஆனால் உயிர்த்தெழுதலே மரணத்தின்

மீதும் பாவத்தின் மீதும் கிறிஸ்துவின் வல்லமையை நிரூபித்தது. உயிர்த்தெழுதல் இல்லையென்றால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறீர்கள் என்று பவுல் கூறுகிறார்.

உயிர்த்தெழுதலே நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை. "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரிந்தியர் 15:21-22). கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தபடியால், அவர்களுக்கும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உண்டு என்று பவுல் கொரிந்தியர்களுக்கு உறுதியளித்தார்.

இரண்டாம் நூற்றாண்டில், லூசியன் என்ற கிரேக்க நாவலாசிரியர், உயிர்த்தெழுதலின் மீதான கிறிஸ்தவர்களின் நம்பிக்கையைப் பரியாசம் செய்தார். அவர் சொன்னார், "தாங்கள் என்றென்றும் வாழ்வோம் என்று அந்தப் பரிதாபத்திற்குரியவர்கள் நம்பவைக்கப்பட்டுள்ளனர். அதன் காரணமாக, அவர்கள் மரணத்தை அற்பமாக எண்ணி, தங்கள் விசுவாசத்திற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள்." லூசியன் கிறிஸ்தவர்களைப் பரியாசம் செய்தார், ஆனால் அவருடைய வார்த்தைகள் உண்மை. லூசியன் சொன்னது போல், இரண்டாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தாங்கள் என்றென்றும் வாழ்வோம் என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கையின் காரணமாக, அவர்கள் விசுவாசத்திற்காக மரிக்கத் தயாராக இருந்தார்கள்.

இன்றும் இது நமக்கு உண்மையாக இருக்க வேண்டும். கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று நாம் உண்மையாக நம்பினால், அது துன்புறுத்தல் மற்றும் மரணத்தை எதிர்கொள்ளும் நம்பிக்கையை நமக்கு அளிக்க வேண்டும். உயிர்த்தெழுதலே நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை.

உயிர்த்தெழுதலே நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படை. உயிர்த்தெழுதல் உபதேசத்திலிருந்து ஒரு பிரமிக்க வைக்கும் நடைமுறைப் பயன்பாட்டை பவுல் முன்வைக்கிறார். "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்" (1 கொரிந்தியர் 15:32, 34). பவுலின் கூற்றுப்படி, தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு உயிர்த்தெழுதல் ஒரு முக்கியமான காரணத்தை அளிக்கிறது. உயிர்த்தெழுதல் இல்லை என்றால், "புசிப்போம், குடிப்போம், ஏனென்றால் விரைவில் சாவோம்" என்று கூறிய எபிக்குரியர்களைப் (Epicureans) போல நாம் வாழலாம். உயிர்த்தெழுதல் இல்லையென்றால் நித்தியத்திற்காக வாழ்வதில் எந்தக் காரணமும் இல்லை. ஆனால், உயிர்த்தெழுதல் இருப்பதால், விழித்துக்கொண்டு பாவமில்லாத வாழ்க்கை வாழுங்கள் என்று பவுல் தொடர்கிறார். பாவத்தின் மீதான நமது வெற்றி, உயிர்த்தெழுதலில் நமக்குள்ள நம்பிக்கையால் தூண்டப்படுகிறது.

ஊழியத்தின் சவால்களை எதிர்கொள்ளும்போது நமக்கிருக்கும் விசுவாசக் குறைவுக்காக உயிர்த்தெழுதலின் கதை நம்மைக் கடிந்துகொள்ள வேண்டும் (convict). எத்தனை முறை ஜெபங்களுக்குப் பதில் கிடைக்காது என்று எதிர்பார்க்கிறோம்? ஏன்? ஏனென்றால் உயிர்த்தெழுதலின் வல்லமையை நாம் மறந்துவிடுகிறோம்! வெற்றியின் நம்பிக்கை இல்லாமலேயே எத்தனை முறை சோதனையை எதிர்கொள்கிறோம்? ஏன்? ஏனென்றால் பவுலின் வாக்குறுதியை நாம் மறந்துவிடுகிறோம்: "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11).

கிறிஸ்து நமக்குள் வாழ்ந்தால், நாம் இனி மாம்சத்தில் வாழவில்லை; நாம் இனி பாவத்திற்கு கைதிகள் அல்ல. இதுவே உயிர்த்தெழுதலின் வல்லமையில் வாழ்வதாகும். இயேசுவைக் கல்லறையிலிருந்து எழுப்பிய வல்லமை, பாவத்தின் மீது நமக்கு அன்றாட வெற்றியைத் தருகிறது. உயிர்த்தெழுதலின் வல்லமையில் வாழ்வதும் ஊழியம் செய்வதும் இதுவே.

முடிவுரை: கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் அடையாளங்கள்

உங்கள் வாழ்க்கை கிறிஸ்துவைப் போல் உள்ளதா?

லூக்கா எழுதினார், “முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று” (அப்போஸ்தலர் 11:26). அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளை மக்கள் கவனித்தபோது, “அந்த மக்கள் கிறிஸ்துவைப் போல நடக்கிறார்கள். நாம் அவர்களை ‘கிறிஸ்தவர்கள்’ என்று அழைக்க வேண்டும்” என்று சொல்லத் தொடங்கினார்கள். இந்த வசனத்தை நீங்கள் வாசிக்கும்போது, உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்: “என் அயலார் என் நடத்தையையும், வார்த்தைகளையும், மனப்பான்மையையும் பார்த்து எனக்கு ‘கிறிஸ்தவன்’ என்ற பெயரைக் கொடுப்பார்களா? நான் கிறிஸ்துவைப் போல் இருக்கிறேனா?” அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பிரதிபலிக்கும் வகையில் வாழ்ந்தார்கள்; அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள்.

பல வருடங்கள் போதகராகப் பணியாற்றிய பிறகு, டாக்டர் எச்.பி. லண்டன் இப்போது இளம் போதகர்களுக்கு ஒரு வழிகாட்டியாக பணியாற்றுகிறார். போதகர்கள் எதிர்கொள்ளும் ஆன்மீக ஆபத்துக்களைக் குறித்து அவர் எச்சரித்தார். “ஒருவர் பரிசுத்தமாக இல்லாமலேயே பரிசுத்தமான காரியங்களுக்கு அருகில் இருக்க முடியும். மன்னிப்பைக் குறித்துப் பிரசங்கித்துவிட்டு, மன்னிக்காமல் இருக்க முடியும். ஊழியர்கள் ஊழியத்திற்காக அதிக முயற்சியை எடுத்து, தங்கள் ஆத்துமாவின் ஆரோக்கியத்தைப்

புறக்கணித்துவிடக்கூடும்."[53] மற்றவர்களுக்குப் பிரசங்கித்துவிட்டு, தானே ஆகாதவனாய்ப் போவது சாத்தியமே (1 கொரிந்தியர் 9:27).

மற்றவர்களை வழிநடத்தும்போது ஆன்மீகத் தோல்வியைத் தவிர்க்க உதவும் சில நடைமுறைக் குறிப்புகளை டாக்டர் லண்டன் பரிந்துரைத்தார். கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கையைப் பராமரிக்க உதவும் பகுதிகள் இவை. அவர் எழுதினார்:

- **நீங்கள் பிரசங்கிப்பதை வாழ்ந்து காட்டுங்கள்.** உங்கள் சொந்த வாழ்க்கையில் முதலில் கடைப்பிடிக்காத எதையும் மற்றவர்களுக்குப் பிரசங்கிக்காதீர்கள்.

- **உங்கள் ஆத்துமாவைக் குறித்துக் கரிசனையாயிருங்கள்.** சில மருத்துவர்கள் ஆரோக்கியமற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்கள் மீது அக்கறை கொள்கிறார்கள், ஆனால் தங்கள் சொந்த ஆரோக்கியத்தைப் புறக்கணிப்பார்கள். சில போதகர்கள் ஆன்மீக ரீதியாக ஆரோக்கியமற்றவர்களாக இருக்கிறார்கள். ஒரு போதகராக, உங்கள் ஆன்மீக நலனைக் கவனித்துக்கொள்ள நேரம் ஒதுக்குங்கள்.

- **உங்களைத் தாழ்த்துங்கள்.** ஒரு போதகர் என்பவர் மேய்ப்பர் என்பதை நினைவில் கொள்ளுங்கள், அவர் ஒரு வங்கித் தலைவர் (bank president) அல்ல. ஒரு சேவகனாக இருங்கள்.

- **ஏமாற்றங்களின் மூலமாக வளருங்கள்.** ஊழியத்தில் உங்களுக்கு ஏமாற்றம் ஏற்படும். நீங்கள் வழிகாட்டும் ஒருவர் வழிவிலகிப் போவார். நெருங்கிய நண்பர் உங்களுக்கு விரோதமாக மாறுவார். சபை மக்கள் உங்களைப் புறக்கணிப்பார்கள். அந்த ஏமாற்றம் உங்கள் நம்பிக்கையை இழக்கச் செய்ய அனுமதிக்காதீர்கள். யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். தேமா பவுலைக் கைவிட்டான். கண்ணீரின் மத்தியிலும், தொடர்ந்து வளருங்கள், மந்தையைத் தொடர்ந்து மேயுங்கள்.

உங்கள் ஊழியம் கிறிஸ்துவைப் போல் உள்ளதா?

இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியம் குறித்த இந்தப் பாடங்களில், இயேசுவின் ஊழியத்தின் பல குணாதிசயங்களை நாம் பார்த்தோம். இந்தக் குணாதிசயங்கள் உங்கள் ஊழியத்தில் காணப்படுகின்றனவா?

உங்கள் ஊழியத்தை மதிப்பிடுவதற்கு நீங்கள் கேட்க வேண்டிய சில கேள்விகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

---

[53] H. B. London, *They Call Me Pastor.* (Grand Rapids: Baker Books, 2000), 145

- பாவிகள் இரட்சிக்கப்படுகிறார்களா? இயேசு பிரசங்கித்தபோது, மக்கள் புதிய வாழ்வைப் பெற்றார்கள். நீங்கள் மக்களை மறுபிறப்பிற்குள் வழிநடத்துகிறீர்களா?

- விசுவாசிகள் ஆவியானவரால் நிரப்பப்படுகிறார்களா? இயேசு தம் பிள்ளைகளுக்கு ஆவியானவரை அனுப்புவதாக வாக்களித்தார். நீங்கள் ஊழியம் செய்பவர்களிடத்தில் இந்த வாக்குறுதி நிறைவேறுகிறதா?

- சாத்தான் தோற்கடிக்கப்படுகிறானா? சாத்தானின் அரண்கள் தகர்க்கப்படுகின்றனவா? இயேசுவின் ஊழியம் ஆன்மீக அதிகாரத்தால் அடையாளப்படுத்தப்பட்டது.

- காயப்பட்ட மக்கள் சுகத்தைப் பெற்றுக்கொள்கிறார்களா? உடைந்த குடும்பங்கள் ஒப்புரவாகுதலைக் காண்கிறார்களா? சிதறுண்ட வாழ்க்கை முழுமைபெறுகிறதா? முறிந்துபோன உறவுகள் சீரமைக்கப்படுகின்றனவா? உடல், உள்ளம் மற்றும் ஆவிக்குரிய காயங்களால் பாதிக்கப்பட்டவர்களை இயேசு குணப்படுத்தினார்.

- மக்கள் கிருபையையும் சத்தியத்தையும் காண்கிறார்களா? நான் மக்களை இயேசுவிடம் ஈர்க்கிறேனா அல்லது அவர்களை இயேசுவை விட்டு விலக்குகிறேனா? இயேசு சத்தியத்தைக் கண்டிப்புடனும் கிருபையுடனும் பிரசங்கித்தார்.

► இந்தக் கேள்விகளை நீங்கள் விவாதிக்கும்போது, உங்கள் ஊழியம் கிறிஸ்துவைப் போன்று வளர்வதற்கான பகுதிகளைத் தேடுங்கள். ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் வளர்ச்சிக்கான இடம் உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, இந்தப் பட்டியலைச் சுய-தண்டனைக்கான கருவியாகக் கொள்ளாமல், வளர்ச்சிக்கான சவாலாக எடுத்துக்கொள்ளுங்கள்.

பாடம் 8 வீட்டுப்பாடங்கள்

(1) “சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகள்” என்ற தலைப்பில் ஒரு பிரசங்கம் அல்லது வேதப் பாடத்தைத் தயார் செய்யுங்கள். இயேசுவின் இந்த வார்த்தைகள் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு அளிக்கும் செய்தியை வலியுறுத்துங்கள்.

(2) அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உயிர்த்தெழுதலின் அர்த்தம் என்ன என்பதைப் பற்றி ஒரு பிரசங்கம் அல்லது வேதப் பாடத்தைத் தயார் செய்யுங்கள். உங்கள் தயாரிப்பில் சுவிசேஷங்களிலிருந்து உயிர்த்தெழுதல் நிகழ்வையும், 1 கொரிந்தியர் 15:15-17ல் உள்ள பவுலின் வார்த்தைகளையும் பயன்படுத்துங்கள்.

பாடம் 9
ஒரு ஆவிக்குரிய மரபை விட்டுச் செல்லுதல்

பாடத்தின் நோக்கங்கள்

இந்த பாடத்தின் முடிவில், மாணவர் அடையும் பயன்கள்:

(1) இயேசு தம் சீஷர்களுக்கும் சபைக்கும் விட்டுச்சென்ற இறுதி மரபைப் புரிந்துகொள்ளுதல்.

(2) இயேசுவின் மரபில் ஊழியத்தின் முக்கியத்துவத்தை உணருதல்.

(3) அப்போஸ்தலர் நடபடிகளில், இயேசுவின் சீஷர்கள் மூலம் தொடர்ந்து நடந்த அவருடைய ஊழியத்தின் தாக்கத்தை அறிதல்.

(4) தனது சொந்த ஊழியத்தின் மரபை விட்டுச் செல்வதற்கான நடைமுறைப் படிகளை உருவாக்குதல்.

ஊழியத்திற்கான கோட்பாடு

நாம் மறைந்த பிறகு நாம் விட்டுச் செல்வதே நமது ஊழியத்தின் பரீட்சையாகும்.

முன்னுரை

சுரேஷ் என்பவர் பல வருடங்கள் ஒரு மரியாதைக்குரிய போதகராக இருந்த பிறகு ஓய்வு பெறும் நிலையில் இருந்தார். ஒருவர் அவரிடம், "உங்கள் ஓய்வுக்காலத்திற்குப் பிறகு சபைக்காக எப்படித் தயார்படுத்தி வருகிறீர்கள்? அடுத்த 10 ஆண்டுகளுக்கான சபையின் தரிசனம் என்ன?" என்று கேட்டார். அதற்குத் சுரேஷ், "நான் இங்கே இருக்கப்போவதில்லை, ஆகையால் நான் போனபிறகு என்ன நடந்தால் எனக்கென்ன" என்று பதிலளித்தார். ஊழியத்தின் ஒரு முக்கியமான கோட்பாட்டை இந்தப் போதகர் புரிந்துகொள்ளவில்லை: அதாவது, நாம் போனபிறகு என்ன நடக்கிறது என்பதே நமது ஊழியத்தின் இறுதிப் பரீட்சையாகும்.

இந்தப் போதகரை மோகன் என்பவரோடு ஒப்பிட்டுப் பாருங்கள். 25 வருட ஊழியத்திற்குப் பிறகு மோகன் திடீரென இறந்தார். அந்த ஆண்டுகளில், மோகன் தனது உள்ளூர் சபையில் பல ஊழியங்களை முன்னின்று நடத்தினார். வீடற்ற மக்களுக்கான ஊழியம், போதைப்பொருள் மறுவாழ்வுத் திட்டம் மற்றும் வணிகத் தலைவர்களுக்கான ஒரு சுவிசேஷ ஊழியம் ஆகியவற்றை அவர் உருவாக்கியிருந்தார். மோகனின் இறுதிச் சடங்கில், போதைப்பொருள் மறுவாழ்வு ஊழியத்தின் தலைவர், "கடந்த மாதம், அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்க நானும் மோகனும்

சந்தித்தோம்" என்றார். வீடற்றோர் ஊழியத்தின் தலைவர், குடும்பங்களுக்கு தற்காலிக தங்குமிடம் வழங்குவதற்கான ஒரு புதிய கட்டிடத்தின் வரைபடத்தை வெளியிட்டார். மோகன் ஊழியத்தின் எதிர்காலத்திற்காகக் கவனமாகத் திட்டமிட்டிருந்தார். அவர் ஒரு ஆவிக்குரிய மரபை விட்டுச் சென்றார்.

இந்த இறுதிப் பாடத்தில், சீஷர்களுக்கான இயேசுவின் இறுதிப் போதனைகள், சீஷர்களுக்கு அவர் கொடுத்த இறுதிக் கட்டளை மற்றும் அவர் பரமேறிய பிறகு சீஷர்களின் ஊழியம் ஆகியவற்றை நாம் படிப்போம். ஒரு ஆவிக்குரிய மரபை விட்டுச் செல்வது பற்றிய பாடங்களை நாம் கற்றுக்கொள்வோம்.

► இன்றிரவு நீங்கள் மரிக்க நேரிட்டால், நீங்கள் விட்டுச் செல்லும் மரபு என்னவாக இருக்கும்?

- உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் விட்டுச் செல்லும் மரபு என்ன?
- உங்கள் சமூகத்திற்காக நீங்கள் விட்டுச் செல்லும் மரபு என்ன?
- உங்கள் ஊழியத்திற்காக நீங்கள் விட்டுச் செல்லும் மரபு என்ன?

இயேசுவின் பிரியாவிடைப் பிரசங்கம்

யோவான் 13-16 அதிகாரங்களை யாக்கோபு, மோசே, யோசுவா மற்றும் தாவீது ஆகியோரின் பழைய ஏற்பாட்டு "பிரியாவிடை" நிகழ்வுகளுடன் ஒப்பிடலாம்.[54] இயேசுவின் இந்த "பிரியாவிடைப் பிரசங்கம்" அவருடைய மிக ஆழமான மற்றும் நெருக்கமான போதனைகள் சிலவற்றை வழங்குகிறது.

யோவான் 13:1 இந்தப் பிரியாவிடை போதனைக்கான பின்னணியைத் தருகிறது: "இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து." அடுத்த 48 மணி நேரத்திற்குள் நீங்கள் இறந்துவிடுவீர்கள் என்று உங்களுக்குத் தெரிந்தால், உங்கள் ஊழியத்தைத் தொடர இருப்பவர்களிடம் நீங்கள் என்ன சொல்வீர்கள்? அந்த வார்த்தைகள் உங்கள் சீஷர்களுக்கு மிக முக்கியமானது என்று நீங்கள் நம்புவதையே வெளிப்படுத்தும்.

இந்த இராப்போஜனத்தில், இயேசு தம்முடைய செயல்கள் மூலமாகவும் (அவர்கள் கால்களைக் கழுவுதல்) தம்முடைய வார்த்தைகள் மூலமாகவும் சீஷர்கள் மீதான தனது முழுமையான அன்பை வெளிப்படுத்தினார். இயேசு "தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடம் அன்புவைத்தார்." இப்போது, "முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்" (யோவான் 13:1). "முடிவுபரியந்தமும்" என்பது இரண்டு கருத்துக்களைக் கொண்டுள்ளது:

---

[54] ஆதியாகமம் 49, உபாகமம் 32-33, யோசுவா 23-24, 1 நாளாகமம் 28-29

1. இயேசு அவர்களுடன் இருந்த காலத்தின் இறுதி வரை அவர்களை நேசித்தார்.
2. இயேசு அவர்களை முழுமையாக நேசித்தார். இயேசு அவர்களைக் கரைபுரள நேசித்தார்.

► யோவான் 13:31-14:31-ஐ வாசிக்கவும்.

இயேசுவின் பிரியாவிடைப் பிரசங்கத்தில் உள்ள கட்டளைகளும் வாக்குறுதிகளும்

ஒரு கட்டளை: ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் (யோவான் 13:34).

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்." அன்புக்காக அறியப்படுவதை விட, தங்களுக்கிடையேயான வாக்குவாதங்களுக்குப் பெயர் பெற்ற சீஷர்களின் குழுவிற்கு, இது ஒரு கடினமான கட்டளையாக இருந்தது.

இது எப்படி ஒரு புதிய கட்டளையாக இருந்தது? பழைய ஏற்பாடு கூட தேவனுடைய ஜனங்களை "பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்று கட்டளையிட்டது. அன்பைப் பற்றிய இயேசுவின் போதனையில் இரண்டு புதிய அம்சங்கள் உள்ளன.[55]

முதலாவதாக, தான் கட்டளையிட்ட அன்பிற்கு இயேசுவே ஒரு **மாதிரியை** வழங்கினார். அவர் நேசித்தது போலவே அவர்களும் நேசிக்க வேண்டும். தாழ்மையுடன் அவர்கள் கால்களைக் கழுவிய பிறகு, இயேசு, "நான் உங்களை நேசித்தது போலவே, நீங்களும் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும்" என்றார். தாழ்மையான சேவையில் வெளிப்படுத்தப்படும் அன்பை அவர் அவதரிக்கச் செய்தார். சீஷர்கள், அப்போதும் இப்போதும், இயேசு நேசித்தது போலவே நேசிக்க வேண்டும். இந்த அன்பு சேவை செய்யத் துவாலையை எடுக்கிறது. இந்த அன்பு காட்டிக்கொடுப்பவனையும் நேசிக்கிறது. இந்த அன்பு மரணம் வரை நீடிக்கிறது.

இரண்டாவதாக, கிறிஸ்தவர்களுக்கு இடையிலான அன்பு இயேசுவின் செய்தியின் உண்மைக்கு ஒரு தனித்துவமான **சாட்சியாக** இருக்க வேண்டும். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" (யோவான் 13:35). பின்னர், "ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில்... உலகம் அறியும்படிக்கும்" என்று இயேசு ஜெபிக்கிறார் (யோவான் 17:23). சபையின் அன்பும் ஒற்றுமையும் இயேசுவின் செய்திக்கு ஒரு சாட்சியாக இருக்க வேண்டும்.

---

[55] Darrell L. Bock, *Jesus According to Scripture* (Grand Rapids: Baker Book House, 2002), 498

குறைபாடுகள் நிறைந்த ஒரு கிறிஸ்தவ சகோதரனை நேசிப்பதை விட, விசுவாசியாத ஒரு அயலானை நேசிப்பது எளிது என்று பல கிறிஸ்தவர்கள் கண்டறிந்துள்ளனர். ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரையொருவர் நேசிக்கக் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, யோவான் இந்தச் செய்தியைச் சபைக்கு நினைப்பூட்டினார்:

> தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம் (1 யோவான் 4:20-21).

இயேசு தனது பிரியாவிடை செய்தியை ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்ற கட்டளையுடன் தொடங்கினார். இந்தச் செய்தியில் அவர் அறிவித்த மற்ற அனைத்திற்கும் இந்தக் கட்டளையே அடித்தளமாகும்.

ஒரு கட்டளை: கலங்காதிருங்கள்; விசுவாசியுங்கள் (யோவான் 14:1).

பேதுரு அடிக்கடி செய்வது போலவே, இயேசுவை இடைமறித்து, "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர்?" என்று கேட்டார். அதற்குப் பதிலளிக்கையில், பேதுரு தன்னை மறுதலிப்பார் என்று இயேசு முன்னறிவித்தார். பின்னர், பேதுருவுக்கும், மற்ற சீஷர்களுக்கும், இன்று நமக்கும் ஒரு செய்தியைத் தொடர்ந்தார். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக."

யோவான் 13:38-க்குப் பிறகு ஒரு அதிகாரப் பிரிவு இருப்பதால், நாம் அடிக்கடி யோவான் 14:1-ஐ ஒரு புதிய செய்தி தொடங்குவது போல வாசிக்கிறோம். ஆனால் யோவான் 14:1 பேதுருவுக்கு அளிக்கப்பட்ட பதிலின் ஒரு பகுதியாகும். இதை இவ்வாறு வாசியுங்கள்:

> "பேதுருவே, நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய். நீ நினைப்பதை விட நீ மிகவும் பலவீனமானவன். ஆனாலும், நம்பிக்கை இழக்காதே; பேதுருவே உனக்கும், நான் கைது செய்யப்படும்போது பயந்து ஓடப்போகும் உங்கள் அனைவருக்கும் என்னிடம் நம்பிக்கையின் செய்தி ஒன்று உள்ளது. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்."

தனது தோல்வியின் மத்தியிலும், இயேசுவிடம் நம்பிக்கையின் செய்தி ஒன்று உள்ளது என்பதைப் பேதுரு அறிய வேண்டியிருந்தது. தங்கள் பயத்தின் மத்தியிலும், இயேசுவிடம் நம்பிக்கையின் செய்தி ஒன்று உள்ளது என்பதைச் சீஷர்கள் அறிய வேண்டியிருந்தது. "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" என்பது நிகழ்காலத்தில் சொல்லப்பட்டுள்ளது. இயேசுவின் எச்சரிக்கைகள் மற்றும் மதத் தலைவர்களின் எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு, சீஷர்கள் ஏற்கனவே பயந்திருந்தார்கள். இயேசு சொல்கிறார், "கலங்குவதை

நிறுத்துங்கள்... தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்."

ஊழியத்தின் அழுத்தங்களால் கலங்காமல் இருப்பதற்கான ஒரே வழி விசுவாசிப்பதே. ஒவ்வொரு திங்கட்கிழமையும், உலகெங்கிலும் உள்ள போதகர்கள் சோர்வடைகிறார்கள். நேற்று, நீங்கள் உண்மையாகப் பிரசங்கித்தீர்கள்—ஆனால் உங்கள் சபை உறுப்பினர்களில் ஒருவர் கோபமடைந்தார். நீங்கள் மனந்திரும்புதலின் செய்தியைப் பிரசங்கித்தீர்கள்—ஆனால் யாரும் பதிலளிக்கவில்லை. நீங்கள் அவிசுவாசிகளை அழைத்தீர்கள்—ஆனால் யாரும் வரவில்லை.

சில நாடுகளில், சபை அரசாங்க எதிர்ப்பால் அச்சுறுத்தப்படுகிறது. சில நாடுகளில், இஸ்லாமியத் தீவிரவாதிகளால் சபை அச்சுறுத்தப்படுகிறது. சில நாடுகளில், சபை சமூக அக்கறையின்மையால் அச்சுறுத்தப்படுகிறது—அதாவது யாரும் அதைக் கண்டுகொள்வதில்லை. இயேசு சொல்கிறார், "கலங்குவதை நிறுத்துங்கள். தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்."

ஒரு வாக்குத்தத்தம்: நானே வழி (யோவான் 14:6).

இயேசு தம்முடைய சீஷர்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணப்போவதாகத் தைரியப்படுத்தினார். இப்போது தோமா குறிக்கிட்டு, "ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்?" என்றார்.

இயேசுவின் பதில் கிறிஸ்தவ வாழ்க்கைக்கான ஒரு முக்கியமான கோட்பாட்டைப் போதிக்கிறது. இயேசு, "நான் போகிற இடம் இதுதான்" என்று சொல்லவில்லை. மாறாக, "நானே வழி" என்றார். இயேசு ஒரு பாதையையோ திசையையோ காட்டவில்லை; அவர் தன்னையே சுட்டிக்காட்டினார். பிதாவினிடத்திற்குச் செல்வதற்கான ஒரே வழி கிறிஸ்துவே என்பதைத் தவிர வேறு தெளிவான கூற்று வேதத்தில் இல்லை. தாராளவாத இறையியலாளர்களின் கூற்றுகளுக்கு மாறாக, தேவனை அடைவதற்கான ஒரே பாதை தானே என்று இயேசு தெளிவாகக் கூறினார்.

ஒரு வாக்குத்தத்தம்: நீங்கள் பெரிய கிரியைகளைச் செய்வீர்கள் (யோவான் 14:12-14).

“மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்” என்று இயேசு வாக்குத்தத்தம் பண்ணினார். இந்தக் கிரியைகள் மிகவும் அற்புதமானவை என்பதால் பெரியவை அல்ல, மாறாக அவை பரந்த எல்லையைச் சென்றடையும் என்பதால் பெரியவை. இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் போது, அவருடைய கிரியைகள் ஒரு புவியியல் பகுதிக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

இப்போது, இயேசு ஆவியானவரை அனுப்புவதால், திருச்சபை செய்யும் கிரியைகள் உலகத்தைச் சென்றடையும்.

இயேசு தொடர்ந்து, "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்" என்று கூறினார். இந்த வாக்குறுதியுடன் இரண்டு நிபந்தனைகள் இணைக்கப்பட்டுள்ளன.

(1) "என் நாமத்தினாலே கேளுங்கள்."

இது ஜெபத்தின் முடிவில் "இயேசுவின் நாமத்தில்" என்று சேர்ப்பதை விட அதிகமானது. இது இயேசுவை நமது கோரிக்கைகளை ஏற்கக் கட்டாயப்படுத்தும் ஒரு மந்திர வார்த்தை அல்ல. வேதாகமம் முழுவதும், தேவனுடைய நாமம் அவருடைய சுபாவத்தைப் (character) குறிக்கிறது. "இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது" என்பது இயேசுவின் சுபாவத்திற்கும் அவருடைய சித்தத்திற்கும் இசைவான முறையில் ஜெபிப்பதாகும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்பது குமாரனின் அதிகாரத்தின் மூலம் பிதாவினிடம் வருவதையும் குறிக்கலாம். மோசே கர்த்தருடைய நாமத்திலே பேசும்படி பார்வோனிடம் வந்தபோது (யாத்திராகமம் 5:23), தன்னை அனுப்பின தேவனுடைய அதிகாரத்தில் அவர் வந்தார். இயேசுவின் நாமத்தில் ஜெபிப்பது என்பது அவருடைய அனுமதியுடனும் அதிகாரத்துடனும் ஜெபிப்பதாகும். குமாரனின் பரிந்து பேசுதலின் மூலம் நாம் பிதாவை அணுகுகிறோம், ஏனெனில் "வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார்" (எபிரெயர் 7:25).

(2) "...குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக."

நமது ஜெபங்கள் தேவனுடைய மகிமைக்காக இருக்க வேண்டும். "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" என்று யாக்கோபு கூறுகிறார் (யாக்கோபு 4:3). நாம் இயேசுவின் வாக்குறுதியைக் கோரும்போது, நமது சொந்த நோக்கங்களுக்காக அல்லாமல், தேவனுடைய மகிமைக்காகவே ஜெபிக்கிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு கட்டளை: என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் (யோவான் 14:15).

நாம் அவர் மீது வைத்துள்ள அன்பை அளவிடக்கூடிய ஒரு தரநிலையை இயேசு கொடுத்தார். "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." யோவான் தனது முதல் நிருபத்தை எழுதியபோது இந்தக் கூற்றை நினைவு கூர்ந்தார்: "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்" (1 யோவான் 2:5). சில நவீனப் பிரசங்கிகளின் போதனைக்கு மாறாக, தனது சீஷர்கள் அவருடைய கட்டளைகளுக்கு வேண்டும் என்றே

கீழ்ப்படியாமல் வாழலாம் என்று இயேசு ஒருபோதும் போதிக்கவில்லை. அன்பு என்பது விருப்பமுள்ள கீழ்ப்படிதலில் காணப்படுகிறது.

ஒரு வாக்குத்தத்தம்: வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோவான் 14:16).

யோவான் 14:16-ல் "தேற்றரவாளன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை, ஒருவருக்காக வாதிட வரும் பரிந்து பேசுபவரைக் குறிக்கிறது. இது துன்ப நேரங்களில் ஆறுதல் அளிக்கும் ஒரு உதவியாளரை அல்லது தேற்றுபவரைக் குறிக்கிறது.

இயேசு, பிதாவானவர் "என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு... வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்று கூறினார். பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் இயேசுவின் ஊழியத்தைப் போலவே இருக்கும் என்பதை இது குறிக்கிறது. ஆவியானவர் ஒரு நபர் இல்லாத சக்தியாக (impersonal force) வரவில்லை, மாறாக இயேசு எப்படி ஒரு நபராக இருந்தாரோ, அப்படியே அவரும் ஒரு நபராக (person) வந்தார்.

அந்தத் தேற்றரவாளன் உங்களுடன் தங்கியிருந்து உங்களுக்குள் இருக்கும் சத்திய ஆவியானவர் (யோவான் 14:17). அவர் "எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 14:26). அவருடைய ஊழியம் மிகவும் வல்லமை வாய்ந்ததாக இருக்கும், அதனால்தான் இயேசு உறுதியாகக் கூறினார்: "நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வராார்" (யோவான் 16:7).

இயேசு போய்விடுவது சீஷர்களுக்கு எப்படிப் பிரயோஜனமாயிருக்கும்? ராபர்ட் கோல்மன் விளக்கினார்:

> அவர் அவர்களுடன் சரீர வடிவில் இருந்தபோது, [சீஷர்கள்] ஆவியானவரைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியத்தை அதிகம் உணரவில்லை, எனவே அவர்கள் அவருடைய ஜீவனின் ஆழமான எதார்த்தத்தை நெருக்கமாக அறியவில்லை. இருப்பினும், அவர் இல்லாத நிலையில், அவர்களுக்குக் கண்ணுக்குத் தெரியும் ஆதரவு எதுவும் இல்லை. அவர்கள் பிழைத்திருக்க, பிதாவுடனான அவருடைய உள்ளார்ந்த ஐக்கியத்தின் ரகசியத்தை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்களின் தேவையின் நிமித்தம், அவர்கள் முன்பு அறிந்திருந்ததை விட கிறிஸ்துவுடன் மிகச் சிறந்த ஐக்கியத்தை அனுபவிப்பார்கள்.[56]

[56] Robert Coleman, *The Mind of the Master* (Colorado Springs: WaterBrook Press, 2000), 29

திராட்சச்செடியில் வாழ்வு

► யோவான் 15:1-16:37-ஐ வாசிக்கவும்.

இயேசு தனது மிக சக்திவாய்ந்த உவமைகளில் ஒன்றைக்கொண்டு தொடர்ந்தார். "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்." பழைய ஏற்பாடு இஸ்ரவேலைத் திராட்சச்செடியாகப் பலமுறை குறிப்பிடுகிறது.[57] இருப்பினும், பாவத்தின் காரணமாக, இஸ்ரவேல் தேசம் தேவன் தான் நட்ட அழகான திராட்சச்செடிக்கான நோக்கத்தை நிறைவேற்றத் தவறியது. அதற்குப் பதிலாக, இஸ்ரவேல் பொருள் ரீதியாகச் செழித்தோங்கியபோது, அது பொய் தெய்வங்களுக்குப் பலிபீடங்களைக் கட்டியது (ஓசியா 10:2). மற்ற தேசங்களை ஆசீர்வதிக்கும் கனிகளைக் கொடுப்பதற்குப் பதிலாக, இஸ்ரவேல் கசப்பான திராட்சை கனிகளைக்[58] கொடுத்தது (ஏசாயா 5:2). விறகுக்கு எரிபொருளாகப் பயன்படுத்துவதைத் தவிர, இந்தக் கொடியைக்கொண்டு தேவனால் வேறு எதுவும் செய்ய முடியாத அளவுக்கு இஸ்ரவேல் பாவம் செய்தது (எசேக்கியேல் 15:1-6). தேசங்களுக்கெல்லாம் ஆசீர்வாதமாக இருப்பதற்கான இஸ்ரவேலின் அழைப்பை நிறைவேற்றுவதற்காக இயேசு மெய்யான திராட்சச்செடியாக வந்தார்.

இயேசு மெய்யான திராட்சச்செடியாக வந்தார். இஸ்ரவேல் தேசம் செய்யத் தவறியதை நிறைவேற்ற அவர் வந்தார்; தேசங்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பதற்கான இஸ்ரவேலின் அழைப்பை நிறைவேற்ற அவர் வந்தார்.

இயேசு சீஷர்களிடம் தானே திராட்சச்செடி என்றும், அவர்கள் கொடிகள் என்றும் கூறினார். இயேசுவின் செய்தி தெளிவாக இருந்தது: கனி கொடுப்பது என்பது நாம் அவரில் நிலைத்திருப்பதற்கான நமது விருப்பத்தையே முழுமையாகச் சார்ந்திருக்கிறது.

> நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது (யோவான் 15:5).

திராட்சச்செடியை விட்டுப்பிரிந்து, சீஷர்களால் ஒன்றும் செய்ய முடியாது; திராட்சச்செடியை விட்டுப்பிரிந்து, இன்று நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நமது சொந்த பலத்தில் நாம் ஊழியம் செய்ய முயலும்போது, நாம் விரக்திக்கும் வல்லமையின்மைக்கும் ஆளாவோம். ஏன்? ஏனென்றால், நாம் சுயமாகக் கனி கொடுப்பதற்காக ஒருபோதும் நியமிக்கப்படவில்லை.

---

[57] சங்கீதம் 80:8-9, ஏசாயா 5:1-7, ஏசாயா 27:2-6, ஓசியா 10:1-2

[58] "காட்டு"என்பது பயிரிடப்பட்ட திராட்சைத் தோட்டத்தின் இனிப்புச் சுவைக்குப் பதிலாக, ஒரு "புளிப்பு" சுவையைக் குறிக்கிறது.

நமது ஆவிக்குரிய ஜீவியம் திராட்சச்செடியுடனான நமது தொடர்ச்சியான உறவில் இருந்தே பெறப்படுகிறது. ஒருவன் திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால், "வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோகும்" (யோவான் 15:6). இந்த வசனம் ஒரு எச்சரிக்கையாக இருந்தாலும், இது ஒரு பெரிய உற்சாகமூட்டுதலுமாகும். திராட்சச்செடியை விட்டுப்பிரிந்து நாம் பயனற்றவர்களும் தகுதியற்றவர்களுமாவோம். ஆனால் நாம் திராட்சச்செடியில் நிலைத்திருந்தால், நமக்கு வாழ்வும் கனியும் உண்டு. நமது ஆவிக்குரிய வாழ்க்கை நமது சொந்த பலத்தில் தங்கியிருப்பதில்லை; நாம் "திராட்சச்செடியில்" வாழ்கிறோம்.

இந்தக் கருப்பொருள் எபிரெயரில் மீண்டும் காணப்படுகிறது. நமது பிரதான ஆசாரியராகிய இயேசு, தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக "வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால்" (எபிரெயர் 7:25). தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்ந்த, போராடிக்கொண்டிருந்த போதகர்களை ஹோவர்ட் ஹெண்ட்ரிக்ஸ் (Howard Hendricks) உற்சாகப்படுத்தினார்: "உங்களுக்காக ஜெபிக்க யாரும் இல்லையென்றால், கிறிஸ்து உங்களுக்காக ஜெபிக்கிறார் என்பதை ஒருபோதும் மறக்காதீர்கள்." அவரே நமக்குப் பரிந்து பேசுகிறவர்; அவரே நமது ஆவிக்குரிய வாழ்வின் ஆதாரம்.

தம்முடைய சீஷர்கள் திராட்சச்செடியில் நிலைத்திருக்க வேண்டும் என்று இயேசு அவர்களுக்கு நினைப்பூட்டினார். இன்றும் இது உண்மை. போதகர்களாகவும் சபைத்தலைவர்களாகவும், நீங்கள் உங்கள் சொந்த பலத்தில் ஊழியம் செய்வதில்லை. திராட்சச்செடியின் வல்லமையிலும், உங்களுக்காகப் பரிந்து பேச உங்களுக்குப் பலமில்லாதபோது உங்களுக்காகப் பரிந்து பேசும் பிரதான ஆசாரியரின் வல்லமையிலும் நீங்கள் வாழ்கிறீர்கள்.

இயேசுவின் கடைசிப் பிரசங்கத்தின் மீதமுள்ள பகுதியில், சீஷர்கள் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்று மீண்டும் போதித்தார். இந்த உலகின் வெறுப்பை எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்தினார். உலகம் இயேசுவை வெறுத்தது; உலகம் இயேசுவின் உண்மையான சீஷர்களையும் வெறுக்கும்.

பின்னர் இயேசு பரிசுத்த ஆவியானவரின் கிரியையைப் பற்றி மேலும் விளக்கினார். பிரசங்கத்தின் ஆரம்பத்தில், அவர் ஆவியானவரை அனுப்புவதாக வாக்களித்திருந்தார். இப்போது அவர் பரிசுத்த ஆவியானவரின் கிரியையைப் பற்றி அவர்களுக்கு அதிகம் போதித்தார். ஆவியானவர் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்; அவர் சீஷர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார்; அவர் குமாரனை மகிமைப்படுத்துவார்.

தான் இன்னும் சற்றுநேரத்தில் பிரிந்து போவதைக் குறித்து அவர் மீண்டும் அவர்களுக்கு விளக்கினார். மேலும், உபத்திரவத்தில் சமாதானத்தோடு இருப்பதைப் பற்றி அவர்

மீண்டும் அவர்களிடம் பேசினார். இந்தப் பிரசங்கத்தின் ஆரம்பத்தில், இயேசு, "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" என்று கட்டளையிட்டார் (யோவான் 14:1). "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33) என்ற இணையான உற்சாகமூட்டுதலோடு அவர் பிரசங்கத்தை முடித்தார்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், நமது நம்பிக்கை கிறிஸ்துவில் மட்டுமே உள்ளது என்பதைக் கவனியுங்கள். நாம் கிறிஸ்துவை விசுவாசித்தால் நாம் கலங்க வேண்டியதில்லை. மாறாக, கிறிஸ்து உலகத்தை ஜெயித்தபடியால் நாம் திடன்கொள்ள வேண்டும்! திராட்சச்செடியில் வாழ்வு என்பது உறுதியான சமாதானம் கொண்ட வாழ்வாகும். நமது நம்பிக்கை உலக சூழ்நிலைகளின் அடிப்படையில் அமைந்ததல்ல; நமது நம்பிக்கை கிறிஸ்து மற்றும் உலகின் மீதான அவரது வெற்றியின் அடிப்படையில் அமைந்துள்ளது.

ஒரு நெருக்கமான பார்வை: இராப்போஜனம்

மிஷ்னா என்பது பண்டைய யூத மரபுகளின் பதிவாகும். மிஷ்னாவின் ஒரு பகுதி யூதர்கள் பஸ்கா விருந்தை எப்படிக் கடைப்பிடித்தார்கள் என்பதைக் காட்டுகிறது.[59] கடைசி இராப்போஜனத்தில், இயேசுவும் சீஷர்களும் 2,000 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்றும் பின்பற்றப்படும் இந்த முறையையே அநேகமாகப் பின்பற்றியிருக்கக்கூடும்.

தண்ணீர் கலந்த திராட்சரசத்தின் முதல் பாத்திரம் வழங்கப்படுகிறது. அந்தப் பாத்திரத்தின் மீதான ஆசீர்வாதம் யாத்திராகமத்திலிருந்து இந்த வாக்குறுதியை உள்ளடக்கியது: "நான் உங்களை விடுவிப்பேன்."

இரண்டாவது பாத்திரத்தில் திராட்சரசம் கலக்கப்படுகிறது, ஆனால் இன்னும் வழங்கப்படவில்லை. இளைய மகன், "மற்ற இரவுகளிலிருந்து இந்த இரவு ஏன் வேறுபட்டது?" என்று கேட்கிறான். தகப்பன் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து மீட்கப்பட்ட கதையைக் கொண்டு பதிலளிக்கிறார்.

கதை முடிந்ததும், குடும்பத்தினர் சங்கீதம் 113-114 ஆகிய முதல் *பஸ்கா அல்லேலூயா* பாடலைப் பாடுகிறார்கள். "அவர்களுக்கு அடிமைகளாயிராதபடிக்கு உங்களை விடுதலையாக்குவேன்" என்ற வாக்குறுதியுடன் அவர்கள் இரண்டாவது பாத்திரத்தைப் பருகுகிறார்கள்.

---

[59] மேசியா யூதர்களின் பஸ்கா பண்டிகையின் விருந்து பற்றிய வீடியோவை https://www.youtube.com/watch?v=bVolBDlWloQ, (இது மார்ச் 22, 2021 அன்று அணுகப்பட்டது) என்ற இணையதளத்தில் பார்க்கலாம். கூடுதல் விவரங்களை http://www.crivoice.org/haggadah.html என்ற இணையதளத்தில் நீங்கள் வாசிக்கலாம் (மார்ச் 22, 2021 அன்று அணுகப்பட்டது).

ஆசீர்வாதத்திற்குப் பிறகு, உணவு பரிமாறப்படுகிறது. உணவில் கசப்பான கீரைகள், புளிப்பில்லாத அப்பம், ஆட்டுக்குட்டி மற்றும் வாசனைப் பொருட்கள் மற்றும் வினிகர் கலந்த பழச்சாறு ஆகியவை அடங்கும். தகப்பன் தன் கைகளைக் கழுவி, அப்பங்களைப் பிட்டு ஆசீர்வதித்து, அப்பத்தின் ஒரு துண்டை எடுத்து, கசப்பான கீரைகளில் சுற்றி, பழச்சாற்றில் தோய்த்துச் சாப்பிடுகிறார். பின்னர் அவர் நன்றி கூறி ஆட்டுக்குட்டியின் ஒரு துண்டைச் சாப்பிடுகிறார். பின்னர் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் சாப்பிடுகிறார்கள்.

மூன்றாவது பாத்திரம் பஸ்கா வாக்குறுதியுடன் ஆசீர்வதிக்கப்படுகிறது: "நான் உங்களை மீட்டுக்கொள்வேன்."

நான்காவது பாத்திரம் பஸ்கா வாக்குறுதியுடன் ஆசீர்வதிக்கப்படுகிறது: "நான் உங்களை எனக்கு ஜனமாக ஏற்றுக்கொள்வேன்."

குடும்பத்தினர் சங்கீதம் 115-118 ஆகிய இறுதி *பஸ்கா அல்லேலூயா* பாடலைப் பாடுகிறார்கள்.[60]

பஸ்கா விருந்தின் போது, யூத மக்கள் தேவன் இஸ்ரவேலை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததை நினைவுகூர்ந்தனர். அதைவிட முக்கியமாக, மேசியா அவர்களை ஒருமுறைக்காகவும் நிரந்தரமாகவும் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்போது தேவனுடைய வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேறுவதை அவர்கள் எதிர்நோக்கியிருந்தார்கள்.

கடைசி இராப்போஜனத்திற்கு அடுத்த நாள், இயேசு பரிபூரண பஸ்கா ஆட்டுக்குட்டியாக மரிப்பார். சிலுவையில், விடுதலையின் வாக்குறுதி நிறைவேறியது.

பிரதான ஆசாரியத்துவ ஜெபம்

► யோவான் 17-ஐ வாசிக்கவும்.

சீஷர்களுடன் பதிவுசெய்யப்பட்ட இயேசுவின் கடைசி ஜெபம், சீஷர்களுக்கும் இன்றைய சபைக்கும் அவர் விட்டுச் சென்ற மரபைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமானது. இந்த ஜெபம் "இயேசுவின் ஜெபங்களின் மகா பரிசுத்த ஸ்தலம்" என்று அழைக்கப்படுகிறது. இது அவருடைய மிக நெருக்கமான ஜெபம்.

இயேசு தனக்காக ஜெபித்தார் (யோவான் 17:1-5)

இயேசு தன் பிதாவினிடம், "உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று ஜெபித்தார். சீஷர்கள் இந்த ஜெபத்தைப்

---

[60] கெத்சமனே தோட்டத்திற்குச் செல்வதற்கு முன் இயேசு தம் சீடர்களுடன் பாடிய கடைசி சங்கீதம் இதுவாகும் (மத்தேயு 26:30).

புரிந்து கொள்ளாவிட்டாலும், இந்த ஜெபத்திற்கு ஒரு ரோம சிலுவையில் பதில் கிடைக்கும் என்ற அதிர்ச்சியூட்டும் உண்மையை அவர்கள் விரைவில் அறிந்துகொள்வார்கள்.

பாடுகளின் வாரத்தின் திங்கட்கிழமையன்று, இயேசு, "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" என்றார். யோவான் இதை விளக்குகையில், "தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்" என்றார் (யோவான் 12:32-33). வெற்றியின் மூலம் அல்ல, தோல்வியாகத் தோன்றியதன் மூலம் இயேசு மகிமைப்பட்டார். இயேசு சிலுவையின் மூலம் மகிமைப்பட்டார்.

இயேசு தனது சீஷர்களுக்காக ஜெபித்தார் (யோவான் 17:6-19)

இயேசு தனது சீஷர்களுக்காக மூன்று காரியங்களுக்காக ஜெபித்தார். பிதா அவர்களைத் தன் நாமத்தில் காத்துக்கொள்ளும்படி ஜெபித்தார். அவர்கள் தீமையினின்று காக்கப்பட வேண்டும் என்று ஜெபித்தார். மேலும் பிதாவே, "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்" என்று ஜெபித்தார்.

இயேசு எல்லா விசுவாசிகளுக்காகவும் ஜெபித்தார் (யோவான் 17:20-26)

எதிர்காலத்தில் தம்மை விசுவாசிக்கப்போகும் அனைவருக்காகவும் இயேசு ஜெபித்தார். அவர்கள் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று அவர் ஜெபித்தார். இந்த ஒற்றுமை உலகத்திற்கு ஒரு சாட்சியாக இருக்கிறது: "நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக."

இயேசு உலகத்திற்காக ஜெபிக்கவில்லை: "உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:9). தம்மை விசுவாசிக்கிறவர்களுக்காக அவர் ஜெபித்தார். நமது ஒற்றுமை மற்றும் உண்மையின் மூலம் நாம் உலகத்திற்குச் சாட்சியாக இருக்க வேண்டும் என்று இயேசு ஜெபித்தார்.

உலகில் தனது நோக்கத்தை நிறைவேற்றக்கூடிய விசுவாசிகளின் குழுவே இயேசுவின் மரபு ஆகும். பழைய ஏற்பாட்டில், எல்லா தேசங்களுக்கும் ஆசீர்வாதத்தின் ஊடகமாக இருப்பதற்காக இஸ்ரவேல் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டது (ஆதியாகமம் 12:1-3). புதிய ஏற்பாட்டில், எல்லா மக்களுக்கும் ஆசீர்வாதத்தின் ஊடகமாக இருப்பதற்காகச் சபை தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. எல்லா மக்களுக்கும் ஆசீர்வாதமாக இருப்பதற்கான நமது ஆணையை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று இயேசு ஜெபித்தார்.

சீஷர்களுக்கு இயேசுவின் இறுதி ஆணை

► மத்தேயு 28:16-20, மாற்கு 16:15, லூக்கா 24:44-49, and அப்போஸ்தலர் 1:6-11-ஐ வாசிக்கவும்.

ஒரு தலைவரின் நீடித்த செல்வாக்கு என்பது, தனது தரிசனத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் திறனால் பெரும்பாலும் தீர்மானிக்கப்படுகிறது. அர்ப்பணிப்புள்ள சீஷர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒரு தரிசனத்தை விவரிப்பதற்கு இயேசு ஒரு மாதிரியை வழங்குகிறார். அவருடைய தரிசனத்தின் காரணமாக, சீஷர்கள் ரோமப் பேரரசு முழுவதும் தேவனுடைய ராஜ்யத்தின் செய்தியைப் பரப்புவதற்குத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள்.

சுவிசேஷங்கள் இயேசுவின் ஆணைகளின் மூன்று அறிக்கைகளை உள்ளடக்கியுள்ளன. ஒவ்வொரு அறிக்கையும் ஆணையின் வெவ்வேறு அம்சத்தில் கவனம் செலுத்துகிறது. மத்தேயு, ஊழியத்திற்குத் தேவையான அதிகாரத்தை முன்னிலைப்படுத்துகிறார். மாற்கு, ஆணையின் எல்லையைக் குறிப்பிடுகிறார்: "சர்வ சிருஷ்டிக்கும்." அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கப்போகும் செய்தியின் உள்ளடக்கத்தை லூக்கா சுருக்கமாகக் கூறுகிறார்.

இயேசுவின் இறுதிக் கட்டளையின் முழுமையான அறிக்கை மத்தேயு 28:18-20-ல் உள்ளது.

> வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்.

இந்த ஆணையின் முதன்மையான கட்டளை "சீஷராக்குங்கள்" என்பதாகும். இந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு நாம் புறப்பட்டுப் போகவும், புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும், இளம் விசுவாசிகளுக்கு உபதேசிக்கவும் வேண்டும். இந்தச் செயல்பாடுகள் "சீஷராக்குங்கள்" என்ற மையக் கட்டளையை ஆதரிக்கின்றன. சுவிசேஷ ஊழியம், சமூகப் பணி, கல்வி மற்றும் ஊழியத்தின் மற்ற அனைத்து அம்சங்களும் இந்த மைய முன்னுரிமையால் வழிநடத்தப்படுகின்றன: சீஷர்களை உருவாக்கவே நாம் ஆணையிடப்பட்டுள்ளோம்.

போதக ஊழியத்தின் நோக்கம்

எட் மார்க்வார்ட் என்ற அமெரிக்கப் போதகர், கம்யூனிஸ்ட் சிறையில் பல ஆண்டுகள் கழித்த ருமேனியப் போதகரான ரிச்சர்ட் வும்ப்ராண்ட் என்பவருடன் இரவு உணவு சாப்பிட்டார். இரவு உணவின் போது, வும்ப்ராண்ட் மார்க்வார்ட்டின் சபை உறுப்பினர் ஒருவரிடம் திரும்பி, "உங்கள் போதகர் ஒரு நல்ல போதகரா?" என்று கேட்டார். அந்த உறுப்பினர், "ஆம்" என்றார்.

வும்ப்ராண்ட், "ஏன் அவர் ஒரு நல்ல போதகர்?" என்று கேட்டார். அந்த உறுப்பினர், "ஏனென்றால் அவர் நன்றாகப் பிரசங்கம் பண்ணுகிறார்" என்று பதிலளித்தார்.

அப்போது வும்ப்ராண்ட், "ஆனால் அவர் சீஷர்களை உருவாக்குகிறாரா?" என்று கேட்டார். இந்தக் கேள்வி தனது ஒட்டுமொத்த ஊழியத்தின் திசையையே மாற்றியதாகப் போதகர் மார்க்வார்ட் கூறினார். அவர் சொன்னார்:

> எல்லா போதகர்களுக்கும் தேவன் வைத்துள்ள நோக்கம்... இயேசு கிறிஸ்துவின் சீஷர்களை உருவாக்குவதே ஆகும். இயேசு கிறிஸ்துவை நேசிக்கிறவர்கள், இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள், இயேசு கிறிஸ்துவைத் தங்கள் ஆண்டவர் என்று அழைக்கிறவர்கள். நாம் உருவாக்க அழைக்கப்பட்டிருப்பது அதைத்தான்: இயேசு கிறிஸ்துவின் சீஷர்களை உருவாக்குவது. சபை உறுப்பினர்களை உருவாக்குவதல்ல. ஞாயிறு பள்ளிகளை உருவாக்குவதல்ல. கட்டிடங்களை உருவாக்குவதல்ல.... நாம் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களை உருவாக்க வேண்டும். ஊழியம் என்பது அதைப்பற்றியதே.[61]

ஒரு நெருக்கமான பார்வை: இயேசுவின் ஊழியம்

இயேசுவின் ஊழியத்தின் கடைசி வார நிகழ்வுகள், எல்லா தேசங்கள், இனங்கள் மற்றும் மக்களை உள்ளடக்கிய ஒரு ராஜ்யத்தை உருவாக்குவதற்கான அவரது ஊழியத்தைக் காட்டுகின்றன. இயேசுவின் ஊழியத்தின் கடைசி வாரக் காட்சிகள் எல்லா தேசங்களுக்குமான அவரது ஊழியத்தை விளக்குகின்றன.

- இயேசு ஒரு கழுதையின் மேல் நகரத்திற்குள் நுழைந்தார். மத்தேயுவும் யோவானும் சகரியாவின் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டினார்கள்: “இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார்.” சகரியா இந்த ராஜாவின் ஆட்சியைக் குறித்து விவரித்தார். “அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும்” (மத்தேயு 21:4, சகரியா 9:9-10).

- புறஜாதிகளின் பிராகாரத்தை அவர் சுத்திகரித்தபோது, இயேசு ஏசாயாவை மேற்கோள் காட்டினார்: “என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா?” (மாற்கு 11:17, ஏசாயா 56:7-ஐ மேற்கோள்காட்டினார்). யூதத் தலைவர்கள், புறஜாதிகள் ஜெபிப்பதற்காகக் கூடிவரும் அந்தப் பிராகாரத்தை, காசு மாற்றுகிறவர்களுக்கும் புறா விற்கிறவர்களுக்கும் ஒரு சந்தையாக மாற்றியிருந்தார்கள்.

---

[61] Edward Markquart இன் “Pentecost: Go, Go, Go, Go, Go” என்ற பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது. நவம்பர் 17, 2022 அன்று https://www.sermonsfromseattle.com/pentecost_go_go_go_go_go.htm என்ற இணையதளத்தில் அணுகப்பட்டது.

- விலையேறப்பெற்ற தைலத்தை வீணடித்ததற்காகச் சீஷர்கள் மரியாளை விமர்சித்தபோது, "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு பதிலளித்தார் (மாற்கு 14:9).

- ஒலிவமலைப் பிரசங்கத்தில், "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" என்று இயேசு ஒரு நாளைக் குறித்து முன்னறிவித்தார் (மத்தேயு 24:14). தேவனுடைய ராஜ்யம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு (யூதர்களுக்கு) மட்டுமே என்று நினைத்திருந்த அந்த யூதச் சீஷர்களுக்கு, சுவிசேஷம் உலகம் முழுவதும் அறிவிக்கப்படும் என்று இயேசு கூறினார்.

மேசியா எல்லா தேசங்களுக்காகவும் வருவார் என்பதைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். தனது பொது ஊழியத்தின் கடைசி வாரத்தில், தேவனுடைய ராஜ்யம் எல்லா தேசங்களையும் சார்ந்த மக்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்று இயேசு தம் சீஷர்களுக்குக் கற்பித்தார். தீர்க்கதரிசிகளின் வாக்குறுதி சபையின் மூலமாக நிறைவேற்றப்பட இருந்தது.

இயேசுவின் மரபு: அப்போஸ்தலர் நடபடிகளில் சபை

கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய பல புத்தகங்கள் அவர் பரமேறுதலோடு முடிவடைகின்றன. இருப்பினும், இயேசுவின் ஊழியம் சிலுவையுடனோ அல்லது வெறுங்கல்லறையுடனோ முடிவடையவில்லை; அவருடைய ஊழியம் பெந்தெகோஸ்தே வரை சென்றது. என்றென்றைக்கும் அவர்களுடனே கூட இருக்கும்படி வேறொரு தேற்றரவாளனை அனுப்புவதாக இயேசு வாக்களித்தார் (யோவான் 14:16). இந்த வாக்குறுதி அப்போஸ்தலர் நடபடிகளில் நிறைவேறியது. அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள இரண்டு காட்சிகள் இயேசுவின் மரபு நிறைவேறியதைக் காட்டுகின்றன.

பெந்தெகோஸ்தே நாளில் சபை

► அப்போஸ்தலர் 1:4-11 and அப்போஸ்தலர் 2:1-41-ஐ வாசிக்கவும்.

அவர் பரமேறுவதற்குச் சற்று முன்பு, சீஷர்கள், "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?" என்று கேட்டார்கள். இயேசு ஓர் பூமிக்குரிய, அரசியல் ராஜ்யத்தை நிறுவுவார் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவர்களின் எண்ணத்தில், உயிர்த்தெழுதல் ஓர் பூமிக்குரிய ராஜ்யத்திற்கான சாத்தியத்தை வலுப்படுத்தியது. இயேசு செய்ய வேண்டியதெல்லாம், ரோமர்களை வீழ்த்தத் தனது வல்லமையைப் பயன்படுத்துவது மட்டுமே என்று அவர்கள் நினைத்தார்கள். இயேசு மாறுத்திரமாக,

> பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிப்பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்று சொன்னார் (அப்போஸ்தலர் 1:7-8).

அதற்கு இயேசு, "ராஜ்யத்தின் காலங்கள் உங்கள் பொறுப்பல்ல" என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். "மாறாக, நான் உங்களுக்குக் கொடுத்த பணியை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்: பூமியின் எல்லைகள் வரை எனக்குச் சாட்சிகளாகச் சேவையாற்றுங்கள். ஆனால் நீங்கள் போவதற்கு முன்பு, நீங்கள் காத்திருக்க வேண்டும்." லூக்காவில், இயேசு,, "நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றார் (லூக்கா 24:49).

பஸ்கா பண்டிகை முடிந்து ஐம்பது நாட்களுக்குப் பிறகு, 120 சீஷர்கள் மேல்வீட்டில் கூடியிருந்தபோது, பரிசுத்த ஆவியானவரின் வாக்குறுதி நிறைவேறியது. யூதர்களின் பெந்தெகோஸ்தே பண்டிகைக்காகப் பிற தேசங்களிலிருந்து கூடியிருந்த மக்களின் மொழிகளில் அவர்கள் பேசத் தொடங்கினார்கள் (அப்போஸ்தலர் 2:4, 6-11). எல்லா தேசங்களிலிருந்தும் தனது சபையை உருவாக்கும் கிறிஸ்துவின் திட்டத்தின் நிறைவேறுதலை இது அடையாளப்படுத்தியது.

அப்போஸ்தலர் 2-ல் உள்ள தேசங்களின் பட்டியல், ஆதியாகமம் 10-ல் உள்ள தேசங்களின் பட்டியலை நமக்கு நினைப்பூட்டுகிறது. ஆதியாகமம் 11-ல், பாபேலில் ஒரு உலகளாவிய ராஜ்யத்தை நிறுவுவதற்கான மனிதனின் முயற்சியைக் தேவன் அவர்களின் மொழிகளைத் தாறுமாறாக்கியதன் மூலம் நியாயந்தீர்த்தார். அப்போஸ்தலர் 2-ல், மொழிகளின் தாறுமாறாக்கலைத் தலைகீழாக மாற்றுவதன் மூலம் தேவன் தனது ராஜ்யத்தைக் கட்டத் தொடங்கினார்.

பெந்தெகோஸ்தே நாள் என்பது இயேசு வாக்களித்த "இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளின்" (யோவான் 14:12) ஆரம்பமாக இருந்தது. இயேசுவின் மரபின் நிறைவேறுதல் தொடங்கியது. வாக்குப்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் இப்போது அப்போஸ்தலர்களின் ஊழியத்தில் கிரியை செய்யத் தொடங்கினார். அக்காலம் முதல், சபை தனது ராஜ்யத்தை உருவாக்கும் தேவனுடைய மகத்தான நோக்கத்தை நிறைவேற்றத் தொடங்கும். பேதுருவின் பிரசங்கம் தெளிவுபடுத்தியது போல, பழைய ஏற்பாட்டின் வாக்குறுதிகள் இப்போது சபையின் மூலம் நிறைவேற்றப்பட்டு வந்தன.

ஜான் ஸ்டாட் பெந்தெகோஸ்தே நாளின் நான்கு அம்சங்களை விளக்கினார்.[62]

---

[62] John W. Stott, *The Message of Apostles* (Westmont, Illinois: InterVarsity Press, 1990), 60-61

- பெந்தெகோஸ்தே நாள் பூமியில் இயேசுவின் இறுதி மீட்புச் செயலாக இருந்தது.
- பெந்தெகோஸ்தே நாள் அப்போஸ்தலர்களைப் பெரும் ஆணைக்காக ஆயத்தப்படுத்தியது.
- பெந்தெகோஸ்தே நாள் ஆவியானவரின் புதிய யுகத்தைத் தொடங்கி வைத்தது. பழைய ஏற்பாடு முழுவதும், பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தின் விசேஷித்த நேரங்களில் தேவனுடைய ஊழியர்களை வல்லமைப்படுத்தினார். பெந்தெகோஸ்தே நாளுக்குப் பிறகு, எல்லா காலங்களிலும் எல்லா இடங்களிலும் உள்ள கிறிஸ்தவர்கள் அவருடைய ஊழியத்தால் பயனடைகிறார்கள்.
- முதல் கிறிஸ்தவ எழுப்புதல் பெந்தெகோஸ்தே நாளில் தொடங்கியது.

பெந்தெகோஸ்தே நாளின் விளைவுகள் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் முழுவதும் காணப்படுகின்றன. பெந்தெகோஸ்தே நாளில் நடந்த அடையாளங்கள் விசேஷமானவை. சந்தோஷம், விசுவாசிகளின் ஐக்கியம், ஆராதனையில் சுதந்திரம், சாட்சிகளாக இருப்பதில் தைரியம் மற்றும் ஊழியத்திற்கான வல்லமை ஆகியவை பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் செய்யப்படும் ஊழியத்தின் இயல்பான சான்றுகளாக இருக்க வேண்டும்.

ஆதித்திருச்சபையின் அன்றாட வாழ்க்கை

► அப்போஸ்தலர் 2:42-47-ஐ வாசிக்கவும்.

இயேசுவின் மரபு நிறைவேறியதைக் காட்டும் இரண்டாவது காட்சி அப்போஸ்தலர் 2-ன் இறுதியில் உள்ளது. இந்தக் காட்சி ஆதிச்சபையின் அன்றாட வாழ்வைக் காட்டுகிறது.

தனது பிரதான ஆசாரியத்துவ ஜெபத்தில், இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களின் ஒற்றுமைக்காக ஜெபித்தார். “நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி” (யோவான் 17:22) அவர் ஜெபித்தார். இந்த ஜெபத்திற்கான பதில் அப்போஸ்தலர் 2-ல் தொடங்குகிறது. “விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து;” அவர்கள் “ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு;” மற்றும் “இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்.”

அப்போஸ்தலர் நடபடிகளில், “ஒருமனப்பட்டு” என்ற சொற்றொடர் ஆதித்திருச்சபையின் ஒற்றுமையைக் குறிக்கிறது. யூதர்கள் மற்றும் புறஜாதிகள் ஆகிய இருவரையும் கொண்ட ஒரு சபையை உருவாக்குவதில் உள்ள சிரமங்கள், யூதத் தலைவர்களிடமிருந்து வந்த துன்புறுத்தல்கள் மற்றும் அப்போஸ்தலர்களுக்கு இடையிலான தனிப்பட்ட மோதல்கள்

இருந்தபோதிலும், சபை ஒன்றாகவே இருந்தது. எல்லா முரண்பாடுகளுக்கும் எதிராக, “அவர்களும் ஒன்றாயிருக்கும்படி” என்ற இயேசுவின் ஜெபம் நிறைவேறியது.

► அப்போஸ்தலர் 2:42-47-ல் உள்ள சபையின் படம் உங்கள் சபையைப் போலவே இருக்கிறதா? நீங்கள் ஆவியானவரின் வல்லமையில் ஊழியம் செய்கிறீர்களா? இல்லையென்றால், உங்கள் ஊழியத்தில் ஆவியானவரின் கிரியைக்குத் தடையாக இருக்கும் தடைகள் என்ன? கீழ்ப்படியாமையா? ஜெபமின்மையா? விசுவாசக் குறைவா? ஒற்றுமையின்மையா? உங்கள் ஊழியத்தில் ஆவியானவரின் புதிய ஊற்றுதலை நீங்கள் எப்படிக் காண முடியும்?

பயன்பாடு: ஒரு மரபை விட்டுச் செல்லுதல்

ஓய்வுபெற்ற ஊழியத் தலைவர்கள் தங்கள் தலைமைத்துவத்தை விட்டுவிலகுவதற்கான தங்கள் ஆயத்தம் மற்றும் மாற்றத்திற்கான பாடங்கள் குறித்த தங்கள் மரபினை பின்வரும் குறிப்புகளில் பகிர்ந்துள்ளனர்.[63]

(1) ஒரு மரபை விட்டுச் செல்லும் தலைவர்கள் எதிர்காலத்திற்காகத் திட்டமிடுகிறார்கள்.

ஒரு கட்டிடம் கட்டுபவரிடம், "நீங்கள் என்ன கட்டுகிறீர்கள்?" என்று கேட்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். அதற்கு அவர், "எனக்கு இன்னும் தெரியவில்லை. என்ன நடக்கிறது என்று பார்ப்போம் என்று காத்திருக்கிறேன்" என்று பதிலளித்தால் நீங்கள் அதிர்ச்சியடைவீர்கள்.

கட்டிடத்தைக் கட்டத் தொடங்கும் முன்பே, அவர் இறுதி வடிவத்தைப் பற்றித் திட்டமிடுகிறார். ஒரு மரபை விட்டுச் செல்லும் தலைவர்கள் எதை விட்டுச் செல்ல விரும்புகிறார்கள் என்பதை அறிந்திருக்கிறார்கள்.

நன்றாக முடிக்கும் தலைவர்கள் தாங்கள் விட்டுச் செல்ல விரும்பும் மரபை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் குருட்டுத்தனமாக ஊழியத்தைச் செய்வதில்லை. இந்தத் தலைவர்கள், "எனது ஊழிய இடத்தில் நான் எதைச் சாதிக்க வேண்டும் என்று தேவன் அழைத்தாரோ, அது இதுதான்" என்று நம்பினார்கள்.

---

[63] இந்தப் பகுதிக்கான நேர்காணல்களில் பின்வரும் தலைவர்கள் இடம்பெற்றனர்:
டாக்டர் மைக்கேல் ஏவரி (Dr. Michael Avery), ஓஹியோவின் சின்சினாட்டியிலுள்ள God’s Bible School and College-ன் முன்னாள் தலைவர்.
கனம் பொருந்திய. பால் பியர்பாயிண்ட் (Rev. Paul Pierpoint), Hobe Sound Bible Church-ன் முன்னாள் போதகர் மற்றும் புளோரிடாவின் ஹோப் சவுண்டிலுள்ள FEA Missions-ன் தலைவர்.
கனம் பொருந்திய. லியோனார்ட் சாங்கி (Rev. Leonard Sankey), ஓய்வுபெற்ற போதகர் மற்றும் பல மிஷன் அமைப்புகளின் தலைவர்.
டாக்டர் சிட்னி கிராண்ட் (Dr. Sidney Grant), புளோரிடாவின் ஹோப் சவுண்டிலுள்ள FEA Missions-ன் முன்னாள் தலைவர்.

சபையை வழிநடத்தத் தயாரான சீஷர்களின் குழுவே இயேசுவின் மரபாக இருந்தது. இயேசு தனது ஊழியத்தின் ஆரம்பத்திலிருந்தே, இந்த மனிதர்களைத் தனது மரபாகத் தயார்படுத்துவதற்குப் போதுமான நேரத்தையும் ஆற்றலையும் செலவிட்டார்.

> "உங்கள் மரபை நீங்கள் உங்கள் வாழ்வின் இறுதியில் அல்ல, ஒவ்வொரு நாளும் உருவாக்குகிறீர்கள்."
>
> - ஆலன் வெயிஸ்

நீங்கள் ஒரு மரபை விட்டுச் செல்ல விரும்பினால், நீங்கள் எதிர்காலத்திற்காகத் திட்டமிட வேண்டும். வருத்தத்திற்குரிய வகையில், பலரும் இலக்கு இல்லாமல் ஒரு வாழ்க்கையை உருவாக்குகிறார்கள். 30, 50 அல்லது 70 வயதில் அவர்களிடம், "உங்கள் வாழ்க்கையைக் கொண்டு நீங்கள் எதை உருவாக்குகிறீர்கள்?" என்று கேட்டால், "எனக்குத் தெரியாது. என்ன நடக்கிறது என்று பார்ப்போம் என்று காத்திருக்கிறேன்" என்பதே பதிலாக இருக்கும்.

(2) ஒரு மரபை விட்டுச் செல்லும் தலைவர்கள் தலைமைத்துவ மாற்றத்திற்காகக் கவனமாக ஆயத்தமாகிறார்கள்.

ஒரு பெரிய கட்டுமானத் திட்டம் முடிவடையும் தருவாயில் இருக்கும் ஒருவரைக் காண்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். சுவர்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன; கூரை போடப்பட்டுவிட்டது; குடியேறுவதற்கான நேரம் நெருங்கிவிட்டது. "கட்டிடம் முடிவதற்கு முன் மீதமுள்ள படிகள் என்ன?" என்று அவரிடம் கேளுங்கள்.

"எனக்குத் தெரியாது! அந்த இறுதிப் படிகளைப் பற்றிச் சிந்திக்க நான் நேரம் செலவிடுவதில்லை" என்று அவர் பதிலளித்தால் நீங்கள் அதிர்ச்சியடைவீர்கள். அப்படியல்ல! அந்தக் கட்டிடம் கட்டுபவர் தன்னை விட நீண்ட காலம் நிலைத்திருக்கும் ஒன்றை விட்டுச் செல்கிறார். ஒவ்வொரு அடியையும் அவர் கவனமாகத் திட்டமிடுகிறார். "நாங்கள் கட்டிடத்தை முடிக்கும் நாள் இதுதான். உரிமையாளர் உள்ளே குடியேறும் நாள் இதுதான்" என்று அவரால் உங்களிடம் சொல்ல முடியும். தலைமைத்துவ மாற்றத்திற்காக அனைத்தும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு மரபை விட்டுச் செல்லும் தலைவர்கள் மாற்றத்திற்காகக் கவனமாகத் தயாராகிறார்கள். சாத்தியமான போதெல்லாம், அவர்கள் தங்கள் ராஜினாமாவை முன்பே திட்டமிடுகிறார்கள், இது நிறுவனம் தனக்குப் பின் வருபவரைத் தேர்வுசெய்ய அனுமதிக்கிறது, மேலும் தனக்குப் பின் வருபவர் புதிய பொறுப்புகளுக்குத் தயாராகவும் அனுமதிக்கிறது. சில சந்தர்ப்பங்களில், புதிய தலைவர் முடிவுகளை எடுக்கத் தொடங்கும் அதே வேளையில், முந்தைய தலைவர் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்குவதற்காகக் கிடைக்கும்படியான ஒரு காலகட்டத்தை, வெளியேறும் தலைவரும் உள்வரும் தலைவரும் பகிர்ந்துகொள்கிறார்கள்.

ஒரு மரபை விட்டுச் செல்லும் தலைவர்கள் தாங்கள் வழிநடத்தும் ஊழியத்தை மாற்றத்திற்குத் தயார்படுத்துகிறார்கள். திறம்பட வெளியேறும் தலைவர்கள்

எதிர்காலத்திற்கான தேவனுடைய ஏற்பாட்டின் மீது நம்பிக்கையைத் தெரிவிக்கிறார்கள். அடுத்த தலைவரின் கீழ் சிறப்பாகச் செயல்பட அவர்கள் மக்களைத் தயார்படுத்துகிறார்கள். நிறுவனத்தில் உள்ளவர்கள் மாற்றத்தின் போது பாதுகாப்பாக உணருவதை அவர்கள் உறுதி செய்கிறார்கள். ஒரு தலைவர் எழுதினார், "என் புறப்படுதலை ஊழியர்கள் கண்டுகொள்ளாத அளவுக்கு அதைச் சுமூகமாக்குவதே என் குறிக்கோளாக இருந்தது."

(3) ஒரு மரபை விட்டுச் செல்லும் தலைவர்கள் எப்போது விலக வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்கள்.

தலைவர்கள் தங்கள் பொறுப்பைத் தனக்குப் பின் வருபவரிடம் ஒப்படைத்துவிட்டு, வருத்தங்கள் இல்லாமல் விலகிச் செல்லத் தயாராக இருக்க வேண்டும். முன்னாள் தலைவர்கள் ஆலோசனைகளுக்குக் கிடைக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும், ஆனால் தனக்குப் பின் வந்தவர் கேட்டால் மட்டுமே ஆலோசனை வழங்க வேண்டும்.

இந்தப் பாடத்திட்டத்தில், சபையின் தலைமையை ஏற்கச் சீஷர்களை இயேசு எப்படித் தயார்படுத்தினார் என்பதை நாம் பார்த்தோம். ஆரம்பத்திலேயே, அவர் அவர்களுக்குக் கவனமான பயிற்சியை அளித்தார். பின்னர், அவர் அவர்களை ஊழியம் செய்ய அனுப்பிவிட்டு, மதிப்பீட்டிற்காகத் திரும்ப அழைத்தார். கடைசி இராப்போஜனத்தில், ஊழியத்திற்கான இறுதி அறிவுரைகளை அவர்களுக்கு வழங்கினார். பரமேறுவதற்குச் சற்று முன்பு, அவர்களின் மிகப்பெரிய கட்டளையான பெருக்கட்டளையை அவர்களுக்குக் கடைசியாக நினைப்பூட்டினார். இயேசு மாற்றத்திற்காகக் கவனமாகத் தயார்படுத்தினார்.

வருத்தத்திற்குரிய வகையில், பல கிறிஸ்தவத் தலைவர்கள் தலைமைத்துவ மாற்றத்தில் சிறிதளவு கவனமே செலுத்துகிறார்கள். "நான் மாற்றப்படும் வரை என் வேலையைச் செய்வேன். அதற்குப் பிறகு, அது வேறொருவரின் பிரச்சனை" என்று அவர்கள் கருதுகிறார்கள். நிச்சயமாக, திடீர் சுகவீனம், மரணம் அல்லது பெரிய ஊழிய மாற்றம் ஆகியவை தலைமைத்துவ மாற்றத்திற்குப் போதுமான அளவு தயாராவதைச் சாத்தியமற்றதாக்கும் நேரங்களும் உண்டு. ஆனால் சாத்தியமான போதெல்லாம், அடுத்த தலைவரிடம் பொறுப்பை ஒப்படைப்பதை நாம் கவனமாகத் திட்டமிட வேண்டும். எதிர்காலத்திற்காக ஒரு மரபைப் பாதுகாப்பதில் இது மிக முக்கியமான படிகளில் ஒன்றாகும்.

பாடம் 9 வீட்டுப்பாடம்

கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையில் 3-5 பக்கக் கட்டுரை ஒன்றை எழுதுக:

(1) உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையையும் ஊழியத்தையும் பாதித்த ஒரு ஊழியத் தலைவரை அல்லது குடும்ப உறுப்பினரை நினைத்துப் பாருங்கள். உங்கள் வாழ்வில் அவர்களின் செல்வாக்கை ஒரு பக்கத்தில் சுருக்கமாகக் கூறுங்கள். இரண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.

- அவர்கள் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?
- அவ்வளவு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்த அவர்கள் என்ன செய்தார்கள் அல்லது என்ன சொன்னார்கள்?

(2) நீங்கள் மரிக்கும்போது என்ன மரபை விட்டுச் செல்ல விரும்புகிறீர்கள்? உங்கள் பதிலில் குறிப்பாக இருங்கள். 1-2 பக்கங்களில் பதிலளிக்கவும்.

- உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் விட்டுச் செல்ல விரும்பும் மரபு என்ன?
- உங்கள் சமூகத்திற்காக நீங்கள் விட்டுச் செல்ல விரும்பும் மரபு என்ன?
- உங்கள் ஊழியத்திற்காக நீங்கள் விட்டுச் செல்ல விரும்பும் மரபு என்ன?

(3) பதில் 2-ல் உள்ள மூன்று விஷயங்களில் ஒவ்வொன்றிற்கும், நீங்கள் விரும்பும் மரபை விட்டுச் செல்ல, இப்போது நீங்கள் பின்பற்ற வேண்டிய குறிப்பிட்ட நடைமுறைகளை அடையாளம் காண்க. 1-2 பக்கங்களில் பதிலளிக்கவும்.

இந்தத் ஆய்வுத்தாளைப் பத்திரமாக வைத்துக்கொண்டு, அடுத்த ஆறு மாதங்களுக்கு வாரந்தோறும் இதைத் திரும்பப் பாருங்கள். அடுத்த தலைமுறைக்கு விட்டுச்செல்வதற்கான உங்கள் மரபைத் திட்டமிடத் தொடங்க இதைப் பயன்படுத்துங்கள்.

ராஜ்யத்தின் சுவிசேஷம் (ஒரு பிரசங்கம்)

பேராசிரியர் டேனி மெக்கெய்ன் (ஜோஸ் பல்கலைக்கழகம், நைஜீரியா)

சில ஆண்டுகளுக்கு முன்பு, கோம்பே எமிர் என்னை ஒரு விஜயத்திற்கு அழைத்தார். சில மாதங்களுக்குப் பிறகு நான் அரண்மனைக்குச் சென்றேன். எமிரைச் சந்திக்கும்போது நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை ஒரு அதிகாரி விளக்கினார். அரண்மனைக்குள் செல்லும்போது காலணிகளைக் கழற்ற வேண்டும். எமிருடன் கை குலுக்க முடியாது, ஏனெனில் அவர் சாதாரண மக்களுடன் கை குலுக்க மாட்டார். எமிருடன் ஒரே மட்டத்தில் அமர முடியாது. நீங்கள் ராஜாவை "மேன்மைதங்கிய ராஜா" அல்லது "ராஜ கம்பீரம்" என்று அழைக்க வேண்டும்.

ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் அதற்கே உரிய பண்புகள், விதிகள் மற்றும் தலைவர்கள் உண்டு. நீங்கள் அந்த ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தால், அந்த ராஜ்யத்தையும் அதன் விதிகளையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரசங்கத்திற்கு அடித்தளமாக அமையும் இரண்டு வேதப்பகுதிகளுடன் நான் தொடங்குகிறேன்.

மத்தேயு 6:9-10:

> பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

லூக்கா 9:1-2:

> அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும், அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்.

இந்தச் செய்தியில், நான் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய ஒரு பெரிய சித்திரத்தை கொடுக்க விரும்புகிறேன், மேலும் இந்தச் சத்தியம் நம் வாழ்வில் எவ்வாறு நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கும் என்பதைக் காட்ட விரும்புகிறேன்.

தேவனுடைய ராஜ்யம்: பெரிய சித்திரம்

நான் குழந்தையாக இருந்தபோது, "தேவனுடைய ராஜ்யம்" என்பது **தேவனுடைய நித்திய வீடாகிய பரலோகம்** என்று நினைத்தேன். ராஜ்யத்தைக் குறித்த பல வசனங்கள் நமது நித்திய வீட்டைக் குறிப்பதாகவே தோன்றின. "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படிசெய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை

நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 7:21).

நான் அதிகம் படித்தபோது, ராஜ்யம் என்பது தேவனுடைய நித்திய வீட்டை விட அதிகம் என்பதைப் புரிந்துகொள்ளத் தொடங்கினேன். சிறிது காலம், ராஜ்யம் என்பது **சபைக்குச்** சமமானது என்று நம்பினேன். வலையில் அகப்பட்ட மீன்கள் போன்ற உவமைகள், ராஜ்யத்தைப் பற்றிய சில குறிப்புகள் பரலோகத்தைப் பற்றியவை அல்ல என்பதை நிரூபித்தன.

> அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத்தேயு 13:47-50).

இது சபையைக் குறிப்பதாக இருக்க வேண்டும். நம் சபைகளில் உண்மையான விசுவாசிகளும் மாய்மாலக்கார விசுவாசிகளும் உள்ளனர். இருப்பினும், சபைக் காலத்தின் முடிவில், தேவன் அவர்களைப் பிரிப்பார்: "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படிசெய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 7:21).

நான் எவ்வளவு அதிகமாகப் படித்தேனோ, அவ்வளவு அதிகமாக தேவனுடைய ராஜ்யம் **சபையை விட விசாலமானது** என்பதற்கான அறிகுறிகளைக் கண்டுபிடித்தேன். இயேசு, "நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" (மத்தேயு 12:28) என்று சொன்னார். பெந்தெகொஸ்தே நாளில் சபை பிறந்ததென்றால், ஆனால் ராஜ்யம் ஏற்கனவே வந்துவிட்டது என்றால், சபையும் ராஜ்யமும் ஒன்றாக இருக்க முடியாது.

இந்த எண்ணங்கள் ராஜ்யத்தை ஒரு முழுமையான (holistic) கண்ணோட்டத்தில் பார்க்க என்னைக் கட்டாயப்படுத்தின. அதைத்தான் நான் இப்போது செய்ய விரும்புகிறேன்.

ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய ராஜ்யம்

தேவன் சிருஷ்டித்தபோது, "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள்" (ஆதியாகமம் 1:26) என்று கூறினார். தேவன்

மனிதர்களைப் படைத்தபோது, அவர்களை ஏதோ ஒரு வகையில் தம்மைப் போலவே படைத்தார்.

தேவன் தாமே வசிக்கும் சூழலின் மிக முக்கியமான பண்புகளைக் கொண்ட ஒரு இடத்தை மனிதர்கள் வாழ்வதற்காக உருவாக்குவார் என்பது நியாயமானதாகத் தோன்றுகிறது. ஏதேன் தோட்டம் எப்படி இருந்தது?

- அங்கே பாவமோ தார்மீகக் குற்றமோ இல்லை; அது பரலோகம் போல இருந்தது.
- அங்கே நோயோ மரணமோ துக்கமோ இல்லை; அது பரலோகம் போல இருந்தது.
- அங்கே விரும்பத்தகாதது எதுவும் இல்லை. அது பரலோகம் போலப் பரிபூரணமான இடமாக இருந்தது.
- அங்கே எந்த ஒழுங்கீனமும் இல்லை. அனைத்தும் எதற்காகப் படைக்கப்பட்டதோ அப்படியே செயல்பட்டன; அது பரலோகம் போல இருந்தது.

அக்காலத்தில் ஏதேன் தோட்டமே பூமியில் தேவனுடைய ராஜ்யமாக இருந்தது. “அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது” (ஆதியாகமம் 1:31). பூமியில் தேவனுடைய புதிய ராஜ்யத்தைப் பற்றிய முதல் கருத்து இதுதான். ஒன்று நன்றாக இருக்கிறது என்றால், அனைத்தும் அதற்குரிய இடத்திலும் சரியான ஒழுங்கிலும் இருக்கிறது என்று அர்த்தம். பூமியில் உள்ள அனைத்தும் தேவன் விரும்பியபடியே இருந்தன. இது பரலோகத்தில் உள்ள தேவனுடைய இல்லத்தின் பண்புகளான ஒழுங்கு, அழகு மற்றும் பரிபூரணத்தைப் பிரதிபலித்தது.

ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் இழப்பு

பூமியில் தேவனுடைய ராஜ்யத்தைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் தேவன் கவனமான அறிவுறுத்தல்களை வழங்கினார். துரதிர்ஷ்டவசமாக, மனிதன் தேவனுடைய புனிதமான நம்பிக்கையை மீறி, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்தான். இது இரண்டு மோசமான நிலைகளை விளைவித்தது.

முதலாவதாக, பாவம் உலகத்திற்குள் நுழைந்து, மனிதனுக்குள் இருந்த தேவனுடைய சாயலைச் சிதைத்தது. இரண்டாவதாக, மனிதர்கள் தேவனுடைய சாயலைப் பகுதியளவு இழந்ததால், அவர்கள் அந்தப் பரிபூரண இடத்தில் வாழத் தகுதியற்றவர்கள் ஆனார்கள். ஏதேன் இனி மனிதனுக்கு ஏற்ற இடமாக இருக்கவில்லை.

எனவே, தேவன் அவர்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தினார்; ஆண் மற்றும் பெண்ணைச் சபித்தது போலவே பூமியையும் சபித்தார். முள்ளுகளையும் குறுக்களையும் முளைப்பிக்கும்படி தேவன் நிலத்தைச் சபித்தார். பூமி அதன் அழகு, ஆறுதல், உற்பத்தித்திறன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் பெரும்பகுதியை இழந்தது. மனிதர்கள்

எப்படி ஒரு காலத்தில் பரிசுத்தமாய் இருந்த தங்கள் நிலையின் நிழலாக மட்டுமே இருக்கிறார்களோ, அப்படியே பூமியும் தேவன் படைத்த நிலையின் நிழலாக மட்டுமே இருக்கிறது. இந்தப் பிரசங்கத்திற்குப் பொருத்தமான வார்த்தைகளில் சொல்வதானால்: பூமியில் தேவனுடைய ராஜ்யம் சரிந்து விழுந்தது.

- தேவன் கட்டியது பாழாக்கப்பட்டது.
- தேவன் அழகாக உருவாக்கியது இப்போது அசிங்கமானது.
- தேவன் வசதியாகப் படைத்தது இப்போது வேதனையானது.
- தேவன் புனிதமாக வடிவமைத்தது இப்போது பாவமாகவும் சீர்கேடாகவும் மாறியது.
- தேவன் மனிதகுலத்திற்கும் பூமிக்கும் திட்டமிட்டிருந்தது நிறைவேறாமல் போனது.

இருப்பினும், தேவன் தோல்வியடைபவர் அல்ல. அவரைத் தோற்கடிக்க முடியாது. “கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை” (நீதிமொழிகள் 21:30). பிசாசு முயற்சித்தான், ஆனால் அவனால் ஒருபோதும் தேவனை மேற்கொள்ள முடியாது.

- தேவன் செய்ததை யாரால் மாற்ற முடியும்?
- தேவன் 'ஆம்' என்று சொன்னதை யாரால் 'இல்லை' என்று சொல்ல முடியும்?
- தேவன் படைத்ததை யாரால் அழிக்க முடியும்?

தேவன் தோல்வியை ஏற்றுக்கொள்ள மாட்டார். தவறாகிப்போன காரியங்களை மாற்றவும் மீட்டெடுக்கவும் தேவன் வல்லவர். தேவன் தலைசிறந்த மீட்பர்.

தேவன் பூமியில் தனது ராஜ்யத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினார்.

> தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும் (ஏசாயா 9:7).

ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுவதற்கு முன்பே, பூமியில் தனது ராஜ்யத்தை மீட்டெடுக்கவும் மீண்டும் கட்டியெழுப்பவும் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். பரலோகத்தில் இருப்பதைப் போலவே பூமியிலும் தேவனுடைய ராஜ்யம் மீட்டெடுக்கப்படுவதை விவரிப்பதே வேதாகமத்தின் மிக முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். மறுசீரமைப்பின் செயல்முறை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆதியாகமம் 12:1-3-ல் இந்தச் செயல்முறை தொடங்குவதை நாம் காண்கிறோம்.

தேவனுடைய ராஜ்யமும் ஆபிரகாமும்

ஆபிரகாம் கல்தேயர் தேசத்து ஊர் என்ற இடத்தில் இருந்தபோது இந்தச் செய்தியைப் பெற்றார்:

> நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. **நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி**, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; **பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்** (ஆதியாகமம் 12:1-3, வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது).

இங்கே *'ராஜ்யம்'* என்ற வார்த்தை பயன்படுத்தப்படாவிட்டாலும், இந்த அறிக்கையில் உள்ள இரண்டு வாக்குத்தத்தங்களின் காரணமாக, தேவன் பூமியில் தனது ராஜ்யத்தை மீட்டெடுக்கத் தொடங்கினார் என்று நாங்கள் நம்புகிறோம்.

தேவன் இஸ்ரவேலிலிருந்து ஒரு பெரிய ஜாதியை உருவாக்குவதாக வாக்களித்தார்

பழைய ஏற்பாட்டின் அடுத்த மூன்றில் ஒரு பகுதி இந்தத் தேசத்தைக் கட்டியெழுப்புவதை விவரிப்பதில் செலவிடப்படுகிறது என்பது சுவாரஸ்யமானது.

இந்தத் தேசத்தைக் கட்டியெழுப்புவதில், தேவன் தனது திட்டங்களில் பயன்படுத்துவதாகத் தோன்றும் இரண்டு கொள்கைகளை நாம் காண்கிறோம்.

1. தேவன் இந்த பூமியில் கிரியை செய்யும்போது, அவர் எப்போதும் மனிதர்கள் மூலமாகவே கிரியை செய்கிறார். தேவன் இந்த பூமியில் செய்ய விரும்பும் வேலையைச் செய்ய பொதுவாகத் தேவதூதர்களை அனுப்புவதில்லை.
2. தேவன் இந்த பூமியில் கிரியை செய்யும்போது, அவர் கடினமான வழியில், மெதுவான வழியில், சிரமமான வழியில், படிப்படியான வழியில், அதாவது நாம் காரியங்களைச் செய்யும் விதத்திற்கு நேர்மாறான வழியில் செயல்படுகிறார். தேசத்தைக் கட்டியெழுப்புவது பல தடைகளால் நிறைந்திருந்தது. இருப்பினும், இறுதியில் அது நிஜமானது.

அந்தத் தேசமே பூமியில் தேவனுடைய ராஜ்யத்தை மீட்டெடுப்பதன் முழுமையான நிறைவேறுதல் என்று நான் நினைக்கவில்லை. இருப்பினும், அது அந்தத் திசையில் ஒரு படியாக இருந்தது. தேவன் பூமியில் தன் மக்களை ஆள முடியும் என்பதை அந்த ராஜ்யம் நிரூபித்தது. துரதிர்ஷ்டவசமாக, மனிதக் காரணியின் காரணமாக, அது பகுதியளவு மட்டுமே வெற்றிகரமாக இருந்தது.

ஆபிரகாமின் சந்ததியினர் பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஆசீர்வாதமாக இருப்பார்கள் என்று தேவன் வாக்களித்தார்

"பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதியாகமம் 12:3). இயேசுவின் வருகையோடு இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது.

தேவனுடைய ராஜ்யமும் இயேசுவும்

இயேசுவின் ஞானஸ்நானம் மற்றும் சோதனைக்குப் பிறகு லூக்கா சொல்லும் முதல் கதை, நாசரேத்தில் உள்ள ஜெப ஆலயத்திற்கு அவர் சென்றது பற்றியது. இயேசு தனது சொந்த ஊர் ஜெப ஆலயத்திற்குச் சென்று வேதவசனங்களை வாசிக்க முன்வந்தார். அன்றைய தினத்திற்கான வாசிப்பு ஏசாயா 61-லிருந்து வந்தது.

> கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தை அவர் கண்டு, வாசித்து, புஸ்தகத்தைச் சுருட்டி, பணிவிடைக்காரனிடத்தில் கொடுத்து, உட்கார்ந்தார். ஜெப ஆலயத்திலுள்ள எல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது. அப்பொழுது அவர் அவர்களோடே பேசத்தொடங்கி: உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று என்றார் (லூக்கா 4:18-21).

தனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தேவன் செய்து வந்த சீரமைக்கும் பணியைத் தொடரவே தான் வந்திருப்பதாக இயேசு ஒரு வலுவான குறிப்பைக் கொடுத்தார்.

- பாவத்தின் விளைவுகளால், உலகம் ஆவிக்குரிய ரீதியிலும் சொல்லர்த்தமான ரீதியிலும் ஏழ்மையாகிவிட்டது. இருப்பினும், "தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி" தான் அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பதாக இயேசு அறிவித்தார்.

- வீழ்ச்சியின் காரணமாக, மனித இனம் பாவத்திற்கு அடிமையானது. இருப்பினும், "சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்... பிரசித்தப்படுத்தவும்" தான் வந்திருப்பதாக இயேசு கூறினார்.

- வீழ்ச்சியின் காரணமாக, மனித இனம் ஆவிக்குரிய ரீதியில் குருடாகிவிட்டது, அதாவது மக்களால் சத்தியத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. சிலர் சரீரப்பிரகாரமாகவும் பார்வையற்றவர்களாக இருந்தனர். இருப்பினும், "குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும்" இயேசு வந்திருந்தார்.

- வீழ்ச்சியின் காரணமாக, பிசாசும் அவனது முகவர்களும் மக்களைப் பல வழிகளில் ஒடுக்கியிருந்தனர். இருப்பினும், "நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்" தான் வந்திருப்பதாக இயேசு கூறினார்.

பாவத்தின் காரணமாக பூமியின் மீது சுமத்தப்பட்டிருந்த பல சாபங்களை மாற்றியமைப்பதே தனது நோக்கம் என்று இயேசு சொல்லிக்கொண்டிருந்தார். இதை வேறு விதமாகச் சொல்வதானால், பூமியில் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்பும் பணியைத் தொடரவே இயேசு பூமிக்கு வந்தார். இதை இன்னும் வேறு விதமாகச் சொல்வதானால், பூமியில் உள்ள எல்லா மக்களுக்கும் ஆசீர்வாதமாக இருப்பதற்குக் தேவன் ஆபிரகாமுக்கு அளித்த இரண்டாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவே இயேசு இந்த பூமிக்கு வந்தார். "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1:14-15). இயேசுவின் ஊழியம் முழுவதும் அவருடைய போதனைகளுக்கு மையமாக இருந்தது 'ராஜ்யம்' தான்.

தேவனுடைய ராஜ்யமும் சபையும்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவன் செயல்படுவதற்குப் பயன்படுத்திய முகாந்தரம் இஸ்ரவேல் தேசம். புதிய ஏற்பாட்டில், சபை தேவன் செயல்படும் முகாந்தரமாக மாறியது. பல காரணங்களுக்காகப் பழைய ஏற்பாட்டை விடச் சபை ஒரு முன்னேற்றமாக இருந்தது:

- சபை யூதர்களை மட்டுமல்ல, உலகின் அனைத்து மக்களையும் உள்ளடக்கியது.

- பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆவிக்குரிய ஜாம்பவான்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் அணுகுமுறை இருந்தது, ஆனால் சபை அனைவருக்கும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் அணுகுமுறையை வழங்கியது.

- சபை தேவனுடனான தனிப்பட்ட உறவுக்குப் புதிய முக்கியத்துவத்தை அளித்தது.

- மிருக பலிகள் மற்றும் கடுமையான சடங்குகளை விட, **ஆவியோடும் உண்மையோடும்** ஆராதனை செய்வதைச் சபை வலியுறுத்தியது.

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இயேசுவிடமிருந்து பாடங்கள்

இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகளிலிருந்து ராஜ்யத்தைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளக்கூடிய சில பாடங்கள் உள்ளன.

(1) தேவனுடைய ராஜ்யத்திற்குப் புவியியல் எல்லைகள் இல்லை, ஆனால் ராஜா எங்கே இருக்கிறாரோ அங்கே அது இருக்கிறது.

- இயேசு ஒரு திருமணத்திற்குச் சென்றபோது, அவர் திராட்சரசத்தைக் கொடுத்தார்; ஏனென்றால் அவருடைய பிரசன்னத்தால் அவருடைய ராஜ்யம் அந்த இடத்திற்குப் பரவியது.

- இயேசு நோயாளிகளைச் சந்தித்தபோது, அவர்களைக் குணப்படுத்தினார்; ஏனென்றால் அவருடைய ராஜ்யம் சுகவீனத்திற்கும் நோய்க்கும் மேலாகவும் பரவியிருந்தது.

- இயேசு பசியுள்ள மக்களைச் சந்தித்தபோது, அவர்களுக்கு உணவு வழங்கினார்; ஏனென்றால் அவருடைய ராஜ்யம் மக்களின் அடிப்படைத் தேவைகளில் அக்கறை கொண்டிருந்தது.

இன்று தம்மைப் பின்பற்றுபவர்கள் செல்லும் எந்த இடத்தையும் உள்ளடக்கத் தனது ராஜ்யத்தை விரிவுபடுத்த இயேசு விரும்புகிறார். ராஜாவின் மக்கள் அங்கே இருப்பதால் அது அவருடைய ராஜ்யத்தின் ஒரு பகுதியாகிறது. ராஜ குடும்பத்தின் ஒரு பகுதியாகிய நமக்கு இதுவே பொறுப்பு. இயேசுவின் ஆட்சி நமது குறிப்பிட்ட பகுதிக்கு, அதாவது உலகில் நம்முடைய செல்வாக்கு இருக்கும் பகுதிக்கு நீட்டிக்கப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

- நம் குடும்பங்கள் மீது தேவனுடைய ராஜ்யத்தை நாம் ஸ்தாபிக்க வேண்டும்.

- நம் சமூகங்கள் மீது தேவனுடைய ராஜ்யத்தை நாம் ஸ்தாபிக்க வேண்டும்.

- நம் வேலைகள் மற்றும் பணியிடங்கள் மீது தேவனுடைய ராஜ்யத்தை நாம் ஸ்தாபிக்க வேண்டும்.

- நம் உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்கங்கள் மீது தேவனுடைய ராஜ்யத்தை நாம் ஸ்தாபிக்க வேண்டும்.

- நிச்சயமாக, நம் சபைகள் மற்றும் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் மீது தேவனுடைய ராஜ்யத்தை நாம் ஸ்தாபிக்க வேண்டும்.

ராஜாவின் குடிமகன் ஒருவன் எங்கு வசிக்கிறானோ, அங்கே ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஆகையால், நம் வீடுகளும் அலுவலகங்களும் தேவனுடைய ராஜ்யத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. சகாக்களுடனான நம் உறவுகள் ராஜ்யத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அப்போஸ்தலனாகிய பேதுரு,

> பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் (1 பேதுரு 2:11-12) என்று எழுதினார்.

ராஜ்யத்தின் குடிமக்கள் அல்லாதவர்கள் நமக்குள் ராஜ்யத்தைப் பார்க்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ராஜ்யத்தின் கொள்கைகளின்படி நாம் வாழ்ந்தால் மட்டுமே அவர்கள் நம் வாழ்வில் ராஜ்யத்தைப் பார்க்க முடியும். மக்கள் உங்களுக்குள் தேவனுடைய ராஜ்யத்தைப் பார்க்க முடியுமா?

(2) தேவனுடைய ராஜ்யம் ஒரு குறிப்பிட்ட மக்கள்குழுவிற்கானது அல்ல, அவரைப் பின்பற்றும் அனைவருக்கும் உரியது.

ரோம (புறஜாதி) நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை இயேசு குணப்படுத்தியபோது, அவர்,

> அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள் (மத்தேயு 8:11, வலியுறுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது) என்று சொன்னார்.

இனம், மொழி அல்லது இனப் பின்னணி எதுவாக இருந்தாலும், ராஜ்யம் அனைத்து மக்களுக்கும் உரியது. எல்லா விதமான பின்னணியிலிருந்தும் இயேசு மக்களைத் தேர்ந்தெடுத்ததால், இயேசுவைப் பின்பற்றுபவர்களாக இருக்கும் எல்லா விதமான பின்னணியைச் சேர்ந்த மக்களையும் நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இனவெறியும், கோஷ்டிப் பிரிவினையும் தேவனுடைய ராஜ்யத்தின் பகுதிகள் அல்ல.

(3) தேவனுடைய ராஜ்யம் விலையுயர்ந்த அரண்மனைகள் மற்றும் கவர்ச்சியான ஆடைகளுடன் தொடர்புடையது அல்ல, மாறாக நேர்மறையான சமூக மதிப்புகளுடன் தொடர்புடையது.

ராஜ்யங்களைப் பற்றி நினைக்கும் போது, நாம் பெரும்பாலும் ராஜாவின் இல்லமான அரண்மனையைப் பற்றி நினைக்கிறோம். அரண்மனை ராஜாவைப் பற்றி ஏதோ ஒன்றைச் சொல்கிறது. இருப்பினும், இயேசு சொன்னார், “நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை” (மத்தேயு 8:20). செல்வச் செழிப்போ, பிரம்மாண்டமான கட்டடங்களோ, பகட்டான ஆடைகளோ அல்லது கவர்ச்சியான நகைகளோ இயேசுவின் ராஜ்யத்தின்

அடையாளங்கள் அல்ல. இயேசுவின் ராஜ்யம் இந்த வெளிப்புற விஷயங்களால் அல்ல, நற்பண்புகளால் அடையாளப்படுத்தப்படுகிறது.

(4) தேவனுடைய ராஜ்யம் தீமை மற்றும் தந்திரத்தால் அல்ல, நீதியினாலும் சத்தியத்தினாலும் அடையாளப்படுத்தப்படுகிறது.

இயேசு போதித்தார்: "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" (மத்தேயு 5:20). இங்கே நீதி என்பது ஒரு இறையியல் கருத்துரு (concept) அல்ல, மாறாக நடைமுறைக்குரிய நற்குணம். பரிசேயர்கள் மக்களைக் கவரவும் மரியாதையைப் பெறவும் வடிவமைக்கப்பட்ட ஒரு வெளிப்புற நீதியை வைத்திருந்தார்கள். உண்மையான நீதி அதைவிட அதிகமாக நியாயத்திற்கும் நற்குணத்திற்கும் செல்ல வேண்டும். சரியானதைச் செய்பவர்களால் இயேசுவின் ராஜ்யம் அடையாளப்படுத்தப்படுகிறது. மிகுதி உள்ள இடத்தில் தேவனுடைய ராஜ்யம் செழித்தோங்க முடியும். அதிகம் இல்லாத இடத்திலும் தேவனுடைய ராஜ்யம் செழித்தோங்க முடியும். இது உண்மை, ஏனென்றால் தேவனுடைய ராஜ்யம் ஒரு பௌதிக, பொருள்சார்ந்த ராஜ்யம் அல்ல; அது மதிப்புகள் மற்றும் நற்பண்புகளின் ராஜ்யம்.

(5) தேவனுடைய ராஜ்யம் பெருமை மற்றும் ஆடம்பரத்தால் அல்ல, மனத்தாழ்மையினாலும் சேவையினாலும் அடையாளப்படுத்தப்படுகிறது.

இயேசு சொன்னார், "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்தேயு 5:3). "ஆவியில் எளிமையுள்ளவர்கள்" என்ற சொற்றொடர் மனத்தாழ்மையைக் குறிக்கிறது. மனத்தாழ்மை பொதுவாகப் பூமிக்குரிய அரசியல் தலைவர்களுடன் தொடர்புபடுத்தப்படுவதில்லை. அரசியல்வாதிகள் தங்கள் எதிராளிகளை விடத் தாங்கள் ஏன் சிறந்தவர்கள் என்று மற்றவர்களிடம் சொல்ல வேண்டும். இருப்பினும், இயேசுவின் ராஜ்யம் மனத்தாழ்மை, சுயநலமின்மை மற்றும் மற்றவர்களை உயர்த்துவது ஆகியவற்றால் அடையாளப்படுத்தப்படுகிறது.

ராஜ குடும்பத்தினர் பெரும்பாலும் அதிகமாகச் செல்லம் கொடுக்கப்பட்டு புகழப்படுவதால், அவர்கள் பெருமையடைந்து, மற்றவர்களை விடத் தங்களை முக்கியமானவர்கள் என்று நினைக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனப்பான்மையில் ஆணவமிக்கவர்களாக மாறலாம். இருப்பினும், இயேசு சொன்னார்: "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத்தேயு 20:28). இந்த ராஜா தான் சென்ற இடமெல்லாம் இந்த மக்களை அழைத்துச் சென்று, தனக்குத் தெரிந்ததை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். இந்த ராஜா தன் சீஷர்களின் கால்களைக் கழுவவும் தயாராக இருந்தார். விரிவான மற்றும் கவர்ச்சியான விஷயங்களால் அல்ல, மனத்தாழ்மை மற்றும் எளிமையின் மூலம் இந்த ராஜ்யத்தின் தன்மையை நாம் வெளிப்படுத்துகிறோம்.

(6) தேவனுடைய ராஜ்யம் இயற்கையான பிறப்புகளால் அல்ல, இயேசுவைப் பின்பற்றுபவர்களின் செயல்பாடுகள் மூலம் வளர்கிறது.

இயேசு சொன்னார், "பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்" (மத்தேயு 16:19). தேவன் படைத்த ராஜ்யம் பாவம், இருள் மற்றும் சீர்கேட்டிற்குள் விழுந்தபோது, தேவன் பூமியை மீட்டெடுக்க வேண்டியிருந்தது. மக்களைத் தனது ராஜ்யத்திற்குள் கொண்டுவருவதற்கும், சமூகத்தின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் தனது ராஜ்யத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தேவன் மனிதகுலத்திற்குப் பொறுப்பை வழங்கினார். தேவன் தனது ராஜ்யத்தைக் கட்டியெழுப்பத் தேவதூதர்களை அனுப்ப மாட்டார். இந்த வேலையைச் செய்ய அவர் உங்களையும் என்னையும் பயன்படுத்துகிறார். ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருக்கும் மக்களின் பொறுப்பு என்னவென்றால்:

- மற்றவர்களை ராஜ்யத்திற்குள் கொண்டு வருவது.
- அவர்கள் எங்கிருந்தாலும் அங்கே ராஜ்யத்தைக் கட்டியெழுப்புவது.
- சமூகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ராஜ்யத்தின் கொள்கைகளைச் செயல்படுத்துவது.

இது நமது பொறுப்பு மற்றும் நமது சிலாக்கியம். தேவனுடைய ராஜ்யத்திற்குள் மக்களைக் கொண்டுவருவதில் நாம் மும்முரமாகச் செயல்படுவோம்.

அப்போஸ்தலர் நடபடிகளில் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை நடைமுறைப்படுத்துதல்

பரலோகத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்ற இயேசுவின் ஜெபத்தை நிறைவேற்ற ஆதித் திருச்சபை எவ்வாறு முயன்றது என்பதை இப்போது பார்ப்போம். இந்த உதாரணங்களைக் கவனியுங்கள்:

சிறுமைபட்டவர்களுக்கு ஊழியம் செய்தல்

விதவைகள், திக்கற்ற பிள்ளைகள் மற்றும் ஏழைகள் உட்பட, சமூகத்தில் உள்ள தேவையுள்ளவர்கள் மீது தேவன் எப்போதும் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளார். இந்த பூமியில் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்புவதற்கு இயேசுவைப் பின்பற்றுபவர்கள் நடைமுறையான கிரியைகளில் ஈடுபடுவதைப் பார்ப்பது ஆச்சரியமளிப்பதில்லை.

அப்போஸ்தலர் 6-ல், ஆரம்பகால விசுவாசிகள் விதவைகளைப் பராமரிப்பதைக் காண்கிறோம். தொற்காள் என்ற ஒரு கிறிஸ்தவப் பெண், "நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள்" (அப்போஸ்தலர் 9:36). பவுலும் பர்னபாவும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்களுக்குப்

பணத்தையும் நிவாரணப் பொருட்களையும் கொண்டு சென்றார்கள் (அப்போஸ்தலர் 11:29). பின்னர் அப்போஸ்தலர் நூலில், எருசலேமில் உள்ள தேவையுள்ளவர்களுக்காக மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் உள்ள சபைகளிலிருந்து பவுல் காணிக்கைகளைச் சேகரித்தார் (அப்போஸ்தலர் 24:17).

நமது தேவைகளைப் பற்றிய தேவனுடைய ராஜ்யத்தின் கொள்கை, 2 கொரிந்தியர் 8:13-15-ல் உள்ள பவுலின் அறிக்கையில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது:

> மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிறபிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக.

இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் வல்லமை தேவைப்படாத பல வழிகளில் நாம் தேவையுள்ளவர்களுக்கு உதவ முடியும். நம் சமூகத்தின் மோசமான நிலைகளைச் சரிசெய்ய முயற்சிப்பதற்கு முன், தேவன் நமக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளை வழங்குவார் என்று நாம் காத்திருக்கக் கூடாது.

நீதியை நிலைநாட்டுதல்

தேவனுடைய ராஜ்யத்தின் ஒரு முக்கியமான பகுதி நீதி. சமூகத்தில் உள்ள நீதிப் பிரச்சினையை ஆதித் திருச்சபை எவ்வாறு கையாண்டது? பேதுருவும் யோவானும் இயேசுவின் நாமத்தில் பிரசங்கிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டபோது, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தங்களுக்குக் கட்டளையிடப்பட்டிருப்பதால், தாங்கள் 'குடிமை மறுப்பை' (civil disobedience - சட்டத்தை மீறுதல்) நடைமுறைப்படுத்தப்போவதாக யூதத் தலைவர்களிடம் மரியாதையுடன் தெரிவித்தனர். அவர்கள் அந்தத் தலைவர்களிடம், “மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது” (அப்போஸ்தலர் 5:29) என்று கூறினார்கள்.

பிலிப்பியில் பவுல் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டு அடிக்கப்பட்டபோது, அவரை உள்ளே அடைத்த அதிகாரிகள் வந்து அவரை வெளியேறும்படி கேட்கும் வரை அவர் சிறையை விட்டு வெளியேற மறுத்துவிட்டார். இது சுவிசேஷ ஊழியத்தின் செயல் அல்ல. இந்த மக்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர அவர் முயற்சிக்கவில்லை. இது நீதிக்கான செயல். சமூகத்தில் நீதியின் கொள்கைகளின்படி இந்தத் தலைவர்கள் வாழ வேண்டும் என்று பவுல் விரும்பினார்.

சுவிசேஷ ஊழியம் செய்வது மற்றும் சபை ஸ்தாபிப்பது மட்டுமே தனது வேலை என்று பவுல் கருதவில்லை. அவர் ஒரு மோசமான (நோயுற்ற) சமூகத்தில் வாழ்ந்தார், அநீதி

என்னும் நோய் உட்பட அந்த நோயின் ஒரு பகுதியைக் குணப்படுத்தக் கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் அவர் பயன்படுத்தினார்.

ஆரோக்கியத்தை மீட்டெடுத்தல்

பவுல், தனது எஜமானரைப் போலவே, சிலருக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட சுகத்தை அளிக்க முடிந்தது. இருப்பினும், அவர் பயன்படுத்திய வழி அது மட்டுமல்ல. பவுல் தீமோத்தேயுவுக்கு, "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" (1 தீமோத்தேயு 5:23) என்று எழுதினார். திராட்சைச் சாற்றிலிருந்து தயாரிக்கப்படும் திராட்சரசத்தில் இரும்புச் சத்து அதிகம் உள்ளது. மிதமான அளவில் எடுத்துக்கொள்ளும்போது, அது இரத்தத்திற்கு நல்லது. தீமோத்தேயு தனது நோய்களிலிருந்து குணமடைய, பவுல் இந்த இயற்கை வழிமுறையைப் பரிந்துரைத்தார்.

இயேசு தம் சீஷர்களைப் போதக ஊழியப் பயணத்திற்கு அனுப்பிய பிறகு, அவர்களிடம், "வனாந்தரமான ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள்" (மாற்கு 6:31) என்றார். நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்க ஓய்வு தேவை என்பதை இயேசு அங்கீகரித்தார்.

சுகமளிப்பதைப் பற்றி யாக்கோபு ஒரு சுவாரஸ்யமான அறிக்கையை குறிப்பிட்டார்.

> உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும் (யாக்கோபு 5:14-15).

'பூசுதல்' என்பதற்கு இரண்டு கிரேக்க வார்த்தைகள் உள்ளன. ஒரு வார்த்தை சடங்கு ரீதியான பூசுதலையும், மற்றொன்று மருத்துவ எண்ணெய் அல்லது அழகுசாதனப் பயன்பாட்டையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. பண்டைய உலகில் சாதாரண மக்களின் முதலுதவி மருந்தாக எண்ணெய் இருந்தது. ஆயுதபாணிகளான கள்ளர்களால் காயப்பட்ட மனிதனை நல்ல சமாரியன் கண்டபோது, அவன் காயங்களில் எண்ணெய் வார்த்தான். ஜெபத்திற்குப் பதிலாகத் தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் அந்த நபரைச் சுகப்படுத்தத் தெரிந்துகொள்ளலாம். இருப்பினும், மருந்து மற்றும் இயற்கை வழிமுறைகளைப் பயன்படுத்தியும் அந்த நபரைச் சுகப்படுத்த அவர் தெரிந்துகொள்ளலாம்.

முடிவுரை

பரலோகத்தில் இருப்பதுபோல பூமியிலும் தனது ராஜ்யத்தை ஸ்தாபிக்கத் தேவன் விரும்புகிறார். ராஜ்யம் புவியியல் அல்லது மொழியியல் அல்லது அரசியல் பண்புகளால் அல்ல, கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகிறது. தேவனுடைய ராஜ்யத்தின் கொள்கைகளை நாம் எந்த அளவுக்குப் போதித்துச் செயல்படுத்துகிறோமோ, அந்த அளவுக்கு வாழ்க்கையின் அந்தப் பகுதியில் தேவனுடைய ராஜ்யத்தை நாம் ஸ்தாபித்திருக்கிறோம்.

பரிந்துரைக்கப்பட்ட ஆதார நூல்கள்

இந்தப் பாடத்திட்டம் இன்றைய வாழ்க்கை மற்றும் ஊழியத்திற்கு ஒரு மாதிரியாக இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தை ஆராய்கிறது. இது சுவிசேஷ புத்தகங்களைப் பற்றிய ஒரு விரிவான ஆய்வு அல்ல. மாறாக, இன்றைய ஊழியத்திற்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள, இயேசுவின் ஊழியத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்சங்களை இந்தப் பாடத்திட்டம் ஆராய்கிறது. கிறிஸ்துவின் முழுமையான வாழ்க்கையைப் படிக்க, பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. இந்தப் புத்தகங்களே இந்தப் பாடத்திட்டத்திற்கான முதன்மையான ஆதார நூல்களாகும்.

டேரல் பாக் எழுதிய *'வேதாகமத்தின்படி இயேசு' (Jesus According to Scripture)* மற்றும் ஜே. டுவைட் பெண்டெகோஸ்ட் எழுதிய *'இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளும் கிரியைகளும்' (The Words and Works of Jesus Christ)* ஆகிய இரண்டும் **கிறிஸ்துவின் வாழ்க்கையைப் பற்றிய முழுமையான ஆய்வுகள்** ஆகும். **இயேசுவின் ஊழியப் பாணியைப் புரிந்துகொள்ள,** அஜித் பெர்னாண்டோவின் *'இயேசுவால் உந்தப்பட்ட ஊழியம்' (Jesus Driven Ministry)* மற்றும் ராபர்ட் கோல்மனின் *'சுவிசேஷத்தின் மூலத்திட்டம்' (The Master Plan of Evangelism)* ஆகிய புத்தகங்கள் பெரிதும் பரிந்துரைக்கப்படுகின்றன.

Blomberg, Craig. *Jesus and the Gospels*. Nashville: Broadman & Holman, 1997.

Bock, Darrell L. *Jesus According to Scripture*. Grand Rapids: Baker Academic, 2002.

Coleman, Robert E. *The Mind of the Master*. Colorado Springs: Waterbrook Press, 1977.

Coleman, Robert E. *The Master Plan of Evangelism*. Grand Rapids: Baker Books, 1993.

Fernando, Ajith. *Jesus Driven Ministry*. Wheaton, Illinois: Crossway, 2002.

Pentecost, J. Dwight. *The Words and Works of Jesus Christ*. Grand Rapids: Zondervan, 1981.

Robertson, A. T. *Harmony of the Gospels*. New York: Harper & Row Publishers, 1922. Available online at http://www.gutenberg.org/files/36264/36264-h/36264-h.htm

வீட்டுப்பாடங்களின் பதிவு

மாணவர் பெயர் _____

ஒவ்வொரு வீட்டுப்பாடமும் முடிந்தவுடன், கீழே உள்ள அட்டவணையில் உங்களது கையெழுத்தைப் பதியவும். Shepherds Global Classroom இடமிருந்து சான்றிதழைப் பெறுவதற்கு அனைத்து வீட்டுப்பாடங்களும் வெற்றிகரமாக முடிக்கப்பட வேண்டும்.

பாடம்	வீட்டுப்பாடம் 1	வீட்டுப்பாடம் 2	வீட்டுப்பாடம் 3
1			
2			
3			
4			
5			
6			
7			
8			
9			

Shepherds Global Classroom இடமிருந்துநிறைவுச் சான்றிதழுக்கான விண்ணப்பத்தை www.shepherdsglobal.org என்ற இணையப்பக்கத்தில் பூர்த்தி செய்யலாம். தங்கள் மாணவர்(கள்) சார்பாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களுக்கு, SGC தலைவரிடமிருந்து சான்றிதழ்கள் டிஜிட்டல் முறையில் அனுப்பப்படும்.